# ம. பொ. சி. யின் தமிழ் உணர்வு

முனைவர் தூ. சேதுபாண்டியன்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113

# ம.பொ.சி. யின்
# தமிழ் உணர்வு

முனைவர் தா. சேதுபாண்டியன்

International Institute of Tamil Studies
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை - 600 113.

சிலம்புச்செல்வர் ம.பொ.சி. அறக்கட்டளைச் சொற்பொழிவு
(அறக்கட்டளை நிறுவியோர் - கொடையாளர் பலர்)

வரிசை எண்: 8 நாள்: 28-10-2002

# BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title of the Book | : | Ma.Po.Ci.yin̲ Tamil̲ Uṇarvu |
| Author | : | Dr. T. Sethu Pandian |
| General Editor | : | Dr. D. Renganathan |
| Publisher & © | : | International Institute of Tamil Studies<br>C.P.T. Campus, Chennai - 600 113.<br>Phone : 254 2992 |
| Publication No. | : | 433 |
| Language | : | Tamil |
| Edition | : | First |
| Year of Publication | : | 2002 |
| Paper Used | : | 18.6 kg TNPL Maplitho |
| Size of the Book | : | 1/8 Demy |
| Printing type Used | : | 10 points |
| No. of Pages | : | vi + 154 |
| No. of Copies | : | 1200 |
| Price | : | Rs. 40/- |
| Printing | : | United Bind Graphics<br>101-D, Royapettah High Road<br>Chennai - 600 004 |
| Subject | : | Tamilology |



அறக்கட்டளைச் சொற்பொழிவாளர் கருத்துகட்கு நிறுவனம் பொறுப்பன்று

முனைவர் சா. கிருட்டினமூர்த்தி
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113

## அணிந்துரை

மொழி, இனம், நாடு ஆகிய மூன்றும் ஒன்றையொன்று சார்ந்திருப்பனவாகும். ஒன்றின் வாழ்வும் தாழ்வும் மற்றொன்றின் வாழ்வையும் தாழ்வையும் பொறுத்தே அமையும். மொழி, இன, நாட்டு வரலாற்றை ஆய்ந்து பார்ப்பவருக்கு இந்நிலை நன்கு விளங்கும். மொழி காக்கத் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட அறிஞர்கள் பலரும் இனத்தையும் நாட்டையும் பற்றிச் சிந்தித்துள்ளனர் என்பதை அறிய முடிகிறது.

இம்மூன்றின் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்ட பெரியோர்களுள் ம.பொ.சி. குறிப்பிடத்தக்கவராக விளங்குகிறார். தமிழ்மொழி, இன, நாட்டு வரலாறுகளை மீள எழுத நினைக்கும் எவராலும் ம.பொ.சி. அவர்களைக் குறிப்பிடாமல் இருக்க இயலாது. சிலம்புச்செல்வர் என்று பாராட்டப்பட்டுப் போற்றப்பெற்று இச்சிறப்புப் பெயராலேயே சுட்டப்பெறும் ஒருவராக ம.பொ.சி. விளங்கினார். ஓர் இலக்கியவாதியாகவும், இன மேம்பாட்டுச் சிந்தனையாளராகவும், நாட்டுப்பற்று ஊட்டும் நல்லோராகவும் ம.பொ.சி. திகழ்ந்தார்.

தமிழ்த் தேசியம் என்பதை அன்றைய நிலையில் எல்லோருக்கும் வலிவோடும், துணிவோடும் எடுத்துக் கூறிய ம.பொ.சி. பலராலும் செய்யவியலாத பல அரிய செயல்களை மொழிக்காகவும், நாட்டிற்காகவும், இனத்திற்காகவும் செய்திருக்கிறார் என்பதில் மிகையில்லை. இத்தகைய சிலம்புச்செல்வர் ம.பொ.சி. பெயரில் கொடையாளர் பலரால் இந்நிறுவனத்தில் உருவாக்கப்பட்டுள்ள அறக்கட்டளையின் எட்டாம் சொற்பொழிவாக இது நடைபெறுகிறது. இப்பொழிவை மதுரை காமராசர் பல்கலைக்கழக இலக்கணத்துறைப் பேராசிரியர் முனைவர் தூ. சேதுபாண்டியன் நிகழ்த்துவது பெருமைக்குரியது. முனைவர் சேதுபாண்டியன் மொழி, இன, நாட்டு உணர்வோடு ம.பொ.சி.யை ஆராய்ந்திருக்கிறார் என்பதற்கு இப்பொழிவு நற்சான்றாக அமைகிறது. அறக்கட்டளைப் பொழிவைச் சொற்பொழிவு நாளன்றே நூலாக வெளியிடுவதை நற்கடமையாகக் கொண்டுள்ள இந்நிறுவனம், **“ம.பொ.சி.யின் தமிழ் உணர்வு”** என்ற

பெயரில் இப்பொழிவை நூலாக வெளியிடுவதில் பெருமை அடைகிறது.

டாக்டர் ம.பொ.சி.க்குத் தமிழர் என்ற இனவுணர்ச்சி ஏற்பட்டது முதல் அவ்வுணர்ச்சியை அனைவரிடமும் ஏற்படுத்தத் தன்னை எவ்வளவுக்கு அர்ப்பணித்துள்ளார் என்பதை இந்நூலாசிரியர் படம்பிடித்துக் காட்டியுள்ளமை பாராட்டுக்குரியது. தமிழருக்கு இனவுணர்ச்சி இன்னும் அதிகமாகத் தேவை என்பது குறித்து ம.பொ.சி. எடுத்துக்காட்டியிருக்கும் திறத்தை ஆசிரியர் மிகப் பக்குவமாகக் கூறியுள்ளமை எண்ணி மகிழத்தக்கது. சென்னை நகரம் தமிழ்நாட்டின் தலைநகரமாக அமையவேண்டும் என்பதற்காக ம.பொ.சி. நடத்திய போராட்டங்களையும், தமிழக எல்லைகளை வரையறுக்கும் நிலையில் கூட எவ்வளவிற்கு ம.பொ.சி.யின் பங்கு இருந்தது என்பதையும் இந்நூலுள் காணவியலும். அரிய உழைப்பில் குறித்த காலத்திற்குள் இவ்வெழுத்துருவை உருவாக்கித் தந்த முனைவர் தூ. சேது பாண்டியன் அவர்களுக்கு நன்றியையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வறக்கட்டளையை நிறுவிய நன்கொடையாளர்களுக்கும், அறக்கட்டளைப் பொறுப்பாளர் என்ற நிலையில், இச்சொற்பொழிவு நூலாக்கம் பெறுவதற்குத் துணை நின்ற முனைவர் தா. ரெங்கநாதன் அவர்களுக்கும் நன்றி.

நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்து வருகின்ற நிறுவனத் தலைவர் மாண்புமிகு கல்வியமைச்சர் முனைவர் மு. தம்பிதுரை அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி பண்பாடு மற்றும் அறநிலையத்துறைச் செயலாளர் திரு. பு.ஏ. இராமையா, இ.ஆ.ப. அவர்களுக்கும், கூடுதல் செயலாளர் முனைவர் தா. சந்திரசேகரன், இ.ஆ.ப. அவர்களுக்கும் எங்கள் நெஞ்சார்ந்த நன்றி.

இந்நூலிற்குச் சிறந்த முறையில் ஒளியச்சுக்கோப்புச் செய்த திருமதி ந. லட்சுமிக்கும், அழகிய முறையில் அச்சிட்டுத்தந்த யுனைடெட் பைண்ட் கிராபிக்ஸ் அச்சகத்தார்க்கும் என் நன்றியையும் பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாள் : 19-10-2002

இயக்குநர்

# நூலின் உள்ளே

1. ம.பொ.சி.யும் தமிழும் 1

தமிழ் வளர்ச்சிப் பணி 6

தமிழ் இலக்கியப் பணி 25

தமிழ் வளர்ச்சியை ஆவணப்படுத்துதல் 39

2. ம.பொ.சி.யும் தமிழரும் 55

இனத் தலைவர்களை அடையாளம் காட்டுதல் 56

இன ஒற்றுமையை வளர்த்தல் 71

பிற இனத்தால் வரும் கேடு களைதல் 81

3. ம.பொ.சி.யும் தமிழ்நாடும் 89

விடுதலைப் போரில் ம.பொ.சி. 90

தமிழக விடுதலையும் எல்லைப் போரும் 95

மாநில சுயாட்சிப் போர் 134

முடிவாகச் சில 141

துணை நூல்கள் 150

# ஆசிரியரைப் பற்றி



## பாண்டியன் பத்து

- பிறந்த நாள் 24-10-1947.

  பெற்றோர் : தூசிமுத்து - இருளாயி அம்மாள்

- தீந்தமிழ் தியாகராசர் கல்லூரியில் இளங்கலையும், மதுரை காமராசர் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையில் முதுகலையும் பயின்றவர்.

- "திருவாசக மொழி" என்னும் பொருளில், பேராசிரியர் முத்துச் சண்முகனாரின் மேற்பார்வையில், ஆராய்ச்சி செய்து முனைவர் பட்டம் பெற்றவர்.

- 'தெலுங்கு இலக்கியம் ஓர் அறிமுகம்', 'விடியலை நோக்கி' என்னும் நூல்களின் இணை ஆசிரியர்.

- இவரது மேற்பார்வையில் உருவான முனைவர் பட்ட ஆய்வாளர் ஒருவர், இளநிலை ஆய்வாளர்கள் பலர்.

- தெலுங்கு, மலையாளம் ஆகிய மொழிகளில் பட்டயச் சான்றிதழ் பெற்றிருப்பவர்.

- வெளிநாட்டாருக்குத் தமிழ் கற்பிக்கும் பணியில் முனைப்புடன் ஈடுபட்டிருப்பவர்.

- மதுரை காமராசர் பல்கலைக்கழகத் தமிழியற் புலத்தின் இலக்கணத்துறையில் பேராசிரியராகப் பணியாற்றி வருபவர்.

- தமிழ்மொழி. இலக்கியம், இலக்கணம் தொடர்பான பல்வேறு கருத்தரங்குகளில் கட்டுரைகள் பற்பல வழங்கி இருப்பவர்.

- வித்தியாசமான சிந்தனைக்குச் சொந்தக்காரர். "சும்மா" பற்றிய ஆய்வு இவரது வினைத்திட்பத்திற்குச் சான்று. "பொய்" பற்றிய இவரது கட்டுரை சிந்தனைக் கிளர்ச்சியை ஏற்படுத்தி இருப்பது உண்மை.; வெறும் புகழ்ச்சியில்லை. 'உரையாடலில் மௌனம்' என்னும் இவரது கட்டுரை பலராலும் பேசப்பட்ட ஒன்று.

– இரா. மோகன்

# ம.பொ.சி.யும் தமிழும்

ம.பொ.சி. என்று தமிழக மக்களால் அன்போடு அழைக்கப்பட்ட செந்தமிழ்ச் செல்வர் டாக்டர் ம.பொ.சிவஞானம் அவர்கள் தமிழ் மீது தணியாத பற்றுக் கொண்ட தமிழினத்தின் தகைமை சால் தலைவர். தமிழ்நாட்டின் எல்லைகளைக் காத்து ஏற்றம் பெற்ற ஏந்தல். இலக்கியங்களின் மீது ஆர்வமிக்க ஆய்வாளர். ஆற்றல் மிகுந்த எழுத்துகளுக்குச் சொந்தக்காரர். நாவசைத்து நாட்டையே ஆடவைத்த நாவரசர். பழகுவதற்கினிய பண்புள்ள மனிதர். அன்று முதல் இன்று வரை தமிழுக்காக, தமிழருக்காகத் தொண்டு செய்கிறவர் என்று பாவேந்தரால் பாராட்டப்பட்டவர். பண்டிதர்களிடமிருந்த சிலப்பதிகாரத்தினைப் பட்டி தொட்டிகளெல்லாம் பரப்பிப் பாமரரும் அதன் சுவையை அறியச் செய்தவர். தமிழின் தலைசிறந்த காப்பியமான சிலப்பதிகாரத்தை ஓரியக்கமாகவே தமிழகத்தில் நடத்திய நாவரசர்.

தமிழ் ஆட்சிமொழியாக வேண்டும் எனத் தளராது போராடி வெற்றிபெற்றவர். தமிழினத்தின் உரிமைகளுக்காகப் போராடிடத் தன் உயிரையும் கொடுக்கத் தயங்காதவர். தமிழ்நாட்டின் எல்லைகளை மீட்கப் போராடித் தணிகை மலையையும் குமரி முனையையும் மீட்டவர். ஆங்கில ஆதிக்கத்தை அகற்றிட, அன்னை தமிழ் வாழ்ந்திட அயராது போராடியவர். பேராசிரியர் ரா.பி. சேதுப்பிள்ளை அவர்களால் சிலம்புச் செல்வர் என்று பட்டமளித்துப் பாராட்டப்பட்டவர். தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் தலைவராயிருந்தவர். 'பல்கலைக்கழகத்தில் படித்துப் பட்டம் பெற்ற எங்களுக்குப் புரியாதவற்றை எல்லாம் அவர்கள் (ம.பொ.சி.) சொல்கிறார்கள். எல்லோரும் புரிந்துகொள்ளும் வகையில் எளிய

தமிழிலே சொல்கிறார்கள்' என்று தெ.பொ.மீ. அவர்களால் பாராட்டப் பெற்றவர்.

தமிழ்மொழியினிடத்தும் தமிழ்நாட்டினிடத்தும் அளப்பரிய பற்றுக் கொண்டிருக்கும் ஒருவர் தேசப் பற்றுடையவராகவும் இருக்கமுடியும் என்பதற்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்தவர். தமிழ் மீது தணியாப் பற்றுக் கொண்டிருந்தாலும் பிறமொழி மீது வெறுப்புக் கொள்ளாதவர். கட்டபொம்மன், வ.உ.சி., கொடி காத்த குமரன் போன்ற அன்றைய விடுதலைப் போராட்ட வீரர்களை இன்றைய இளைஞர்களுக்கு அறிமுகம் செய்துவைத்து இணைப்புப் பாலமாக விளங்குபவர். விடுதலைப் போராட்ட வீரர். தமிழகத்தின் அமைச்சர் ஆகும் வாய்ப்பு தானே வந்தபோதும் அதை வேண்டாம் என்று ஒதுங்கிக் கொண்டவர். மாற்றார் கருத்தை மறுக்கும்போதும் யார் மனமும் புண்படாமல் தன் கருத்தை வலியுறுத்திப் பேசும் வல்லவர்.

தமிழால் தன்னையும், தன்னால் தமிழையும் வளர்த்துக் கொண்டவர். பட்டிதொட்டிகளிலெல்லாம் சிலம்பின் பெருமையைப் பறைசாற்றிய பைந்தமிழ்ப் புலவர். அப்பழுக்கற்ற அரசியல் தலைவர். இனத்தையும் இலக்கியத்தையும் இணைத்துப் பார்க்கும் இலக்கியச் செம்மல். சென்னையைத் தமிழ்நாடாய் மாற்றிய செந்தமிழ் வீரர்! பண்புள்ள பத்திரிகையாளர். இப்படிப் பலரும் பல நேரங்களில் பாராட்டிய பாராட்டுதல்களுக்குச் சொந்தக்காரர் தான் ம.பொ.சி. அவர் தடைகளை வென்று தலைவரானது எப்படி? ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமையை முன் வைத்து புத்தியக்கம் நடத்திப் புது வழி கண்ட வள்ளலார் போன்று, தமிழ் இன ஒருமைப்பாட்டுணர்வையும், சர்வதேசப் பொதுமை நோக்கையும் முன் வைத்துக் காலத்தின் தேவையை நிறைவு செய்ய முன் வந்தார் ம.பொ.சி. இந்த இலட்சியப் பணி தடைகளைத் தகர்க்கும் சக்தியை அளித்தது. தமிழரசுக் கழகம் என்னும் பண்பாட்டு அமைப்பைக் கண்டது; தமிழரசுக் கழகத் தலைமையைத் தந்தது.

தமிழ் தேசிய இனத் தத்துவத்தைத் தமிழக அரசியலின் முன்னெடுத்து சோஷலிசத் தமிழரசு இலட்சியத்தை முழக்கித்,

தமிழக எல்லைகளைப் போராட்டங்கள் மூலம் நிர்ணயம் செய்து, 'தமிழ்நாடு' பெயர் தோன்றப் புதிய தமிழகத்தின் தந்தையாகவும் வரலாற்றில் புகழ்கொண்டவர், தலைவர் ம.பொ.சி." என்று விளக்குகிறார் பெ.சு.மணி (1985: 42-43).

ம.பொ.சி. வறுமையின் பயங்கரப் பிடியில் சிக்கியபோதும் இலட்சியத்தை விடாமல் பற்றி நிற்கும் உறுதியைப் பெற்றவர். இந்த இலட்சியப் பற்றும், மன உறுதியுமே அவர் ஒரு தலைவராகத் துணை புரிந்தவை. தமிழ் இனப்பற்று, இந்திய தேசியப் பற்று இரண்டையும் இரு கண்களாகக் கொண்டவர். அதனால்தான் தமிழினமே ஒன்றுபடு! என்ற அவருடைய உணர்ச்சிமயமான கோஷம் தமிழரசுக் கழகத்தைக் கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்ட ஒரு பொது அரசியல் நோக்குடைய தமிழினத்தின் ஒரே தேசிய அமைப்பாக அடையாளங் காட்டியது.

தமிழ்ப்பற்றையும் தேசியத்தையும் இணைத்துத் 'தமிழ்தேசியம்' என்ற ஒரு புதிய கோட்பாட்டை உருவாக்கியவர் ம.பொ.சி. இதுதான் ம.பொ.சி.யின் தனித்தன்மை. இதுவே அவரை ஏனைய அரசியல்வாதிகளிடமிருந்து வேறுபடுத்திக்காட்டியது. அவர் பெற்ற சிறப்புகளுக்கெல்லாம் இந்த இணைப்பே காரணமானது. தாம் நடத்திய போராட்டங்கள் அனைத்திலும் எதையும் உடன்பாட்டு நிலையில்தான் பேசினாரே ஒழிய எதிர்மறை அணுகுமுறையில் பார்த்தவர் இல்லை ம.பொ.சி. ஆங்கில ஆதிக்க எதிர்ப்புப் போராட்டம் நடத்தும்போதுகூட 'ஆங்கிலம் ஒழிக' என்று கோஷமிட அவர் யாரையும் அனுமதித்ததில்லை. இத்தகைய உடன்பாட்டு அணுகுமுறையே அவருக்கு வெற்றியை அளித்தது.

ம.பொ.சி.யின் பணிகளை மூன்றாகப் பகுத்துக் கொண்டு விளக்க முயல்கின்றது இச்சொற்பொழிவு. ம.பொ.சி.யும் தமிழ்ப் பணியும், ம.பொ.சி.யும் தமிழினப் பணியும், ம.பொ.சி.யும் தமிழ்நாட்டுப் பணியும் என்ற முப்பெரும் பிரிவுகளில் ம.பொ.சி.யின் பணிகள் ஒவ்வொன்றாக விளக்கப்படுகின்றன.

## ம.பொ.சி.யும் தமிழும்

ம.பொ.சி. வேறு, தமிழ் வேறு என்று கருதுவோமானால், அது மாபெரும் தவறாகும். இது என்னுடைய கருத்தன்று; 1978-ஆம்

ஆண்டு ஏப்ரல் திங்கள் இருபத்தாறாம் நாள் திரு. ம.பொ.சி. அவர்கள் மேலவைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பதவி ஏற்றபோது அந்நாளைய முதலமைச்சர் திரு எம்.ஜி. ராமச்சந்திரன் அவர்கள் கூறிய கருத்து பின்வருமாறு:

"தமிழைக் காக்க மேலவையில் தமிழ்ப் பெரியாரை உட்கார வைக்கிறோம். இங்கே சிவஞானம் என்ற பெயரில் தமிழ் அமர்ந்திருக்கிறது. இது இந்தியத் துணைக் கண்டத்திற்கு நாம் தரும் செய்தியாகும். தமிழைப் பேசியும் எழுதியும் தமிழக மக்களுக்குப் புத்துணர்ச்சியை ஏற்படுத்தியவர்; தமிழக எல்லைகளுக்குச் சொந்தமானவர். அப்படிப்பட்ட தங்களைத் தமிழர் எல்லோரும் பாராட்டுகிறோம்"[1]

தமிழ்நாட்டில் தோன்றித் தமிழாகவே வாழ்ந்த ம.பொ.சி. அவர்களின் தமிழ்ப் பணிகளை மூன்று நிலைகளில் பகுத்துக் காணலாம்.

1. தமிழ்மொழியை அனைத்துத்துறைகளிலும் இடம்பெறச் செய்யும் **தமிழ் வளர்ச்சிப் பணிகள்.**

2. தமிழ்மொழியில் உள்ள இலக்கியங்களைப் பாமரரும் அறியும் வணணம் பரவச் செய்யும் **தமிழ் இலக்கியப் பணிகள்.**

3. **தமிழ் மொழியின் வளர்ச்சியை - வரலாற்றை - ஆவணப்படுத்தும் பணிகள்.**

என்ற மூன்று நிலைகளில் ம.பொ.சி.யின் தமிழ்ப்பணிகளை விளக்க முயல்கின்றது இக்கட்டுரை.

ம.பொ.சி.யின் தமிழ்ப்பணிகளை விளக்கப் புகுமுன் அவர் வாழ்ந்த காலச் சூழலைத் தெளிவாக விளக்குவது இன்றியமையாத தாகின்றது. ஆங்கில ஏகாதிபத்தியத்தின் கீழ் அடிமைப்பட்டுக் கிடந்த பாரத நாட்டின் ஓர் அங்கமாகவே தமிழகம் இருந்தது. அடிமைப்பட்டிருந்த தமிழகத்தில் விடுதலைக்காகப் போராடிக் கொண்டிருந்தபோது அதற்கு எதிரணியிலிருந்த சுயமரியாதை

இயக்கத்தினர் தமிழ்ப்பற்றையும், தமிழர் என்ற இன உணர்வையும் தம் கையில் எடுத்துக் கொண்டமையால், காங்கிரஸ்காரர்கள் இந்த இரண்டையும் வெறுக்கலாயினர். காங்கிரஸ்காரர்களில் யாராவது தமிழ்ப் பற்றுடையவராகயிருந்தால் அவர்களுடைய தேசபக்தியும் கூடச் சந்தேகிக்கப்பட்டது. இந்தச் சூழலில்தான் ம.பொ.சி. காங்கிரஸ் பேரியக்கத்தில் விடுதலைக்காகப் போராடிக் கொண்டிருக்கும் விடுதலைப் போராட்ட வீரராகத் திகழ்கின்றார். ம.பொ.சியின். தமிழ் நெஞ்சம், காங்கிரஸ்காரர்களின் தமிழ்ப்பற்றை வெறுக்கும் - சந்தேகிக்கும் - போக்கினை ஏற்கவில்லை. இந்நிலை ம.பொ.சி.க்குத் தர்மசங்கடத்தை விளைவிக்கிறது. ஆனாலும் ம.பொ.சி. தமிழின்மீது தான் கொண்ட பற்றினை யாருக்காகவும் எதற்காகவும் விட்டுக் கொடுக்கத் தயாராகவில்லை. அதனால் தேசப் பற்றுக்கும் மொழிப் பற்றுக்கும் இடையே சமரசம் காண்பதையே தான் வாழ்ந்த காலப் பின்னணியிலிருந்து உருவாக்கிக் கொண்ட கொள்கையாகக் கொண்டார். இவர் திரு.வி.க., வ.உ.சி., சுப்பிரமணிய சிவா ஆகியோரைப் பின்பற்றித் தேசியத்தையும் தமிழையும் ஒன்றுபடுத்தித் தொண்டாற்றிட முயன்றார். இவர் காங்கிரஸ் பேரியக்கத்திற்குள் இருந்து நாட்டு விடுதலைக்குப் போராடிக் கொண்டே தமிழ் வளர்ச்சியிலும் கவனம் செலுத்தினார். 1945ஆம் ஆண்டு அரியலூரில் நடந்த தமிழ்நாடு காங்கிரஸ் மாநாட்டில் ம.பொ.சி.அவர்கள் ஒரு தீர்மானத்தை முன் வைத்தார். அந்தத் தீர்மானம் பின்வருமாறு:

"காங்கிரஸ் இந்திமொழியை வளர்க்க 'தக்ஷிண பாரத ஹிந்திப் பிரச்சார சபா" என்று தனியாக ஓர் அமைப்பு இருப்பதுபோலத் தமிழ்மொழியை வளர்க்கவும் 'தமிழ்வளர்ச்சிக் கழகம்' என்ற ஓர் அமைப்பினைத் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் கிளையாக அமைக்க்வேண்டும்"[2] என்பதே தீர்மானமாகும். இத்தீர்மானத்தை அந்த மாநாட்டை நடத்தியவர்கள் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள அனுமதிதர மறுத்துவிட்டனர். இத்தீர்மானத்தை மாநாட்டினர் ஏற்றுக் கொள்ளாதது குறித்து ம.பொ.சி. மிகவும் மனம் வருந்தினார். ம.பொ.சி.யின் இத்தீர்மானம் அவருடைய தமிழ் வளர்ச்சிச் சிந்தனையை வெளிப்படுத்துகின்றது.

இதன் பின்னரே தமிழ் வளர்ச்சிக்குக் காங்கிரஸ்காரர்களை நம்பிப் பயனில்லை என்ற முடிவுக்கு வந்ததால் 1946-ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் இருபத்தொன்றாம் நாள் தமிழ்மொழியின் வளர்ச்சிக்குப் பாடுபட ஆர்வமுள்ள தன் நண்பர்கள், புலவர்கள் இளைஞர்கள் இவர்களை எல்லாம் ஒன்றாகத் திரட்டித் "தமிழரசுக் கழகம்" என்ற அமைப்பினை நிறுவினார் ம.பொ.சி. இவர் தம் தாய்மொழிப் பற்றினைக் காங்கிரஸ் ஆட்சி என்னும் தேவதைக்காகப் பலியாடாக்க விரும்பவில்லை. கட்சி எந்த அளவுக்கு இன்றியமையாததோ அதே அளவுக்குத் தாய்மொழிப் பற்றும் இன்றியமையாதது என்று கருதினார். இதனை "தமிழ் மொழியைக் கட்சி என்னும் வேலிக்குள் சிறைப்படுத்த நான் விரும்பவில்லை." என்னும் அவருடைய கூற்றிலேயே காணலாம்.

## தமிழ் வளர்ச்சிப் பணி

தமிழ்நாட்டில் தமிழ் ஏற்றம் பெறும் ஒவ்வொரு நிகழ்ச்சியையும் கண்டு மகிழ்ச்சியடைந்தவர் ம.பொ.சி. அதனால்தான் தமிழகத்தில் தமிழின் நிலையைக் காலந்தோறும் கவனமாக உற்றுநோக்கி அதன் வளர்ச்சியையே ஒரு தனி வரலாறாகப் படைத்துள்ளார் ம.பொ.சி. ஆங்கிலேயரை எதிர்த்து இந்திய விடுதலைக்குப் போராடிக் கொண்டிருந்த காலத்திலும் தமிழுணர்வுடன் விடுதலைப் போராட்டத்திற்கு இடையிலும், தமிழை வளர்ப்பதற்கான அரும்பணியிலும் தேசியத் தலைவர்கள் ஈடுபட்டனர். அது ஒரு தனிவரலாறாகும். அதனை 'விடுதலைப் போரில் தமிழ் வளர்ந்த வரலாறு' என்ற தலைப்பில் எழுதி ஆவணப்படுத்தினார் ம.பொ.சி. பாரதப் பெருநாடும் அதனோடு சேர்ந்து தமிழ்த் திருநாடும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திலிருந்து விடுதலைப் பெற்ற பின்னர், 'மொழி வளர்ச்சி சகாப்தம்' ஒன்று தோன்றியது. தமிழகத்தில் மட்டுமல்ல; இந்தியா முழுவதிலுமே! ஆங்கிலேயருக்குத் தமிழர் அடிமைப்பட்டுக் கிடந்ததுபோலவே, ஆங்கில மொழிக்குத் தமிழ்மொழியும் அடிமைப்பட்டுக் கிடந்தது.

ஆங்கிலேயரின் ஆட்சி முடிவடைந்ததும் ஆங்கில ஆதிக்கமும் சிறிதுசிறிதாகக் குறையத் தொடங்கியது. இக்காலத்தில் - விடுதலை பெற்ற தமிழகத்தில் காங்கிரஸ் தமிழர்கள் இயன்றவரை ஆட்சியைப் பயன்படுத்தித் தமிழ் வளர்ச்சிக்குப் பாடுபட்டதையும்;

அதனால் தமிழ் வளர்ந்ததையும், பின்னர் 1956-ஆம் ஆண்டு மொழிவாரி மாநிலம் அமைந்தபின்னர்த் தமிழ் பெற்ற வளர்ச்சியையும்; தமிழ் வளர்ச்சிக்குத் தமிழ் நாட்டரசு ஆற்றிய பணிகளையும், 1967-ஆம் ஆண்டு திராவிடக் கழகங்களின் ஆட்சிக்குப் பின்னர் ஆற்றிய தமிழ் வளர்ச்சிப் பணிகளையும் தொகுத்து 'விடுதலைக்குப் பின் தமிழ் வளர்ந்த வரலாறு' என்ற தலைப்பில் ஒரு நூலாக எழுதியுள்ளார் ம.பொ.சி. இவ்வாறு தமிழ் பெறும் ஒவ்வொரு சிறப்பும் ம.பொ.சி. அவர்களால் ஆவணப்படுத்தப்பட்டுள்ளது.

1937-இல் இராஜாஜி தலைமையிலான காங்கிரஸ் ஆட்சியிலே கல்வி முறையில் மாறுதல்கள் காணவும் முயற்சி எடுக்கப்பட்டது. அப்போதுதான் மாநில மொழிகளுக்கு வழங்கப்பட்ட 'அடிமை மொழி' (Vernacular language) என்னும் பெயர் அகற்றப்பட்டுத் தாய்மொழி (Mother tongue) அல்லது பிரதேச மொழி (Regional language) என்றுதான் அழைக்கப்பட வேண்டும் என்று கல்வித் துறை ஆணை பிறப்பித்தது. மாநிலம் முழுவதிலுமுள்ள உயர்நிலைப் பள்ளிகளில் ஆங்கிலம் பயிற்றுமொழியாக இருந்து வந்த நிலையை மாற்றித் தமிழ் உள்ளிட்ட மாநில மொழிகள் பயிற்று மொழியாக்கப்பட்டன. 'அடுத்த கட்டத்தில் கல்லூரிகளிலும் ஆங்கிலத்திற்குப் பதிலாக மாணவர்களின் தாய்மொழியே போதனா மொழி ஆக்கப்படும்' என்று இராஜாஜி குறிப்பிட்டார். தொடக்கப் பள்ளிகளில் மூன்றாம் வகுப்பிலிருந்தே ஆங்கிலம் கற்பிக்கப்பட்டு வந்ததை மாற்றித் தொடக்கப்பள்ளிகளில் தமிழ் மட்டுமே கற்பிக்க வேண்டும் என்று அரசு ஆணையிட்டது. இதனைக் குறித்து எழுதும்போது ம.பொ.சி. அவர்கள் 'தமிழுக்கு வந்த புதுவாழ்வு' என்றும், 'ஆங்கில ஆதிக்கத்துக்கு மரணஅடி' என்றும் தலைப்பிட்டு எழுதுகிறார்கள். இதுவே ம.பொ.சி. அவர்களின் தமிழ்ப் பற்றையும், ஆங்கில ஆதிக்க எதிர்ப்புணர்வையும் காட்டுகின்றதல்லவா?

ம.பொ.சி. அவர்களின் மொழி பற்றிய சிந்தனை யாது? அவருடைய மொழிக்கொள்கை என்ன? ம.பொ.சி. அவர்கள் எவ்விடத்தும் தனியாக மொழி பற்றிய ஒரு கொள்கையை உருவாக்க வேண்டும் என்ற நோக்கில் எதுவும் எழுதவில்லை. அவர் அவ்வப்போது மொழி பற்றிக் கூறிச் செல்லும் கருத்துகளைத்

தொகுத்துப் பார்ப்பதன்மூலமே அவருடைய மொழிக் கொள்கையை அறிந்து கொள்ளமுடியும்.

மொழி என்பது உயிரினங்களில் மனித இனத்துக்கு மட்டுமே உரிய தனித் திறன் ஆகும். இம்மொழியே காலம் இடம் இரண்டையும் கடந்து ஒருவர்தம் கருத்தை மற்றவருக்கு உணர்த்தவும், பிறர் கருத்தைத் தாம் உணரவும் துணை புரிகிறது (பொற்கோ, 1974: 15). இத்தகைய மொழிபற்றிய சிந்தனையில் தமிழக மக்களிடையே இரண்டு வேறுபட்ட கருத்துகள் காணப்படுகின்றன. ஒரு சாரார் மொழி என்பது வெறும் கருத்துப் பரிமாற்றத்திற்குரிய கருவியே என்று கருதுகின்றனர். மற்றொரு சாரார் மொழி என்பது தெய்வத்தன்மை பொருந்தியது என்றும் வணங்குதற்குரியது என்றும் வாழ்த்திப் போற்றுதற்குரியது என்றும் கருதுகின்றனர். இந்த இரண்டு அணிகளில் ம.பொ.சி. எந்த அணியைச் சார்ந்தவர் என்று பார்த்தால் அவருடைய மொழிக் கொள்கை வெளிப்பட்டுவிடும்.

மொழி என்பது வெறும் கருவியன்று; மொழி என்பது பண்பாட்டின் ஓர் அங்கமுமாகும் என்ற எண்ணங்கொண்டவர் ம.பொ.சி. மொழி இல்லை எனில் அம்மொழி பேசும் இனமும் இல்லை என்று கருதுபவர் ம.பொ.சி. அதனாலேயே மொழிவழி இன உணர்வு வேண்டும் என்று கருதுகிறார். அவ்வுணர்வினை உண்டாக்க அனைத்து வகைகளிலும் செயல்படுகின்றார். அதே நேரத்தில் மொழியைத் தெய்வமாகக் கருதும் மூடநம்பிக்கையையும் சாடுகிறார். இன எழுச்சிக்கும் இன ஒற்றுமைக்கும் மொழியையே கருவியாகக் கொண்டு அவற்றை உருவாக்கப் பல்லாற்றானும் பணியாற்றுகின்றார். அதே நேரத்தில் மொழிப்பற்று என்பது பிறமொழித் துவேஷமாகிவிடக்கூடாது என்பதிலும் கவனமாக இருக்கிறார். இதனாலேயே இந்தியப் பொது மொழியாக இருப்பதற்கு இந்தியே ஆங்கிலத்தைக்காட்டிலும் தகுதியானது என்று தன் கருத்தை வலியுறுத்துகிறார். தமிழ் மீதுள்ள பற்றுக் குறையாமல் பிற மொழிகளைக் கற்க வேண்டும் என்பது ம.பொ.சி.யின் சிந்தனையாகவுள்ளது. தமிழ்மொழியைப் பண்பாட்டின் சின்னம் என்று கருதினாலும், ஏனைய

தனித்தமிழ்வாதிகள் போல் மொழி புனிதமானது, தெய்வத்தன்மை பொருந்தியது என்ற கருத்துகளை ம.பொ.சி. ஏற்றுக் கொள்ளவில்லை. அதேபோன்று தமிழ் பண்டிதர்களின் மொழியாகவே இருப்பதை இவர் விரும்பவில்லை. தமிழ் பாமரருக்கும் புரியும் பழகு தமிழாக உலா வரவேண்டும் என்பதே ம.பொ.சி.யின் கருத்தாகும்.

'எங்கும் தமிழ் எதிலும் தமிழ்' என்பது ம.பொ.சி.யின் தமிழ் முழக்கமாகும். அனைத்துத் துறைகளிலும் தமிழையே பயன்படுத்த வேண்டும் என்பது ம.பொ.சி.யின் மொழிக் கொள்கையாகும். அதனால்தான் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் கீழிருந்த தமிழ்நாட்டின் நிலைகுறித்து, "தமிழ்மொழியின் நிலை என்ன? அரியாசனமேறி அரசுபுரிந்த தமிழ்மொழி ஆங்கில மொழியினால் அடக்கப்பட்டு வளங்குன்றி வாழ்விழந்து கிடக்கின்றது. ஆங்கில மோகத்தால் தமிழ்மொழியை மறந்தனர் தன்மானமற்ற தமிழர்களில் சிலர். அரசாளும் மொழியாலேற்பட்ட அநீதி இது. இனி தேசிய எழுச்சியாலும் தமிழ்மொழிக்குச் சிறிதளவு பாதகம் ஏற்பட்டிருப்பதை வருத்தத்துடன் சொல்லித்தானாக வேண்டும்," என்று வருந்துகின்றார் ம.பொ.சி. பிறிதோரிடத்தில்,

"மொழித் துறையிலும் முற்றுகை நிலைதான். இசையரங்கில் தெலுங்கு, இறைவன் கோயிலில் வடமொழி, அரசியலில் ஆங்கிலம்-பிறமொழிகள் தமிழ்நாட்டை முற்றுகையிட்டுத் தமிழ்மொழியை அடுப்பங்கரையில் சிறைப்படுத்திவிட்டன"[3] என்று வருந்துகின்றார் ம.பொ.சி. அவர் தமிழை அனைத்துத் துறையிலும் பயன்படுத்த வேண்டும் என்ற கருத்தைப் பேச்சளவில் நிறுத்திக் கொள்ளாமல் வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் இக்கொள்கையைச் செயல்படுத்தவும் தவறியதில்லை. சான்றாக ஒரு சில நிகழ்ச்சிகளைக் காணலாம்.

இந்திய விடுதலைக்குப் பின்னர் சென்னை மாநகராட்சியில் கல்விக் குழுவின் உறுப்பினர்களால் கல்விக் குழுவின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு பொறுப்பில் இருந்தார் ம.பொ.சி. அப்போது சென்னை மாநகராட்சியைத் தமிழ்வழிப் படுத்தும் முயற்சியில்

முழுமூச்சுடன் செயல்பட்டார். சென்னை மாநகராட்சியின் கல்வித் துறைக்கெனத் தனியாக வரவு செலவுத் திட்டம் அமைவது சட்டப்படி நிகழ்ந்து வந்தது. அந்த வரவு செலவுத் திட்டத்தை மாநகராட்சி உறுப்பினர் குழுவின் முன் வைக்கும்போது கல்விக்குழுவின் தலைவர் ஒரு சொற்பொழிவு நிகழ்த்துவது வழக்கமாயிருந்தது. கல்வித்துறையின் வரவு செலவுத் திட்டத்தின்மீது மாநகராட்சிக் கூட்டத்தில் பொது விவாதமும் நிகழும். விவாதத்திற்குப் பின்னர் வெட்டுப்பிரேரணைகள் தரப்பட்டு அவற்றின்மீது சிறு விவாதம் ஒன்றும் நடைபெறும். இந்த வரவு செலவுத் திட்டமும், அதன் மீது கல்விக்குழுத் தலைவர் நிகழ்த்தும் சொற்பொழிவும் மாநகராட்சி தோன்றிய காலம் முதல் ஆங்கிலத்திலேயே நடைபெற்று வருவது வழக்கமாயிருந்தது.

1953-54-ஆம் ஆண்டுக்குரிய கல்வித்துறை வரவு செலவுத் திட்டத்தை ஆங்கிலத்தில் சமர்ப்பிக்க ம.பொ.சி. மறுப்புத் தெரிவித்தார். வரவு செலவுத் திட்டமும் அதன்மீதான கல்விக் குழுவின் தலைவரின் சொற்பொழிவும் தமிழிலேயே இருக்க வேண்டும் என்று தாம் விரும்புவதாகத் தெரிவித்தார். மாநகராட்சியின் ஆணையரும், செயலரும் ம.பொ.சி.யின் விருப்பத்தை ஏற்கவில்லை. அவர்கள் மாநகராட்சியின் நிர்வாக மொழி சட்டப்படி ஆங்கிலமாகவே இருந்துவருவதால் அந்தச் சட்டத்தைச் சென்னை மாநிலச் சட்டமன்றத்தில் திருத்தினால் ஒழிய மொழி விஷயத்தில் மாறுதல் எதுவும் செய்யமுடியாது என்று ம.பொ.சி. யிடம் கூறியதோடு மாநகராட்சியின் கல்வித் துறையின் வரவு செலவுத் திட்டத்தை ஆங்கிலத்திலேயே தயாரித்து ம.பொ.சி. அவர்களிடம் கொடுத்தனர். ம.பொ.சி. அவர்கள் அவருடைய கருத்திலிருந்து பின்வாங்கவில்லை. ஆங்கிலத்தில் அவர்கள் கொடுத்த வரவு செலவுத்திட்டத்தைத் தமிழில் மொழிபெயர்த்து, மாநகராட்சி உறுப்பினர்களுக்கு வழங்குவதற்காகத் தேவைப்படும் படிகளை ம.பொ.சி. தன் சொந்தச் செலவிலேயே படி எடுத்து வைத்துக் கொண்டார். வரவு செலவுத் திட்டத்தின் மீது நிகழ்த்த வேண்டிய சொற்பொழிவையும் தமிழில் மட்டுமே எழுதி அதன் படிகளையும் எடுத்துவைத்துக் கொண்டார். மாநகராட்சிக் கல்வித்துறை வரவு செலவுத் திட்டத்தை மாநகராட்சி உறுப்பினர்

குழுவின் முன் வைக்கவேண்டிய நாளன்று பிற்பகல் மூன்று மணிக்கு மாநகராட்சி ஆணையருக்கும் செயலருக்கும் வரவு செலவுத் திட்டத்தின் நகலையும், அதன்மீதான சொற்பொழிவின் நகலையும் தமிழிலேயே அனுப்பி வைத்தார் ம.பொ.சி.

மாநகராட்சியின் ஆணையரும், செயலரும் தமிழறியாத ஆந்திரர்களாயிருந்ததால் மாநகராட்சிச் சட்டத்தினைக் காட்டி மொழியில் மாறுதல் காணும் ம.பொ.சி.யின் முயற்சி சட்டவிரோத மானது ஆகையால் அதனை அனுமதிக்க இயலாது என்று குறிப்பெழுதி அப்போதைய மேயராயிருந்த திரு. த. செங்கல்வராயனுக்கு அனுப்பி விட்டனர். மேயர் திரு. த. செங்கல்வராயன் தம்மளவில் ம.பொ.சி.க்கு ஆதரவளிக்கக் கூடியவராயிருந்தாலும் மாநகராட்சியின் சட்ட விதிகளுக்கு எதிராகச் செயல்படுவதில் அவருக்குச் சங்கடமிருந்தது. அவர் ஒரு வழக்கறிஞராகவும் இருந்ததால் ம.பொ.சி.யை அழைத்துப் பேசி ம.பொ.சி.யின் முயற்சியைக் கைவிடுமாறு கூறினார். ம.பொ.சி. அதற்குப் பிடிவாதமாக மறுத்துவிட்டார். அதன்பின் தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தையும் சொற்பொழிவையும் ம.பொ.சி.யைப் படிக்க அனுமதிப்பதாகவும் ஆனால் மாநகராட்சி உறுப்பினர் குழுவின் முன்பு அதிகாரப் பூர்வமாக வைக்கப்படும் வரவு செலவுத் திட்டமும், சொற்பொழிவும் ஆங்கில மொழியிலிருக்கவேண்டும் என்றும் ஒரு சமரசமான ஆலோசனையைக் கூறினார். ஆனால் ம.பொ.சி. கடைப்பிடித்து வந்த மொழிக்கொள்கை காரணமாக மேயரின் சமரச ஆலோசனைக்கு இணங்க மறுத்ததால் கடைசியில் மாநகராட்சிக் கூட்டத்தில் வரவு செலவுத் திட்டத்தின் தமிழ்ப் படியையே சமர்ப்பித்துத் தமிழிலே தயாரிக்கப்பட்ட பேச்சைச் சொற்பொழிவாற்றினார். மொழிபெயர்ப்பு என்ற நிலையில் ஆங்கிலத்திலும் வரவுசெலவுத் திட்டம் மாநகராட்சிக் கூட்டத்தில் வைக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியின் மூலம்தான் சென்னை மாநகராட்சியில் நிர்வாக மொழியில் - கல்வித் துறை சம்பந்தப்பட்ட வரையில் - மாற்றம் ஏற்பட்டது. ம.பொ.சி. அவர்கள் வரவுசெலவுத்

திட்டத்தினைப் படிக்கும்போது இது சட்டப்பூர்வமானதல்ல' என்று திரு. ஜி. ராஜமன்னார் என்ற தெலுங்கு உறுப்பினர் மாநகராட்சிக் கூட்டத்தில் ஆட்சேபனை எழுப்பினார். அவரது ஆட்சேபனைக் குரலைப் பொருட்படுத்தாது, ம.பொ.சி. அவர்கள் சொற்பொழிவைத் தமிழில் படிக்க மேயர் அனுமதித்தார். கல்விக் குழு வரவு செலவுத் திட்டத்தின்மூலம் தான் மாநகராட்சி நிலையில் ம.பொ.சி. அவர்களால் தமிழ் ஆட்சிமொழியாக்கப்பட்டது.

இதனைப் போன்றே தமிழை ஆட்சிமொழியாக்கிய மற்றொரு நிகழ்ச்சி சென்னைப் பல்கலைக்கழகத்தின் ஆட்சிப்பேரவைக் கூட்டத்தில் நிகழ்ந்தது. சென்னைப் பல்கலைக்கழகத்தில் 1973-ஆம் ஆண்டு, மார்ச்சுத் திங்கள் 29-ஆம் நாள் நடைபெற்ற ஆட்சிப் பேரவைக் கூட்டத்தில் உறுப்பினர்கள் அனைவரும் ஆங்கிலத்திலேயே பேசிக் கொண்டிருந்தபோது, திரு. ம.பொ.சி. அவர்கள், "ஆங்கிலத்திற்கு ஏற்றம் கொடுத்த போதிலும், தமிழை நிர்வாக மொழியாகவேனும் ஏற்றுக் கொள்ளக் கூடாதா? ஆண்டறிக்கையைத் தமிழிலும் வெளியிட, பெயர்ப் பலகைகளில் தமிழுக்கும் இடமளிக்க நம் பல்கலைக்கழகம் முன்வரக் கூடாதா? என்றுதான் கேட்கிறேன்?"[4].... என்று வினாவினை எழுப்பினார். ம.பொ.சி. மேலும் பேசுகையில், "இந்தப் பொதுக்குழுக் கூட்டத்தில் நாமெல்லோரும் தமிழில் பேசினால் என்ன? நாமெல்லாம் தமிழர்கள்தானே! தமிழ்நாட்டில்தானே இந்தப் பல்கலைக்கழகம் நடக்கிறது? இது என்ன ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகமா? அல்லது கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகமா? ஆங்கிலத்தில் மட்டுமே நடத்த!.... இந்தப் பல்கலைக்கழகக் கட்டடத்தில் தமிழ் வரிவடிவத்தைக் கூடக் காணமுடியவில்லையே. நாடு சுதந்திரம் பெற்று இருபத்தைந்து ஆண்டுகளுக்குப் பின்னருமா ஆங்கில ஆதிக்கம். - தமிழ்மொழியின் அடிமைத்தனம் நீடிப்பது?"[5] என்று கேட்டார்.

இந்தக் கூட்டத்தில் ம.பொ.சி. அவர்கள் பேசிய பிறகு பேசிய அனைத்து உறுப்பினர்களும் தமிழிலேயே பேசினார்கள் என்பதும், ம.பொ.சி. அவர்களுக்கு முன்னர்ப் பேசியவர்கள் ஆங்கிலத்தில் பேசியிருந்தாலும், அவர்களே ம.பொ.சி. பேசிய பின்னர்ப் பேசும்போது தமிழிலேயே பேசினார்கள் என்பதும் குறிப்பிடத்

தக்கது. கூட்டத்தின் தொடக்கத்தில் ஆங்கிலத்தில் பேசிய துணை வேந்தர் நெ.து. சுந்தரவடிவேலுவும் கூட ம.பொ.சி. பேசிய பின்னர்ப் பேசும்போது தமிழிலேயே பேசினார் என்பது இங்கு நினைவு கூரத்தக்கது. நூறாண்டுகளுக்கு மேல் கல்விப் பணியாற்றிவரும் பாரம்பரியமிக்க சென்னைப் பல்கலைக்கழகத்தின் ஆட்சிப் பேரவைக் கூட்டத்தில் இப்படித்தான் தமிழ் ஆட்சிமொழியாக இடம்பெற்றது. இதற்கும் ம.பொ.சி.யின் தூண்டுதலே காரணமாயிருந்தது எனில் அது மிகையாகாது.

வாழ்வின் அனைத்துத் துறைகளிலும் தாய்மொழிக்கு இடமில்லை என்றால் சுதந்திரத்தால் பயனில்லை. தமிழைத் - தாய்மொழியை - ஒவ்வொருவரும் உணர்ச்சியோடு வளர்க்க வேண்டும். வாழ்க்கையில் ஒவ்வொரு துறையிலும் தமிழைப் பயன்படுத்த வேண்டும் என்பதே ம.பொ.சி.யின் கருத்தாகும். நம் நாடு சுதந்திரமடைந்தபோது தமிழகச் சட்டசபையில் நூற்றுக்குத் தொண்ணூற்றெட்டுப் பேர் ஆங்கிலத்தில் பேசிக் கொண்டிருந்த நிலை மாறி இன்று அனைவரும் தமிழில் பேசுகின்ற நிலை உருவாகியுள்ளது என்றால் அதற்கு ம.பொ.சி. அவர்களின் முயற்சியே காரணமாகும்.

ம.பொ.சி. அவர்களின் மொழிபற்றிய சிந்தனைகளில் பிறமொழிச் சொற்களைத் தமிழில் பயன்படுத்துவது குறித்த கருத்து சற்று வேறுபட்ட சிந்தனையாக விளங்குகின்றது. இது குறித்து அவர் எழுதியுள்ள 'தமிழும் கலப்படமும்' என்ற நூல் இதற்குச் சான்றாய் அமைகின்றது. நூலின் தொடக்கத்திலேயே 'இரு துருவங்கள்' என்ற தலைப்பில் 'சமஸ்கிருதப் பதங்களை, லிபிகளைத் தமிழில் வெகுவாக ஸம்பந்தப்படுத்தித் தமிழைபோஷிக்கவேண்டும்' என்று கூறுவோர் கலப்படக்காரர்கள் என்றும்; "தமிழ் தனித்தியங்கும் மொழி; இதில் வடசொற்களைக் கலந்தால் தமிழின் தனித்தன்மை திரியும், ஆகவே தமிழின் தனித்தன்மையைக் காத்தல் தமிழர்தம் கடன்" என்று கூறுவோர் தனித்தமிழ்க் கட்சியினர் என்றும் இரண்டு அணியினரைப் பற்றியும் குறிப்பிட்டுவிட்டு, இந்த இருசாராருமே, தமிழைத் தாய்மொழியாகவும் தமிழகத்தைத் தாய்நாடாகவும் பெற்றிருக்கின்றனர். இவர்களில் எந்த ஒருசாராரும் தமிழகத்திற்கும்

தமிழுக்கும் அஞ்சியவரல்லர். எனினும் 'தமிழர்' என்ற இனவுணர்ச்சி பெற்றோர், தாய்மொழியான தமிழிலே ஆழ்ந்த பற்றுடையோர், தமிழின் வளர்ச்சிக்குப் பணிபுரிவோர் எவரும் இந்த சாராருடைய கருத்துகளையும் அப்படியே முழுமையாக ஏற்க மறுப்பது இயற்கை".

"முன்னவர் பேச்சுமொழி அல்லாத வடமொழியின்பால் வரம்பு கடந்த பக்தி கொண்டு, 'களை'யெடாமல், தாய்மொழிப் பற்று என்னும் நீர் விடாமல், இலக்கண மரபு என்னும் வேலிகட்டாமல் தமிழ்ப் பயிரை வளர்க்க விரும்புகின்றனர். பின்னவர் வடமொழியின் பால் தாம்கொண்ட 'பகைமை' என்னும் 'நஞ்சை' எருவாக்கித் தமிழ்ப் பயிரை வளர்க்க முயல்கின்றனர்" என்று இருசாராரையும் சாடுகிறார். 'இந்த இருவேறுபட்ட கருத்துகள் நீண்ட நெடுங்காலமாகவே தமிழகத்தில் நிலவி வருகின்றன. முற்றிலும் மொழியோடு மட்டுமே தொடர்புடைய இந்த வழக்கில், சாதி வெறுப்பும், சமய எதிர்ப்பும், நாத்திக உணர்வும் அரசியல் கட்சி வளர்க்கும் உள்நோக்கும் கலந்துவிட்டன" என்ற இவருடைய கருத்து தனித்தமிழ்க் கட்சியாரையே குறைகூறுவதாய் அமைகின்றது. தொடக்கத்தில் நடுநிலையில் நின்று பேசுவதுபோல் தொடங்கினாலும் இவ்வாதத்தால் ஒரு சார்புடையதாகவே இவர் கருத்தமைகின்றது. அந்நோக்கிலேயே 'திராவிடம்' என்ற சொல்லே வடசொல் என்ற கருத்தை நிலைநாட்டுவதற்காகக் கால்டுவெல் பாதிரியார், பெரும்புலவர் இரா. இராகவையங்கார், நாவலர் சோமசுந்தர பாரதியார் ஆகியவர்களின் கருத்தை எல்லாம் சான்றாகக் கொண்டு வாதத்தைத் தொடர்கிறார். இறுதியில் 'உண்மையென்னவென்றால் தமிழ்மொழியின் தனித்தன்மையைக் காப்பதில் தங்களுக்கு அக்கறை இருப்பதாக இவர்கள் பறை சாற்றிக் கொள்வதெல்லாம் கட்சி வளர்க்கும் சூழ்ச்சிதான்' என்று சாடுகிறார்.

இங்கு இவருடைய நடுநிலைப் பார்வை மாறி அரசியல் சார்பு கொண்ட - ஒரு சார்புடையவராக வாதத்தைத் தொடர்கிறார். இதனாலேயே 'தனித்தமிழ் வாதமே நாத்திகத்தின் எதிரொலிதான்'

என்கிறார். அவர்களுடைய வடமொழிப் பகைமை நாத்திக உணர்வின் எதிரொலியே' என்கிறார். வி.கோ. சூரிய நாராயண சாஸ்திரியாரின் தனித்தமிழ்ச் சிந்தனையைப் பற்றிக் குறிப்பிடும் போது வி.கோ. சூரியநாராயண சாஸ்திரியார் தம்முடைய 'தமிழ்மொழி வரலாறு' என்ற நூலில் வடமொழிச் சொற்கள் கலந்து இருப்பதைச் சுட்டிக்காட்டி, அவருடைய நாடகங்கள் எல்லாம் வடமொழிப் பெயர்களுடனேயே படைக்கப்பட்டுள்ளன என்று கூறி, அவர்தன் பெயரைப் 'பரிதிமாற் கலைஞர்' என்று தூய தமிழில் மாற்றிக் கொண்டதைக் கூட வடமொழி வெறுப்பினால் அல்ல என்று மறுக்கிறார் ம.பொ.சி. இதற்கு வி.கோ. சூரிய நாராயண சாஸ்திரியார் எழுதிய 'தனிப்பாசுரத்தொகை' என்ற நூலின் இரண்டாம் பதிப்பின் முன்னுரையிலிருந்து பின்வரும் பகுதியைச் சான்றாகக் காட்டுகிறார் ம.பொ.சி.

"இப்பாசுரங்களிற் சில புதுக்கருத்துகள் காட்டியிருக்கின்றமை பற்றி அஞ்சுவோம், எமது மெய்ப்பெயரின் வெளியிடாது பரிதிமாற் கலைஞர் என்னும் புனைவுப் பெயரின் வெளியிடுவே மாயினம். அன்றியும், நன்னூலொன்று செய்தானது புகழின்மையான் இகழப் பட்டொழிதலும், புன்னூலொன்று செய்தானது உணர்ச்சியாற் சாலவும் புகழப்பட்டிலங்கலும் நாடொறும் காண்டலின் இந்நூலைப் பற்றிய தமிழ் மக்களின் உண்மை மதிப்பு இணைத்து என்னுரை வேண்டியும் அவ்வாறு செய்ய விரும்பினோம்."[6] இச்சான்றினால் 'பரிதிமாற் கலைஞர்' என்பது புனை பெயரேயன்றித் தமிழ் மீது தனித்தமிழ் மீது - கொண்ட பற்றினால் சூடிக்கொண்ட பெயரன்று என்பது ம.பொ.சி.யின் வாதமாகின்றது.

ம.பொ.சி. அவர்கள் தனித்தமிழியக்கம் திராவிட இயக்கத்தின் தூண்டுதலால் தோன்றியது என்று கருதியே வாதத்தை நடத்திச் செல்கின்றார். அதனாலயே பின்னர் மறைமலையடிகளின் நூல்களில் மறைமலையடிகள் ஆங்கிலத்தில் முன்னுரை எழுதுவதையும் அவற்றின் கீழ் வேதாச்சலம் என்று ஆங்கிலத்தில் கையொப்பமிடுவதையும் கூடத் 'தமிழில் மறைமலை ஆங்கிலத்தில் வேதாச்சலமா?" என்று எள்ளி நகையாடுகிறார்.

இவையாவும் "தனித்தமிழ் இயக்கம் என்பது வடமொழிச் சொற்களை மட்டுமே கலந்து எழுதக் கூடாது என்று கருதும் ஓர் இயக்கம்" என்ற அனுமானத்தின் பேரில் அமைந்த வாதமேயாகும். இதனாலேயே "ஆங்கில மோகமேன்?" என்ற தலைப்பில், அகில இந்திய ஒலிபரப்பு நிலையம் 'ஆல் இண்டியா ரேடியோ' என்ற ஆங்கிலப் பெயரால் அழைக்கப்பட்டபோது அதனை எந்தப் புலவரும், தலைவரும் எதிர்க்கவில்லையே ஏன்? ஆங்கிலத்திற்குப் பதிலாக 'ஆகாச வாணி' என்ற வடமொழித் தொடர்புடைய கன்னடப் பெயர் தோன்றியபோதுதான் புலவர்களில் சிலர் போர்க் கோலம் கொண்டனர்! இது தமிழ்ப்பற்றா?" என்று எழுதுகிறார். "ஆகாசவாணி வந்த பிறகுதான் வானொலி என்ற தமிழ்ச் சொல்லுக்கும் வாழ்வு கிடைத்தது" என்கிறார். இதனையடுத்துத் தமிழகப்புலவர் குழுவினரின் அழைப்பிதழில் "பெயர்களுக்கு முன்னே உள்ள தலைப்பெழுத்துகளும் பட்டங்களும் ஆங்கில எழுத்துகளில் உள்ளனவே' என்று சுட்டிக்காட்டி அந்த ஆங்கிலப் பட்டங்களைத் தமிழ் வரிவடிவங்களிலேனும் தந்திருக்கக் கூடாதா? தமிழ்ப் புலவர் குழுவின் நிலையே இதுவானால், மற்றவர்களைப் பற்றிக் கேட்பானேன்?" என்று எழுதுகிறார். இவை எல்லாம் வடமொழி எதிர்ப்பால் விளைந்ததே தனித்தமிழியக்கம் என்ற கருதுகோளுடன் செய்யும் வாதமாகவே உள்ளது. அதனாலேயே ஆங்கிலத்தைப் பயன்படுத்துவோர் அடிமையுள்ளம் படைத்தவர்கள் என்று சாடுகிறார்.

"தமிழில் வடமொழிச் சொற்களை வரம்பின்றிக் கலந்து எழுதுவோர் குற்றவாளிகள் என்றால் குற்றவாளிகள் ஒருவரல்ல பலர்;" என்றும், காலந்தோறும் எவ்வெக்காலத்து நூல்களில் எவ்வாறு வடமொழிச் சொற்கள் கலந்துள்ளன என்று விளக்கி அந்நூலாசிரியர்கள் யாவரும் குற்றவாளிகளே என்பது போன்று பேசுகின்றார்.

வேண்டுமென்றே தேவையற்றவிடத்தும் பிறமொழிச் சொற்களைத் தமிழில் திணிப்பார்களானால் அது மன்னிக்க முடியாத பெருங்குற்றமாகும். அதனைக் கண்டிப்பது தமிழர்தம்

கடமையாகும். தேவையை முன்னிட்டுப் பிறமொழிச் சொற்களைத் தமிழில் கலந்தெழுத நேருங்காலத்தும் தமிழிலக்கண மரபுக்கேற்பவும், ஒலி இன்பத்திற்குப் பொருந்தவும் அந்தச் சொற்கள் திருத்தம் பெற வேண்டும். 'கர்மா' என்ற வடசொல்லைக் 'கருமம்' என்றும், 'புஸ்தக்' என்பதை 'புத்தகம்' என்றும் திருத்துவதைச் சான்றாகக் கூறலாம்'' என்று பிறமொழிச் சொற்களைக் கையாளும் முறைகளை விளக்கும்போது ம.பொ.சி. அவர்கள் ஒரு மொழியியல் வல்லுநராகவே விளங்குகிறார்.

மேலும், "ஜ, ஸ, ஷ, ஹ, க்ஷ என்ற கிரந்த எழுத்துகள் தமிழில் கலந்துள்ளன. அவை தமிழ் எழுத்துகள் அல்ல என்றால், அப்படியே சுயமான தேவநாகரி எழுத்துகளும் அல்ல. இரு மொழிக்கும் பொதுவாக, தமிழின் வரிவடிவத்திற்கேற்பத் திருத்தப்பெற்ற எழுத்துகளாகும்'' என்கிறார். இங்குக் கிரந்த எழுத்துகள் வடமொழி ஒலிகளைத் தமிழில் எழுதிக்காட்ட உருவாக்கப்பட்ட - தமிழர்களால் உருவாக்கப்பட்ட - வரி வடிவம் என்ற கருத்தையே இவ்வாறு ம.பொ.சி. அவர்கள் தம்முடைய ஜனரஞ்சகமான மொழியில் விளக்குகின்றார். ''ஆகவே தேவைப்படுகின்ற இடத்து அவற்றைப் பயன்படுத்துவது தவறன்று" என்கிறார். இதன்பின்னர்க் கிரந்த எழுத்துகளை ஏன் பயன்படுத்த வேண்டும் என்பதனையும் பின்வருமாறு விளக்குகின்றார். "கிரந்த எழுத்துகளுக்குப் பதிலாகத் தமிழ் எழுத்துகளைப் பயன்படுத்துவதில் தவறில்லை என்றாலும் ஒலியின்பமும், பொருளும் கெடாத வகையில் செய்ய வேண்டும். 'ஜலம்' என்பதனை 'சலம்' என்று எழுதினால் 'நீர்' 'மலை'யாக மாறி நம்மை மயக்கிவிடும்" என்கிறார்.

" 'ஷேக்ஸ்பியர்' என்ற பெயரை 'செகசிற்பியர்' என்று எழுதுவது நகைப்புக்கு இடமாகும். சாக்ரடீஸ் என்பவரை சோக்ரதராக மாற்ற நமக்கு உரிமையில்லை. அப்படியே 'பாஷை'யைப் பாடை ஆக்குவதும் அமங்கலமாகும். இந்த மாதிரி இடங்களில் கிரந்த எழுத்துகளைப் பயன்படுத்தி நயத்தையும், பொருளையும் காப்பதே அறிவுடைமையாகும்" எனத் தம் கருத்தை வெளிப்படுத்துகிறார்.

மொழி வளர்ச்சிச் சிந்தனையோடு "தமிழ்மொழியின் தனித் தன்மையை, பெருமையை முடிந்தவரை காக்கவேண்டும் என்பதில் யாரோடும் எனக்குக் கருத்துவேற்றுமை இல்லை. ஆனால் பிறமொழிச் சொற்களைத் தமிழில் கலக்கக் கூடாதென்று கூறுவது, தமிழின் வளர்ச்சிக்குத் தடை போடுவதாகும்" என்று தம் கருத்தை வலியுறுத்துகின்றார். இக்கருத்து இவருக்குத் தமிழ் வளர்ச்சி குறித்த அக்கறை இருப்பதையும், மொழியின் சொற்களஞ்சியத்தைப் பெருக்குதல், கலைச் சொற்களை உருவாக்குதல் போன்ற மொழியைப் புதுக்குதல் அல்லது புத்தாக்கம் குறித்த சிந்தனை இருப்பதையும் காட்டுகின்றது.

கோவில்களில் அருச்சனை தமிழில் நடைபெற வேண்டும் என்ற கோரிக்கை சிலரால் வலியுறுத்தப்பட்டு வருகின்றதைக் குறிப்பிட்டு, "இது வரவேற்கத்தக்கதே'- ஆலயங்களில் அருச்சனை தமிழில் நடைபெற வேண்டும் என்ற கோரிக்கை நமக்கு உடன்பாடே" என்று கூறிவிட்டு, உடனே, "ஆனால் இங்கு ஒன்றனைக் கவனத்தில் கொள்ள வேண்டும்" என்று பின்வாங்குகின்றார். "இது முற்றிலும் சமயத் தொடர்பான பிரச்சினை. ஆட்சிமொழி, போதனா மொழிப் பிரச்சினை போன்று தமிழ் இனத்தவர் எல்லோருக்குமுள்ள சமூகப் பிரச்சினையன்று... சமயத்தில் நம்பிக்கை உடையவர்கள் மட்டுமே இப்பிரச்சினையில் கலந்து கொள்ளும் போது வடமொழிக் காழ்ப்புக்கு இரையாகக் கூடாது" என்று எச்சரிக்கின்றார். மேலும், "இஸ்லாமியருக்கு அரபு சமயமொழியாக இருப்பது போல, கிறிஸ்துவருக்கு லத்தீன் மொழி சமயப் பொதுமொழியாக இருப்பதுபோல, இந்துக்கள் எல்லோருக்கும் சமஸ்கிருதம் மதமொழியாகும். மத உணர்வுக்கும் ஒற்றுமைக்கும் கேடு நேராத வகையில் அருச்சனை மொழி பற்றிய பிரச்சினை விவாதிக்கப்பட வேண்டும்" என்று நழுவுகிறார். இங்கு இந்துக்கள் என்ற சொல் பிற்காலத்துக் கட்டமைப்பு என்பது புரிந்தும் நழுவுகிறாரா? அல்லது புரியாமல் குழம்புகிறாரா என்பது மேலும் ஆய்வுக்குரியது.

"இசையரங்குகளில் தெலுங்கு
ஆலயங்களில் வடமொழி
அரசியலில் ஆங்கிலம்"

என்று ஒரு காலத்தில் தாம் வருந்தியதை மறந்துவிட்டாரா? என்பது புரியவில்லை.

"சுமார் 1500 ஆண்டுகளுக்கு மேலாகப் பிறமொழிகளின் மத ஆதிக்கங்களும், அரசியல் ஆதிக்கங்களும் தொடர்ந்து நிலைபெற்றிருந்தும், அவர்களால் தமிழ்மொழி முற்றிலும் புறக்கணிக்கப்பட்டுவந்தும் நம் தாய்மொழி அழிந்துவிடவில்லை; வாழ்ந்து வந்திருக்கின்றது. இதிலிருந்து தன்னைக் காத்துக் கொள்ளும் ஆற்றல் தமிழ்மொழிக்கு இயற்கையிலேயே அமைந்திருக்கிறது என்ற உண்மையை அறிகிறோம்" என்று கூறிக் "குறிப்பிட்ட ஒரு சாதியையோ, அல்லது சமூகத்தையோ சார்ந்த சிலர் தமிழ்மொழியில் பிறமொழிச் சொற்களை மிகுதியாகப் பெய்து நூல் இயற்றி வெளியிடலாம். அதனால் தமிழ்மொழி அழிந்து விடுமா? அப்படிப்பட்ட கலப்படக்காரர்களால் தமிழை அழிக்க முடியுமானால் அதனை 'உயர்தனிச் செம்மொழி' என்று உரைக்க முடியுமா?" என்று கேட்டுவிட்டு, "நமது தாய்மொழியான தமிழ் அழியாதது; பிறமொழியினரால் அழிக்கவும் முடியாதது என்ற நம்பிக்கையை அடிப்படையாக்கித் தமிழை வளர்க்கும் பணியில் ஈடுபடுவோம்" என்கிறார்.

பிறமொழிக் கலப்பினைப் பற்றி இவருடைய கருத்து சற்றுக் குழப்பமாகவே - ஒரு சார்புடையதாகவே - தோன்றினாலும், நூலின் இறுதியில், "கலப்பு வேறு, கலப்படம் வேறு. கலக்கப்படும் பொருளின் அசல் தன்மையை அழிப்பது கலப்படம்" என்று வரையறை செய்து கொண்டு, "தமிழின் தனித்தன்மையை அழிக்கும் வகையிலோ அல்லது அதன் அழகைக் குறைக்கும் வகையிலோ பிறமொழிச் சொற்களைத் திணிப்பது கலப்படம்தான் அந்தக் கலப்படத்துக்கு நான் எதிர். ஆனால் தமிழ் வளர்ச்சியைக் கருதித் தமிழ் மக்களின் வாழ்க்கை நலனை ஒட்டித் தமிழின் தனித்

தன்மையையும் அழகையும் கெடுக்காமல், பிறமொழிச் சொற்களை வரவேற்பதில் தவறில்லை; வரவேற்கவும் வேண்டும்"[23] என்று தம் கருத்தைக் கூறி முடிக்கின்றார்.

சிலம்புச் செல்வர் அவர்கள் தன் வாழ்நாளெல்லாம் போராடிச் சில துறைகளில் சிறப்பான வெற்றியைப் பெற்றார். சில துறைகளில் அவர் காலமெல்லாம் போராடியும் இறுதிவரை - ஏன் இன்று அவர் மறைவுக்குப் பின்னும் கூட வெற்றி பெற முடியாத சில துறைகளும் உண்டு. அவற்றில் ஒன்றுதான் கல்வித் துறையில் தமிழ் பயிற்றுமொழியாகும் திட்டம். எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்ற கொள்கையையுடைய ம.பொ.சி. தமிழ்தான் கல்விக் கூடங்களில் பயிற்றுமொழியாயிருத்தல் வேண்டும் என்னும் கருத்துடையவர்.

ம.பொ.சி. வெளிநாடுகளுக்குப் போய்வந்தபோது அந்த நாடுகளிலெல்லாம் அந்தந்த நாட்டுத் தேசிய மொழியிலேயே - மக்களின் தாய்மொழியிலேயே - கல்வி கற்கிறார்கள். மேலும் நம் நாட்டிலிருந்து அங்கு உயர்கல்விக்காகச் சென்றிருப்பவர்கள் அந்தந்த நாட்டின் மொழியிலேயே விஞ்ஞானத்தைக் கற்கிறார்கள். அப்படியிருக்கும்போது நாம் மட்டும் ஏன் ஆங்கிலத்தில் கற்க வேண்டும் என்று சிந்திக்கின்றார். இதனை, "உருஷ்ய மொழி மூலமோ, பிரஞ்சு மொழி மூலமோதான் உருஷ்யாவிலும், பிரான்ஸிலும் தமிழகத்து மாணவர்கள் கல்வி கற்கிறார்கள். இக்கல்வி பயனுடையதாக இருக்குமானால் தமிழின் மூலம் பயிலும் விஞ்ஞானப்படிப்பு வாழ்க்கைக்குப் பயன்படாதென்பது எப்படிக் கூற முடியும்?"[7] என்று கேட்கிறார்.

அமெரிக்காவிலெல்லாம் தாய்மொழியே செல்வாக்குப் பெற்றுள்ளது. அதனால் அமெரிக்கர்கள் தம் தாய்மொழியிலேயே சிந்திப்பதால் தாம் விரும்பியபடி முன்னேற முடிகிறது என்று கருதுகிறார். "அமெரிக்காவிலே எங்கும் எதிலும் நாட்டு மொழியே செல்வாக்கு செலுத்துவதால்தான் தாய்மொழியின் வாயிலாகவே தான் விரும்பியபடி எல்லாம் ஆபிரகாம்லிங்கனால் முடிந்தது. தமிழகத்திலே, தமிழர் வாழ்விலே அன்னிய மொழியான ஆங்கிலமே அதிகாரம் செலுத்துகின்றது. ஆகவே ஆபிரகாம்

லிங்கனுக்கு இருந்த சூழ்நிலை எனக்கு இல்லை"[8] என்று வருந்துகிறார் ம.பொ.சி.

"அமெரிக்காவில் விறகுவெட்டியின் மகனான ஆபிரகாம் லிங்கன் ஜனாதிபதியாக வரமுடியுமானால், தமிழ்நாட்டுத் தொழிலாளர்களிடையே மட்டும் ஆபிரகாம்லிங்கன் தோன்ற முடியாதா? முடியும்; தமிழர் வாழ்வில் எங்கும் தமிழ் எதிலும் தமிழே முதலிடம் பெறும்பொழுது! ஒரு தொழிலாளியின் முன்னேற்றத்துக்குத் துணைபுரியும் முதல் சாதனம் அவனது தாய்மொழிதான்"[9] என்று உறுதியாக நம்புகிறார் ம.பொ.சி. அதனால்தான் அவர் தமிழே கல்விக் கூடங்களின் அனைத்து நிலையிலும் பயிற்றுமொழியாக இருக்க வேண்டும் என்று எண்ணினார். அதற்கான போராட்டத்தையும் முன்னின்று நடத்தினார். ஆனால் பயன்தான் இன்று வரையில்லை. இதனை மனம் நொந்து அவர் எழுதுகிறார்.

"பல்கலைக் கழகப் பாடங்களைப் பயிற்றுவிப்பதற்கான மொழி, தமிழா? ஆங்கிலமா? என்று விவாதிக்கப்பட்டு வருகிறது. ஆங்கில நாட்டில் அல்ல, நம் தாயகமான தமிழ்நாட்டில்தான்! இதைவிட மானக்கேடு தமிழருக்கு என்ன இருக்கமுடியும்? இதுபோன்ற ஒரு விவாதம் உரிமை வாழ்வு நடத்தும் எந்த ஒரு நாட்டிலும் நடந்ததாக வரலாறு சொல்லவில்லை. இந்தியாவிலும் வேங்கடத்திற்கு வடக்கேயுள்ள எந்த ஒரு மாநிலத்திலும் இத்தகையதொரு விவாதப்போர் நிகழவில்லை. துரதிர்ஷ்டம் பிடித்த இந்தத் தமிழ்நாட்டில்தான் பயிற்றுமொழி தமிழா? ஆங்கிலமா? என்று விவாதிக்கப்படுகின்றது. இங்கும் பல்கலைக் கழக செனட் சபையிலோ, மக்கள் மன்றமான சட்டசபையிலோ மட்டுமல்லாமல் வீதிகளிலே போடும் மேடைகளிலும் விவாதம் நடைபெற வேண்டிய அளவுக்கு விஷயம் விஷத்தன்மை பெற்றுவிட்டது".

"உலகில் சுதந்திரமாக வாழும் ஒவ்வொரு நாட்டிலும் அந்தந்த நாட்டு மொழியே ஆரம்பப் பள்ளி முதல் பல்கலைக்கழகம் வரைபாட மொழியாக மட்டுமல்லாமல், விஞ்ஞானம் உள்ளிட்ட பல கலைகளையும் பயிற்றுவிக்கும் கருவிமொழியாகவும் இருந்து

வருகின்றது. இந்தியா ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்டிருந்த காலத்தில் இங்கு நம்மை அடிமை கொண்ட அந்நியரின் மொழியான ஆங்கிலம் பயிற்று மொழியாகச் செய்யப்பட்டது. இப்போது ஆங்கிலேயர் வெளியேறி விட்டதால் ஆங்கில மொழியின் ஆதிக்கத்தையும் அகற்றவேண்டியது அவசியமாகிறது. அகற்றுவதுதான் நாம் விடுதலை பெற்றதற்கு அடையாளம்.

"காந்தியடிகள் வாழ்ந்த காலத்தில்.... தாய்மொழிக்கு எதிராக ஆங்கிலமொழியை ஆதரிப்பது பாவச்செயல் என்றார் காந்தியடிகள்"

"நம்முடைய இளைஞர்களுக்குக் கல்வியளிக்கும் பொறுப்புடையவர்கள் சற்று மனம் வைத்துச் சிந்தித்துப் பார்த்தால், குழந்தையின் உடல் வளர்ச்சிக்குத் தாய்ப்பால் எப்படியோ அப்படி மனிதனின் மனவளர்ச்சிக்குத் தாய்மொழியே இயற்கையானது என்பதை உணர்வார்கள். வேறு எப்படி இருக்க முடியும்?..... 1939ஆம் ஆண்டில் உயர்நிலைப் பள்ளிகள் அனைத்திலும் தமிழ் பயிற்று மொழியாக்கப்பட்டது.... சீனா, ருஷ்யா, பிரான்ஸ், ஜெர்மன், ஜப்பான் போன்ற முன்னேற்றமடைந்த நாடுகளில் எல்லாம் அந்தந்த நாட்டின் சொந்த மொழிதான் பயிற்று மொழியாக இருந்து வருகிறது.... ஆங்கில மொழியிலுள்ள விஞ்ஞானத் தொழில்நுட்பக் கலை நூல்கள் அனைத்துமே ஆங்கிலத்துக்கேயுரிய முதல் நூல்களல்ல. ஜெர்மனி, பிரெஞ்சு, கிரேக்கம் ஆகியவற்றிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டவையே அதிகம். அதுபோல நாமும் விஞ்ஞானக்கலை நூல்களைத் தமிழில் மொழி பெயர்த்துக் கொள்ளலாமே."

"இந்தியாவில் பலமொழிகள் வழங்குவதால் விஞ்ஞானத் தொழில்நுட்பக்கலை பயில, பாரதம் முழுவதற்கும் ஒரே மொழி பயன்படுத்தப்பட வேண்டும் என்று கூறுவோர், சோவியத் நாட்டைப் பார்க்க வேண்டும். அந்த நாட்டில் எழுத்து வடிவத்தோடு கூடிய பதினெட்டு மொழிகள் பயிற்று மொழிகளாக இருந்து வருகின்றன. ஒவ்வொரு மாநிலத்திலும் அந்தந்த மாநில மொழியே பயிற்று மொழியாக்கப்பட்டுள்ளது"

"கலைச் சொற்கள்" என்று சொல்லும்போது, அசலா? நகலா? என்ற கேள்வி எழுகிறது. ஆங்கிலமொழியில் உள்ள கலைச் சொற்கள் அனைத்துமே அம்மொழிக்கேயுரிய அசல் சொற்களல்ல. அசலும் உண்டு, நகலும் உண்டு; அந்த மரபுப்படி ஆங்கில நூல்களிலுள்ள கலைச் சொற்களை எடுத்துத் தமிழ்முறைப்படித் திருத்திப் பயன்படுத்திக் கொள்ளலாம்"[10] என்றெல்லாம் நாற்பத்திரண்டு ஆண்டுகளுக்கு முன்பே சிலம்புச் செல்வர் கூறிய கருத்துகளை இன்றளவும் போற்றிப் பேணுவாரின்றி இன்று ஊரெல்லாம் மெட்ரிகுலேசன் பள்ளிகள் பெருகிவருகின்றன. இன்னும் ஆயிரம் ம.பொ.சி.கள் தோன்றினாலும் தமிழர்கள் திருந்த மாட்டார்கள்!

இன்றைய தமிழ்நாட்டின் தேவை என்ன என்பதைப் பற்றிப் பற்றிக் கூறும்போது, "நாம் வாழ்வது வள்ளுவர், கம்பர், இளங்கோவடிகள் போன்ற மெய்ஞ்ஞானியர்கள் காலமன்று; விஞ்ஞானியர்கள் காலம். இக்காலத்தில் தமிழை வளர்த்திட வேண்டுமானால் தமிழைக் கொண்டு தமிழினத்தார் தலையெடுத்து வாழ வேண்டுமானால் வெறும் கவிதைகள் போதா; காப்பியங்கள் போதா; விஞ்ஞான அறிவியல் நூல்கள் தமிழில் பெருகவேண்டும். ஏனெனில் அதுதான் தமிழ் வளர்ச்சியாகும்" என்று எழுதுகிறார் ம.பொ.சி. மேலும், "இன்றைய தேவை விஞ்ஞான நூல்கள்; அதுவும் தமிழில் வந்தாக வேண்டும். அவற்றைக் கொண்டே தமிழினத்தார் விஞ்ஞான அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும். அதுதான் தமிழ் வளர்ச்சி; தமிழனின் வாழ்வு" என்று விஞ்ஞான நூல்கள் தமிழில் தோன்ற வேண்டுமென்று வலியுறுத்துகின்றார்.

"கம்பன் புகழ்பாடிக் கன்னித் தமிழ் மறக்கின்றனர். விஞ்ஞானப் பாடங்களைக் கல்லூரிகளில் தமிழில் பயிற்றுவிப்பதற்கு மறுப்புத் தெரிவிக்கின்றனர்.

ஆலயத்துள்ளே வடமொழி
அரசாங்க அலுவலகங்களிலே ஆங்கிலம்
பல்கலைக்கழகங்களிலே பரங்கிமொழி
வடக்கே வேலைக்கு இந்திமொழி
இன்பத்தமிழுக்கு எங்கே இடம்?

கம்பன் இன்று வருவானானால் அறிவுக்கோயிலில் அன்னைத் தமிழுக்கு ஆதிக்கம் இல்லை என்றால் தமிழ் அழிந்து போகாதா? என்றுதானே கேட்பான்?"[30] என்று உணர்வுபூர்வமாக எழுதுகின்றார். தமிழ்மொழியின் பெருமையைப் போற்றுவது வேறு! அதன் உரிமையைப் பேணுவது வேறு! கம்பனுக்கு விழா எடுப்பதால் அவன் புகழ் ஓங்கலாம்! ஆனால் தமிழின் உரிமை ஓங்க அதுமட்டும் போதாது! அரசின் அலுவலகங்கள் அனைத்திலும் ஆட்சிமொழியாகவும், அனைத்துக் கல்லூரிகளிலும் அனைத்துப் பாடங்களிலும் பயிற்று மொழியாகவும், நீதிமன்றங்களில் நிர்வாக மொழியாகவும் தமிழ் கொண்டு வரப்படுமானால் அதுதான் இந்த நூற்றாண்டுக்கு ஏற்பத் தமிழைக் காப்பதாகும்.

இந்த இருபதாம் நூற்றாண்டில் இத்தாலி, ஜெர்மானியம், பிரெஞ்சு, ருஷ்யம் ஆகிய மொழிகள் எந்தெந்தத் துறைகளில் ஏற்றம் கண்டுள்ளனவோ அத்துறைகளில் எல்லாம் தமிழை வளர்த்திருக்கிறோமா? வளர வழி வகுத்தோமா? தமிழுக்குத் தமிழரே பகையானால் அதன் துரதிர்ஷ்டத்தை என்னென்பது?"[31]

> "மெய்ஞ்ஞானத் தமிழ் வளர்ந்தது போதும்!
> விஞ்ஞானத் தமிழை வளர்த்தெடுப்போம்!
> எங்கும் எதிலும் தமிழ் வளருமானால்
> அப்போது கம்பன் வளருவான்! வாழ்த்துவான்!"

என்று எழுதுகிறார் ம.பொ.சி. இவையாவும் அவருடைய தமிழ் வளர்ச்சிச் சிந்தனையையே வெளிப்படுத்துகின்றன. மற்றோர் இடத்தில் கலைச் சொல்லாக்கத்தின் தேவை குறித்தும் எழுதுகிறார்.

"தமிழ்ப் பற்றின் காரணமாக நான் பாரதியார், கம்பர், இளங்கோ, வள்ளுவர் இவர்களைப் போற்றுவதைக் காட்டிலும், அவர்களைத் தமிழ் வளர்த்து, தமிழ் வளர்ச்சிக்கு வித்திட்டவர் களாகவே காண்கிறேன். தமிழர்களாகிய நாமும் அவர்களின் வாரிசாக அவர்களைப் போலவே வாழவேண்டும் என்று கருதுகின்றேன். தமிழிலுள்ள பழைய சொற்களைப் புதிய பொருளோடு பயன்படுத்த வேண்டும். தோன்றிடும் புதுப்புதுப் பொருளைச் சொல்லத் தேவைப்படும் புதியபுதிய சொற்களையும்

படைக்க வேண்டும்"[11] என்று மொழிவளர்ச்சிக்குத் தேவையான கருத்துகளைக் கூறுகிறார் ம.பொ.சி.

இவ்வளவு தூரம் ஆக்கப்பூர்வமாகச் சிந்திக்கும் - மொழி வளர்ச்சி குறித்துச் சிந்திக்கும் - ம.பொ.சி. என்ன காரணத்தாலோ வளர்ந்து வரும் இயந்திர யுகத்திற்கேற்பவும், கணிப்பொறியில் தமிழைப் பயன்படுத்துவதற்கேற்பவும், அறிஞர் பலர் தேவை என்று கருதும் எழுத்துச் சீர்திருத்தத்தைத் தேவையற்ற ஒன்று என்று கருதுகின்றார். மொழி வளர்ச்சி பற்றிச் சிந்திக்கும் மொழியியல் அறிஞர்களும் கூட எழுத்துச் சீர்திருத்தம் என்பதனைப் புதுமையாக்கத்தின் ஒரு கூறாகக் கொண்டு தேவையான ஒன்று என்றே கருதுகின்றனர். ம.பொ.சி. எழுத்துச் சீர்திருத்தம் பற்றிக் கூறுமிடத்து, "எழுத்துச் சீர்திருத்தம்" என்னும் பெயரில் "தமிழ் ஒரு திருந்தா மொழி. எழுத்தளவில் கூடச் செம்மைப்படாத மொழி" என்ற விபரீதமான பிரச்சாரம் தலையெடுத்து, அது விளம்பரமும் பெற்று வருகின்றது. அதிலிருந்தும் தமிழைக் காக்க எதிர்ப் பிரச்சாரம் தேவைப்படுகின்றது" என்று கூறுகிறார்.

அதுபோலவே இராஜாஜியின் தமிழ்ப் பற்றைக் கூறும்போது "இராசகோபாலாச்சாரி என்று தான் தமது பெயரை எழுதுவார் ராஜகோபாலாச்சாரி என்று எழுதமாட்டார்"[12] என்று அவரைப் பாராட்டினாலும், ம.பொ.சி. ஒருபோதும் இராஜாஜியை, ராசாசி என்று எழுதியதே இல்லை. இவையெல்லாம் ம.பொ.சி.யின் தமிழ் பற்றிய சிந்தனையில் உள்ள புதிர்களாகவே விளங்குகின்றன.

## தமிழ் இலக்கியப் பணி

ம.பொ.சி. அவர்கள் தமிழின்மீது அளவற்ற பற்றுக் கொண்டவர். அவர் தமிழ்மொழியை நேசித்ததுபோலவே தமிழ் இலக்கியங்களையும் அணுஅணுவாக இரசித்தவர்; அலசி ஆராய்ந்தவர். தமிழ் இலக்கியங்களை ம.பொ.சி. பார்க்கும் பார்வையே சற்று வித்தியாசமானதாகும். எல்லோரும் இலக்கியத்தை இலக்கிய நயம் துய்ப்பதற்காகப் படித்தால், இவர் இன்றைய தமிழகத்துக்குப் பயன்படும் வழிமுறையை எடுத்துக் கூறுவனவாகவே பழைய தமிழ் இலக்கியங்களைப் பார்க்கின்றார்.

இதனை ம.பொ.சி.யின், "பல்வேறு அலுவல்களுக்கிடையில் என் மனத்துக்கு அமைதி தேடும் வகையில் நான் அடிக்கடி இலக்கிய ஆராய்ச்சியில் ஈடுபட்டு வருகிறேன். என் தலைமையில் இயங்கி வரும் தமிழரசுக் கழகத்தின் அரசியல், மொழி, பொருளாதார, சமய, இனக் கொள்கைகளுக்கேற்பவே பழைய இலக்கியங்களைப் புதிய கண்ணோட்டத்தில் ஆராய்வதைப் பழக்கமாகக் கொண்டிருக்கிறேன்.... பொழுதைப் போக்குவதற்காக நான் இலக்கியம் படிப்பதில்லை. புதிய தமிழகம் படைக்க வேண்டும். அந்தப் பணிக்கு இலக்கியத்தைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற குறிக்கோளுடன்தான் நான் இலக்கிய ஆராய்ச்சியில் ஈடுபட்டு வருகிறேன்."[13] என்ற கூற்றால் அறியலாம்.

பிறிதோரிடத்தில் இலக்கியம் பற்றிய தன்னுடைய கொள்கையை, "இன்றைய தமிழ் இனத்தின் ஒற்றுமைக்குத் தமிழ்மொழியின் உரிமை வாழ்வுக்கு, இந்திய தேசிய ஒருமைப்பாட்டுக்கு உதவி புரியாத இலக்கியம் எதுவாயினும், அதைச் செய்தவர் கவிச் சக்கரவர்த்தியேயாயினும், அதிலே சொல்லுக்குச் சொல் சுவைதரும் புலமை நலமிருப்பினும், அதனைத் தமிழ்மக்கள் போற்றுதல் கூடாது என்பது எனது கொள்கை"[14] என்று தம் இலக்கியக் கொள்கையைப் பிரகடனப்படுத்துகிறார்.

தமிழ் இலக்கியங்களின் மீது ம.பொ.சி. அவர்கள் கொண்ட பற்றிற்குச் சில நிகழ்ச்சிகளைச் சான்றாகக் கூறலாம். முதல் நிகழ்ச்சி கம்பராமாயணத்தைத் திராவிட இயக்கத் தலைவர் டாக்டர் அண்ணாதுரை போன்றோர் தமிழ்ப் பண்பாட்டுக்குத் திராவிடப் பண்பாட்டுக்கு - ஒவ்வாதது என்று பழித்தபோது அதற்கு மறுப்பு எழுதிய நிகழ்ச்சியாகும். டாக்டர் அண்ணாதுரையவர்கள் கம்பர் படைத்த இராமாயணம் முழுவதும் காமரசம் சொட்டும் காப்பியம் என்று மக்களிடையே பேசியும், 'தீ பரவட்டும்', 'கம்பரசம்' என்ற நூல்களை எழுதியும் தம் கருத்தைப் பரப்பிக் கொண்டிருந்த காலத்தில் இக்கருத்துக்கு மறுப்புக்கூற விரும்பிய ம.பொ.சி. அவர்கள், நேரடியாகத் தம் கருத்தைக் கூறாமல் தமிழ்க் கவிஞர்கள் படைத்த கவிதைகளில் கம்பர் குறித்தும், கம்பராமாயணம்

குறித்தும் இடம் பெற்றுள்ள கவிதை வரிகளை எடுத்துக் கூறுவதன் மூலம் கம்பனின் கவித்திறத்தையும், கம்பராமாயணத்தின் சிறப்பையும் விளக்குகிறார். எதிரணியில் உள்ளோரின் மாற்றுக் கருத்துக்கு மறுப்புக் கூறும்போது மற்றவர்களின் கருத்தைக் கூறி அதனையே தன் கருத்தாக வெளியிடுவதனை ஓர் உத்தியாகவே கையாள்கின்றமையை ம.பொ.சியிடம் காணமுடிகின்றது. ம.பொ.சி. இக்கருத்தைக் 'கவிஞர் போற்றும் மகாகவி' என்று தலைப்பிட்டுச் 'செங்கோல்' இதழில் கட்டுரையாக எழுதியுள்ளார். ம.பொ.சி. இக்கட்டுரையில் பாரதி, கம்பனைப் பற்றிக் கூறுமிடத்துப் 'புகழ்க் கம்பன் பிறந்த தமிழ்நாடு' என்று பாடுவதையும், 'கம்பன் என்றொரு மானுடன்" - என்று பாடுவதையும் குறிப்பிட்டுப், பாரதி 'தமிழ்ச்சாதி' என்ற பாடலில் தமிழ்ச்சாதியின் எதிர்காலம் சிறந்து விளங்கும் என்பதில் தனக்கு இருந்த பழைய நம்பிக்கைக்குக் கம்பனையும் காரணமாகக் கூறுவதை,

"எல்லை யொன் றின்மை
என்னும் பொருள் அதனை
கம்பன் குறிகளாற்
காட்டிட முயலும்
முயற்சியைக் கருதியும்"

என்றமையும் பாடலைச் சுட்டிக்காட்டியும், பின்னர்க் கவிமணியின் பாடல் வரிகளைக் கொண்டு கம்பரின் சிறப்பை விளக்குகின்றார். அப்பகுதி பின்வருமாறு.

"பாலின் சுவைக்கடல் உண்டெழுந்து - கம்பன்
பாரிற் பொழிந்ததீம் பாற்கடலை
நாவின் இனிக்கப் பருகுவமே - நூலின்
நன்னய முற்றும் தெளிகுவமே"

என்ற பாடலைச் சுட்டிக்காட்டி, "நாத் தழும்பேறக் கம்பரைச் சிலர் வசைபாடித்திரிந்த காலத்தில், நாவினிக்கக் கம்பன் கவிதையைப் பாடுங்கள்' என்கிறார் கவிமணி. 'கம்பர் ஆரிய மொழியைக் கற்றறிந்தவர்; கன்னித் தமிழின் ஆழத்தை அளந்து காட்டியவர்.

அதனால்தான் மாரியைப் போன்று கவிதை மழை பொழிய முடிந்தது அந்த இரு மொழிப் புலவருக்கு' என்கிறார்.

"ஆரியம் நன்குணர்ந்தோன் - தமிழன்
ஆழம் அளந்து கண்டோன்
மாரி மழைபோலக் - கவியின்
மழைபொழிந் திடுவோன்"

என்று பாடுகிறார் கவிமணி. கம்பரின் சிறப்புக்கு இதைவிட வேறு என்ன சான்று வேண்டும்? என்று கேட்கிறார் ம.பொ.சி. ஒரு சில தமிழர்கள், "கம்பனைப் பழிப்போம்; அவனுடைய காப்பியமாம் கம்பராமாயணத்தை எரிப்போம்" என்று காட்டுக் கூச்சலிட்ட காலை, அந்தக் கூச்சல் நமது கவிமணியின் காதுக்கும் எட்டியபோது, அவர் ஆத்திரப்படவில்லை; கூச்சலிடும் மக்களின் அறியாமை குறித்து அனுதாபமே பட்டார்.

"கம்பனை எரிக்க விரும்பும் அன்பர்களே! கம்பன் தமிழ்க் கவி மட்டுமல்லன். உலக மகாகவி! சாதாரணக் கவிஞன் அல்லன்; அருட்கவிஞன்! அவனுடைய கவிதைகள் பிணி, மூப்பு, சாக்காடு இவற்றைப் போக்கும் தேவலோகத்து அமிழ்தமாகும்" என்று எரிக்க விரும்புவோருக்கு அன்போடு அறிவுரை கூறுகிறார் கவிமணி. இதோ கவிதையைப் படியுங்கள்.

"அம்புவிக்கு வாய்த்த அருட்கவி; ஐயமின்றி
உம்பரமு தொத்த உயிர்க்கவி; - கம்பனும்தன்
மந்திரச் சொல்லால் வனைந்தகவி; என்றேனும்
வெந்திடுமோ தீயால் விளம்பு."

இதோடு விட்டாரா? "கம்பனை எரிப்போம்" என்ற கூச்சல் கவிஞருடைய உள்ளத்தில் எரிமூட்டிவிட்டது. ஆகவே இலக்கியத்தின் எதிரிகளை ஒரு வெண்பாவில் தாக்குவதோடு விட்டுவிட அவர் மனம் விரும்பவில்லை.

"ஓலை எரியும் தாள் எரியும்
உள்ளத் தெழுதிவைத்து நிதம்
காலை மாலை ஓதுகவி
கனலில் வெந்து கரிந்திடுமோ?"

என்று கேட்கிறார். பாவம்! 'கம்பனை எரிப்போம்' என்ற கூக்குரல் கேட்டுக் கவிமணியின் உள்ளம் என்ன பாடுபட்டிருக்கும்? எத்துணை வேதனைப்பட்டதோ! உண்மைதானே! கம்பரின் கவிதைகள் ஓலையோடு, தாளோடு நின்றுவிடவில்லையே. லட்சோபலட்சம் மக்களின் உள்ளங்களிலேயும் குடிபுகுந்திருக்கின்றன. ஓலையை "எரித்து விடலாம்; காகிதத் தாளையும் எரித்துவிடலாம்; ஆனால் கம்பர்தம் பாடல்களைத் தன்னகத்தே கொண்டுள்ள உள்ளங்களை எரிக்க முடியுமோ? அவ்வுள்ளங்களிலன்றோ கம்பர் இருக்கின்றார்! இத்துடன் விடவில்லை கவிமணி.

"சிந்தை மகிழ விழாக்கண்டு
தேர்ந்த புலவர் முன்வந்து
சந்த மெழவே பாடுகவி
தழலில் வெந்து நீறாமோ?"

என்றும் பாடுகின்றார். கம்பருக்கு விழாவென்றால் அந்த விழாவில் அவருடைய பெருமை பேச எத்துணைப் புலவர்கள் போட்டி போட்டுக் கொண்டு வருகிறார்கள்! கம்பரின் பாடல்களைச் சந்தத்தோடு பாடப் போட்டியிடுவோர் எத்தனை பேர்? அந்தச் சந்தப் பாடல்கள் எரியுமோ? - எரிக்கத்தான் விடுமோ இந்நாடு!

"உள்ளத்து உவகை பொங்கியெழ
உரைகள் சொல்லப் பொருளேறித்
தெள்ளத் தெளிந்த கவியமுதம்
தீயில் வெந்து பொடியாமோ?"

"அந்தோ தமிழன்னைக்குச் சாவா வரம் வந்த அமிழ்தம் கம்பர்தம் கவிதை அதையா எரிப்பது?என்கிறார் கவிமணி" என்று தாம் கூற விரும்பிய கருத்தையெல்லாம் கவிமணியின் பாடல்களையும், பாரதியின் பாடலையும் கொண்டு உணர்த்துகின்றார் ம.பொ.சி. இதைப்போன்றே கம்பர் தமிழ்த்தாயின் தவத்தால் பிறந்த தவப்புதல்வன் என்று கூற விரும்பும் ம.பொ.சி. அதற்குத் துணையாக நாமக்கல் கவிஞரின் கவிதைகளைச் சான்றாகக் கொண்டு தம் கருத்தை நிலைநாட்டுகின்றார்.

"காந்தி சகாப்தத்தின் தேசியக் கவிஞரான நாமக்கல் வெ. இராமலிங்கம் பிள்ளையவர்கள் பல பாடல்களால் கம்பருக்கு அஞ்சலி செலுத்துகின்றார். அந்த மகாகவியைத் தமிழன்னையின் தவப்புதல்வர் என்று வருணிக்கின்றார்" என்று கூறிக் கவிஞரின் கவிதைகளைத் தருகின்றார்.

"கரையறியாக் காட்டாற்று வெள்ளம்போலக்
கவிபொழிந்து வான்மீகி உலகுக்கீந்த
திரையறியா ஓட்டத்தைத் தேக்கிக் கட்டித்
திறமிகுந்த கால்வாய்கள் செய்து பாய்ச்சி
தரையறியா இலக்கியக்கா வணத்தைத் தந்தான்
தனிப்புலமை கம்பனெனும் கவிதைத் தச்சன்"

"மால் கடிந்த தவமுனிவான் மீகி என்பான்
வனத்திடையே தான்கண்டு கொண்டு வந்த
பால் வடிந்து முள்ளடர்ந்து பருத்து நீண்டு
பரிமளிக்கும் பலவின்கனி பாருக் கீந்தான்
மேல் வடிந்த பிசினகற்றி மெள்ளக் கீறி
மெதுவாகச் சுளையெடுத்துத் தேனும் வார்த்து
நூல்படிந்த மனத்தவர்க்கு விருந்து வைத்தான்
கம்பனென்ற தமிழ்த்தாயார் நோற்ற மைந்தன்"

நம் காந்தியக் கவிஞர் "கம்பருடைய கவிதைகளைப் பெற தயரதனும், சனகனும் முற்பிறப்பில் தவம் செய்திருக்க வேண்டும்" என்று கூறிப் பெருமிதம் அடைகின்றார், உண்மைதானே!" என்று பெருமிதம் கொள்கிறார் ம.பொ.சி.[15]

இவ்வாறு திராவிட இயக்கத் தலைவர்களுள் ஒருவரான டாக்டர் அண்ணாதுரையின் கம்பராமாயணம் பற்றிய கருத்துகளுக்கும், தீ பரவட்டும்" என்று கம்பராமாயணம் குறித்துப் பேசிவந்த பேச்சுகளுக்கும் பதிலுரைக்கும் வகையில் பாரதியார், கவிமணி, நாமக்கல் கவிஞர் இவர்களுடைய கருத்துகளைத் தம் நூலில் எழுதி மக்கள் மத்தியில் கம்பராமாயணத்தின் சிறப்பையும் கம்பரின் கவித்திறனையும் வெளிப்படுத்துகின்றார்.

கம்பராமாயணம் குறித்துச் சமூகவியல் நோக்கில் ஆராய்ந்து, 'இது ஆரியக் கதை' என்று கூறித், 'தமிழினத்தின் உயர்வுக்கு ஏற்ற நூல் அன்று' என்று அறிஞர் அண்ணா அவர்கள் கூறியதற்கே இத்துணை மறுப்பெழுதிய ம.பொ.சி. தனக்கு மிகவும் பிடித்த இலக்கியமான சிலப்பதிகாரத்தை யாராவது குறை கூறினால் சும்மாவிடுவாரா? அண்ணாதுரையின் அரசியல் ஆசான் ஈரோட்டுப் புயல் பெரியார் ஈ.வெ.ரா. அவர்கள், "சிலப்பதிகாரம் ஒரு ஆரிய நூல். அதைப் போய்த் தமிழர் படிக்கலாமா? ஆரம்பம் முதல் கடைசி வரை ஒரே ஆரியம்தானே காட்சியளிக்கிறது" என்றுதான் பேசிய ஒரு கூட்டத்தில் கூறிவிட்டார். இதனைக் கேட்ட ம.பொ.சி. இக்கருத்துக்குத் தமது 'தமிழரசு' பத்திரிகையில் மறுப்பு எழுதுவதைக் காணலாம்.

"கொடுங்கோலனை எதிர்த்துப் போராடும் கண்ணகியின் புரட்சி ஆரியம்!"

"அறியாது செய்த பிழைக்காகத் தன் உயிரையே அர்ப்பணிக்கும் பாண்டிய வேந்தன் நெடுஞ்செழியனின் தியாகம் ஆரியம்!"

"அரசன் உயிர்நீத்த அக்கணமே தானும் உயிர்நீத்த கோப்பெருந்தேவியின் அன்பு நிறைந்த காதல் ஆரியம்!"

"வாய் கொழுத்துப் பேசிய வடவேந்தருடன் போரிட்டுத் தமிழரின், ஆற்றலைப் புலப்படுத்திய செங்குட்டுவன் செயல் ஆரியம்!".

"மூன்றாகப் பிளவுபட்டுக் கிடந்த தமிழகத்தை ஒன்றாகப் பிணைத்துக் காட்டிய இளங்கோவின் சித்திரம் ஆரியம்!"

"விலை மகளுக்குப் பிறந்தும் ஒருவனையே காதலித்து அவன் இறந்த பின்னர் வாழ்விற்குரிய இன்பங்கள் அனைத்தையும் இழந்துவிட்ட மாதவியின் மனப் பண்பு ஆரியம்!"

"தோழியின் கருத்துவழி கோயில் சென்று வழிபட மறுத்த கண்ணகியின் செயல் ஆரியம்!"

"இத்தனையும் தமிழ்ப் பண்புக்கு எதிரான ஆரியப் பண்பு என்றால் அந்த ஆரியப் பண்பு நீடூழி வாழ்வதாக!"[16]

என்று எள்ளல் தொனிக்கத் தம் மறுப்பினை வெளிப்படுத்துகிறார் ம.பொ.சி. சிலம்புச் செல்வரின் மனதை முழுமையும் கொள்ளை கொண்ட நூல் சிலப்பதிகாரம். அதனை ஆரிய நூல் என்றால் வாளாவிருப்பாரா? சிலம்புச் செல்வர்.

தமிழ் மீதும் தமிழ் இலக்கியங்கள் மீதும் கொண்ட பற்றினால் ம.பொ.சி. தமிழ் இலக்கியங்களைப் பெருவிருப்புடன் படித்தார். நுனிப்புல் மேய்வார் போலன்றி நுண்மாண் நுழைபுலத்தோடு இலக்கியங்களை, அதன் உள்ளடக்கத்தை இன்றைய வாழ்க்கைக்கு வழிகாட்டும் வேதங்களெனக் கருதிப்படித்து அவற்றின்கண் காணப்படும் அரிய கருத்துகளைத் தாம் துய்த்ததுமட்டுமின்றித் தாம் வாழ்ந்த காலத்துச் சமுதாயத்திற்குத் தேவையான கருத்துகள் பலவற்றையும் கவனமுடன் கண்டுணர்த்தினார். இதனால் தாம் படித்த இலக்கியங்களில் ஆழ்ந்த புலமை பெற்றுத் திகழ்ந்தார். இவர் படித்த நூல்களில் உள்ள கருத்துகளும், இலக்கியத் தொடர்களும் இவருடைய மனத்தில் ஆழமாய்ப் பதிந்துவிட்டன. ம.பொ.சி.யின் ஆளுமையை அவர் படித்த இலக்கியங்கள் ஆழமாய்ப் பாதித்துள்ளன. இவர் அன்றாடம் பயன்படுத்தும் எழுத்து மொழியில் கூட இவர் படித்த இலக்கியங்கள் பலவற்றின் தாக்கத்தைக் காணமுடிகின்றது. இவர்தம் அன்றாட வாழ்வில் தமிழ் இலக்கியம் இன்றியமையாத இடத்தைப் பெற்றுள்ளது என்றால் மிகையாகாது. இதற்குச் சான்றாக அவர் தம் வாழ்வில் கடுமையான சோதனை தோன்றும்போதெல்லாம் மனம் குழப்பமடையும் போதெல்லாம், வள்ளுவரின் திருக்குறளையும், சத்திய சோதனையையும் எடுத்துப் படிப்பதாகக் கூறும்பகுதி இங்குக் குறிப்பிடத்தக்கது. இதனை அவருடைய கூற்றாகவே காணலாம்.

"வாழ்க்கையில் கடுமையான சோதனைகள் தோன்றி மனம் குழப்பமடையும்போதெல்லாம் சத்திய சோதனையையாவது, திருக்குறளையாவது படித்து நான் தெளிவு பெறுவதுண்டு"[17] என்கிறார். "ம.பொ.சி.யின் வாழ்க்கையில் இலக்கிய உணர்வு

இரண்டறக் கலந்துவிட்டதால் அன்றாட வாழ்வில் நிகழும் நிகழ்ச்சியைக் கூறும்போது கூட இலக்கியத் தொடர்களும் செய்திகளும் இயல்பாக அவர் மொழியில் இடம்பெறு கின்றமையைக் காணலாம்"[18] என்பர். இதற்குச் சில சான்றுகளைக் காணலாம்.

"அவரது சமாதானம் எனக்கு மனநிறைவைத் தரவில்லை யென்றாலும் இராஜாஜியைக் கைவிடுவது என்பது என்னால் சாத்தியமில்லாமலிருந்ததால், அவரது சமாதானத்தை ஏற்றுக் கொள்ளவேண்டியவனானேன். தோழமை என்று ஏற்பட்டு விட்டால் அதை எளிதில் துண்டித்துக் கொள்வது எப்படி? அதிலே நான் இராமாயணத்தில் வரும் குகன் போன்றவன்"[19] என்கிறார் ம.பொ.சி. இதன்கண் இராமாயணத்தின் தாக்கம் வெளிப்படுகின்றது.

பிறிதோரிடத்தில், "தமிழரசுக் கழகத்தில் சேர்ந்த நாள்தொட்டு இன்று வரை கலைக்காவலர் என்பால் வைத்துள்ள அன்பு, கண்ணப்பர் காளத்தியப்பர் மீதுகொண்ட பக்தி போன்றதாகும்"[20] என்கிறார் சிலம்புச்செல்வர். இதன்கண் பெரிய புராணத்தின் தாக்கம் வெளிப்படுவதைக் காணலாம். சிலம்புச் செல்வரின் வாழ்க்கையில் அவர் பயின்ற இலக்கியங்கள் எந்த அளவுக்குத் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன என்பதற்கு அவர் தம் குழந்தைகளுக்கு வைத்துள்ள பெயர்களே சான்றாகின்றன. மூத்த மகன் திருநாவுக்கரசு மூத்தமகள் கண்ணகி, இரண்டாவது மகள் மாதவி எல்லாம் இலக்கியப் பெயர்கள். சிலம்புச் செல்வரின் வாழ்க்கையில் நடந்த கொடூரமான துயரச் சம்பவம் அவருடைய மகன் திருநாவுக்கரசு அகால மரணமடைந்தது. அப்போது கூட அவர் தனக்கு நேர்ந்த துயரத்தைக் கம்பராமாயணத்து எதிர்நிலைத் தலைவன் இராவணேசுவரன் தன் மகன் இந்திரஜித்தை இழந்து புலம்பிய துயரத்தோடு ஒப்பிடுகிறார். இதனை, "தோழர்களே! என் மகன் திருநாவு எங்கோ போய்விட வில்லை. உங்களிலே மறைந்து காட்சியளிக்கிறார். என் மகன் இருந்து நான் மறைந்து இருந்தால் அவர் எனக்காகச் செய்ய வேண்டியவற்றை எல்லாம் அவருக்காக நான் செய்யும்படியாகிவிட்டது. மைந்தன் இந்திரஜித்தை இழந்தபோது இராவணேசுவரன்,

"எனக்கு நீ செய்யத்தக்க
கடன் எலாம் ஏங்கிஏங்கி
உனக்குநான் செய்வதானேன்
என்னின்யார் உலகத்துள்ளார்?

என்று சொல்லிப் புலம்பினான் கம்பன். அவன் அந்தத் தண்டனைக்குரியவன். நான் என்ன தவறு செய்தேன்"[21] என்று இலக்கியப் புலம்பலில் தன் சோகத்தைப் புதைத்துக் கொள்கிறார்.

பிறிதோரிடத்தில் இராஜாஜியைப் பற்றிக் கூறுமிடத்தில், "கூட்டொருவரையும் வேண்டாக் கொற்றவராகத் திகழ்ந்த அகில இந்தியப் பெருந்தலைவர் இராஜாஜிக்கு அன்றிருந்த சூழ்நிலையில் எனது கூட்டு இன்றியமையாது தேவைப்பட்டது'' எனக் கம்பராமாயணத்தில் இராமனைப் புகழப் பயன்படுத்திய வாலியின் தொடரைப் பயன்படுத்துகின்றார். இவையெல்லாம் ம.பொ.சியின் இலக்கிய ஆளுமையை வெளிப்படுத்துகின்றன.

தமிழ் ஆய்வுகள் குறித்தும், இலக்கியங்குறித்தும் ம.பொ.சி.க்கு எனத் தனித்தோர் கொள்கை இருந்தது. இலக்கியம் பற்றிய இவருடைய கொள்கையை, ''கவிதையாயினும் சரி, காப்பியமாயினும் சரி மக்களுடைய வாழ்க்கையைப் பண்படுத்துவதாக இருக்க வேண்டும். இதற்குப் பயன்படாத கவிதையும், காப்பியமும் குப்பையிலே எறியப்பட வேண்டும். இதுவே எனது இலக்கியக் கொள்கை" என்கிறார்.

இதனைப் போன்றே ஆய்வுகள் பற்றிக் குறிப்பிடும்போது, "கம்பர் என்ற பெயரின் பொருள் என்ன? கம்பர் எங்குப் பிறந்தார்? அவரது சாதி யாது? மதம் எது? என்ற ஆராய்ச்சியில் படித்த மக்கள் காலம் கடத்துகின்றனர். ஆராய்ச்சி போற்றத்தக்கதே பயனுடையதானால்! பயனற்ற ஆராய்ச்சியால் கருத்து வேற்றுமை வளர்தலன்றிக் கண்ட பயன் ஒன்றுமில்லை. ஆராய்ச்சி அவசியமானவிடத்தும் தக்கார் சிலர் அதில் ஈடுபட்டால் போதுமே!''[22] என்று குறிப்பிடுகிறார். இதனைப்போன்றே இளங்கோவடிகளைப் பற்றி செய்த ஆய்வுகள் சிலவற்றைக் கூறி அவையெல்லாம் பயனற்ற ஆராய்ச்சிகள் என்கிறார். இதனை,

"இளங்கோ சைவர் என்பார் சிலர், சமணர் என்பார் பலர், எதையும் சாதி, சமயக் கண் கொண்டு ஆராயும் தொழிலை நமது தமிழ் அறிஞர்கள் இன்னமும் விட்டபாடில்லை"[48] என்று சாடுகிறார். நல்ல ஆய்வு எப்படி அமையவேண்டும் என்பதற்கு, "பண்டைய இலக்கியங்களை அரசியல் நோக்குடன் ஆராய்ந்து அவற்றில் உள்ள இந்தக் காலத்துக்கு ஏற்ற கருத்துகளை மக்களுக்குப் பயன்படுமாறு செய்யவேண்டும்" என்று விளக்கம் தருகிறார்.

தமிழ் இலக்கியங்கள் பலவற்றை இவர் தாம் சார்ந்திருக்கும் 'தமிழரசுக் கழகத்தின்' கொள்கைகளுக்கு ஏற்பவே பொருத்திப் பார்த்து ஆய்கிறார். இவருடைய இலக்கிய ஆய்வுகளில் மிகுந்த இடத்தைப் பெற்றது சிலப்பதிகாரம் என்னும் முத்தமிழ்க் காப்பியமாகும். ம.பொ.சி.யின் மனங்கவர்ந்த இலக்கியங்களில் சிலப்பதிகாரமே முதலிடத்தைப் பெறுகின்றது. இதனால் தான் 'கம்பர் கவியின்பம்' என்று நூல் எழுதப்புகும்போதும், 'இளங்கோவின் வாரிசு' என்று ஓர் இயலை அந்த நூலில் இணைக்க முடிகிறது. இதுபோன்றே 'காப்பிய உலகில் கம்பர்' என்று கட்டுரைக்கும் போதும் அக்கட்டுரையில், "என்னுடைய சிந்தை கவர்ந்த சிலப்பதிகாரம் காப்பிய உலகில் இன்றைக்குக் கூடத் தனிச் சிறப்புடையதுதான். தமிழகத்தின் செல்வச் செழிப்பை, தமிழினத்தின் கலைவாழ்வை விரித்துக் கூறும் சரித்திரமாகவும் விளங்குகின்றது சிலப்பதிகாரம். அந்த வகையில் அதற்கு இணையான ஒரு காப்பியம் இதுவரை தோன்றவில்லை..." என்று சிலப்பதிகாரம் பற்றி எழுத முடிகிறது.

"இளங்கோவிற்கு மட்டுமல்ல; அவரைப் பெற்றெடுத்த தமிழுக்கும், தமிழினத்திற்கும், தமிழ் நாட்டுக்கும் சிலப்பதிகாரம் சிறப்பைத் தருகின்றது"[23] என்பது சிலம்புச் செல்வரின் சிந்தனை. ம.பொ.சி. பல தமிழ் இலக்கியங்களை ஆய்கின்றார். சில புலவர்களையும் ஆய்கின்றார். 'கலிங்கத்துப்பரணி திறனாய்வு', 'சிலப்பதிகார ஆய்வுரை', 'சிலப்பதிகாரத் திறனாய்வு' போன்றவற்றை இலக்கியங்களை ஆய்ந்ததற்கும்; ஔவை-யார்? 'எங்கள் கவிபாரதி' போன்றவற்றைப் புலவர்கள் பற்றிய ஆய்வுக்கும் சான்றாகக் கொள்ளலாம். இவருடைய ஆய்வுகள் பயன்நோக்கு ஆய்வாகவே

உள்ளன. 'கலிங்கத்துப் பரணி திறனாய்வு' நூலில் இறுதியில் தன் ஆய்வு முடிவைப் பின்வருமாறு கூறுகிறார்.

'கலிங்கத்துப்பரணியைப் படைத்த செயங்கொண்டார், கவிச் சக்கரவர்த்தி, அவர் படைத்த கலிங்கத்துப் பரணி தமிழ் நலமும் கற்பனை வளமுஞ் செறிந்த இலக்கியம். ஆனால் தமிழர் என்ற இனக்கண் கொண்டு பார்த்தால், அது தமிழ் இனத்தாருக்குத் தேவையற்ற இலக்கியம்'' என்று கூறுகிறார். மேலும், ''பொருளுக்காக அல்லாவிடினும் செயங் கொண்டாரின் புலமைக்காகவேனும் கலிங்கத்துப் பரணியைப் படிக்கலாமே என்றால், பொருட் செறிவோடு புலமை நயமும் சேர்ந்த இலக்கியத்திற்குத் தமிழில் பஞ்சமில்லையே! கம்பரும் பாரதியாரும் தோன்றிவிட்ட பின்னர் புலமைக்காகவும் செயங் கொண்டாரிடம் அடைக்கலம் புகத் தேவையில்லை"[24] என்று முடிவு கூறுகிறார். இதற்கு, ''மொத்தத்தில், கவிஞர் செயங் கொண்டார் இன உணர்ச்சியற்றவராகத்தான் புலப்படுகிறார்" என்ற முடிவுக்கு இவர் வந்ததே காரணமாகும். எந்த இலக்கியத்தையும் இனவுணர்வுடன் ஆய்வதையே இவர் தன்னுடைய ஆய்வு முறையாகக் கொள்கிறார்.

ஔவையாரைப் பற்றிய ஆய்வு நூலான ஔவை-யார்? என்ற நூலில் பாரதியாரின் தொடரான 'தமிழ்மகள்' என்ற தொடரிலிருந்து தன் ஆய்வைத் தொடர்கிறார். இவருக்குக் கவிஞர்களிலே பாரதியாரை அதிகம் பிடிக்கிறது. அதனால்தான் 'கம்பர் கவிநயம்' பற்றிப் பேசும்போது 'கம்பன் என்றொரு மானுடன்' என்ற பாரதியின் தொடரிலிருந்து தொடங்குகின்றார். அதுபோன்றே ஔவையின் சிறப்பை உணர்த்த பாரதியின், "தமிழ்நாட்டின் மற்றச் செல்வங்களே எல்லாம் இழந்துவிடப் பிரியமா? ஔவையின் நூல்களை இழந்துவிடப் பிரியமா?" என்று நம்மிடம் யாரேனும் கேட்பார்களாயின், "மற்றச் செல்வங்களை யெல்லாம் பறிகொடுக்க நேர்ந்தாலும் பெரிதில்லை அவற்றைத் தமிழ்நாடு மீட்டும் சமைத்துக்கொள்ளவல்லது. ஔவைப் பிராட்டியின் நூல்களை இழக்க ஒருபோதும் சம்மதப் பட மாட்டோம். அதுமீட்டும் அமைத்துக் கொள்ள முடியாத தனிப் பெருஞ்செல்வம்"[25] என்ற கூற்றையே பயன்படுத்துகிறார்.

"ஔவையாரின் வரலாற்றையும் அவர் பெயரால் உள்ள இலக்கியங்களையும் புலமைக்கண் கொண்டு ஆராய்ந்தால் போதாது. சாதி சமய மொழிப் பற்றுக்களுக்கு அப்பாற்பட்டு, மனித சமுதாயம் முழுவதையும் மனத்திற்கொண்டு அரசியல் - ஜனநாயகம் - சோஷலிசம் ஆகிய பண்புகளிலே உரைத்துப்பார்த்து ஆராய வேண்டும். இருபதாம் நூற்றாண்டுக்குத் தேவைப்படும் ஆராய்ச்சி இதுவேயாகும்'' என்று தன் ஆய்வுமுறையையும் வெளிப்படுத்துகிறார். ஔவையார் பாடல்களை ஆராய்ந்த சிலம்புச் செல்வர், நாட்டைப் பற்றி ஔவையார் பாடும் பாடலாகிய,

நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே

என்ற பாடலை ஆராய்ந்து, "இப்பாடலில் உள்ள 'ஆடவர்' என்ற சொல் 'ஆள்பவர்' என்று இருந்திருக்கக்கூடும் என்றும், அப்படி 'ஆள்பவர்' என்று திருத்தப்பட்டால் இன்னும் சிறப்பான பொருள் கிடைக்கும்" என்கிறார். "எனவே 'ஆள்பவர்' என்று ஔவையாரால் எழுதப்பட்டுப் பின்னர் ஏடு பெயர்த்து எழுதுவோரால் 'ஆடவர்' எனப் பிழையாக எழுதப்பட்டிருக்கலாம் என்று எண்ணவும் தோன்றுகிறது"[26] என்கிறார். இங்குப் பாடபேதம் குறித்து அவர் கூறியுள்ள கருத்து சிந்தித்தற்குரியதாகும்.

ஆய்வின் முடிவுகளாக "ஔவையார் ஒரு சோசலிஸவாதி" என்கிறார்.

"ஔவையார் சமதருமம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய புனித நெறிகளையும் போதிப்பதாகக் கூறுகிறார். 'தமிழ்நாட்டில் ஔவையார் காலத்தில் வாழ்ந்த அறிவையும் தனியுடைமையாக்கி விடும் ஆதிக்கவாதிகள், வேதாகம சாத்திரங்களையும், யோக சாதனங்களையும் பெண்கள் பயிலக் கூடாதென்ற ஆணையையும் அமுல் நடத்தினர். அந்தத் தடையைத் தகர்த்து, ஞானக்குறள், விநாயகரகவல், வேழமுகம் முதலிய யோக சாதனங்களைத் தந்த

பெருமை ஔவையின் தனிமையுரிமையாகும். இந்த வகையில், பெண்குலத்தின் விடுதலைக்கு வித்திட்ட பெருமையும் ஔவையாரையே சாரும்"[27] என்கிறார்.

இவர் இந்நூலில் ஓரிடத்தில், "ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது" என்பது பழமொழி. இதுபோல, ஐந்து வயதில் நீதி போதிக்கத் தவறினால் அதற்குமேல் போதித்தாலும் நெஞ்சில் நிலைபெறாது. இதனை உணர்ந்து - குழந்தைப் பருவத்திலேயே - 'அ'கர முதல் 'ன'கரம் வரையுள்ள தமிழ் எழுத்துகளை நெட்டுருச் செய்யும் கல்வியின் ஆரம்பக்கட்டத்திலேயே, அந்த எழுத்து வரிசைப்படி வாக்கியங்களை அமைத்துக் கொடுத்துக் குழந்தை உலகத்துக்கும் நீதி போதித்தார் ஔவையார். ஔவையாருக்குப்பின் தோன்றிய புலவர்களில் தேசியக்கவி பாரதியைத் தவிர வேறு எவரும் ஆத்திசூடி, கொன்றைவேந்தன் போன்ற குழந்தை இலக்கியங்களைப் படைக்கவில்லை" என்கிறார் ம.பொ.சி. இந்நூல் வெளிவந்தது 1968-ஆம் ஆண்டு. 'பாரதியைத் தவிர வேறுயாரும் ஆத்திசூடி கொன்றைவேந்தன் போன்ற குழந்தை இலக்கியம் படைக்கவில்லை. ஆனால் பாரதிதாசன் ஆத்திசூடி நூல் எழுதியிருக்கிறார், என்பது என்ன காரணத்தினாலோ ம.பொ.சி.யால் கூறப்படவில்லை. பாரதிதாசன் 1964-இல் காலமாகிவிட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது. திராவிட இயக்கத்தினர் மீது கொண்ட வெறுப்பு காரணமா? இல்லை, பாரதிதாசன் ஆத்திசூடி எழுதியது ம.பொசி.யின் கவனத்திற்கு வரவில்லையா? என்பது மேலும் ஆய்வதற்குரியது. மேலும் இந்த ஆய்வுநூலில் ஔவையார் ஒருவரே என்று கூறும் முடிவும் சற்று உறுத்தலாகவே உள்ளது.

திருக்குறளில் கூட்டாட்சி அமைப்புக் குறித்த செய்தி இருப்பதாகக் கூறும் கருத்து ம.பொ.சி.யின் ஆய்வு, இன்றைய நிலையிலிருந்து வள்ளுவரைப் பார்க்கும் பார்வையாகக் காணப்படுகின்றது. ம.பொசி.யின் இலக்கிய ஆய்வுகள் யாவும், பயன் நோக்கிய ஆய்வாகத் தான் - சார்ந்த தமிழரசுக் கழகத்தின் கொள்கைகளுக்கு அரண் தேடும் ஆய்வுகளாகவே அமைகின்றன. தமது கழகத்தின் கொள்கைகள், தமிழ் இலக்கியப் பரப்பு

முழுவதும் பரந்து விரிந்து கிடப்பதாகக் கருதுகிறார் ம.பொ.சி. அனைத்து இலக்கியங்களையும் தமிழ், தமிழினம், தமிழ்நாடு என்ற நோக்கில்- இன்னும் கூறப்போனால்- தமிழின உணர்வு என்ற அடிப்படையிலேயே பார்க்கின்றார் ம.பொ.சி. அதனால்தான் "கலிங்கத்துப் பரணி தமிழினத்துக்குத் தேவையற்ற ஒருநூல்' என்று கூறமுடிகிறது. "நந்திக்கலம்பகம் பல்லவர் காலத்தில் தோன்றிய ஒரே ஒரு சமூக இலக்கியம் என்ற வகையில் அதற்கு வரலாற்றில் தனி இடம் உண்டு" என்று கூறமுடிகிறது.

## தமிழ் வளர்ச்சியை ஆவணப்படுத்துதல்

தமிழின் வளர்ச்சியை ஆவணப்படுத்தும் பணியில் ம.பொ.சி. அவர்களின் தொண்டு ஈடு இணையற்றதாகும். தமிழின் வளர்ச்சியை ஆவணப்படுத்தும் பணியை ம.பொ.சி. அவர்கள் தன்னுடைய எல்லைக்குள் நின்றுகொண்டே இயன்றவரை செய்ய முயன்றுள்ளார். அவருக்குக் கிடைத்த தரவுகளைக் கொண்டு அவற்றைத் துறை வாரியாகப் பகுத்துத் தந்துள்ளார். காலவரிசைப்படி ஆவணப் படுத்துவதில் உள்ள சிக்கல்களை ம.பொ.சி. உணர்ந்ததாலோ அல்லது தற்செயலாகவோ இந்த முறையை - துறைவாரியாக வரிசைப்படுத்தும் முறையை - மேற்கொண்டுள்ளார். மொழியின் வளர்ச்சியை ஆவணப்படுத்தலில் இவருடைய கொடையாக இரண்டு தனி நூல்கள் வெளிவந்துள்ளன. முதல் நூல் 'விடுதலைப் போரில் தமிழ் வளர்ந்த வரலாறு' என்பதாகும். இதன் முதல் பதிப்பு 1970ஆம் ஆண்டு வெளிவந்தது. இதில் ஏறத்தாழ நூற்றைம்பது ஆண்டுக்கால வரலாற்று நிகழ்வுகள் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. இரண்டாவது நூல் 'விடுதலைக்குப் பின் தமிழ் வளர்ந்த வரலாறு' என்பதாகும். இதன் முதல் பதிப்பு 1978-ஆம் ஆண்டு வெளிவந்தது. இதில் ஏறத்தாழ முப்பது ஆண்டுக்கால மொழியின் வளர்ச்சி ஆவணப்படுத்தப் பட்டுள்ளது. அவற்றைத் தனித்தனியே காணலாம்.

விடுதலைக்கு முந்திய காலக்கட்டம் என்பது நீண்ட நெடுங்காலம் என்பதால் 'விடுதலைப் போரில் தமிழ் வளர்ந்த வரலாறு' என்று வரையறுத்துக் கொண்டார். கட்டபொம்மன்

காலம் தொடங்கி இந்தியா விடுதலையடைந்த காலம் வரையுள்ள காலத்துத் தமிழ் வளர்ச்சியை இந்த நூலில் விளக்குகின்றார். கட்டபொம்மன் காலம் தொடங்கி இந்தியா விடுதலையடைந்த காலம் வரையுள்ள காலத்துத் தமிழ் வளர்ச்சியை இந்த நூலில் விளக்குகின்றார். இக்காலத்து மொழிவளர்ச்சியை ஆவணப்படுத்து வதற்கு மகாகவி பாரதியாரின் கட்டுரைகளும், திரு.வி.க. வின் வாழ்க்கைக் குறிப்புகளும், வ.வே.சு. ஐயரின் 'பாலபாரதி' இதழ்களும், 'மதுரை மாவட்டத் தியாகிகள் பலர்' என்ற நூலும் தரவுகளாக அமைந்தன என்று ம.பொ.சி. தம் நூலிலேயே குறிப்பிடுகின்றார்.

விடுதலைப் போர் நடந்து கொண்டிருந்தபோது தமிழ் வளர்ச்சிப் பணிகள் என்பவை அரசு சாராத தனி மனிதர்களின் முயற்சியால் விளைந்தவையேயாகும். ஏனெனில் இக்காலக் கட்டத்தில் ஆட்சியில் இருந்தவர் தமிழரல்லர். இவ்வாறு தனி மனிதர்களால் ஆற்றப்பட்ட தமிழ் வளர்ச்சிப் பணிகளை ஆவணப்படுத்துவதற்கு முன்னர்த் தமிழ் எப்போது தன் உரிமையைப் பெற்றது என்ற வரலாற்றுண்மையை விளக்குகிறார் ம.பொ.சி. அது பின் வருமாறு:

"ஆங்கிலேயர் இந்தியாவில் புகுந்த பின்னர் தான் தமிழகம் அந்நியருக்கு அடிமைப்பட்டதாக நாம் எண்ணுமளவுக்கு வரலாறு எழுதப்பட்டு வந்திருக்கிறது? 'தமிழர்' என்னும் இன உணர்ச்சியோடு, தமிழ்தான் நமது தாய்மொழி என்னும் மொழிப்பற்றோடு, கடந்த ஆயிரத்தைந்நூறு ஆண்டுக்கால வரலாற்றை ஆராய்ந்து பார்ப்போமானால் இதுகாறும் நாம் எடுத்துக்காட்டியது போல, தமிழினத்தாரின் அடிமை வாழ்வு ஆங்கிலேயர் இந்த நாட்டில் புகுவதற்குப் பல நூற்றாண்டுகட்கு முன்பே ஆரம்பமாகிவிட்டதை அறியலாம்".

ம.பொ.சி.யின் இப்பார்வை வரலாற்றுணர்வு மிக்க பார்வையாகும். "தமிழ் மொழிக்கிருந்த அடிமைச் சூழ்நிலை, பிரிட்டிஷ் பேரரசுக்கு எதிராக விடுதலைப்போர் ஆரம்பமானபோது தான் மாறத்தொடங்கியது" என்று மிக நுட்பமான ஒரு கருத்தை இங்கு முன் வைக்கிறார் ம.பொ.சி. 'இந்திய விடுதலைப் போர்

நடக்கவில்லையானால், அந்தப் போரில் ஈடுபட்ட தேசியவாதிகள் தமிழின் மறுமலர்ச்சிக்குப் பாடுபடவில்லையானால், தமிழ்மொழி சமயவேலியைக் கடந்து சமுதாயப் பெருவெளிக்கு வந்திருக்காது" என்கிறார். விடுதலைப்போரில் தமிழ் வளர்ந்த நிலையை நான்கு காலக்கட்டங்களாகப் பகுத்துக் கொள்கிறார் ம.பொ.சி. முதல்காலக் கட்டம் கட்டபொம்மன், திப்புசுல்தான் போன்ற மன்னர்கள் கிழக்கிந்தியக் கம்பெனியை எதிர்த்துப் போரிட்ட காலம். இதனை மன்னர்கள் சகாப்தம் என்கிறார். இக்காலக்கட்டத்தில் நாட்டுப்புற இலக்கியங்கள் பல கட்டபொம்மனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடப்பட்டு வெளிவந்தன. அவற்றுள் 'கட்டபொம்மன் கதைப்பாடல்', கட்டபொம்மன் கும்மி' போன்றவை குறிப்பிடத்தக்கவையாகும். இரண்டாவது காலக் கட்டம் 'அரச விசுவாசிகளின் சகாப்தம்'. இது 1885-ஆம் ஆண்டுக்கும் 1905-ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலமாகும். "இக்காலக் கட்டத்தில்தான் தமிழில் நாவல் என்றொரு புதிய இலக்கியவகை தோன்றுகின்றது... வேதநாயகர் ஆங்கில மொழியின் ஆதிக்கத்தை அதன் ஆரம்பக் கட்டத்திலேயே மிகமிகக் கடுமையாக எதிர்த்தார். அரசியல் உரிமைக்கு மொழியுரிமையே மூலவேர் என்று கருதினார். தமிழோடு தமிழ் மக்களுக்குள்ள தொடர்பை விளக்குங்கால்

"நம்மைப் பெற்றதும் தமிழ்;
நம்மைத் தாலாட்டித் தூங்க வைத்ததும் தமிழ்;
வீட்டு பாஷையும் தமிழ்;
நாட்டு பாஷையும் தமிழ்"

என்று தாய்மொழிப் பற்றுடைய மக்களின் உணர்வு இனிக்க உயிர் இனிக்கக் கூறியுள்ளார்" என்று வேதநாயகரின் மொழிப் பற்றினைப் பாராட்டுகிறார் ம. பொ. சி.

இந்தக் காலக்கட்டத்தில் வாழ்ந்த "பிரிட்டிஷ் இந்தியத் தமிழகத்து மக்கள் ஆங்கில மொழியிடத்தும், புதுவை - காரைக்கால் பிரதேசத்து மக்கள் பிரெஞ்சு மொழியிடத்தும், சமயவாதிகளான புரோகிதர்கள் சமஸ்கிருத மொழியினிடத்தும், பாதிரிமார் லத்தீனிடத்தும் அதிகப்பற்று வைத்து, தங்கள் தாய்

மொழியான தமிழைப் பயிலாது புறக்கணித்தனர். இந்த நிலை கண்டு மனம் பொறாத வேதநாயகனார், "தமிழ் படிக்காதவர்கள் தமிழ்நாட்டில் வசிக்க யோக்கிதை உடையவர்கள் அல்லர். அவர்கள் எந்த ஊர் பாஷைகளைப் படிக்கிறார்களோ அந்த ஊரே அவர்களுக்குத் தகுந்த இடமாகையால் சுய பாஷையைப் படிக்காமல் இங்கிலீஷ் மட்டும் படிக்கிறவர்களை இங்கிலீஷ் தேசத்துக்கு அனுப்புவோம். பிரெஞ்சு மட்டும் படிப்பவர்களைப் பாரீசுப் (Paris) பட்டணத்துக்கு அனுப்பிடுவோம். லத்தீனுக்கும் சமஸ்கிருதத்துக்கும் சொந்த ஊர் இல்லாதபடியால், அந்தப் பாஷைகளைப் படிப்பவர்களை அநாமகரணத்தீவுக்கு அனுப்புவோம்" என்றமையும் பகுதியைச் சுட்டிக் காட்டுகிறார் ம.பொ.சி. ஆங்கில ஆதிக்கத்தை எதிர்த்துப் பாடிய வேதநாயகரின் கவிதையையும் பின்வருமாறு எடுத்துக்காட்டுகிறார்.

"ஆங்கில ஆதிக்கத்தை வெறுத்தும் எதிர்த்தும் கவிதைகள் பாடினார் வேதநாயகர்.

"ஆங்கிலம் ஒன்றையே கற்றார் - அதற்கு
ஆவியோ டாக்கையும் விற்றார்
தாங்களும் அந்நிய ரானார் - இன்பத்
தமிழின் தொடர்பற்றுப் போனார்."

என்ற கவிதையிலே பரங்கி மொழிப் பக்தர்களின் பரிதாப நிலையை நினைத்து இரங்குகிறார்" என்றெல்லாம் கூறிவிட்டுப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தமிழக நீதிமன்றங்களிலே ஆங்கிலம் புகுந்து தமிழை அடிமைப்படுத்தி, அதன்மீது ஆதிக்கம் கொள்ளத் தொடங்கியது என்று கூறி, அதனை வேதநாயகர் எவ்வாறு சாடினார் என்பதையும் பின்வருமாறு சுட்டிக்காட்டுகிறார்.

"தமிழகக் கோர்ட்டுகளிலே தமிழ் வக்கீல்கள் தமிழில் வாதிக்காமல், ஆங்கிலத்திலே வாதிக்கிறார்கள். தேச மொழியும் தமிழ்; கோர்ட்டிலே வழங்குகிற மொழியும் தமிழ்; நியாயாதிபதியும் தமிழர். வாதிக்கிற வக்கீலும் தமிழர்; கட்சிக்காரர் தமிழர் எல்லாம் தமிழ் மயமாயிருக்க, யாருக்குப் பிரீதியாக அவர்கள் ஆங்கிலத்தில்

வாதிக்கிறார்களோ, தெரியவில்லை. நியாயாதிபதி அல்லது வக்கீல் ஆங்கிலரா இருந்தால் ஆங்கிலத்திலே வாதிப்பது நியாயம். தமிழ் நியாயாதிபதி முன் தமிழ் வக்கீல் ஆங்கிலத்திலே வாதிப்பது ஆச்சரியமல்லவா?.......... தமிழ் நன்றாகப் பேச வராது என்று கௌரவம் போலச் சொல்லிக் கொள்கிறார்கள். இதனினும் இழிவு வேறு ஒன்றுமில்லை" என்ற பகுதியைச் சுட்டிக் காட்டி விட்டு "வேதநாயகர் காலத்தில் நீதிமன்ற நடவடிக்கைகளிலே வழக்கின் இறுதியிலே வக்கீல்கள் விவாதிப்பது (ஆர்க்யூமென்ட்) மட்டும் ஆங்கிலத்தில் நடந்திருக்க வேண்டும். அதைக்கூட சகித்துக் கொள்ளாத வேதநாயகர் நடவடிக்கைகள் எல்லாமே ஆங்கிலத்தில் நடைபெறும் இன்றைய நீதி மன்றங்களைக் கண்டால் என்ன சொல்லுவாரோ? சபிப்பார்" என்று ஆவணப்படுத்தல் மட்டுமின்றி அவ்வப்போது தம் கருத்தையும் கூறிச் செல்கின்றார் ம. பொ. சி.

இதையடுத்து உ. வே. சாமிநாதய்யரின் பதிப்புப்பணிகள் தமிழ் வளர்ச்சியில் மற்றொரு மைல் கல்லாக இடம் பெற்றதைச் சுட்டிச் செல்கிறார். இங்கு எந்த நூல் எந்த ஆண்டு பதிப்பிக்கப் பட்டது என்ற விபரங்களைப் பட்டியலிடுகிறார்.

| | | |
|---|---|---|
| சீவக சிந்தாமணி | - | 1887 |
| பத்துப்பாட்டு | - | 1889 |
| சிலப்பதிகாரம் | - | 1892 |
| புறநானூறு | - | 1895 |
| மணிமேகலை | - | 1898 |
| ஐங்குறுநூறு | - | 1903 |
| பதிற்றுப்பத்து | - | 1904 |
| பரிபாடல் | - | 1918 |
| குறுந்தொகை | - | 1937 |

உ. வே. சா. வின் தமிழ்ப் பதிப்புப்பணியைக் குறித்து எழுதும் ம. பொ. சி., "தமிழ் இலக்கிய ஏடுகளைத் தேடியலைவதை ஒரு இயக்கமாகவே நடத்தியிருக்கிறார் சாமிநாதய்யர். அவர் பதிப்பித்த சங்க இலக்கியங்களாலும், சிலப்பதிகாரத்தாலும் தமிழ் மொழி பேசும் மக்களிடையே 'தமிழர்' என்ற இன உணர்ச்சியும் அவ்வழி

இன எழுச்சியும், புதிய தமிழகம் படைக்கும் பெருமுயற்சியும் தோன்றின எனலாம்" என்கிறார் ம. பொ. சி. இதனையடுத்துப் பரிதிமாற் கலைஞரின் வடமொழி ஆதிக்க எதிர்ப்புப் பற்றி விளக்கிவிட்டு, அவர் ஆங்கில மோகத்தை வெறுத்ததையும் சுட்டிக்காட்டிப் பின்னர்ப் பரிதிமாற்கலைஞரின் ஆக்கப்பூர்வமான சிந்தனைகளையும் பின்வருமாறு சுட்டிக் காட்டுகிறார்.

"ஆங்கில ஆதிக்கத்தை அறிஞர் சாஸ்திரியார் வெறுத்தார் எனினும், ஆங்கிலத்தை ஒரு மொழியாகத் தமிழர் கற்க வேண்டும் என்பதை வற்புறுத்த அவர் தவறவில்லை. அத்துடன், ஆங்கிலங்கற்ற தமிழர் அம்மொழியிலுள்ள அறிவு நூல்களைத் தமிழில் கொண்டு வர வேண்டும் என்ற கருத்தினையும் வெளியிட்டார். ஆம்; நாளடைவில் கல்லூரிகளில் தமிழே பயிற்சி மொழியாக வேண்டுமென்றார்" என்று பரிதிமாற் கலைஞரின் கருத்துக்கு விளக்கம் தருகிறார் ம. பொ. சி.

வெளிநாட்டிலிருந்து சமயம் பரப்ப வந்த பாதிரிமார்களாகிய வீரமாமுனிவர், ஜி.யூ. போப், கால்டுவெல் இவர்களின் தமிழ்ப் பணியைச் சுட்டிக்காட்டி, "தமிழகம் வந்த பாதிரிமார்களிலே சிலர் நடத்திய மொழி - நாகரிக ஆராய்ச்சி காரணமாக, தமிழுக்கும் சமஸ்கிருதத்திற்கும் இயற்கையாகவேயுள்ள இடைவெளி மேலும் அதிகப்பட்டது எனலாம். இதனால் தமிழ், தனிமொழி, தமிழர் தனி இனத்தார்; தனி நாகரிகத்தார் என்ற எண்ணங்களும் வளரத் தொடங்கின" என்று எழுதுகிறார் ம. பொ. சி. இதனால் கிறித்துவப் பாதிரிமார்களின் தமிழ்ப்பணியை ம. பொ. சி. விரும்பியதாகத் தெரியவில்லை. இதனை, "இராமலிங்கர், தயானந்தர், ராசாராம் மோகன்ராய் ஆகியோர் இந்திய மக்களிடையே ஒருமைப் பாட்டுணர்ச்சியை வளர்க்கப் பாடுபட்டுக் கொண்டிருந்த அதே நேரத்தில் கிறித்துவப் பாதிரிமார்கள் சிலரால் பிரதேச உணர்ச்சிகள் வளர்க்கப்பட்டு வந்தன" என்று குறைப்பட்டுக் கொள்வதிலிருந்து அறியலாம். இதற்கு இவருடைய இந்திய தேசிய உணர்வே காரணமாகும்.

அடுத்துத் தோன்றிய திலகர் சகாப்தத்தில்தான் 'நாட்டுப்பற்றும் மொழிப்பற்றும் ஒன்று கலந்தன. இன்னொரு வகையில்

சொல்வதானால் தேசியமும் தமிழும் இரண்டறக் கலந்தன' என்று மகிழ்வோடு கூறுகிறார் ம. பொ. சி. இக்காலத்தில்தான் 'தமிழ்மொழி - நம் தாய்மொழி - விடுதலைப் போர் வீரர்களின் வலிமை மிக்க கருவியாகப் பயன்பட்டது. திலகர் சகாப்தத்தின் துவக்கத்திலேயே தமிழ்மொழி விடுதலை வீரர்களின் கேடயமாகி விட்டது" என்கிறார். "பாரதியாரின் தேச பக்திப்பாடல்களில் தேச பக்தியை போதித்தார், பின்னர் வந்த கவிதைகளிலே தேசபக்தியோடு தெய்வ பக்தியையும் போதித்தார். அதன் பின்னர் வந்த கவிதைகளில் தமிழ்ப் பற்றையும் சேர்த்துப் படைத்தார்" என்று பாரதியைக் குறித்துப் பேசுகிறார். ம. பொ. சி. பாரதி பற்றிக் குறிப்பிடும்போது "தேசிய எழுச்சியால் தமிழ் மொழியின் தனித்தன்மை கெடாதவாறு பாதுகாக்கப் பாரதியார் ஒருவர் மட்டுமே முயன்றார்" என்று பாராட்டுகிறார்.

பாரதியார் காலத்திலேயே வாழ்ந்த மற்றொரு விடுதலைப் போராட்ட வீரரும் தமிழ் மொழி வளர்ச்சிக்காகப் பாடுபட்டவருமான சுப்பிரமணிய சிவாவைப் பற்றிக் குறிப்பிடும்போது அவருடைய தமிழ்ப்பற்றுக்கு, சிவா, தாம் நடத்திய 'ஞானபாநு' மாத இதழில் வெளியிட்ட விளம்பரத்தைச் சான்றாகக் காட்டுகிறார் ம. பொ. சி. அந்த விளம்பரம் பின் வருமாறு.

"உங்களால் தனித்தமிழில் எழுத முடியமா? முடியுமானால் முந்துங்கள், சமஸ்கிருதம் முதலிய அந்நிய பாஷைச் சொற்களில் ஒன்றும் கலவாது தனித்தமிழில் நமது 'ஞானபாநு' வில் எட்டுப் பக்கத்திற்குக் குறையாது வரும்படியாகத் தமிழ்ப் பாஷையின் சிறப்பைப் பற்றியாவது, திருவள்ளுவ நாயனாரின் சரித்திரத்தை யாவது எழுதுவோருக்கு ரூபா ஐந்து இனாமளிப்பதாகத் தமிழபிமானியொருவர் முன்வந்திருக்கிறார்.

சமஸ்கிருதச் சொல்லாகிய கஜம் திரிந்து தமிழில் கயம் என்றாயிருப்பது போன்ற திரிபுச் சொற்களும் உபயோகப் படுத்தலாகாது. சுருக்கத்தில், எந்தப் பாஷையின் சொற்களுக்கும் சம்பந்தமில்லாத தனித்தமிழ்ச் சொற்களே உபயோகிக்கப்பட வேண்டும்"- இது சுப்பிரமணிய சிவாவின் தனித்தமிழ் ஈடுபாட்டைக் காட்டுவதாகக் கருதுகின்றார் ம. பொ. சி.

திலகர் சகாப்தத்திலே தமிழகத்தில் வாழ்ந்த பெருந் தலைவர்களில் தமிழ்மொழிக்குத் தொண்டாற்றியவர்களில் வ. உ. சி.க்கு ஒரு சிறப்பிடம் உண்டு என்று கூறுகிறார் ம. பொ. சி. இதனாலேயே 'செந்தமிழ் வளர்த்த சிதம்பரனார்' என்ற உட்தலைப்பில் சிதம்பரனாரின் தமிழ்ப் பணிபற்றி எழுதுகின்றார். இதனைப் போன்றே உரையாசிரியர் வ. உ. சி. என்ற உட்தலைப்பிலும் வ. உ. சி. யின் தமிழ்ப்பணி போற்றப்படுகின்றது. பாரதியாருக்கும் வ. உ. சி. க்கும் நடந்த தமிழ் எழுத்துகள் பற்றிய கருத்துப்போர் விவரிக்கப்படுகின்றது. இக்கருத்துப் போர் பற்றிக் குறிப்பிட்டாலும் தாம் எந்தக் கருத்தை ஆதரிக்கிறார் என்பது குறித்து ம. பொ. சி. ஏதும் குறிப்பிடவில்லை என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. பாரதியார் மீதும் வ.உ.சி.யின் மீதும் தாம் பற்றுக் கொண்டிருப்பதால் யாருடைய கருத்தையும் மறுக்கவில்லையோ என்று தோன்றுகின்றது. திலகர் சகாப்தத்தில் வாழ்ந்த வ. வே. சு. ஐயர், இராஜாஜி போன்றவர்களின் தமிழ்ப்பணியும் பேசப்படுகின்றன.

நான்காவது பகுதியாகிய காந்தி சகாப்தத்தில் ஒவ்வொரு துறையிலும் தமிழ் மொழி எவ்வாறு வளர்ச்சியடைந்தது என்பது விரிவாக விளக்கப்பட்டுள்ளது. கவிதை நடையில் மாறுதல் பெற்றதற்கு, "எளிய பதங்கள், எளிய நடை, எளிதில் அறிந்து கொள்ளக்கூடிய சரிதம், பொது ஜனங்கள் விரும்பும் மெட்டு இவற்றினையுடைய காவியமொன்று தற்காலத்தில் செய்து தருவோன் நமது தாய் மொழிக்குப் புதிய உயிர் தருவோனாகின்றான். ஓரிரண்டு வருஷத்து நூற்பழக்கம் உள்ள தமிழ் மக்கள் எல்லோருக்கும் நன்கு பொருள் விளங்கும்படி எழுதுவதுடன், காவியத்துக்குள்ள நயங்கள் குறைவுபடாமலும் நடத்தல் வேண்டும்" என்று பாரதியார் பாஞ்சாலி சபதத்திற்குக் கூறிய முன்னுரையைச் சான்றாக எடுத்துக் காட்டுகிறார் ம.பொ.சி. தமிழிசைக் கிளர்ச்சி நடந்ததைச் சுட்டிக்காட்டி, அக்கிளர்ச்சிக்கும் பாரதியாரே முன்னோடியாயிருந்தார் என்கிறார். 'தமிழகத்து இசையரங்குகளில் தமிழே வேண்டும்' என்று முழங்கினார். இக்காலத்து வாழ்ந்த தேசிய வாதிகள் என்று கூறுகிறார் ம.பொ.சி. "தமிழிசையைக் கொண்டு தேசியம் வளர்ந்தது! தேசியத்தைக் கொண்டு தமிழிசை வளர்ந்தது. ஆம் தமிழிசையும் தேசியமும் ஒன்றையொன்று வளர்த்தன" என்றெழுதுகிறார் சிலம்புச் செல்வர்.

தமிழ் உரைநடையில் ஏற்பட்ட மாற்றத்தை - வளர்ச்சியினை- விளக்கும்போது “பழகு தமிழா பண்டிதத் தமிழா!” என்ற உட்தலைப்பில் பண்டிதத் தமிழ் மறைந்து பழகு தமிழ் உருவான காலம் தேசியம் வளர்த்த தமிழ்க்காலம் என்று விளக்குகிறார். “திரு.வி.கலியாணசுந்தரமும், வ.உ. சிதம்பரனாரும் தூய தமிழ் விரும்புவோருக்கும் பழகு தமிழிலேயே கட்டுப்பட்டுக் கிடந்தோருக்கும் இடையிலே - அவ்விரு பண்பினையும் இணைத்து அவ்விரு தரப்பாரையும் இணைக்கும் பாலமாக இருந்துவந்தனர்.” என்கிறார்.

“இக்கால கட்டத்தில் பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்களையும் தமிழிலே மொழிபெயர்க்கும் பணியினையும் தேசியவாதிகள் திறம்படச் செய்துள்ளனர்” என்கிறார். நாடக மேடையில் தமிழ் வளர்ந்த நிலை - குறிப்பாக விடுதலைப் போராட்டக் கருத்துகளை நாடகப் பாடல்களிலும் - உரையாடல்களிலும் பெற்று வளர்ந்த நிலையைச் சுட்டிக்காட்டிப் பெருமிதம் அடைகிறார் ம.பொ.சி. இதனைப் போன்றே தமிழ்த் திரைப்படங்களிலும் தேசபக்தி பெருகிவந்ததைச் சுட்டிச்செல்கின்றார். இவ்விடங்களில் எல்லாம் தமிழ் வளர்ச்சி என்பதனைத் தேச பக்தியாகவே கொண்டு மயங்கும் நிலையை ம.பொ.சி. கருத்துகளில் காணமுடிகின்றது. தேசப் பற்றும் மொழிப்பற்றும் ஒன்று என்றே கருதி எழுதுகின்றார் ம.பொ.சி.

“காந்தி சகாப்தத்தில்தான் மாகாண சபையின் நடவடிக்கைகளில் ஆங்கில ஆதிக்கம் குறைந்து தாய்மொழியாம் தமிழ்மொழியில் பேசத் தொடங்கினர்” என்ற செய்தி தேசியத்தால் தமிழ் வளர்ந்ததைச் சுட்டிக் காட்டுகின்றது. “பத்திரிகையுலகில் இக்காலத்தில்தான் பிரதேச மொழியின் பெயராலும்’ பிரதேசத்தின் பெயராலும் இதழ்கள் பல நடத்தப்பட்டன. சான்றாகத் தமிழ்நாடு, தென்னாடுகோளன், வங்காளி முதலியவற்றைக் குறிப்பிடலாம்” என்பார்.

“சுயமரியாதை இயக்கத்தால் தனித் தமிழ்க் கொள்கை வலுப்பெற்று, தமிழில் கலந்துள்ள வடசொற்களை அகற்றி எழுத வேண்டும் என்ற ஆர்வம் தமிழரிடையே வளர்ந்தது”. “இக்காலக்

கட்டத்தில்தான், விஞ்ஞானக் கலைச் சொற்களைத் தமிழில் படைக்கும் முயற்சிக்குத் துணைபுரியும் வகையில் 'தமிழ் சாஸ்திர பரிபாஷை' என்ற மாத இதழ் ஒன்று சேலத்திலிருந்து வெளிவந்தது. இந்த இதழ் ஆங்கிலத்தில் வெளிவந்தது குறிப்பிடத்தக்கது." என்ற செய்தியும் ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. அந்நாட்களில் தேசியக் கல்வித்திட்டத்திற்குத் தேவைப்படும் பாடநூல்களை எழுதுவதிலேயும் தேசியவாதிகள் ஆர்வங் காட்டினர். தேசியக்கல்வி தாய்மொழியிலேயே அமைய வேண்டும் என்று வலியுறுத்தப் பட்டது. இதையொட்டியே இராஜாஜி அரசு உயர்நிலைப் பள்ளிகளில் தமிழையே பயிற்று மொழியாக்கியது என்பன போன்ற செய்திகள் விடுதலைப் போரில் தமிழ் வளர்ந்த வரலாறாக ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

விடுதலைக்குப் பின் தமிழ் வளர்ந்த வரலாறு என்ற இரண்டாவது நூலில் 1947-ஆம் ஆண்டு முடிய உள்ள முப்பதாண்டுகளில் தமிழ் வளர்ச்சிப் பணிகளாக நிகழ்ந்த நிகழ்ச்சிகள் தொகுத்து ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. இந்நூலுக்கு மத்திய மாநில அரசுகளும், அவற்றின் அங்கங்களாக அமைக்கப் பெற்ற நிறுவனங்களும், தமிழகத்தில் உள்ள பல்கலைக் கழகங்களும் ஆற்றிய தமிழ் வளர்ச்சிப் பணிகள் பற்றிய செய்திகளே தரவுகளாகின்றன. ஆவணப்படுத்தல் என்பது ஒரு நிறுவனம் செய்யவேண்டிய பணி. அதனைத் தனி ஒரு மனிதராக நின்று ம.பொ.சி. அவர்கள் செய்திருப்பது பாராட்டுக்குரியதாகும்.

1947-ஆம் ஆண்டுக்கும் 1977-ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் தமிழகத்தில் மூன்று அரசியல்கட்சிகளின் ஆட்சி நடைபெற்றது. எனினும் துறைவாரியாகத் தமிழின் வளர்ச்சி நிலைகள் தொகுக்கப்பட்டு ஆவணப்படுத்தப்பட்டுள்ளதால் - காலவாரியான தொகுப்புமுறை இல்லாததால் அரசியல் கட்சிகளினால் விளைந்த ஆட்சி மாற்றம் ஒரு பொருட்டாகக் கருதப்படவில்லை. அப்படி அரசியல் கட்சிகளின் அடிப்படையில் ஒரு மதிப்பீடு செய்யப் பட்டிருக்குமானால் எந்தக் கட்சி தமிழ் வளர்ச்சிப்பணியில் அதிகம் செயல்பட்டிருக்கிறது என்பதனை

அறியும் வாய்ப்புக் கிட்டியிருக்கும். என்ன காரணத்தாலேயோ அதை ம.பொ.சி. தவிர்த்துவிட்டார்.

'நாட்டுவிடுதலையை ஒட்டி 1947-ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 14-ஆம் நாள், அந்நாளைய தமிழகத்தின் கல்வியமைச்சர் திரு. சு. அவினாசிலிங்கனார் தமிழ் வளர்ச்சிக் கழகம் என்ற நிறுவனத்தைக் கொண்டு தமிழ்மொழியில் கலைக்களஞ்சியம் தயாரிக்க உத்தரவிட்டார். இதற்குரிய நிதி பல்வேறு துறையினரிடமிருந்து பெறப்பட்டு இப்பணி மேற்கொள்ளப் பட்டது. இதற்கு மத்திய அரசும் மாநில அரசும் பொருளுதவி செய்தன. 1947-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் விசயதசமி நாளில் கலைக்களஞ்சியப்பணி சென்னைப் பல்கலைகக்கழகக் கட்டடத்தில் தொடங்கியது. கலைக்களஞ்சியத்தின் ஆசிரியராக திரு. ம.ப. பெரியசாமித் தூரன் நியமிக்கப்பட்டார் என்ற செய்திகளைக் கூறி இறுதியில் ஒவ்வொரு கலைக் களஞ்சியமும் எந்த ஆண்டில் வெளியிடப்பட்டன என்பதைப் பின்வரும் பட்டியலின் மூலமாக விளக்குகிறார்.

| கலைக் களஞ்சியத் தொகுதி | வெளியிட்ட ஆண்டு | வெளியிட்ட அறிஞர்கள் |
|---|---|---|
| 1 | 1954 | தமிழகநிதியமைச்சர் சி.சுப்பிரமணியன் |
| 2 | 1955 | தமிழக ஆளுநர் ஸ்ரீபிரகாசா |
| 3 | 1956 | திரு. கே. சந்தானம். எம்.பி. |
| 4. | 1956 | தமிழக ஆளுநர் ஜான் |
| 5. | 1958 | பிரதமர் நேரு |
| 6. | 1959 | பாரதக் கல்வியமைச்சர் ஸ்ரீமாலி |
| 7. | 1960 | தமிழக முதலமைச்சர் கே. காமராசர் |
| 8. | 1961 | தமிழக ஆளுநர் விஷ்ணுராம் மேதி |
| 9. | 1963 | குடியரசுத்தலைவர் எஸ். இராதாகிருஷ்ணன் |
| 10. | 1968 | தமிழகக்கல்வியமைச்சர் இரா.நெடுஞ்செழியன் |

இவ்வாறு பத்துத் தொகுதிகளும் முடிந்த பின்னர், இவற்றைத் தொடர்ந்து குழந்தைகளுக்கான கலைக்களஞ்சியத்தைத்

தயாரிக்கும் பணியில் ஈடுபட்டது தமிழ் வளர்ச்சிக் கழகம். ஒவ்வொன்றும் 100 பக்கங்கள் கொண்ட குழந்தைகளுக்கான கலைக்களஞ்சியம் பத்துத் தொகுதிகளும் தயாரிக்கப்பட்டன.

இக்கலைக் களஞ்சியப் பணிகள் குறித்து ம.பொ.சி. எழுதும்போது, "தமிழ் வளர்ச்சி என்பது கிளர்ச்சியால் மட்டுமே சாதிக்கக் கூடியதல்ல. அறிஞர் பலர்கூடி அமைதியாக ஆழ்ந்த தமிழ்ப் பற்றுடன் உழைப்பதன் மூலமே சாதிக்கக் கூடியது என்ற உண்மையைக் கலைக்களஞ்சியங்களைத் தயாரித்த அறிஞர்கள் காட்டியிருக்கிறார்கள். கிளர்ச்சியிலேயே காலத்தைக் கழிப்பவர்கள் தமிழ் வளர்ச்சியைத் தடுத்து நிற்கும் தடைகளைத் தகர்க்கலாம். ஆனால், தமிழை வளர்க்க அதுமட்டும் போதாது. இந்த உண்மை உணர்ந்து கலைக்களஞ்சியங்களைத் தயாரித்தவர்களைக் கிளர்ச்சியாளர்களும் பாராட்டவேண்டும்" என்று எழுதுகிறார். மேலும் கலைக்களஞ்சியங்களின் பயன்குறித்து, "தமிழ்க் கலைக்களஞ்சியமானது ஆங்கிலம் அறியாதவர்களும் அறிஞர்களாக மலரத் துணை புரிகின்றது. தமிழானது ஆட்சிமொழியாகவும், கல்லூரிகளிலே பயிற்சி மொழியாகவும் வருவதற்குப் பயன்படும் வகையில் பல்லாயிரக் கணக்கான கலைச் சொற்களைத் தந்து உதவி புரிகிறது" என்றும் எழுதித் தமிழ் வளர்ச்சியில் கலைக் களஞ்சியப்பணி ஒரு மைல்கல் என்பதனை உணர்த்துகின்றார்.

"தமிழ் வளர்ச்சிக் கழகம் ஒவ்வொரு ஆண்டும் தமிழில் வெளியாகும் சிறந்த நூல்களுக்குப் பரிசு கொடுத்துத் தமிழில் நல்ல பல நூல்கள் வெளிவர உதவிபுரிந்தது. நாடு விடுதலை பெற்ற பின்னர்க் கவிஞர்களைச் சிறப்பிக்கும் வகையில் சிறந்த கவிஞர் ஒருவருக்கு அரசவைக்கவிஞர் பட்டம் வழங்கி அவரை ஐந்தாண்டுகளுக்கு அரசவைக் கவிஞராக வைத்துக் கொள்வது என்று முடிவு செய்யப்பட்டது. அதன்படி 1949ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் இருபத்திரண்டாம் நாள் நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம்பிள்ளை தமிழ் அரசவைக் கவிஞராக நியமிக்கப்பெற்றார்" என்பன போன்ற செய்திகளும் ஆவணப் படுத்தப்பட்டுள்ளன.

மொழிவாரி மாநிலப் பிரிவினைக்குப் பின்னர் 1956-ஆம் ஆண்டு டிசம்பர் பதினெட்டாம் நாள் தமிழக சட்டப் பேரவையில் 1957-1958-ஆம் ஆண்டுக்கான குறுகிய கால வரவு - செலவுத்திட்டம் முதன்முதலாகத் தமிழில் தயாரித்து நிதி அமைச்சர் மாண்புமிகு திரு. சி. சுப்பிரமணியம் அவர்களால் சட்டசபையில் சமர்ப்பிக்கப்பட்டது. நிதியமைச்சர் நிதிநிலை அறிக்கையைத் தமிழிலேயே படித்தார். இந்த வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த நிகழ்ச்சியை ஆவணப்படுத்தும் ம.பொ.சி. இந்நிகழ்ச்சிக்கு 'அரியாஸனத்தில் தமிழன்னை'' என்று தலைப்பிட்டு ஆவணப்படுத்தியுள்ளார்.

இதேபோன்று 1956-ஆம் ஆண்டு டிசம்பர் 27-ஆம் நாள் நடைபெற்ற சட்டப்பேரவைக் கூட்டத்தில் தமிழ் ஆட்சிமொழிச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. இந்த நிகழ்ச்சியை ஆவணப்படுத்தும் ம.பொ.சி, என்ன காரணத்தாலோ தமிழ் மாநில அமைப்பு மசோதாவுக்குச் சட்டமன்றம் அங்கீகாரம் அளித்தபோதும், தமிழ் ஆட்சிமொழி மசோதா சட்டமாக்கப் பட்டபோதும் தி.மு.கழகம் சட்டமன்றத்தில் பிரதிநிதித்தும் பெற்றிருக்கவில்லை என்பதையும் குறிப்பிடுகிறார். இதற்கு ஏதோ ஒரு உள்நோக்கம் இருப்பதாகத் தோன்றுகின்றது.

தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்றம் என்று ஒன்று 1959-ஆம் ஆண்டு தமிழக அரசினால் உருவாக்கப்பட்டது. அம்மன்றத்தில் ம.பொ.சி. அவர்களும் உறுப்பினராக நியமிக்கப்பட்டார். இம்மன்றத்தின் குறிக்கோள் பற்றி எழுதும்போது, "கல்லூரிகளில் பாடங்களைக் கற்பிக்கும் மொழியாகத் தமிழைக் கொண்டுவர என்ற அரசின் குறிக்கோளை அடைவதற்கு அதிலுள்ள சிக்கல்களை ஆராய்ச்சிசெய்வது, பின்னர் துறையின் தன்மையையும் இம்மாறுதல்களைக் கொண்டு வரவேண்டிய பள்ளிகள் கல்லூரிகள் ஆகியவற்றையும் முடிவு செய்ய வேண்டும். எல்லா மக்களும் எளிதில் வாங்கக் கூடிய விலையில் மலிவான நூல்களைத் தமிழில் வெளியிட வேண்டும்" என்று எழுதுகின்றார். சிலம்புச் செல்வர்.

இதற்கிணங்கத் தமிழ்நூல் வெளியீட்டுக் கழகம் ஒன்றையும் அரசு அமைத்தது. இக்கழகத்தின் மூலம் தமிழ்பயிற்றுமொழி வகுப்புக்குத் தேவையான பாடநூல்களையும் பொது அறிவு நூல்களையும் வெளியிடச் செய்தது அரசு. இதுபோன்ற செய்திகள் முறையாக ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. இந்தத் 'தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்றமே தமிழைப் பயிற்று மொழியாக்குவது குறித்தும் சிந்தித்தது. அதன் விளைவாக 1960-61-ஆம் ஆண்டில் கோவை அரசினர் கல்லூரியைத் தேர்வு செய்து பி.ஏ. வகுப்புக்கு மட்டும் தமிழைப் பயிற்சி மொழியாக்கி முன்னோடியாக நடத்துவது என்று தீர்மானித்துச் செயல் படுத்தியது. இத்திட்டத்தை 1963-64-இல் அனைத்துக் கல்லூரிகளுக்கும் விரிவுபடுத்துவது என்றும் முடிவு செய்யப் பட்டது. இதனடிப்படையில் 1960-61-இல் வெற்றிகரமாகச் செயல் பட்டதால் 1963 வரை காத்திராமல் 1961-62-இலேயே மற்ற கல்லூரிகளுக்குத் தமிழ்ப் பயிற்றுமொழித் திட்டம் விரிவுபடுத்தப் பட்டபோது, ஈ.வெ.ரா., இராஜாஜி, கல்கி போன்றவர்கள் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். இந்தச் சூழலில் ம.பொ.சி. அவர்கள் கல்லூரிகளில் பயிற்சி மொழியாக ஆங்கிலம் நீடிப்பதால் விளையும் கேடுகள் யாவை? என்பதனை விளக்கிப் பல நூல்களை எழுதி வெளியிட்டார். அவை பின்வருமாறு:

1. பாரதியும் ஆங்கிலமும்
2. காந்தியடிகளும் ஆங்கிலமும்
3. தமிழா, ஆங்கிலமா?
4. ஆங்கில ஆதிக்க எதிர்ப்பு வரலாறு
5. மொழிச் சிக்கலும் மாநில சுயாட்சியும்
6. இன்பத்தமிழா? இந்தி - ஆங்கிலமா?

தமிழில் கலைச்சொற்களைத் தயாரிக்கும் பணியை அரசு மேற்கொண்டு தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்றத்தினை அப்பணியில் ஈடுபடுத்தியது. ஜி.ஆர். தாமோதரன் அவர்கள் தலைமையில் நியமிக்கப்பட்ட கல்லூரித் தமிழ்க் குழுவினர் விஞ்ஞானக் கலைகள் அனைத்துக்கும் கலைச் சொற்களைத் தமிழில் படைத்துத் தனித்தனிக் கலைச்சொல்லகராதிகளாக்கினர். அவை பின்வருமாறு: பொருளாதாரக் கலைச்சொல்லகராதி,

அரசியல் கலைச்சொல்லகராதி, தத்துவவியல் கலைச் சொல்லகராதி, புவியியல் கலைச்சொல்லகராதி, உயிரியல் கலைச் சொல்லகராதி, புள்ளியியல் கலைச் சொல்லகராதி, வணிகவியல் கலைச் சொல்லகராதி, வேதியியல் கலைச் சொல்லகராதி, உளவியல் கலைச் சொல்லகராதி, பௌதிகவியல் கலைச் சொல்லகராதி. ஆட்சிச் சொல்லகராதியும் இக்காலத்திலேயே வெளியிடப்பட்டது. இவற்றை ஆவணப்படுத்தும் ம.பொ.சி. அவர்கள், "காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் தொடங்கப்பட்ட இந்த அரும்பணிகள் அந்த ஆட்சி மறைந்து தி.மு.க. ஆட்சி தோன்றுவதற்கு முன்பே பெருமளவு முடித்து வைக்கப்பட்டன" என்ற தன் கருத்தையும் கூறி ஆவணப்படுத்தியுள்ளார்.

1961-ஆம் ஆண்டு தமிழில் சென்னை மாநிலம் என்பது 'தமிழ்நாடு' என்று பெயர் மாற்றம் பெற்றது போன்ற நிகழ்ச்சிகளும் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. என்ன காரணத்தினாலோ இந்த நூலில் 1968-ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணாதுரை ஆட்சியில் ஆங்கிலத்திலும் தமிழ்நாடு என்று மாற்றப் பெற்ற பெயர் மாற்றம் ஆவணப்படுத்தப்படவில்லை.

## குறிப்புகள்

1. 100 சாதனையாளர்கள், ப. 77.
2. சிலம்புச்செல்வரின் வாழ்க்கையிலே, ப. 60.
3. தமிழ்முரசு (1-1-1947)
4. சிலம்புச்செல்வரின் வாழ்க்கையிலே, ப. 101.
5. மேலது.
6. தமிழும் கலப்படமும், பக். 13-14.
7. சிலம்புச் செல்வரின் வாழ்க்கையிலே, ப. 112.
8. எனது போராட்டம், ப. 107.
9. மேலது, ப. 110.
10. சாதனைச் சரித்திரநாயகர் சிலம்புச்செல்வர் ம.பொ.சி, பக்.92-97
11. கம்பனிடம் நான் கற்ற அரசியல், ப. 87.
12. எனது போராட்டம், ப. 204.
13. திருக்குறளில் கலைபற்றிக் கூறாததேன்? (முன்னுரை)

14. கலிங்கத்துப்பரணி, ப. 10.
15. கம்பன் கவிநயம், பக். 5-10.
16. சிலம்புச்செல்வரின் வாழ்க்கையிலே, பக். 54-55.
17. எனது போராட்டம், ப. 108.
18. ம.பொ.சி.யின் இலக்கிய நூல்கள் ஒரு மதிப்பீடு, ப. 23.
19. எனது போராட்டம், ப. 329.
20. மேலது, பக். 784-785.
21. ம.பொ.சி. திருநாவுக்கரசு புகழஞ்சலி, ப. 12.
22. கம்பர் கவிநயம், ப. 12.
23. சிலப்பதிகாரமும், தமிழும், பக். 5-6.
24. கலிங்கத்துப்பரணி ஆராய்ச்சி, ப. 160.
25. ஔவை-யார்?, ப. 11.
26. மேலது. ப. 49.
27. மேலது.

# ம.பொ.சி.யும் தமிழரும்

ம.பொ.சி. அவர்கள் அமராவதிச் சிறையில் இருந்தபோது ஆந்திர கேரள, கன்னட மாநிலத்தைச் சேர்ந்த தலைவர்களுடன் பழகும் வாய்ப்பைப் பெற்றார். அந்த மாநிலங்களின் தலைவர்களிடம் தாய்மொழிப் பற்றும், மொழிவழிப்பட்ட இனவுணர்வும் மிகுந்திருப்பதை ம.பொ.சி. கண்டார். அதே நேரத்தில் தம்முடன் இருந்த தமிழகத்தைச் சார்ந்த காங்கிரஸ் தலைவர்களிடம் 'தமிழர்' என்னும் இன உணர்ச்சி இல்லாததை உணர்ந்தார். தன்னிடமே கூட அன்றுவரை தமிழ் இன உணர்ச்சி அதிகமில்லாத நிலையை உணர்ந்தார். அதன் விளைவாகத் தமிழ் பேசும் மக்களுக்குத் 'தமிழர்' என்னும் இன உணர்வை ஊட்டுவதே தன் முதல் பணி என உணர்ந்தார். அதனை இந்திய தேசிய உணர்வோடு இணைத்துச் செய்வது குறித்துச் சிந்திக்கச் தொடங்கினார் ம.பொ.சி!.

திலகர் எப்படிக் கணபதி விழா, சிவாஜி விழா இவற்றை மக்கள் விழிப்படையப் பயன்படுத்தினார் என்பதை நினைத்தார். தமிழினத்தார் அனைவரையும் ஒன்றுபடுத்த ஏதேனும் ஒரு தேசிய விழா தேவை என்பதை உணர்ந்தார். இந்தக் காலத்தில்தான் திரு. கொ.மே. ஜனார்த்தனம், ம.ரா.போ. குருசாமி ஆகியோர் பச்சையப்பன் கல்லூரியில் மாணவர்களாக இருந்தனர். இவர்கள் 'மாணவர் தமிழ்மன்றம்' என்ற அமைப்பை நடத்தி வந்தனர். 1946-ஆம் ஆண்டு ஜனவரி 14-ஆம் நாள் தமிழ் மன்றத்தின் சார்பில், சென்னை கோகலே மண்டபத்தில் 'தமிழர் திருநாள்' விழா கொண்டாடப்பட்டது. ம.பொ.சி. தலைமையில் நடந்த இவ்விழாவில் இராஜாஜி, திரு.வி.க., ப. ஜீவானந்தம், டி.கே.சி., தெ.பொ.மீ., காமராஜ் ஆகியோர் கலந்துகொண்டனர். இன

உணர்ச்சி ஊட்டும் வகையில் ம.பொ.சி. அவர்கள் மேற்கொண்ட முதல் பணி இதுவேயாகும். ம.பொ.சி. அவர்கள் தமிழ் இனத்திற்காக ஆற்றிய பணிகளை மூன்று பெரும்பிரிவுகளில் விளக்கலாம்.

1. தமிழ் இனத்தலைவர்களை மக்களுக்கு அடையாளம் காட்டுதல்
2. 'தமிழர்' என்ற இன ஒற்றுமையை வளர்த்தல்
3. பிற இனத்தால் வரும் கேடுகளைக் களைதல்

ஆகிய மூன்று நிலைகளில் ம.பொ.சி. அவர்களின் தமிழ் இன வளர்ச்சிப் பணிகள் இங்கு விளக்கப்படுகின்றன. இவை யாவும் ஒன்றோடொன்று தொடர்புடையனவே எனினும் தெளிவு கருதி இவ்வாறு பகுத்துக் கொள்ளலாம். ம.பொ.சி. அவர்கள் எழுதிய நூல்கள் பலவற்றில் இச்செய்திகள் பரவலாக இடம்பெற்றுள்ளன. ம.பொ.சி. அவர்கள் பண்டைத் தமிழ் இலக்கியங்களைப் படித்ததன் விளைவாகத் 'தமிழ் இனவுணர்வு' பெற்றதாகப் பல இடங்களில் குறிப்பிடுகிறார். இந்திய விடுதலைப் போரில் கலந்துகொண்ட ம.பொ.சி., அதன் வரலாற்றை எழுதியவர்கள் பலர் தமிழினத் தலைவர்கள் பற்றிய வரலாற்றை மறைத்துவிட்டதைக்கண்டு 'விடுதலைப் போரில் தமிழகம்' என்ற தலைப்பில் இரண்டு பாகங்களாக எழுதி வெளியிட்டுள்ளார்.

## இனத் தலைவர்களை அடையாளம் காட்டுதல்

புறநானூற்றைப் படித்ததனாலேயே 'தமிழன்' என்ற இன உணர்வினைப் பெற்றதாக ம.பொ.சி. தன் சுயசரிதையில் குறிப்பிடுகிறார். அதற்கு முன்பிருந்த நிலையையும், புறநானூறு படித்த பிறகு பெற்ற மனவளர்ச்சியையும் ம.பொ.சி. பின்வருமாறு எழுதுகிறார். இதற்குத் **'தமிழன்' ஆனேன்!** என்று உட்தலைப்பிட்டிருப்பது குறிப்பிடத் தக்கது.

''புறநானூறு என்னும் பேரிலக்கியம் தமிழினத்தின் பெருமைக்குச் சான்றாகும்.... 'தமிழன்' என்னும் இன உணர்வை தான் முதன்முதலாகப் பெற்றது புறநானூற்றைப் படித்தபோதுதான். அதற்கு முன்பும் நான் தமிழன் என்பது எனக்குத் தெரிந்திருந்தது.

ஆனால் தமிழ் பேசும் மக்கள் தனித்த வரலாறும், தனியான பழக்க வழக்கங்களும், தனிச்சிறப்புடைய அரசியல் மரபும் படைத்த தனித் தேசிய இனத்தவர் என்ற உண்மையைப் புறநானூற்றைப் படித்த போதுதான் உணர்ந்தேன். தமிழ் இனத்தவர்கள் தங்களுக்கென்று தனியாக ஒரு தாயகத்தைப் பெற்றிருக்கின்றனர். அதன் பெயர் 'தமிழ்நாடு' என்பதனையும் உணர்ந்தேன். அந்தத் தமிழ்நாட்டிலே ஆயிரமாயிரம் ஆண்டுகளாய்த் தமிழரே ஆட்சி புரிந்து வந்தனர் என்பது தெரியவந்தது"[2] என்கிறார். தமிழன் என்ற இனஉணர்வு பெற்ற ம.பொ.சி. தமிழ் இன மக்களை ஒன்றுபடுத்த விரும்பியே பல விழாக்களைக் கொண்டாடச் செய்தார். இதனை அவர் கூற்றாகக் காணலாம், "தமிழினத்தின் ஒருமைக்காகவும், உரிமைக்காகவும் 'தமிழர் திருநாள்' என்ற பெயரில் தலைநகரிலே பொங்கல் திருநாளைத் தமிழ்த் தலைவர்களைக் கூட்டிவைத்துக் கொண்டாடியது இதுதான் முதன்முறை"[3] என்று 1946-ஆம் ஆண்டு ஜனவரி 14-இல் சென்னை கோகலே மன்றத்தில் நடத்திய 'தமிழர் திருநாளைக் கொண்டாடியதைக் குறிப்பிடுகிறார்.

காங்கிரசின் வட்டாரத்திலே 'தமிழ்' உணர்ச்சியையும் 'தமிழன்' என்ற இன உணர்ச்சியையும் பரப்ப விரும்பிய ம.பொ.சி. அதற்குத் துணை புரியும் வகையில் தேசிய மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் நினைவு நாளை ஆண்டுதோறும் திட்டமிட்டுச் சிறப்புடன் கொண்டாடச் செய்தார். தமிழ்க் கவிஞனின் திருநாளிலே தமிழினத் தலைவர்கள் - அவர்கள் எந்தக் கட்சியாக இருந்தாலும்- அனைவரும் பாரதி விழாவில் ஒன்றுபட்டுக் கலந்துகொள்ளச் செய்தார்.

இதனைப் போலவே இனவுணர்ச்சி ஊட்டுவதற்காகவே கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரனாரின் புகழைப் பரப்புவதைக் கழகம் தனது உடைமையாகக் கொள்ளச் செய்தார். 18-11-47 முதல் ஒரு வார காலம் முதன் முதலாக வ.உ.சி. வாரம் கொண்டாடச் செய்தார். அதுபோலவே அரசினைக் கோரும் தீர்மானம் ஒன்றும் நிறைவேற்றப்பட்டது.

'தமிழினமே ஒன்றுபடு' என்ற கோஷத்தோடு தமிழரசுக்கழகம் தலை நிமிர்ந்து செயல்படச் செய்தார் ம.பொ.சி. 1948-ஆம் ஆண்டு

ஆகஸ்டு மாதம் மூன்றாம் வாரத்தில் 'முதல் முழக்கம்' (கட்டபொம்மு) 'தேசபக்தர் சிதம்பரனார்' ஆகிய நாடகங்களை டி.கே.எஸ். சகோதரர்களைக் கொண்டு நடத்தினார் ம.பொ.சி.

கட்டபொம்மன் திரைப்படத் தயாரிப்பு ஆலோசனைக் குழுவில் தலைவராக இருக்க ஒப்புக்கொண்டதும் கூடத் தமிழினத்தின் குரலே ஏகாதிபத்தியத்திற்கு எதிராக எழுந்த முதற்குரல் என்ற இனஉணர்வு காரணமாகத்தான் என்கிறார் ம.பொ.சி. தமிழரசுக் கழகம் நடத்திய ஊர்வலமும் பொதுக் கூட்டமும் கட்டபொம்மனிடம் தமிழின மக்கள் கொண்ட பக்தியை வெளிப்படுத்துவதாக இருந்தது. இதற்குக் காரணம் ம.பொ.சி.யே என்றால் அது மிகையாகாது. வ.உ.சி.யின் சரித்திரத்தைப் படமாக்கிய 'கப்பலோட்டிய தமிழன்' திரைப்பட ஆலோசனைக் குழுவிலும் ம.பொ.சி. தலைவராக இருந்து பணியாற்றினார். இதுவும் இன உணர்ச்சியினாலும், தேசிய உணர்ச்சியினாலுமேயாகும்.

'தனி மனிதன் வளர்ச்சி மூலமாகத்தான் தமிழினம் வளர்ச்சி பெற முடியும்' என்ற கருத்து ம.பொ.சி.யின் மாற்றமுடியாத கருத்தாகும். அதனால் சிறந்த தமிழ்க் கவிஞரும் காந்தியக் கவிஞருமான நாமக்கல் வெ. இராமலிங்கம் பிள்ளையின் புகழைப் பரப்புவதன் மூலம் தமிழினத்துக்கே தொண்டு செய்தார்.

"தமிழ்நாட்டில் அன்று அரசியல் தலைமை தமிழ்ப் பண்பாடு அறிந்தவர்களிடமே இருந்தது. வ.உ.சிதம்பரம் பிள்ளை, வ.வே.சு. ஐயர், திருவி. கலியாண சுந்தரம் ஆகிய தமிழறிஞர்கள் தமிழ்நாட்டுத் தலைமையேற்று நடத்தினர். ஆனால் இன்றைய நிலைமையை அப்படிச் சொல்வதற்கில்லை. இனப்பற்றும் மொழிப்பற்றும் உடையோர் இன்றைய தேசியவாதிகளில் எத்தனை பேர் இருக்கின்றனர்? என்பதை எண்ணிப்பாருங்கள்"[4] என்று விடுதலைக்கு முன்னர் இருந்த தமிழகத்தின் தலைமையை - இனப்பற்றில்லாத் தலைமையைச் சாடுகிறார்.

"இன்றைய தமிழ்நாட்டு அரசியலில் தமிழரெனப்படுவோர் தலைமை தாங்குகிறார்கள் என்பது உண்மைதான். ஆனால்

அவர்களுக்குத் தமிழ்மனம் இல்லை என்று தயங்காது கூறுவேன்"[5] என்று எள்ளல் தொனியுடன் 'தமிழரெனப்படுவோர்' தலைமை குறித்துப் பேசுகிறார். அதுமட்டுமின்றி இத்தகைய தமிழ் இனப் பற்றில்லாதவர்கள் தலைமையில் என்ன நடக்கும் என்று விவரிக்கிறார்.

"தமிழ்மொழியின் வளமும், தமிழ்நாட்டின் வரலாறும், தமிழினத்தின் மேன்மையும் அறியாதார் தமிழ்நாட்டின் அரசியலில் தலைமை தாங்கும் நிலைமையில் தமிழ் வளரவில்லை என்றால், தமிழ்நாட்டின் எல்லை பறிபோகுமானால், தமிழ்நாட்டிலேயே தமிழினத்தாரைப் பிற இனத்தார் அடக்கி வைப்பார்களானால் அதில் ஆச்சரியம் என்ன இருக்கிறது?"[6] என்கிறார். தன் சமகாலச் சூழலில் உள்ள சிக்கல்களுக்கு எல்லாம் தமிழ் இன உணர்வற்றவர்களின் தலைமையே காரணம் என்கிறார் ம.பொ.சி.

இதனால்தான் அவர், 'தமிழர் அனைவரையும் ஒன்றுபடுத்தக் கூடிய ஒரே சாதனம் 'தமிழன்' என்னும் இன உணர்ச்சி மட்டுமே. கட்சிப் பிரிவுகள், சமயப் பிரிவுகள், சாதிப் பிரிவுகள், கல்வி, பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் அனைத்தையும் கடந்து வென்றிடத் தமிழர்களை ஒன்றுபடுத்தும் சக்தி வாய்ந்தது தமிழின உணர்வுதான்' என்பதைத் தன் வாழ்நாள் முழுவதும் வலியுறுத்தி வந்தார். "தமிழன் என்ற இனவுணர்ச்சியும் தமிழ்மொழியில் பற்றுதலும் இல்லாத தேசியம் தேசியமாகுமோ?" என்று இனவுணர்வற்ற தேசியத்தைத் தேசியமென்று ஏற்றுக் கொள்ளவே மறுக்கிறார் ம.பொ.சி.

தமிழ் இனத்தவர்களிடையே ஒருமைப்பாட்டை உருவாக்கவும் தமிழ்மொழிப் புலவர்களுக்குப் பெருமைசேர்க்கவும், தாய்மொழிப் பற்றை வளர்க்கவுமே பல்வேறு விழாக்களை ம.பொ.சி. அவர்கள் ஆரம்பித்தார். அவ்வாறு கொண்டாடப்பட்டவைதாம் பாரதியார் விழா, வ.உ.சி. விழா, தமிழர் திருநாள் விழா ஆகியவை. சென்னை மாவட்டக் காங்கிரஸ் கமிட்டிச் செயலராக இருந்தபோது ம.பொ.சி. ஆண்டுதோறும் பாரதிவிழாவை நடத்தினார். சிலப்பதிகாரத்தின் பெயரால் முதன்முதலில் மாநிலம் தழுவிய அளவில் மாபெரும் மாநாடு நடத்தியதும் ம.பொ.சி. அவர்கள்தான்.

## தமிழினத் தலைவர்களை அடையாளங்காட்டுதல்

இனவுணர்வினை ஊட்டுவதற்காகத் தமிழ்நாட்டு விடுதலைப் போராட்ட வீரர்களின் வாழ்க்கை வரலாற்றையும், அவர்கள் இந்திய விடுதலைக்குப் போரிட்ட வரலாற்றையும் வெளிக் கொண்டு வர முனைந்தார் ம.பொ.சி. 'இந்திய விடுதலைப் போரில் குமரி முதல் இமயம் வரையுள்ள மக்கள் செய்த தியாகம் கொஞ்சமன்று என்றாலும் அந்த விடுதலைப் போரில் தமிழர் காட்டிய வீரம் எல்லா வகையிலும் தனிப்பட்டதாகும். இந்திய விடுதலைப் போரை முதன் முதலில் துவக்கி வைத்தவர் சிறப்பாகத் தமிழ் நாட்டவரேயாவர். திருநெல்வேலி ஜில்லாவில் பாஞ்சாலங் குறிச்சி எனும் சின்னஞ்சிறு பாளையப்பட்டார்கள் தான் முதன் முதலில் ஆங்கில ஆதிக்கத்திற்கெதிராகப் போர் துவக்கியவர்களா வார்கள்"[7] என இந்திய வரலாற்றில் மறைக்கப்பட்ட - மறக்கப்பட்ட வரலாற்றை வெளிக்கொண்டு வருகிறார் சிலம்புச் செல்வர்.

'சிப்பாய்க் கலகம்' என்று சொல்லப்படும் சுதந்திரப் புரட்சியிலிருந்துதான் இந்திய விடுதலைப் போர் துவங்கியதாகப் பல அரசியல்வாதிகள் எண்ணுகின்றனர். வரலாற்று ஆசிரியர்களும் அப்படியேதான் எழுதிவைத்திருக்கின்றனர். இந்திய, சுதந்திரப் புரட்சியை விரிவாக எழுதி வீரசவர்க்காரும், வடக்கே சிப்பாய்கள் செய்த புரட்சியைத்தான் சுதந்திரப் போரின் துவக்கமாகக் குறிப்பிடுகிறார். அந்தச் சுதந்திர யுத்தத்திற்கு 1806-இல் தெற்கே வேலூரில் நடந்த சிப்பாய்களின் புரட்சியே ஒத்திகையாக இருந்ததென்றும் கூறுகின்றார். உண்மை என்னவென்றால் பாஞ்சாலங்குறிச்சியில் துவங்கிய விடுதலைப் போரின் அடுத்தக் கட்டம்தான் வேலூர் சிப்பாய்கள் புரட்சி. இந்த இரண்டும் நடந்து ஓய்ந்த ஐம்பது ஆண்டுகளுக்குப் பிறகுதான் 1857-இல் வடக்கே சிப்பாய்கள் புரட்சி நடைபெற்றது என்பதைத் தன்னுடைய 'வீரபாண்டிய கட்டபொம்மன்' என்ற நூலின் முன்னுரையில் விளக்குகிறார் ம.பொ.சி.

1798-ஆம் ஆண்டில் துவங்கி 1801-ஆம் ஆண்டு வரை நான்கு ஆண்டுகள் பாஞ்சாலங்குறிச்சியாருக்கும், கிழக்கிந்தியக் கம்பெனி வெள்ளையருக்கும் இடையே கடுமையான போர் நடைபெற்றது. வீரபாண்டியகட்டபொம்மன் நிகழ்த்திய அந்தப்போர்

சிம்மாசனத்தைக் காப்பாற்றிக் கொள்ள நடந்த போரல்ல; செந்தமிழ் நாட்டின் சுதந்திரத்தைப் பாதுகாத்துக் கொள்ள நடந்த போராகும். வீரபாண்டிய கட்டபொம்மன் வெள்ளையரை எதிர்த்து நடத்திய இந்தப் போரே இந்தியாவில் நடந்த - ஏகாதிபத்தியத்திற்கு எதிராக நடந்த - முதல் விடுதலைப் போராகும் என்கிறார் ம.பொ.சி. இதனால் இந்திய விடுதலைக்குத் தோன்றிய முதல் குரல் - ஆங்கில ஏகாதிபத்தியத்தை எதிர்த்து முதலில் எழுப்பிய குரல் தமிழ்நாட்டிலிருந்தே தோன்றியது என்பதை உலகறியச் செய்கின்றார் ம.பொ.சி. முதன்முதலில் தமிழகத்திலிருந்து இந்திய விடுதலைக்குக் குரல் கொடுத்தவன் தமிழனே! அத்தகைய சிறப்பு வாய்ந்த தமிழினமே ஒன்றுபடு! என்ற வகையில்தான் வீரபாண்டிய கட்டபொம்மனின் வரலாற்றை நூலாக்கித் தமிழ் மக்களுக்கு விழிப்புணர்வூட்டுகிறார் ம.பொ.சி.

இந்தக் காலக்கட்டத்தில் தமிழ்நாட்டுத் தலைவர்களில் சிலர் 'வீரபாண்டியன் தமிழனா?' என்ற ஐயத்தைக் கிளப்பினர். இதற்கும் ம.பொ.சி. பதில் கூறுகிறார். "வீரபாண்டியன், பிறந்தநாட்டால் தமிழன்; பேசும் மொழியால் தமிழன்; வாழ்க்கை நெறியாலும் தமிழன்"[8] என்று கூறுகிறார். மேலும் பிறிதோரிடத்தில்,

"ஒட்டார்பின் சென்றொருவன் வாழ்தலின் அந்நிலையே
கெட்டான் எனப்படுதல் நன்று"

என்ற குறள்நெறி அறிந்தவன் வீரபாண்டியன்"[9] என்றும் கூறுகிறார். 'குறள்நெறி அறிந்தவன்' என்ற தொடரினால் கட்டபொம்மன் தமிழனே என்பது வலியுறுத்தப்படுகின்றது.

"போர் முனையில் பகைவர்களைச் சந்திக்கும் போதெல்லாம் வெற்றியன்றி வேறொன்றைக் காணாத பாண்டிய மரபைச் சேர்ந்த வீரபாண்டியன் மண்ணாள நினைத்த வெள்ளையனை மண்ணுக்கிரையாக்கி வெற்றி கண்டான்"[10] என்ற பகுதியால் வீரபாண்டியன் பாண்டிய மரபில் வந்தவன் என்பது புலப்படுகின்றது.

கட்டபொம்மன் வரலாற்றைக் கூறும் சிலர் அவனைக் கொள்ளைக்காரன் எனச் சித்திரித்தனர். அது கண்டு

வெகுண்டெழுந்த ம.பொ.சி. இக்கருத்தை மறுத்து 'சுதந்திர வீரன் கட்டபொம்மன்' என்று மற்றொரு நூலை எழுதினார். பின்னர்க் கயத்தாற்றில் கட்டபொம்மன்' என்றும் ஒரு நூல் எழுதினார். கட்டபொம்மன் பற்றி மொத்தம் மூன்று நூல்கள் வெளிவந்த சூழ்நிலையில் அண்டை மாநிலங்களான கேரளத்திலும், கருநாடகத்திலும் முறையே 'தளவாய்வேலுத்தம்பி' என்ற விடுதலைப் போராட்ட வீரன் குறித்தும், கன்னடத்து வீராங்கனை சித்தூர் சென்னம்மா பற்றியும் பரவலாகப் புகழ்ந்து பேசப்பட்டது. இது கட்டபொம்மன் புகழுக்கு இணையாகத் திட்டமிட்டுப் பரப்பப்பட்டதாகக் கருதிய ம.பொ.சி. இந்தச் சூழல் குறித்து மற்றொரு நூல் எழுதினார். அந்நூல் 'பொம்மன் புகழிலும் போட்டியா?' என்ற பெயரில் வெளிவந்தது. கட்டபொம்மன் குறித்து மொத்தம் நான்கு நூல்கள் ம.பொ.சியால் எழுதப்பட்டன. இவை யாவும் தமிழ் மக்களிடத்தே இனவுணர்வைத் தூண்டும் நோக்கில்-இன உணர்வின் அடிப்படையில் - தமிழர்கள் ஒன்று சேரத் தூண்டும் அடிப்படையிலேயே எழுதப்பட்டன எனலாம்.

ம.பொ.சி. இந்திய விடுதலைப் போரில் கலந்துகொண்ட தமிழகத்து வீரர்களின் வரலாறு, விடுதலைப் போரின் வரலாற்றை எழுதியவர்களால் மறைக்கப்பட்டதைக் கண்டு மனம் புழுங்கினார். விடுதலைப் போரில் கலந்துகொண்ட தமிழகத்து வீரர்கள் பற்றிய செய்திகள் மறைக்கப்படும் அவல நிலையை மாற்றிடவே 'விடுதலைப் போரில் தமிழகம்' என்ற நூலை எழுதினார். தமிழர்தம் பெருமை எங்கெல்லாம் பிற இனத்தவர்களால் மறைக்கப்படு கின்றதோ அங்கெல்லாம் ம.பொ.சி. மறைத்த உண்மைகளை வெளிப்படுத்தத் தயங்கியதில்லை. இதனை ம.பொ.சி.யின் கூற்றிலேயே காணலாம்.

"அகில இந்தியக் காங்கிரஸ் செயற்குழுவின் அனுமதியுடன் டாக்டர் பட்டாபி சீதாராமய்யா வெளியிட்டுள்ள காங்கிரஸ் வரலாற்றில் சௌரி சாரா சத்தியாக்கிரகம், நாகபுரிக் கொடிப்போர், பர்டோலி வரிகொடா இயக்கம் ஆகிய சிறுசிறு இயக்கங்களைப் பற்றியெல்லாம் பக்கம்பக்கமாக வரையப்பட்டுள்ளன. ஆனால் சிதம்பரனாரின் சீரிய புரட்சியைப் பற்றி ஒரு வரி கூட இல்லை; ஏன் ஒரு வார்த்தை கூட இல்லை"[11] என்று மனம் புழுங்கிய ம.பொ.சி.,

அத்துடன் நின்றுவிடாமல் வ.உ.சி.யின் வாழ்க்கை வரலாற்றை நூற்றுப் பதினைந்து பக்கங்கள் கொண்ட ஒரு நூலாக எழுதி வெளியிட்டார். ம.பொ.சி.யின் முதல் நூல் இதுதான் என்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கது. இந்த நூல் 'கப்பலோட்டிய தமிழன்' என்ற பெயரில் வெளிவந்தது. பட்டாபி சீதாராமய்யாவே தன் நூலில் சிதம்பரனாரைக் குறித்து எழுதியிருந்தால்கூடச் சிதம்பரனாரின் பெருமை இத்துணை வெளிப்பட்டிருக்காது. நூலின் பெயரிலேயே சிதம்பரனார் ஒரு தமிழன் என்பதும், அவர் செய்த சாதனை- அந்நிய ஏகாதிபத்தியத்தின்போது சுதேசிக் கப்பல் ஓட்டியது என்பதும் வெளிப்படுமாறு செய்தவர் ம.பொ.சி.தான்.

"திலகர் சகாப்தத்திலே தமிழகத்தின் தளபதியாக - தென்னாட்டுத் திலகராக விளங்கிய பெருமை கப்பலோட்டிய பெருமகனார் வ.உ.சி. க்கே உரியது"[12] என்றும், "திலகர் சகாப்தத்திலே தமிழகத்தில் வாழ்ந்த பெருந்தலைவர்களிலே தமிழ்மொழிக்குத் தொண்டாற்றியவர்களின் பெயர்களைப் பட்டியல் தொகுத்தால், வ.உ.சிதம்பரனார் பெயர் அதிலே சிறப்பிடம் பெறும்"[13] என்றும், "வ.உ.சி. பெரியார் தம் தாய்மொழிக்கு ஆற்றியுள்ள தொண்டினைத் தமிழர்கள் மறந்திருந்தாலும், உயிருள்ள தமிழ் மறவாது"[14] என்றும் வ.உ.சி.யின் பணிகளைப் பலவாறாகப் புகழ்கின்றார் ம.பொ.சி.

"நீதிமன்றத்தில் வழக்கறிஞர் தொழில் நடத்திக்கொண்டிருந்த வ.உ.சிதம்பரனார், வங்கப் பிரிவினையை எதிர்க்கும் பொருட்டு நாடெங்கும் நடந்த அன்னிய ஆடை பகிஷ்கார இயக்கத்தில் சேர்ந்தார். நீதிமன்றத்தில் நடத்திவந்த வழக்கறிஞர் தொழிலைக் கைவிட்டு, நாட்டுரிமைப் போரில் நாட்டங்கொண்டார். தம்மிடமிருந்த அன்னிய ஆடைகள் அத்தனையும் தீ வைத்துக் கொளுத்தினார். 'எரிவது ஆடையன்று; ஆங்கில ஏகாதிபத்தியமே' என்றெண்ணி மகிழ்ந்தார். இனி அன்னிய பொருட்கள் எதையும் வாங்குவதில்லை என்றும் உறுதிபூண்டார்.[15] 1906-ஆம் ஆண்டு சுதேசிக் கப்பல் கம்பெனி ஒன்றைத் தோற்றுவித்து பிரிட்டிஷ் கப்பல் கம்பெனியின் கொட்டத்தை அடக்கினார்" என்றெல்லாம் தம் நூலில் ம.பொ.சி. சிதம்பரனார் விடுதலைப் போரில் பங்கேற்றதை விவரித்துள்ளார்.

"வீரச் சிதம்பரனார் வெறும் அரசியல்வாதி மட்டுமல்ல; சிறந்த கலைஞருமாவார். பேச்சுக்கலை அவரது உடன்பிறப்பு; இலக்கியக் கலை வ.உ.சி.யின் இணைபிரியாத் தோழன்; காவியக்கலை கப்பலோட்டிய தமிழன் அல்லலைப் போக்கும் இல்லக்கிழத்தி; நாடகக்கலை சிதம்பரனாரின் உள்ளத்தைக் கவரும் செல்வக் குழந்தை; வீரக்கலை அவருக்கு மரபுவழி வந்த மதிப்பற்ற சொத்து. ஆம்; கலைப்பண்புகளே குடும்பமெனக் கொண்டு வாழ்வு நடத்தியவர் வ.உ.சி."[16] என்கிறார் ம.பொ.சி.

"வ.உ.சிதம்பரனார் முப்பதாவது வயதிலேயே இரண்டு ஆயுள்தண்டனை பெற்றார். பின்னர் அப்பீலில் 6 ஆண்டுகள் குறைக்கப்பட்டது. அவர் தமது தண்டனைக் காலத்தைக் கோயமுத்தூரிலும், கண்ணனூரிலும் சிறையில் கழித்தார். தமிழே சிறைப்பட்டது என்று சொல்லுமளவுக்கு அவர் தம் தாய்மொழியிலே புலமை பெற்றிருந்தார்"[17] எனச் சிதம்பரனாரின் தாய்மொழிப் புலமை பற்றி விளக்குகிறார் ம.பொ.சி. இவ்வாறு விடுதலைப் போரில் பங்குபெற்ற தமிழினத் தலைவர் வ.உ.சி.யின் வீர வரலாற்றைத் தனி நூலாகவே ம.பொ.சி. எழுதியுள்ளார்.

சிதம்பரனாரின் தமிழ்ப்பணி குறித்துத் தம்முடைய 'விடுதலைப் போரில் தமிழ் வளர்ந்த வரலாறு' என்ற நூலில், 'செந்தமிழ் வளர்த்த சிதம்பரனார்', 'சிறையா? கல்லூரியா?', 'உரையாசிரியர் வ.உ.சி.' என்ற உட்தலைப்புகளில் விரிவாக எழுதியுள்ளார் ம.பொ.சி. இவ்வாறு வாய்ப்புக்கிட்டும் போதெல்லாம் வ.உ.சி.யின் சிறப்புக்களை ம.பொ.சி. ஆங்காங்கே விரிவாக எழுதியுள்ளார்.

வ.உ.சி.யின் மறைவுக்குப் பின்னர் அவருக்கு எத்தகைய ஞாபகச் சின்னமும் அமைக்கவில்லை, விழாக்களும் எடுக்கவில்லை. இதனைக் கண்டு ம.பொ.சி. மனம் வருந்தினார். இதனால் சிதம்பரனாரின் வீரப்புரட்சியை நாட்டில் பரப்பவேண்டும் என்ற நல்லெண்ணத்தோடு தான் சென்னை மாவட்டக் காங்கிரஸ் கமிட்டியின் செயலாளராக இருந்தபோது ராயப்பேட்டை காங்கிரஸ் நிலத்தில் 1939-ஆம் ஆண்டு டிசம்பர் 21-ஆம் நாள் சிதம்பரனாருக்கு ஒரு சிலை நிறுவி விழா எடுத்தார் ம.பொ.சி. வ.உ.சி.யை மறந்த மக்களுக்கு அவரை நினைவூட்டும் வகையில் ம.பொ.சி. எடுத்த சிலை திறப்பு விழாவைக் குறித்துப் பத்திரிகைகள்

பாராட்டின. அப்போதுதான் பத்திரிகைகளும் வ.உ.சி.யின் சேவையை நினைவு கூர்ந்து எழுதின. 1944-ஆம் ஆண்டு ம.பொ.சி. எழுதிய கப்பலோட்டிய தமிழன் நூல் வெளிவருவதற்குமுன் தேச பக்தர் சிதம்பரம்பிள்ளை என்று அழைக்கப்பட்டவர் ம.பொ.சி.யின் நூல் வெளிவந்தபின் 'கப்பலோட்டிய தமிழன்' என்றே தமிழ் மக்களால் பேசப்பட்டார். அந்த அளவுக்கு ம.பொ.சி.யின் நூல் மக்கள் மத்தியில் சிதம்பரனாரைப் பரவச் செய்துள்ளது என்றால் மிகையில்லை.

இந்திய விடுதலைக்காகப் போராடியவர்கள் பல்வேறு மொழி பேசியவர்களாகவும் பல்வேறு பிரதேசங்களில் வாழ்ந்தவர்களாகவும் இருந்தனர் என்பது உண்மைதான். இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றை எழுதும்போது எல்லோரைப் பற்றியும் எழுதுவது என்பது எல்லோராலும் முடியும் காரியமன்று. அதனாலேயே தமிழகம் - தமிழின மக்கள் விடுதலைப் போரில் கலந்து கொண்ட செய்திகளை ஆவணப்படுத்துவதற்காகவே 'விடுதலைப் போரில் தமிழகம்' என்ற நூலை இரண்டு பாகங்களாக எழுதினார் ம.பொ.சி. அதன்கண் தமிழ்நாட்டு விடுதலைப்போர் வீரர்களுக்கு உரிய இடம் தரும் நோக்கில் தமிழகத்தில் நடைபெற்ற விடுதலைப்போர் நிகழ்ச்சிகளை விரிவாக விளக்கினார். அவற்றில் குறிப்பிடத்தக்க ஒன்று கொடிகாத்த குமரன் பற்றிய நிகழ்ச்சியாகும். அதனை அவருடைய கூற்றிலேயே காணலாம்.

"இன்னொரு சம்பவம் தமிழ்நாட்டில் திருப்பூர் நகரில் நிகழ்ந்தது. காந்தியடிகள் சிறைப்பட்டுப் போர் தொடங்கிய நான்காம் நாளில் திருப்பூரில் நிகழ்ந்தது. ஏப்ரல் 10-ஆம் தேதியன்று அந்நகரில் அமுலிலிருந்த தடையுத்தரவை மீறிக் காங்கிரஸ் ஊர்வலம் ஒன்று நடைபெற்றது. திரு. பி. எஸ். சுந்தரம் என்பவர் தலைமையில் 10 தொண்டர்களைக் கொண்ட விடுதலை வீரர் படை ஒன்று அணிவகுத்து நகர வீதிகளிலே நடைபோட்டது.

"வந்தே மாதரம்", "பாரத மாதாவுக்கு ஜே", "மகாத்மா காந்திக்கு ஜே" என்று அணிவகுப்பிலிருந்து தொண்டர்கள் வாய் மணக்க கோஷித்தனர். "பிரிட்டிஷ் பொருள்களைப் பகிஷ்கரியுங்கள்!" என்று மக்களுக்கு வேண்டுகோள் விடுத்தனர். அணி வகுப்பிலிருந்து ஒவ்வொரு தொண்டரும் தங்கள் கைகளில் தேசியக் கொடியைத்

தாங்கியிருந்தனர். இதைத் தவிர அவர்கள் கையில் வேறு ஆயுதம் ஏதுமில்லை. வழிநடைப்பாட்டாகக் கவிஞர் நாமக்கல் கவிஞரின் "கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது" என்ற பாட்டை மிகுந்த எழுச்சியோடு பாடிக்கொண்டு சென்றனர்.

நேரம் காலை எட்டு மணி. நகரமக்கள் ஆங்காங்கே கூடிநின்று ஊர்வலத்தை வேடிக்கை பார்த்தனர். அதோ வருகிறது போலீஸ்படை! நடைபோட்டு வரவில்லை; வெறிபிடித்து ஓடி வருகிறது! ஆம்; அஹிம்ஸைப் படையைத் தாக்க முகமது' என்ற இன்ஸ்பெக்டர் தலைமையில் ஆயுதந்தாங்கிய போலீஸ்படை வந்தது! அன்புப்படையை நெருங்கியது ஆத்திரங்கொண்ட போலீஸ்படை! அப்படையைக் கண்டும், அச்சத்தைத் துச்சமெனக் கருதித் தங்களை மறந்து "வந்தேமாதரம்" "மகாத்மாகாந்திக்கு ஜே" என்று கோஷித்தனர் ஊர்வலத்தினர்.

இந்தக் கோஷங்கள் முகமதுவை வெறி பிடிக்கச் செய்து விட்டன! 'கலைந்து செல்லுங்கள்!'' என்று எச்சரித்தார் இன்ஸ்பெக்டர். கலைய மறுத்து 'அச்சமில்லை, அச்சமில்லை, அச்சமென்பதில்லையே' என்ற பாரதிப் பாடலைப் பாடினர் விடுதலை வீரர்கள். அவ்வளவுதான்! இன்ஸ்பெக்டர் முகமது தன் கையில் தாங்கியிருந்த தடியால் தொண்டர்களைத் தன் பலங்கொண்ட மட்டும் அடித்தார். ஏனைய போலீஸ்காரரும் தம் கைவரிசையைக் காட்டினர். தொண்டர் படையினரில் சிலர் அடிதாங்காமல் ஓடிவிட்டனர். சிலர் அடிதாங்காமல் வாய்விட்டு அலறினர். சிலர் மயக்கமுற்று வீழ்ந்தனர். ஊர்வலத்தின் தலைவர் சுந்தரத்தின் கை எலும்பும் கால் எலும்பும் முறிந்துவிட்டன.

அடிபட்ட தொண்டர்களைத் திருப்பூர் மருத்துவமனைக்குக் கொண்டு சென்றனர். அங்கு அடிபட்ட தொண்டர் ஒருவரின் மண்டை எலும்பு முறிந்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. உடைந்த எலும்பு மூளைக்குள் புகுந்துவிட்டதாம்! அதனால் தொண்டர் மரணாவஸ்தையில் ஆழ்ந்தார். அந்த நிலையிலும் தேசியக் கொடியைப் பிடித்திருந்த பிடியை நெகிழ விடவில்லை அவ்வீரர். மருத்துவமனையில் சேர்ந்த பின்னரும் கொடியைக் கையிலே வைத்திருந்தார். பின்னர் உயிர் பிரிந்துவிட்டது! அதன் பின்னும்

உயிரற்ற பிரேதத்தின் கையில் தேசியக் கொடி இருந்தது! அம்மாவீரனின் பெயர் குமாரசாமி! திரு. நாச்சிமுத்து என்னும் தந்தைக்கும் திருமதி கருப்பாயி என்னும் தாய்க்கும் பிறந்த தமிழ்வீரன்! சொந்த ஊர் சென்னிமலை, நெசவுத் தொழில் தெரியும் என்றாலும் திருப்பூர் வந்து ஒரு பஞ்சுக் கம்பெனியில் பணி புரிந்து கொண்டிருந்தார்.

விடுதலைப் போராட்டக் காலத்திலே எத்தனையோ தொண்டர்கள் தடியடியால் மாண்டிருக்கிறார்கள் என்றாலும் திருப்பூர் குமரன் தான் நாடறியும்படியாகத் தனிப்புகழ் பெற்று விட்டார்" என்று வரலாற்றை விளக்கிய ம.பொ.சி. அவர்கள், திருப்பூர் குமரன் புகழ் பெறக் காரணம் என்ன என்பதையும் விளக்குகின்றார். அவ்வாறு விளக்குவதற்கும் பாரதியின் பாடலையும் துணையாகக் கொள்கிறார். "திருப்பூர் குமரன் புகழ் பெறக் காரணம் அடிபட்டு வீழ்ந்ததிலிருந்து தன் உயிர் பிரியும் வரையிலும் அவர் தன் கையில் ஏந்திய தேசியக் கொடியைப் பிடித்தபடி நெகிழவிடாமல் பிடித்திருந்ததுதான். பாரதியார் "தாயின் மணிக்கொடி" என்னும் பாடலில்,

"கம்பத்தின் கீழ்நிற்றல்
        காணீர் - எங்கும்
காணரும் வீரர்
        பெருந்திருக் கூட்டம்
நம்பற் குரியர்
        அவ்வீரர்; - தங்கள்
நல்லுயிர் ஈந்துங்
        கொடியினைக் காப்பர்!"

என்று பாடுகிறார்! 'அவ்வீரர்' என்று பாரதியார் சுட்டிக் காட்டியது திருப்பூர்க் குமரனைத் தான் போலும்! 'நம்பற்குரியர்' என்று சொன்னாரே, பிணமாகும் வரை கையிலிருந்த கொடியைவிடாத நிலையைத் தான் போலும்! 'தங்கள் நல்லுயிர் ஈந்தும் கொடியினைக் காப்பர்' என்றாரே, அதனைத் திருப்பூர் குமரனின் வரலாறு மெய்ப்பித்துக் காட்டிவிட்டது. பாரதியின் கவிதைக்குக் பொருளானார் திருப்பூர்க் குமாரசாமி! வாழ்க! கொடி காத்த குமரனார் புகழ்!"[18] என்று தமிழினத்திலிருந்து விடுதலைக்கு

போரிட்ட வீரனின் புகழை வடித்துக் காட்டுகிறார் ம.பொ.சி. கட்டபொம்மன் வ.உ.சி. வரிசையில் மற்றொரு தமிழ் வீரனின் வரலாறு இது.

இந்திய விடுதலைக்குப்பின் தனித் தமிழரசு கோரிப் போராடும் போதும் இனஉணர்வை முன்வைத்தே தம் கோரிக்கைகள் குறித்துத் தமது தமிழரசு பத்திரிகையில் தலையங்கங்கள் தீட்டினார் ம.பொ.சி. "தமிழ் மக்களாகிய நாமும் தமிழ் இனத்தின் வருங்கால வாழ்வுக்கு இந்த அரசியல் எப்படி வழிகாட்டும்? சுகவாழ்விற்கு அழைத்துச் செல்லுமா? என்று பொறுப்புடன் ஆய்ந்து பார்க்க வேண்டும்" என்று எழுதிவிட்டுத் தமிழ் இனவுணர்வைத் தூண்டும் வகையில் பின் வருமாறு எழுதுகிறார்.

"செக்கிழுத்த சிதம்பரனார் சிந்திய ரத்தத்தால், தடியடி பட்டுச் செத்த குமரனின் உடலிலிருந்து ஆறெனப் பாய்ந்த செந்நீரால் எழுதப்பட்ட அரசியலே இது. அந்தவீரத் தியாகிகளின் விழுமிய சேவை இல்லை என்றால், ஆங்கில அரசு அகன்றிருக்குமா? இந்த அரசியல் நகல் தோன்றியிருக்குமா? இல்லை. இல்லை. ஆனால் அந்தத் தியாகிகளின் இரத்தத்தால் எழுதப்பட்ட இந்த அரசியல் நகல் அந்த ரத்தக் கலப்புடைய தமிழ் இனத்தின் உரிமையை அபகரிக்காது அங்கீகரித்திருக்கிறதா? என்ற கண்ணோட்டத்துடன் எழுத்தெழுத்தாக வரிவரியாக நாம் ஆராய்ந்து பார்த்தோம்"[19]

எந்த ஒரு பிரச்சனையையும் இனவுணர்வுடன் அணுகுவது என்பது ம.பொ.சி.யின் தனித்தன்மை. எந்த ஒரு விஷயத்தையும் மொழி வழி இனப்பற்றுடனும், நிலவழி நாட்டுப் பற்றுடனுமே அணுகினார் ம.பொ.சி. மொழிவழி இனப்பற்றையும், இன ஒற்றுமையையும் உண்டாக்குதற் பொருட்டுத் திட்டமிட்டுத் தமிழர் திருநாள், கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. நினைவு நாள், மகாகவி பாரதியார் நினைவுநாள் ஆகியவற்றைக் கொண்டாடும்படி தமிழர்களை வேண்டிக் கொண்டது மட்டுமன்றித் தமிழரசுக் கழகத்தின் சார்பில் அவ்விழாக்களைத் தாமே கொண்டாடவும் செய்தார் ம.பொ.சி. இவ்விழாக்கள் மூலம் தமிழினத்தை ஒன்றுபடுத்த முயன்றார். இது போன்றே ஆண்டுதோறும் திருவள்ளுவர் திருநாளையும் கொண்டாடும்படி செய்தார்.

மக்களுக்கு வேண்டுகோள் விடும்போது கூட, "வ.உ.சி.யின் பெயரால் ஒன்றுபடுவோம்'' என்றே தமிழினத்தாருக்கு வேண்டுகோள் விடுக்கிறார் ம.பொ.சி. போராட்டத்துக்கு ஓர் இனத்தை ஒன்றுபடுத்தும்போது அவர்களுக்கிடையேயுள்ள பொதுத் தன்மையைச் சுட்டிக்காட்டி ஒன்றுபடுத்துவதே முறையாகும். அந்த வகையில் தான் நம் இனத்தின் போராளி வ.உ.சி.யின் பெயரால் ஒன்றுபடுவோம் என்று வேண்டுகிறார்.

ம.பொ.சி.யின் அணுகுமுறையில், இன உணர்வூட்டுதற்குத் தமிழின விடுதலைப் போர் வீரர்களில் வ.உ.சி., திருப்பூர் குமரன் ஆகியோரையும் முன்மாதிரி வீரர்களாய்க் கொண்டு தன் இனமக்களை ஒன்று சேர்ப்பது ஓர் உத்தியாகக் காணப்படுகின்றது. மொழிவழி இனவுணர்வையே தனது பலமாகக் கொண்டு அரசியலை நடத்தியுள்ளார் ம.பொ.சி. என்பது இதனால் தெரிய வருகின்றது. வ.உ.சி.யின் நினைவு நாளைக் கொண்டாடுமாறு தமிழின மக்களுக்கு ம.பொ.சி. விடுத்த வேண்டுகோள் பின்வருமாறு:

''இந்தியாவிலிருந்து ஆங்கிலேயர் வெளியேறிவிட்டனர்; அவர்களை வெளியேற்றுவதற்குச் சுமார் அறுபதாண்டுகளுக்குமேல் வீரப்போர் புரிந்தனர் இந்திய மக்கள். தமிழ் இனத்தவரும் தங்கள் தாயகமாம் தமிழ்நாட்டினை மீட்க விடுதலைக்காக அப்போரில் பங்கு கொண்டனர்; படாத பாடெல்லாம் பட்டனர். இந்திய சுதந்திரத்திற்குப் போரிட்ட படைகளுக்குத் திறமைமிக்க தளபதிகள் ஒருவர்பின் ஒருவராகத் தலைமை தாங்கினர். ஏகாதிபத்தியத்தின்மீது நமது தாய்ச்சபையாம் காங்கிரஸ் மகாசபை முதன்முதலில் நேரடித் தாக்குதலைத் துவக்கியபோது வடக்கே திலகர் பெருமானும், தெற்கே வீரச் சிதம்பரனாரும் தளபதிகளாக இருந்து தளராது போர் புரிந்தனர்."[20]

"வடக்கு முனையைவிடத் தெற்கு முனைப் போரே மிகக் கடுமையாக இருந்தது. தளபதி சிதம்பரனார் சுதேசிக் கப்பல் கம்பெனியைத் துவக்கி, வெள்ளை வர்த்தகக் கூட்டத்தைத் தாக்கினார். ஹார்வி மில் தொழிலாளர்களுக்குத் தலைமை தாங்கி வெள்ளை முதலாளிகளின் மூலதனக் கோட்டையை, 'வேலை நிறுத்தம்' என்னும் வெடி வைத்துத் தகர்த்தார். தூத்துக்குடியில்

வீதிக்கு வீதி கூட்டங்கள் போட்டு, ஏகாதிபத்தியத்தை எதிர்க்குமாறு மக்கள் உள்ளத்தே வீரக்கனலை மூட்டினார்... சிதம்பரனார் பிறவித் தலைவர். மதி படைத்த தலைவர் பலருண்டு இந்நாளில். ஆனால் அவரெல்லாம் மற்றவர் இன்னல்கண்டு உருகும் மனம் படைத்தாரில்லை. சிதம்பரனாரோ மதியும் மனமும் ஒருங்கே படைத்த மாபெருந்தலைவர். அவரது நினைவு நாளை நவம்பர் 18-இல் நாடெங்கும் கொண்டாட வேண்டும். ''தளபதி சிதம்பரனாரின் நினைவுக்கு அறிகுறியாக சென்னை 'ஜார்ஜ் டவுனை' 'சிதம்பர நகர்' என மாற்றுமாறு சென்னை நகராண்மைக் கழகத்தாரை வற்புறுத்துகிறோம். இதுமட்டும் போதாது..."[21] என்று சிதம்பரனாரின் விழாவினைக் கொண்டாடச் செய்வதன்மூலம் 'தமிழர்' என்ற இனஉணர்வை வளர்க்க முயல்கிறார் ம.பொ.சி.

"வ.உ.சி. துவக்கி வைத்த சுதந்திரப் போர் வெற்றி பெற்று விட்டது. அவர் வெளியேற்ற விரும்பிய வெள்ளையர் கூட்டம் இந்தியாவை விட்டு வெளியேறிவிட்டது. விடுதலை பெற்ற இந்தியாவில் தமிழ் மக்களாகிய நாம் தலைவர் சிதம்பரனாருக்கு அளிக்கும் காணிக்கை என்ன? செம்பொற்சிலையா? பளிங்கு மண்டபமா? வாணிபக் கப்பலா? இல்லை. இல்லை. அவை என்றேனும் ஒருநாள் அழியக் கூடியவையே. சிதம்பரனாரின் நினைவாக நாம் உருவாக்கிவரும் சின்னம் அழியாப் புதிய தமிழகம்!– சிதம்பரனாரின் ஆண்மைமிக்க வரலாறு நமக்கு வழிகாட்டும். அவரது ஆவி நமக்கு ஆசிகூறும். வாழ்க தமிழினம்! வாழ்க வ.உ.சி. புகழ்!"[23] என்று வ.உ.சி. பற்றித் தாம் எழுதிய நூலின் இறுதியில் 'தமிழ் மக்களாகிய நாம்' என்ற தொடரின் மூலம் இன ஒற்றுமையை நிலைநாட்டும் பாங்கினைக் காண முடிகின்றது.

இன்று வ.உ.சி. பெயரில் பூங்காக்கள், சாலைகள், கல்லூரிகள் என்று பல நினைவுச் சின்னங்கள் உள்ளன என்றால் இவை யாவும் ம.பொ.சியின் முயற்சியில் தோன்றியவை என்றால் மிகையாகாது. 1939-க்கும் 1949-க்கும் இடையில் உள்ள பத்து ஆண்டுகளில் எல்லோராலும் மறக்கப்பட்டுவிட்ட - சிலரால் மறைக்கப் பட்டுவிட்ட- வ.உ.சி.யின் புகழினைப் பரப்ப ம.பொ.சி. அரும்பாடுபட்டார். அந்தக் காலக்கட்டத்தில் ம.பொ.சி. பேசிய

கூட்டங்கள் தோறும் வ.உ.சி.யின் வீரவரலாற்றைக் கூறுவதனைக் கடமையாகக் கொண்டிருந்தார். தூத்துக்குடியில் வ.உ.சி. கல்லூரி தோன்றக் காரணமாயிருத்தவர் ம.பொ.சி. காங்கிரஸ் பிரச்சாரத்திற்குச் சென்ற ஊர்தோறும் வ.உ.சி. பெயரால் மன்றங்கள் அமைக்கும்படி இளைஞர்களைத் தூண்டினார் ம.பொ.சி. இவை எல்லாம் தமிழர் என்ற இன உணர்வைப் பெருக்குதற் பொருட்டேயன்றித் தனிப்பட்ட முறையில் ம.பொ.சி.க்குப் புகழ் தேட அல்ல.

## இன ஒற்றுமையை வளர்த்தல்

இந்தியா விடுதலை பெற்ற நாளான 1947-ஆம் ஆண்டு ஆகஸ்டு 15-ஆம் நாளைக் குறித்து எழுதும்போதும் தமிழ் இன உணர்வுடன் ம.பொ.சி. எழுதுவதைக் காணலாம். விடுதலைப் போரில் தமிழினம் காட்டிய வீரத்துக்கு அஞ்சலி செலுத்த வேண்டிய நாள் என்றுதான் எழுதுகிறார். “ஆகஸ்டு 15-ஆம் தேதி இந்தியாவின் - தமிழகத்தின் வரலாற்றிலே ஒரு சிறப்பான நாள் ஆகும்… ஆகஸ்டு 15ஆம் தேதியின் சிறப்பில் தமிழருக்குப் பெரும்பங்கு உண்டு. வெள்ளையரை வெளியேற்றிட நடத்திய விடுதலைப் போரில் தமிழ் இனத்தவர்கள் காட்டிய வீரமும்; அடைந்த இன்னலும் வேறு எந்த இனத்திற்கும் குறைந்ததல்ல; அதிகமென்று கூறினாலும் பொருந்துவதே… ஆங்கில அதிகாரத்தையும் வாணிகக் கொள்ளையையும் எதிர்த்த வீரன் வ.உ.சி., போலீசாரின் குண்டாந்தடியடிக்கு இரையான திருப்பூர்க்குமரன் போன்ற தமிழகத்து வீரர்களின் வரலாறுகள் வஞ்சனையின்றி எழுதப்படுமானால், உலகமே தமிழினத்தின் தேசபக்தியைக் கண்டு வியக்கக் கூடிய உண்மைகளை அவற்றில் காணலாம்… ஆகஸ்டு 15-ஆம் தேதி விழாவில் பங்குகொண்டு வ.உ.சி., திருப்பூர் குமரன் போன்ற வீரத்தியாகிகளுக்கு வணக்கம் செலுத்துங்கள். இன்று நம்மிடையே வாழும் விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு வாழ்த்துக் கூறுங்கள்,”[23] என்று எழுதும் ம.பொ.சி. விடுதலைநாள் விழாவில் கலந்து கொள்ளும் தமிழினத்தைப் பார்த்து ஒரு வேண்டுகோள் விடுக்கிறார். “அதே நேரத்தில், சுதந்திரத் தமிழகத்தை, சோசலிஸக் குடியரசை அடைந்தே தீருவோம் அதை எதிர்ப்பவர்கள் எவரானாலும்,

அவர்களின் எதிர்ப்பை முறியடித்துத் தமிழ்நாட்டில் தனியரசை - தமிழரசைக் கண்டே தீருவோம் என்று உறுதிகொள்ளுங்கள்”[24] என்பதே ம.பொ.சி.யின் வேண்டுகோளாகும்.

இந்திய விடுதலை நாளான ஆகஸ்டு 15-ஆம் நாளில் விடுதலை நாள் கொண்டாடும் விழாவில் கலந்து கொள்ளவும், விடுதலைக்காகப் பாடுபட்ட தமிழினத் தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தவும், உயிரோடுள்ள தமிழக விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு வாழ்த்துக் கூறவும் சொல்லுகின்ற அதே நேரத்தில் தமிழினத்தின் கோரிக்கை நிறைவேற்றப்படாமல் இருப்பதையும் சுட்டிக்காட்டி அதை ‘அடைந்தே தீருவோம்’ என்று, ம.பொ.சி., உறுதி ஏற்கவும் கூறியதற்கு ஒரு காரணம் உண்டு. விடுதலை நாளைத் துக்க நாளாகக் கொண்டாடும்படி தமிழினத்திற்கு வேண்டுகோள் விடுத்திருந்தார் திராவிட இயக்கத்தலைவர் ஈ.வெ.ரா. பெரியார். பெரியார் விடுத்த அறிக்கைக்கு மறுப்பாகவே இப்படி ஒரு வேண்டுகோளை ம.பொ.சி. தம் ‘தமிழ்முரசு’ இதழில் வெளியிட்டார். ‘ஆகஸ்டு 15-ஆம் நாளைத் துக்க நாள் என்போர் விடுதலைக்காகப் போரிட்ட தமிழ் வீரர்களின் உணர்ச்சியைப் புண்படுத்துகிறார்கள் என்பது நினைவிருக்கட்டும்”[25] “நேற்றுவரை நிலை எதுவாயினும் சரி. இனி தேசபக்தியுள்ள எந்தத் தமிழனையும் தமிழர் இயக்கத்துக்கு விரோதமாகச் செல்லும்படி விட்டுவிடக் கூடாது. அப்படிச் செய்வது தற்கொலைக்கு ஒப்பாகும்.” என்கிறார். தமிழினம்- தேசபக்திமிக்க தமிழினம் ஒன்றுபட வேண்டும், ஒன்றுபட்டுச் செயல்படவேண்டும் என்பதே ம.பொ.சி. யின் கருத்தாகும். அதனாலேயே நேற்று வரை நடந்ததை மறந்து இனியேனும் ஒன்று சேர்வோம் ஓரணியில் திரள்வோம் என்று வேண்டுகோள் விடுக்கிறார்.

தமிழகத்திலும், வெளிநாடுகளிலும் தமிழின மக்கள் துயருறுகிறார்கள் என்றால் ம.பொ.சி. அவர்களின் துயர்கண்டு வருந்துகிறார். தமிழினம் எங்குத் துயருற்றாலும் எப்போது துயருற்றாலும் அதனைத் தன் துயரமாகவே கருதித் துயர் துடைக்க விரைகிறார். அதைப் போன்றே தமிழினம் எங்குப் போரிட்டாலும் அதற்குத் தன் ஆதரவுக்கரம் நீட்டத் தயங்குவதில்லை. இதனைத்

'தமிழ் முரசு' இதழில் எழுதிய தலையங்கம் ஒன்றால் அறிய முடிகின்றது.

"போர் தொடங்கிவிட்டது!
தமிழக மக்களே போர் தொடங்கிவிட்டது!

தென்னாப்பிரிக்காவில் வெள்ளையர்களின் நிறவெறியை எதிர்த்து லட்சக்கணக்கான தமிழ் மக்கள் போர்புரிகிறார்கள். சிங்களத்தீவில், உழைப்பாளி மக்களான தமிழர்களுக்கு உரிமை தர மறுக்கும் இலங்கை அரசாட்சியை எதிர்த்து அங்குள்ள பதினாயிரக்கணக்கான தமிழ்மக்கள் போர் புரிகின்றனர். தமிழ்நாட்டின் தலைநகரான சென்னையிலும் பக்கிங்ஹாம் கர்னாடிக் மில்லில் வேலை செய்யும் தொழிலாளர்களைத் தடி கொண்டு தாக்கிய பஞ்சாபிகளைத் தாங்கி நிற்கும் வெள்ளை முதலாளியை எதிர்த்துப் பதினையாயிரம் தமிழ்த் தொழிலாளர்கள் போர் புரிகின்றனர். சென்னை ஸ்பென்சர் கம்பெனித் தொழிலாளர்கள் தமிழ்ப் புத்தாண்டு விழாவுக்கு விடுமுறை தர மறுத்த ஆங்கில முதலாளியை எதிர்த்துப் போர் புரிகின்றனர். நமது தமிழ் மக்கள் நடத்தும் போர் ஆயுதப் போரல்ல. தற்காப்புப் போர். ஆகவே அவர்களுக்கு வெற்றி கிடைக்கட்டும்!'[26] என்று தமிழினம் நடத்தும் அமைதிப்போருக்கு வெற்றி கிடைக்க வாழ்த்துகிறார் ம.பொ.சி. இவ்வாறு வாழ்த்துவதால் வெற்றி கிடைத்துவிடுமா? வாழ்த்துவதை மனத்திற்குள் வாழ்த்தலாமே! பத்திரிகையில் தலையங்கமாக எழுதி வாழ்த்துவதன் நோக்கமென்ன? ஏனைய தமிழினத்தாரிடம் பேசுவது போலவே இத்தலையங்கம் அமைந்துள்ளது. இதன் நோக்கம் தமிழினத்தை ஒன்று கூட்டுவதுதான். இவ்வாறு எழுதுவதன் மூலம் தமிழ் இனம் என்ற ஒற்றுமையுணர்வினை ஏற்படுத்துவதே நோக்கமாக அமைகின்றது. இதனை அடுத்துவரும் பகுதி உறுதி செய்கின்றது.

"தமிழன் உறங்கி கிடந்த காலம் ஓடி மறைந்துவிட்டது. தமிழ்நாட்டிலும் சரி, தமிழ்நாட்டிற்கு வெளியே தமிழர் வாழும் இடங்களிலும் சரி! தமிழர் என்ற இன உணர்ச்சி பொங்கி எழுந்துவிட்டது. தமிழ் வாழ்க! தமிழினம் வாழ்க!! தமிழ்நாடு வாழ்க!!! என்ற வாழ்த்தொலி வானத்தை முட்டுகிறது''[27]

என்றமையும் பகுதியால் 'இன உணர்வினைத் தூண்டி இன ஒற்றுமையை உண்டாக்குவதே ம.பொ.சி.யின் நோக்கமாகிறது. தமிழ்த் தேசிய இனத்திற்குரிய விழாக்களைக் கொண்டாடுவதன் வழியாகத் தமிழரிடையே இன உணர்வை வளரச் செய்யத் திட்டமிட்டார் ம.பொ.சி. அதன் விளைவாக ஒவ்வோர் ஆண்டும் அந்தந்தப் பகுதித் தமிழரசுக் கழகத்தின் கிளைகள் தமிழர் திருநாள், புலவர் விழா, பாரதியார் விழா, வ.உ.சி. விழா என விழாக்களை நடத்தி தமிழ் மக்களிடையே இன ஒற்றுமை உருவாக்கின. இதனைப் பின்வரும் பகுதியால் அறியலாம்.

"பொங்கல் விழா, புத்தாண்டு விழா, புலவர் விழா, ஆகிய விழாக்கள் கொண்டாடப்படுகின்றன.... பாரதியார், வ.உ.சிதம்பரனார், போன்ற மறைந்துவிட்ட வீரர்களுக்கு மண்டபங்கள் எழுப்பப்படுகின்றன. இவையெல்லாம் தமிழரின் கலை உணர்ச்சியையும் இன உணர்ச்சியையும் காட்டுகின்றன."[28] இவ்விழாக்களைத் தமிழ் அரசுக் கழகத்தைச் சார்ந்தவர்கள் முன் நின்று நடத்துகின்றனர். ஆகையால் தமிழின மக்களை ஓரிடத்தில் கூடச் செய்து இன ஒற்றுமையையும் மன ஒற்றுமையையும் வளர்க்க முடிகின்றது என்று கருதுகின்றனர். விழாக்கள் கொண்டாடுவது மட்டும் போதாது என்கிறார் ம.பொ.சி. இதனைப் பின்வரும் பகுதியால் அறியலாம்.

"ஆனால் தமிழ் இனத்தவர் தன்மானத்துடன் வாழ இதுமட்டும் போதாது. தமிழ்நாட்டின் வளத்தைச் சுரண்டும்; தமிழ்மக்களின் வாழ்வைப் பறிக்கும் தீய சக்திகளை எதிர்த்துப் போர் புரிந்தே தீர வேண்டும். அந்தப் போர் இதோ துவங்கிவிட்டது. பாட்டாளித் தமிழர் படைதிரண்டு விட்டனர்"[29]. உணர்வுபெறு! ஒன்றுசேர்! போராடு! என்ற தத்துவத்தையே ம.பொ.சி. இங்குப் பயன்படுத்தி முதலில் தமிழ் உணர்வை ஊட்டினார், ஒன்றுபடச் செய்தார். இறுதியில் போராட வேண்டும் என்கிறார். இது அனைத்து இனங்களுக்கும் பொதுவான தத்துவமேயாகும். போராடுவோரின் போராட்டத்திற்கான காரணங்களைக் கூறித் தமிழின மக்களிடம் ஆதரவைத் திரட்டுகிறார்.

## தென் ஆப்பிரிக்கா

"தமிழர்களின் உழைப்பில் காடெல்லாம் நாடானது. வறண்டு கிடந்த நாடு வளத்தில் சிறந்து நின்றது. அண்ட வந்த ஐரோப்பியர், தமிழரை அடக்கியாள முயலுகின்றனர். அன்று தமிழ் மகனான பாலசுந்தரத்தைப் பல்லுடைத்தது முதல் இன்று கிருஷ்ண சாமியைக் குத்திக் கொன்றதுவரை வெள்ளையர்கள் தமிழர்களுக்கு இழைத்த கொடுமையைச் சொல்லிமுடியாது"[30].

இப்பகுதியில் தென்னாப்பிரிக்கத் தமிழரை வெள்ளையர்கள் கொடுமைப்படுத்தியதைக் குறிப்பிட்டுக் கொடுமைப்பட்ட தமிழருக்கு ஆதரவாக தனது தாபத்தைப் பெற முயல்கிறார் ம.பொ.சி. தமிழர்கள் எப்படி அந்த நாட்டுக்குப் பிழைப்பதற்காகச் சென்றவர்களோ, அதே போன்று அங்குள்ள ஐரோப்பியரும் தென் ஆப்பிரிக்காவுக்குப் பிழைக்க வந்தவர்களே தவிர பூர்வீகக் குடியினரல்லர். இருந்தாலும் அவர்கள் தமிழ் மக்களைக் கொடுமைப்படுத்துகின்றனர் என்ற செய்தி படிப்போர் உள்ளத்தில் தமிழினத்தின்மீது அனுதாப உணர்வையே தோற்றுவிக்கும். அதுதான் ம.பொ.சி.யின் நோக்கம். மேலும் ம.பொ.சி.,

"காலம் மாறிவிட்டது. தமிழக மக்கள் வெள்ளையரின் நிறத்திமிரை எதிர்த்துப் போரிடத் தொடங்கிவிட்டனர். தாங்கள் மட்டும் தனித்து நின்று போராடாது, தங்களைப் போன்று வெள்ளையரின் கொடுமைக்கு ஆளான ஏனைய இந்திய இனங்களுடன் இணைந்தே போராடுகின்றனர். வெள்ளையருக்குள்ள உரிமைகள் அனைத்தும் ஆப்பிரிக்காவின் வளத்திற்கு உழைத்து, அந்நாட்டுச் சுதேசிகளுடன் உறவு கொண்டு வாழும் தங்களுக்கும் உண்டு என்று தமிழர் உரிமைப்போர் செய்கின்றனர்.

வாழ்க அவர்களது போராட்டம்! வெல்க அவர்களது வீரம்!"[31] இங்கு 'ஆப்பிரிக்காவில் வாழும் ஏனைய இந்திய இனங்களுடன் இணைந்து' போராடுவது என்பது சிந்திக்கத்தக்கது. தமிழ் இனம், இந்திய நாடு என்ற இரண்டு விதமான சிந்தனைகளையும் இணைப்பது என்பது ம.பொ.சி.யின் அடிப்படைக் கொள்கை களோடு ஒத்துப் போகின்றது. இந்தியாவிற்குள் தமிழ்நாடு என்பதை

ஒரு போதும் அவர் மறந்தவரில்லை. இனவுணர்வு தேவையாகும் போது தேசியவுணர்வாகப் பரிமளிக்கிறது. இவ்விடத்தில் இது ராஜதந்திரமிக்க போர்க்கள உத்தியாகவும் விளங்குகின்றது. இதுபோன்றே அன்றைய இலங்கைப் பிரச்சனையையும் ம.பொ.சி. பேசுகிறார்.

## சிங்களத் தீவு

"இலங்கையிலும் அரசாங்கத்தை எதிர்த்துத் தமிழர்கள் போர் புரிகின்றனர். இலங்கையின் வளத்துக்குப் பன்னெடுங்காலமாகப் பாடுபட்ட தமிழ்மக்கள் பதினாயிரம் கணக்காக அங்கே பட்டினியால் வாடுகின்றனர். தமிழர்களின் உழைப்பைப் பெற்ற அரசாங்கம் அவர்களுக்கு உரிமையைத் தர மறுக்கிறது, அது மட்டுமல்ல; அவர்களை இலங்கையை விட்டு வெளியேற்றவும் முயல்கிறது"[32]

இங்குப் பிரச்சினை சற்று வேறுபடுகிறது, நாட்டைவிட்டு வெளியேற்றவும் இலங்கை அரசு முயற்சிக்கிறது என்னும்போது இரண்டு நாடுகளின் பிரச்சினையாகிறது. இதற்கு அவர் தீர்வு கூற முடியாது போனாலும் அந்தத் தமிழர்களின் நாடு இலங்கையே என்று விளக்குகிறார். 'தமிழ் பேசுவோர் தமிழர், தமிழகம் அவர் தாய்நாடு' என்ற கொள்கையைச் சற்று விரிவுபடுத்திக் கொண்டு இலங்கை வாழ் தமிழ்மக்களின் நாடு இலங்கையே என்று வாதிடுகிறார். "இலங்கையையே தாய்நாடாக எண்ணி வாழும் தமிழர்களுக்கு உழைப்புக்கேற்ற ஊதியத்தையும் ஓட்டுரிமை உள்பட வாழ்க்கைக்குரிய பிற உரிமைகளையும் தர மறுக்கின்றனர்" என்கிறார்.

"இலங்கையில் உள்ள தமிழர்கள் தங்கள் வாழ்க்கை உரிமைக்குப் போராடுகிறார்களே ஒழிய சிங்களவர்களின் வாழ்க்கையைப் பறிக்கவில்லை. சிங்களத் தலைவர்களும் தமிழ் மக்களின் அறப்போருக்குப் பணிந்து கொடுக்கும் நாள் வெகுதூரத்தில் இல்லை என்பது திண்ணம்"[33] என்று எழுதினார். ஆனால் அறப்போராக நடந்து ஆயுதப்போராகவும் மாறிப் பல ஆண்டுகள் ஆகிவிட்டன. வேறுநாடுகளில் நடக்கும் இந்தப்

போர்களுடன் இணைத்தே சென்னை ஸ்பென்சர் கம்பெனியில் நடந்த தொழிலாளர் போராட்டத்தையும், பக்கிங்ஹாம் கர்னாடிக் மில்லில் நடந்த போராட்டத்தையும் ஒன்றாகவே பார்க்கிறார் ம.பொ.சி.

பணிபுரியும் இடங்களில் நடக்கும் வர்க்கப்போராட்டத்தையும் இனப்போராட்டமாகப் பார்க்கும் பார்வையை இவரிடம் காணமுடிகின்றது. இவர் தொழிலாளர்களின் தலைவராக இருந்து பல போராட்டங்களை நடத்தியிருப்பதாக இவருடைய வாழ்க்கை வரலாற்றில் சில குறிப்புகள் உள்ளன. அப்படி இருக்கும் இதனை எப்படி இனப்போராகக் கருதுகிறார்? என்றால் இவ்விரண்டு கம்பெனிகளின் முதலாளிகளும் வேறு இனத்தவர்கள், வேற்று நாட்டவர்கள். முதல் போராட்டமான பக்கிங்ஹாம் கர்னாடிக் மில்லில் நடந்த போராட்டத்துக்குரிய காரணம் சற்று நூதனமானது. முதலாளி வெள்ளையன், அந்த மில்லில் வேலை செய்யும் தமிழ்த் தொழிலாளிகளைப் பஞ்சாபித் தொழிலாளிகளைக் கொண்டு தடியால் அடித்துத் தாக்கச் செய்ததால் இப்போராட்டம். இங்கு அடிபட்டவர்கள் தமிழர்கள். அடித்தவர்கள் பஞ்சாபியர்கள், அப்பஞ்சாபியர்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்காமல் அவர்களைப் பாதுகாத்துக் கொண்டிருப்பது வெள்ளை முதலாளிகள். இங்குத் தமிழர்கள் தங்களைத் தாக்கிய பஞ்சாபியர் என்ற இனத்தையும், அவர்களைப் பாதுகாத்துக் கொண்டிருக்கும் வெள்ளையினத்தாரையும் முதலாளி வர்க்கத்தையும் எதிர்த்துப் போராட வேண்டியிருக்கிறது. இங்கு வர்க்கப்போர் இனப்போராக மாற்றம் பெற்றுவிட்டது.

இதே போன்று தான் ஸ்பென்சர் கம்பெனியில் நடந்த போரும் வர்க்கப்போரே. தொழிலாளிக்கும் முதலாளிக்குமிடையிலான வர்க்கப் போராட்டமே. ஆனால் போராட்டத்துக்கான காரணத்தை நோக்கினால் இது எப்படி இனப் போராக மாறியது என்பது விளங்கும். ஸ்பென்சர் நிர்வாகம் வெள்ளையர்களின் நிர்வாகம். தமிழ்த் தொழிலாளர்கள் தமிழ்ப் புத்தாண்டுக்கு விடுமுறை விட வேண்டினர். நிர்வாகம் மறுத்துவிட அதனால் ஒரு போராட்டம். வேறு காரணங்களும் இருக்கக்கூடும்; அவை பற்றி எதுவும்

ம.பொ.சி.யின் தலையங்கத்தில் இல்லை. தமிழர்களின் புத்தாண்டு நாளை விடுமுறையாக அறிவிக்காத வெள்ளை முதலாளிகள் தமிழினப் பகைவர்களாகின்றனர். ஏற்கெனவே இருந்த வர்க்கப் பகைமை இதனால் இனப் பகையாக மாறிப் போராட்டமாகிறது. ம.பொ.சி.யின் இன உணர்ச்சி தமிழ் மக்கள் இன உணர்வு பெறுவதற்கும், ஓரணியில் திரள்வதற்கும் உரிமைக்காகப் போராடுவதற்கும் தூண்டியுள்ளது என்றால் மிகையாகாது.

சில இனப் போராட்டங்கள் தமிழ்நாடு எல்லைப் போராட்டத்தை மனத்தில் கொண்டு எழுந்த போராட்டங்கள் ஆகும். அவை இனப் போராட்டமாக அமைவதால் சிலவற்றை இங்குக் கூறித்தான் ஆகவேண்டும். திருவிதாங்கூர் தமிழர் காங்கிரஸ் அச்சமஸ்தானத்தில் வாழும் தமிழர்கள் சார்பாகச் செய்துவரும் நேர்மையான கிளர்ச்சிக்கும் தமிழ்மக்கள் ஆதரவு காட்ட வேண்டியது அவசியமாகும்"[34] என்றெழுதுகிறார். இங்குக் கிளர்ச்சி என்பது எதிர்மறைப் பொருளில் பயன்பட்டுவிடக் கூடாது என்ற எச்சரிக்கை உணர்வோடு நேர்மையான என்ற அடையைச் சேர்த்துக் கொள்வதைக் காணமுடிகிறது.

இது போன்றே எல்லைப் பிரச்சினையோடு தொடர்புபடுத்தும் வகையில் மைசூர் கோலார் தங்கவயலில் வாழும் தமிழர்கள் குறித்தும் ஒரு தலையங்கத்தில் குறிப்பிடுகிறார். இத்தலையங்கம் சற்று வித்தியாசமானதாகும். இதுவரை பார்த்தவை எல்லாம் நடக்கின்ற போராட்டங்களுக்கு ஆதரவு திரட்டும் நோக்கத்துடன் எழுதிய தலையங்கங்கள் ஆகும். ஆனால் மைசூர் தங்கவயல் பகுதியில் வாழும் தமிழர்கள் பற்றிய தலையங்கம் அத்தமிழர்கள் தங்கள் எதிர்காலம் பற்றிச் சிந்திக்கவேண்டும் என்ற அக்கறையோடு கூடிய தலையங்கம் ஆகும். அத்தலையங்கம் பின்வருமாறு:

"மைசூர் சமஸ்தானத்தின் ஒரு பகுதி கோலார் தங்கவயல். இங்குச் சுரங்கங்களில் வேலை செய்யும் மக்கள் அனைவரும் தமிழர்கள். இந்தத் தமிழர்களுக்குத் தங்கள் வருங்கால வாழ்வை நிர்ணயித்துக் கொள்ள சுயநிர்ணயம் வேண்டும். வெறும் அடிமைக் கூலிகளாக அவர்களை வைத்திருக்கும் நிலையை இனியும் அனுமதிக்கக் கூடாது. அந்தப் பிரதேசமக்கள் வருங்காலத்தில்

தாங்கள் எந்த மாகாணத்துடன் சேர விரும்புகின்றனர் என்பதைத் தெரிவிக்க அவர்களுக்குச் சந்தர்ப்பம் அளிக்கவேண்டும். அத்தகைய உரிமையைப் பெறக் கோலார் பிரதேசத்துத் தமிழர்களும் ஒன்றுபட்டுக் கிளர்ச்சி செய்ய வேண்டியது அவசரமும் அவசியமும் ஆகும்."[35]

இலங்கை, தென்னாப்பிரிக்கா போன்ற நாடுகளுக்குப் போய் உழைத்து அந்த நாடுகளை வளப்படுத்திய பின்னர் அந்நாடுகளில் வாழ உரிமையின்றி வாடும் தமிழர்நிலை, கேரளத் திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் வாழும் தமிழ் மக்களின் சமகாலச் சிந்தனைகள் ஆகியவற்றைக் கண்ணுற்ற ம.பொ.சி.க்கு இத்தகையதொரு சிக்கல் மைசூர் சமஸ்தானத்தில் உள்ள கோலார் தங்கவயலில் வாழும் தமிழர்களுக்கு எதிர்காலத்தில் வருமே என்ற எண்ணம் தோன்றியதால்தான், எதிர்காலம்பற்றிச் சிந்திக்காது வாழ்ந்து கொண்டிருக்கும் கோலார் தங்கவயல் தமிழர்களுக்கு அவர்களின் நிலையை எடுத்துக்கூறித் தங்கள் சுயநிர்ணயத்திற்காகக் கிளர்ச்சி செய்ய வேண்டியதின் அவசியத்தையும், அவசரத்தையும் வலியுறுத்துகிறார். தமிழ் இனம் எங்கு வாழ்ந்தாலும், அதன் நலம் பேணப்படுதல் வேண்டும்; உரிமைகள் காக்கப்படுதல் வேண்டும் என்ற நல்ல எண்ணமே ம.பொ.சி. அவர்களை இவ்வாறு சிந்திக்கச் செய்கிறது. தமிழினம் எங்குத் துயருற்றாலும் அது தமிழினத்துக்கே அவமானமாகும் என்பதால் தமிழினத்திற்கு ம.பொ.சி. வேண்டுகோள் விடுக்கிறார். அதுபின்வருமாறு:

"தமிழினத்திற்கு ஒரு வேண்டுகோள். தமிழ் மக்கள் ஆப்பிரிக்க காட்டில் அல்லல்படுகிறார்கள்; சிங்களத் தீவில் சீரழிகிறார்கள். சென்னை நகரில் சிறையிலடைக்கப்படுகிறார்கள். இவையாவும் தமிழினத்தின் தன்மானத்திற்கு அறை கூவலாகும். தமிழினத்தின் முன்னேற்றத்திற்குப் பாடுபடுவது என்றால் படிப்பாலும் பணத்தாலும் ஏற்கனவே முன்னேறிவிட்ட தமிழர்களுக்கு மேலும் மேலும் பணமும் பதவியும் தேடித் தருவதல்ல. தமிழினத்தின் ஒடுக்கப்பட்ட மக்களை உயர்நிலைக்குக் கொண்டு வருவதேயாகும்.

ஒடுக்கப்பட்ட தமிழரின் குரல் தென்னாப்பிரிக்காவிலும், இலங்கைத் தீவிலும் சென்னை நகரிலும் கேட்கிறது. உதவிக்கு

விரைந்து வாருங்கள்! தென்னாப்பிரிக்க வெள்ளையரின் நிற வேற்றுமையையும், இலங்கை அரசாங்கத்தின் நீதியற்ற செயலையும், பஞ்சாபியரைக் கொண்டு தமிழரைத் தாக்கும் முதலாளிகளின் பிரித்தாளும் தந்திரத்தையும் எதிர்த்துப் போராடும். எல்லாவீரத் தமிழர்களுக்கும் வெற்றி கிட்டுவதாக"[36] என்று தமிழினத்தின் போராட்டம் வெற்றிபெற வாழ்த்துகிறார். 1932-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30-ஆம் நாள் சென்னை திருவல்லிக்கேணிக் கடற்கரையில் கூடியிருந்த மக்களிடையே "தமிழா! துள்ளியெழு!" என்ற சட்டவிரோதமான ராஜதுவேஷப் பிரசுரமொன்றை வழங்கியதற்காகக் கைது செய்யப்பட்டார் ம.பொ.சி. இது அவருடைய தமிழினப்பற்றிற்கு ஒரு சான்றாக விளங்கும் நிகழ்ச்சியாகும். தனது இருபத்தாறாவது வயதில் நிகழ்ந்த இந்த நிகழ்ச்சியை ம.பொ.சி. பின்வருமாறு தமது சுயசரிதையில் விளக்குகிறார்.

"30-9-1932-இல் திருவல்லிக்கேணிக் கடற்கரையில் திரும்பவும் போலீசாரால் கைதுசெய்யப்பட்டேன். 'தமிழா துள்ளியெழு!' என்னும் தலைப்புடைய சட்டவிரோதமான ராஜத்துவேஷமான பிரசுரமொன்றைக் கடற்கரையில் குழுமியிருந்த மக்களிடையே வழங்கியதற்காகவே நான் கைது செய்யப்பட்டேன். அந்த நாளில் அரசாங்கத்தை வெறுக்கும் கருத்துகள் கொண்ட பிரசுரம் எதையும் அச்சடிக்கக் கூடாது. அச்சடித்துத் தந்தால் அந்த அச்சகத்தின் உரிமையாளர் மீது வழக்குத் தொடரப்படும். அதனால் நான் விநியோகித்த பிரசுரத்தை நானும் என் நண்பர்களும் சேர்ந்து கையாலேயே எழுதி நூற்றுக்கணக்கான பிரதிகள் தயாரித்தோம். பிரசுரத்தில் உள்ள வாசகம் முழுவதும் என்னாலேயே எழுதப்பட்டதாகும். **அந்தக்காலத்திலேயே என் உள்ளத்தில் தமிழன் என்னும் இனஉணர்ச்சி மலர்ந்திருந்தது.** அதனால் பழங்காலத்திலேயே பாண்டியன் ஆண்ட பெருமையைக் கூறி, சோழன் ஆண்ட சிறப்பைச் சொல்லி, சேரன் ஆண்ட மாண்பினைக் காட்டி, நம் அருமைத் தமிழ்நாடு ஆங்கிலேயருக்கு அடிமைப் பட்டிருந்த சிறுமையையும் நினைவூட்டி விடுதலைப் போரில் ஈடுபட வருமாறு தமிழருக்கு அழைப்புவிடுத்திருந்தேன்"[37] இந்த நிகழ்ச்சி இயற்கையிலேயே ம.பொ.சி.க்கு இளமையிலேயே தமிழன் என்ற

இனவுணர்வு மிகுந்திருந்ததைக் காட்டுகின்றது. மிகப் பண்பட்ட தலைவர்களே ஓர் இனத்தின் பழம் பெருமைகளைச் சுட்டிக்காட்டி அந்த இனத்தை ஒன்றுபட்டுப் போராட வருமாறு அழைப்பர். ம.பொ.சி. தனது இருபத்தாறு வயதிலே அத்தகைய பண்பட்ட நிலையை அடைந்திருப்பதைக் காண முடிகிறது. அதற்கு அவருடைய தமிழின உணர்வே காரணமாம்.

அமராவதிச் சிறையில் இருந்தபோது திரு. சத்தியமூர்த்தி ஐயர் கம்பராமாயணச் செய்யுள் சிலவற்றை 'ஆபாசம்' என்று குறை கூறியதற்காக திரு. சத்தியமூர்த்தி ஐயரிடம் கோபித்துக்கொண்டு சில நாட்கள் பேசாமலிருந்தார் ம.பொ.சி. இந்நிகழ்ச்சி ம.பொ.சிக்குத் தமிழரிடமும், தமிழ்ப் புலவர்களிடமும் இருந்த பற்றினை வெளிப்படுத்துகிறது.

கோவை மாநாட்டுத் தலைவர் தேர்தலில் போட்டியிட்ட போதும் ம.பொ.சி. அவர்கள் தாம் போட்டியிட்டதற்கான காரணமாக, "இது தமிழகத்தின் வருங்காலத்தை நிர்ணயிக்கும் காலம். இச்சமயத்தில் அரசாளும் காங்கிரசின் தலைவராகிய காமராசர் தமிழகத்தின் உரிமைகளைக் காக்கத் தவறிவிட்டார். அரசியல் நிர்ணய சபையில் அவர் இடம் பெற்றிருந்தும் தமிழ் இனத்தின் எண்ணத்தை அங்கு எதிரொலிக்கச் செய்யவில்லை; தமிழகத்தின் வரலாற்றுவழித் தமிழரசு காணப் போராடவில்லை"[38] இதனால் காமராசரைத் தோற்கடித்து அவரது தவறைச் சுட்டிக் காட்டவே போட்டியிட்டதாகக் கூறுகிறார். இதுவும் ம.பொ.சியின் தமிழ் இன உணர்வை, தமிழர் என்ற இனம் உயர்வு பெறப் பாடுபட்டதை விளக்குகிறது.

## பிற இனத்தால் வரும் கேடு களைதல்

1946-ஆம் ஆண்டு நாட்டில் அரசியல் மாறுதல் வேகமாக உருவாகிக் கொண்டிருந்த சூழலில், காங்கிரசும், முஸ்லீம் லீக்கும் பிரிட்டிஷ் அமைச்சரவைத் திட்டத்தை ஏற்றுக் கொண்டு மத்தியில் கூட்டாட்சி அமைக்கவும் தயாராகிவிட்ட சூழலில் அரசியல் நிர்ணய மன்றம் அமைக்க முடிவெடுத்துவிட்டனர். அரசியல் நிர்ணய மன்றத்திற்குத் தமிழ்நாட்டிலிருந்தும் பிரதிநிதிகள் தேர்ந்து

எடுக்கப்பட்டனர். தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளில் தமிழரல்லாதார் மூவர் இடம் பெற்றிருந்தனர். இதை அறிந்த ம.பொ.சி. மிகவும் மனம் வருந்தினார். இதனைத் தமது சுய வரலாற்று நூலான 'எனது போராட்டத்'தில் எழுதும்போது 'இனவுணர்வற்ற தமிழர்கள்' என்று தலைப்பிட்டு எழுதுகிறார். தமிழ்நாட்டின் பிரதிநிதிகளாகத் தமிழரல்லாதார் செல்வதை ம.பொ.சி.யின் மனம் ஏற்கவில்லை. இதனைத் தமது 'தமிழ்முரசு' இதழில் தலையங்கமாகத் தீட்டுகிறார். அத்தலையங்கம் பின்வருமாறு:

"இப்போது தமிழ்நாட்டின் சார்பாக அரசியல் நிர்ணய சபையில் கலந்து கொண்டுள்ளவர்களின் தேசபக்திக்கு நாம் மதிப்புக் கொடுக்கிறோம். ஆனால் அவர்கள் தேசிய இந்தியாவின் சுதந்திர உணர்ச்சிக்குப் பிரதிநிதிகளே ஒழிய, தமிழ் இனத்தவரின் தனிப்பட்ட நலன்களுக்குப் பிரதிநிதிகள் அல்லர். தமிழரல்லாத, தமிழகத்தைத் தாயகமாகக் கருதாத கோயாங்காவும், பாலக்காடு அம்மு சாமிநாதன், கொச்சி தாட்சாயணி வேலாயுதம் போன்ற கேரளப் பெண்மணிகளும் தமிழர்களால் தமிழ்நாட்டுப் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு அரசியல் நிர்ணய சபையில் கலந்து கொண்டுள்ளனர். ஏகாதிபத்தியச் சுரண்டலிலிருந்து இந்தியா விடுபடுவதுபோல், வடநாட்டாரின் சுரண்டலிலிருந்தும் தமிழ்நாடு விடுதலை பெற வேண்டும் என்பதே தமிழர்களின் பொருளாதாரக் கொள்கை. இதைக் கோயாங்கா ஏற்பாரா?

திருவிதாங்கூர் தமிழகத்தைப் புதிய தமிழகத்துடன் சேர்ப்பதை மேற்சொன்ன மலையாளப் பெண்மணிகள் விரும்புவார்களா? ஒரு நாளும் இல்லை. ஏனெனில் அவ்விருவரும் திருவிதாங்கூர்த் தமிழகம் உள்ளிட்ட நவீன கேரள மாகாணங்காணும் இயக்கத்தைப் பகிரங்கமாகவே ஆதரித்துள்ளனர். இத்தகையவர்கள் எப்படித் தமிழ் நாட்டவரின் பிரதிநிதிகளாக இருக்க முடியும்?"[39] என்று எழுதுகிறார். இங்குத் தமிழரல்லாதார் தமிழ் இனத்தின் நலன் மீது அக்கறை கொண்டவர்களாக இருப்பார்களா? என்பது மட்டுமன்றி அவரவர் இனச்சார்பும் இருக்குமே என்று ஐயுறுகிறார். தமிழரல்லாதாரைத் தேர்ந்தெடுத்த தமிழரின் இனவுணர்வற்ற தன்மையையும் சாடுகிறார் ம.பொ.சி.

பிறிதோரிடத்தில், "காங்கிரஸ் தலைமையின் தேசபக்தியில் நமக்குப் பூரண நம்பிக்கையுண்டு. ஆனால் தமிழரின் சுயநிர்ணய கோரிக்கைக்கு மாறாக அவர்கள் காட்டும் எந்தப் பாதையிலும் தமிழன் ஓர் அடி கூட எடுத்து வைக்க முடியாது" என்று உறுதியாகக் கூறுகிறார். தமிழினத்தின் பிரதிநிதிகளைப் பார்த்து வேண்டுகோள் விடுக்கிறார்.

"தமிழ்நாட்டுப் பிரதிநிதிகளே! உங்கள் இனத்தின் உரிமையைப் பறிகொடுக்காதீர்கள்!..... உங்களுடன் சிறைபுகுந்து சிப்பியேந்திச் சீரழிந்தவொருவன் என்ற முறையில் சிரமேற்கரங்கூப்பி நான் செய்யும் வேண்டுகோள் இதுதான்:

**தமிழினத்தின் கோரிக்கை!**

சுதந்திர இந்தியாவில் சுதந்திரத் தமிழ் அரசு.

தமிழகத்தின் அரசியலைத் தமிழரே தயாரிக்கச் சுயநிர்ணயம்.

துண்டுபட்ட தமிழ்நிலங்களை ஒன்றுபடுத்திப் புதிய தமிழகத்தை நிறுவுதல்"[40]

தமிழ்மக்களிடையே இனஒற்றுமை குறைந்ததற்கான காரணங்களைச் சுட்டிக் காட்டும்போது, "தமிழகத்தில் அரை நூற்றாண்டுக் கால அரசியலிலே சாதி உணர்ச்சி தலைதூக்கி நின்றிருக்கிறது. ஜனநாயகப்படி நடந்த பொதுத் தேர்தல்களிலே அரசியல் கட்சிகளின் வெற்றி தோல்விகளை நிர்ணயிப்பதில் இந்த சாதி உணர்ச்சியே செல்வாக்கு செலுத்தியிருக்கிறது. இதனால் தமிழினத்தின் ஒற்றுமை பெருமளவுக்குப் பாதிக்கப்பட்டிருக்கிறது. இந்த சாதி உணர்ச்சியானது தேசிய இயக்கத்தையும் ஊடுருவியதெனலாம். தேசியத்தை மட்டுமல்ல; வர்க்க வழியில் தோன்றிய இயக்கங்களைக் கூட ஊடுருவியிருக்கிறது. இதனால் தமிழ்மொழியின் வளர்ச்சி தடைப்பட்டது; தமிழினத்தின் ஒற்றுமை குலைந்தது; தமிழ்நாட்டின் முன்னேற்றம் தடைப்பட்டது. துரதிர்ஷ்டம் என்னவென்றால் இந்த உண்மையைத் தமிழகத்து மக்கள் அறிந்திருக்கவில்லை என்பதேயாகும்"[41] என்று வருந்துகிறார்.

தமிழ்நாட்டில் தமிழரல்லாத பிற மொழியார் ஆதிக்கம் செலுத்துவது குறித்தும் எழுதுகிறார். "தமிழ் நாட்டிலேயே பிறமொழியினர் அளவுக்கு மீறி ஆதிக்கம் பெற்றுவருவதற்கு இங்குள்ள அகில இந்திய அரசியல் கட்சிகளும் காரணம் எனலாம். அந்தக் கட்சிகளிலேயே தமிழரல்லாதாரின் ஆதிக்கம் நீண்ட நெடுங்காலமாக இருந்துவரக் காண்கிறோம்''[42] என்று பிறமொழியாளர் ஆதிக்கத்திற்கு அகில இந்திய அரசியல் கட்சிகளே காரணம் என்றும், அக்கட்சிகளிலேயே இந்நிலைதான் உள்ளது என்றும் குறிப்பிடுவது காங்கிரஸ் கட்சியில் தெலுங்குத் தலைவர்களின் ஆதிக்கத்தைக் குறிப்பதாக உள்ளது. இதே கருத்தைத் தனது சுயசரித்திரமான 'எனது போராட்டம்' என்ற நூலிலும், ''தமிழர் செய்த தவறு'' என்ற உட்தலைப்பில், "சென்னையில் நாவலர் சத்தியமூர்த்தி போன்ற பெருந்தலைவர்கள் பலர் இருந்தும், நகரமக்கள் மத்தியிலேயே உப்புச் சத்தியாக்கிரகத்தை நடத்த அவர்களில் எவரும் முன்வரவில்லை. தமிழ்த் தலைவர்களின் இந்தத் தவறைப் பயன்படுத்திக் கொண்டு, ஆந்திரப் பெருந்தலைவர் திரு. டி பிரகாசம், சென்னை நகரில் உப்பு சத்தியாக்கிரகப் போரில் ஈடுபட்டார்.... அன்று தமிழ்நாடு காங்கிரசு இழைத்த இப்பெருந் தவறு காரணமாகத் தான் ஆந்திர மாகாண காங்கிரஸ் சென்னையிலேயே முகாம் போட்டது. சென்னை ஜில்லா ஆந்திரக் காங்கிரஸ் கமிட்டி என்ற பெயரில் மாவட்டக் கிளை ஒன்றையும் அமைத்து, நாளடைவில் சென்னையை உரிமைகொண்டாட முயன்றனர்''[43] என்று எழுதுகிறார். இதனால் பிறமொழியாளர் தமிழ்நாட்டில் ஆதிக்கம் செலுத்த வழிவகுத்தது தமிழகத் தலைவர்களின் குற்றமே என்று விளக்குகிறார். ஒரு தேசியவாதி இவ்வாறு ஒரு குறிப்பிட்ட ஓர் இனத்திற்காகப் பேசலாமா? என்று யாரும் கேட்டுவிடக் கூடும் என்றுக் கருதித்தானே அதற்குரிய விளக்கத்தையும் முன் வைக்கிறார்.

"நான் ஒரு காந்தியவதி; உயிர்க்குல முழுவதையும் நேசித்த வள்ளலார் பக்தன். ஆகவே தமிழரல்லாத யாரையும் அந்நியராகக் கருதும் மனப்பான்மை எனக்கு அறவே இல்லை. ஆயினும் ஒரு தேசத்தை இன்னொரு தேசம் ஆக்கிரமிப்பதை எதிர்த்து நிற்பது

உலக சமாதானத்திற்குச் செய்யும் தொண்டாகக் கருதப்படும் காலமிது. அதுபோல் இந்திய தேசத்திற்குள்ளே ஒரு இனம் இன்னொரு இனத்தின் மீது ஆதிக்கம் செலுத்துவதை எதிர்ப்பதையும் அத்தகைய ஆதிக்கத்தை அகற்ற அமைதியான வழியில் பாடுபடுவதையும் உள்நாட்டுச் சமாதானத்துக்குச் செய்யும் தொண்டாக நான் கருதுகிறேன்" என்று கூறுகிறார். "இனவழி உரிமைகளை வலியுறுத்தி, அதன் வழித் தேசிய இனங்களிடையே ஒருமைப்பாட்டை வளர்ப்பதே என் நோக்கம் ஆகும்" என்று தம் நோக்கத்தை விளக்குகிறார்.[44]

தமிழகத்தில் தமிழரல்லாத பிற மொழியாளர் செல்வாக்குப் பெற்றதற்குக் காரணம் யாதென விளக்கும்போது தமிழினத்தார் பிளவுபடக் காரணமாக இருந்ததாக ஜஸ்டிஸ், சுயமரியாதை இயக்கங்களை விமர்சிக்கின்றார் ம.பொ.சி. அந்த இயக்கங்களே தமிழர்களைப் பிராமணர்கள் - பிராமணரல்லாதார் எனப் பிரித்துவிட்டன என்றும், அந்தப் பிரிவினைதான் தமிழினத்தின் ஒற்றுமையைக் குலைத்தது என்றும் கருதுகிறார். இதனை,

"பிராமணர், பிராமணரல்லாதார் என்ற வகுப்புவாதப் போர்க் களத்தில் பிறந்த பிறப்பு வழிச் சாதி உணர்ச்சியின் காரணமாகத் தமிழர் என்னும் மொழிவழி இன உணர்ச்சி தமிழ்நாட்டில் மங்கி மங்கிக் கடைசியில் மறைந்தே போய்விட்டது. ஆனால் ஆந்திரர், கன்னடர், மலையாளிகள் ஆகியோர் தங்கள் இன உணர்ச்சியை இழந்துவிடவில்லை. பிராமணர் அல்லாதார் என்னும் வகுப்பு உணர்ச்சியினும் ஆந்திரர் - கேரளர் - கன்னடர் என்னும் இனவுணர்ச்சியே அவர்களிடத்தில் மேலோங்கி நின்றது. ஆந்திரத்திலே தெலுங்கைத் தாய்மொழியாகக் கொள்ளாத தமிழரோ, கன்னடரோ, மலையாளியோ ஒருவர் கூடச் சென்னை மாகாணச் சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட வில்லை. தமிழ்நாட்டில் மட்டும் பொதுத் தொகுதிகளிலே மூன்றில் ஒரு பங்கினராகப் பிறமொழியினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பிராமணர் அல்லாதார் இயக்கத்தால் தமிழர் அடைந்த அவலம் இது"[45] என்று ஆதங்கப்படுகிறார் ம.பொ.சி.

தமிழர்களின் வந்தாரை வாழவைக்கும் மனப்பான்மையும் கூடப் பிற மாநிலத்தார் தமிழ்நாட்டில் நிலைபெறுவதற்குக் காரணம் என்கிறார் ம.பொ.சி. இதனை, "தமிழருடைய விருந்தோம்பல் பண்பும் வந்தேறிகள் சென்னையில் நிலை பெறுவதற்கு வாய்ப்பாக இருந்தது எனலாம்" என்கிறார். ஜஸ்டிஸ் கட்சியும் சுயமரியாதை இயக்கமும் பயன்படுத்திய 'திராவிடர்' என்ற பெயரும் தமிழர் என்ற இன உணர்வினைத் திரையாக மறைத்துவிட்டது என்கிறார் ம.பொ.சி.

"தமிழர் என்பதனை மறைக்கும் திரையாக - மறுக்கும் சொல்லாகத் 'திராவிடர்' என்பது 1916 முதல் 1966 வரை சரியாக அரை நூற்றாண்டுக் காலம் பயன்படுத்தப்பட்டு வந்தது. இன்னமும் தமிழரிடையே செல்வாக்குப் பெற்றுள்ள இருவேறு கழகங்களின் பெயரிலே திராவிடம் ஒட்டிக் கொண்டிருக்கக் காண்கிறோம்." என்று சுட்டுகிறார். தமிழரல்லாதார் தமிழ்நாட்டில் தலைமை பெற்றதற்கு இந்தத் திராவிடர் என்ற பொதுப் பெயரே காரணமாய் அமைந்தது'[46] என்றும் கருதுகிறார் ம.பொ.சி.

தமிழ்நாட்டில் அனைத்துத் துறைகளிலும் பிற மாநிலத்தார் ஆதிக்கம் செலுத்துவதால் தமிழர்தம் வாழ்வு கெடுகின்றது என்ற உண்மையைக்கூடத் தமிழர்கள் உணரவில்லை என்கிறார் ம.பொ.சி. இதனை உணர்த்த எந்த அரசியல் கட்சியும் முன் வரவில்லை என்கிறார். இதனை,

"தமிழ்நாட்டில் தொழில் வாணிபத் துறைகளிலே எல்லாம் பிற இனத்தார் ஆதிக்கம் பெறுவதால் தமிழர் வாழ்வு கெடும் என்ற உண்மையைத் தமிழர் உணர்ந்திருக்கவில்லை. அந்த உண்மையை மக்களுக்கு அறிவுறுத்தத் தமிழ்நாட்டு அரசியல் கட்சிகளும் முன் வரவில்லை. தமிழரசுக் கழகம் அவ்வகையில் முயற்சி எடுத்ததென்றாலும், அது போதுமானதாக இல்லை"[47] என்று தமது கழகத்தின் செயல்பாட்டின் போதாமையையும் ஒப்புக் கொள்கிறார்.

## குறிப்புகள்


1. சிலம்புச்செல்வரின் வாழ்க்கையிலே, ப. 68.
2. எனது போராட்டம், ப. 250.
3. மேலது ப. 361.
4. ம.பொ.சி. படைத்த புதிய தமிழகம், ப. 29.
5. மேலது, ப. 28.
6. மேலது, ப. 29.
7. வீரபாண்டிய கட்டபொம்மன், ப. 7.
8. மேலது, ப. 9.
9. மேலது, ப. 16.
10. மேலது, ப. 22.
11. கப்பலோட்டிய தமிழன், ப. 7
12. விடுதலைப் போரில் தமிழ் வளர்ந்த வரலாறு, ப. 102.
13. மேலது.
14. மேலது.
15. கப்பலோட்டிய தமிழன், ப. 34.
16. மேலது, ப. 100.
17. விடுதலைப் போரில் தமிழ் வளர்ந்த வரலாறு, ப. 102.
18. விடுதலைத் தமிழகம், பாகம் - 2, பக். 154-156.
19. புதிய தமிழகம் படைத்த வரலாறு, பக். 202-203.
20. மேலது, பக். 225-226.
21. மேலது, பக். 226-227.
22. கப்பலோட்டிய தமிழன், ப. 112.
23. புதிய தமிழகம் படைத்த வரலாறு, பக். 141-142
24. மேலது, ப. 145.
25. மேலது, ப. 144.
26. ம.பொ.சி. படைத்த புதிய தமிழகம், பக். 49 -50.
27. மேலது, ப. 50.
28. மேலது. ப. 50.
29. மேலது. ப. 51.
30. மேலது. ப. 51.
31. மேலது. ப. 52.
32. மேலது. பக். 52-53.

33. மேலது. ப. 53.
34. மேலது. ப. 64.
35. மேலது. ப. 65.
36. மேலது ப. 66.
37. எனது போராட்டம், பக். 78-79.
38. மேலது. ப. 464.
39. ம.பொ.சி. படைத்த புதிய தமிழகம், பக். 82-83.
40. மேலது, பக். 85-86.
41. தமிழகத்தில் பிறமொழியாளர், முன்னுரை.
42. மேலது. ப. 10.
43. எனது போராட்டம், ப. 49.
44. தமிழகத்தில் பிறமொழியாளர், ப. 299.
45. மேலது. ப. 42.
46. மேலது ப. 67.
47. மேலது. ப. 250.

# ம.பொ.சி.யும் தமிழ்நாடும்

ம.பொ.சி. அவர்கள் தம் வாழ்நாள் முழுவதையும் நாட்டுக்காகவே அர்ப்பணித்தவர். தம் வாழ்வுவேறு, நாட்டின் முன்னேற்றம் வேறு என்று ஒருபோதும் கருதியதில்லை. அதனால் அவர் மகிழ்ச்சியடைந்த நிகழ்ச்சிகள் எவை என்று குறிப்பிடும் போதுகூட "எனது வாழ்நாளில் தேசத்தில் ஏற்பட்ட மகத்தான இரண்டு பெரிய மாறுதல்களைக் கண்டு மகிழ்ந்திருக்கிறேன். ஒன்று தமிழகம் உள்ளிட்ட இந்தியப் பெருநாடு அந்நிய ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற்றது; மற்றொன்று தமிழகம் தனியரசு மாநிலமானது. இந்த மாறுதல்களையொட்டி வெள்ளி விழாக்களையும் கண்டுவிட்டேன் என்பதை நினைக்கும்போது என் மனம் பூரிப்படைகிறது"[1] என்கிறார். நாட்டிற்காகத் தாம் ஆற்றிய பணிகளை, தாம் கலந்துகொண்ட போராட்டங்களை எண்ணிப் பார்த்துப் பெருமிதம் கொள்கிறார். "இந்தியப் பெருநாடு விடுதலை பெற நடந்த மாபெரும் போரிலே யானும் பங்கு கொண்டதை நினைக்கும்போதெல்லாம் மகிழ்ச்சி பொங்குகின்றது. விடுதலை பெற்ற பாரதத்திலே புதிய தமிழகம் படைக்கவும் பாடுபட்டு, அதிலேயும் வெற்றியைக் கண்டேன் என்பதை நினைக்க நினைக்க எனது நெஞ்சம் மகிழ்ச்சிப் பெருமிதத்தால் விம்முகிறது"[2] என்று எழுதுகிறார்.

தம் சொந்த வாழ்க்கையில் அடைந்த வெற்றிகளுக்காகக் கூட அவர் இவ்வாறு மகிழ்ந்ததாக எவ்விடத்தும் குறிப்பிடவில்லை. நாட்டுவிடுதலை என்று குறிப்பிடும்போது இந்திய விடுதலை என்று குறிப்பிடாமல் 'தமிழகம் உள்ளிட்ட இந்தியப் பெருநாடு' என்றே குறிப்பிடுகிறார். இவையெல்லாம் ம.பொ.சி. இந்தியத் தேசியம் என்ற பார்வையையும் தமிழ்த் தேசியம் என்ற பார்வையையும் இரண்டு கண்களாகப் போற்றி மதித்தவர் என்பதை விளக்குகின்றன.

ம.பொ.சி. அவர்கள் தமிழ்நாட்டுக்கு ஆற்றிய பணிகளை மூன்று பெரும் பிரிவுகளில் விளக்கலாம்.

1. விடுதலைப் போரில் பங்குப் பெற்றுப் பாரத விடுதலைக்குப் பணியாற்றியது.
2. தமிழக விடுதலை மற்றும் தமிழக எல்லைப் போரில் பணியாற்றியது.
3. மாநில சுயாட்சிக்காகப் போராடியது.

என்ற மூன்று நிலைகளில் ம.பொ.சி. அவர்களின் நாட்டுப்பணி இங்கு விளக்கப்படுகின்றன. இம்மூன்று பணிகளுள் முதல் இரண்டு பணிகளும் ஒன்றொடொன்று மிகவும் நெருங்கிய தொடர்புடையன. இந்திய விடுதலையுள் தமிழக விடுதலையும் உள்ளடங்கியதே. எனினும் இந்திய விடுதலையின்போது தமிழகம் முழு விடுதலையடையவில்லை. அதற்கான ஒரு போராட்டத்தை ம.பொ.சி. தலைமையில் நடத்த வேண்டியிருந்தது. மாநில சுயாட்சிப் போராட்டம் இன்றும் முடிவடைந்ததாகக் கூறுவதற்கில்லை. இவற்றிற்கு ம.பொ.சி. அவர்கள் ஆற்றிய பணி அளவிடற்கரியது.

## விடுதலைப்போரில் ம.பொ.சி.

தமிழக எல்லைப் போரில்தான் இவருடைய ஆற்றல் வெளிப்பட்டது என்றாலும் இவருடைய வாழ்க்கை ஒரு தேசியவாதியாக - விடுதலைப் போராட்ட வீரராகவே தொடங்கியது என்பது இருவேறு கருத்துகளுக்கு இடமில்லாத உண்மை. அடிமைப்பட்டுக் கிடந்த இந்திய விடுதலைக்காக ஏறத்தாழ இருபத்து நான்கு ஆண்டுகள் போராடியவர். 1923-ஆம் ஆண்டு அவர் காங்கிரஸில் சேர்ந்துவிட்டதாகக் குறிப்பிடுகிறார். இதனை ம.பொ.சி. அவர்கள் தமது 'எனது போராட்டம்' என்ற நூலின் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

"நான் 1923-ஆம் ஆண்டிலேயே அரசியலிலே ஈடுபட்டு விட்டேன் என்று சொல்லவேண்டும். அந்த ஆண்டில் நடைபெற்ற இந்திய சட்டசபை, பழைய சென்னை ராஜ்யச் சட்டமன்றத் தேர்தலிலே அழைப்பாரின்றியே நான் பங்கு கொண்டேன். வேட்பாளனாக இல்லை; வேட்பாளர்களுக்கு ஆதரவாகக் கோஷமிடுவோனாக! அப்போது எனக்கு வயது பதினேழு.

இங்கிருந்துதான் எனது அரசியல் வாழ்க்கை ஆரம்பமாகின்றது. நான் அப்போது காங்கிரஸில் முறையாக அங்கத்தினன் ஆகவில்லை. ஆயினும் என்னொத்த இளைஞர்களோடு கூடிக்கொண்டு, விளம்பரப் போர்டுகளை கையிலேந்தி காங்கிரஸ் வேட்பாளர்களுக்கு ஓட்டளிக்குமாறு குரல் கொடுத்தவண்ணம் தெருத்தெருவாக அலைந்திருக்கிறேன். அப்பொழுது காங்கிரஸ் கட்சி நேரடியாகத் தேர்தலில் ஈடுபடவில்லை. காங்கிரசின் அனுமதியோடு, அதன் பார்லிமெண்டரி அமைப்பாக விளங்கிய சுயராஜ்யக் கட்சிதான் தேர்தலில் ஈடுபட்டது. இருந்தாலும் காங்கிரசே ஈடுபட்டதாகத்தான் அந்த இளம்பருவத்திலே நான் நினைத்தேன். நான் என்ன, நாட்டு மக்களும் அப்படித்தான் நினைத்தார்கள். என்னுடைய அரசியல் வாழ்க்கையே தேர்தல் பிரச்சாரத்திலிருந்துதான் ஆரம்பமானது. அதுவும் காங்கிரசுக்காகத் தான்!"[3] தேர்தலில் காங்கிரஸ் என்று நினைத்துச் சுயராஜ்யக் கட்சிக்குத் தேர்தல் பணி புரிபவராகத்தான் தன் அரசியல் வாழ்வைத் தொடங்குகிறார் ம.பொ.சி.

1927-இல் தான் முறையாகக் காங்கிரசில் சேர்ந்து பணியாற்றுகிறார். தாம் காங்கிரசில் என்ன உணர்வோடு இருந்தார் என்பதை ம.பொ.சி.யே, "திருவிழாக் கூட்டத்தில் கலந்து கொள்கிற உணர்ச்சியோடுதான் 1923 தேர்தல் பிரச்சாரத்திலும், 1927-இல் காங்கிரஸ் மகாசபைத் தொண்டர் படையிலும் கலந்து கொண்டேன்"[4] என்று விளக்குகிறார். காங்கிரஸ் மகாசபையின் தொண்டர் படையில் தொண்டராக இருந்த காலத்தில் அண்ணல் காந்தியடிகள் முதல் தேசத்தின் பல பெருந்தலைவர்களையும் நேரில் காணும் வாய்ப்பு ம.பொ.சி.க்குக் கிட்டியது. தலைவர்களை நேரில் சந்தித்ததிலும் அவர்கள் அருகிலேயே பணியாற்றுவதிலும் ம.பொ.சி. பெருமிதம் அடைந்தார் என்றாலும் அவரால் புரிந்து கொள்ளமுடியாத, சொல்லப் போனால் அன்று பலராலும் புரிந்து கொள்ளமுடியாத ஆங்கிலத்திலேயே அனைவரும் பேசியது, தமிழ்நாட்டுத் தலைவர்கள் கூடப் பேசியது, அவருக்கு பெரும் மனக்குறையைத் தோற்றுவித்தது.

எந்த வெள்ளையனை வெளியேற்ற அல்லும்பகலும் தலைவர்கள் பாடுபட்டார்களோ அந்த வெள்ளையரின் மொழியிலேயே பேசியது சங்கடமான சூழல்தானே! அன்று

அதனை எதிர்த்துக் குரல் எழுப்பும் நிலையில் ம.பொ.சி. இல்லை. எனினும் இது அவரை மனம் வருந்தச் செய்தது. தமிழ் புறக்கணிக்கப் படுகிறது என்ற உணர்வு அன்றே ம.பொ.சி.க்குத் தோன்றியது.[5]

1928-இல் சைமன் கமிஷன் பகிஷ்கார நாளில் சென்னை நகரில் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட போது ஒரு கடையின் மீது கல்லெறிந்ததற்காகக் கைது செய்யப்பட்டு அன்று இரவே விடுதலை செய்யப்பட்டார். தான் கல்லெறிந்த நிகழ்ச்சியை மிகவும் நகைச்சுவையோடு ம.பொ.சி.யே கூறுவதைக் காணலாம்.

"அந்த நாளிலே நானும் என்னுடைய அச்சகத் தொழில் சகாக்களும் புரசைவாக்கத்திலே ஆர்ப்பாட்டக்காரர்களுடன் சேர்ந்து கொண்டோம். ராக்ஸி திரைப்படத் தியேட்டர் அருகில் 'பல்டானா' என்னும் பெயரில் ரொட்டிக் கடை ஒன்று இருந்தது. இப்போது அதன் பெயர் மாறிவிட்டது. ஆங்கிலேயர் ஒருவரால் அது நடத்தப்பட்டதால் அர்த்தாலை ஒட்டி அந்தக்கடை மூடப் படவில்லை. ஆவேசங் கொண்ட இளைஞர் கூட்டமொன்று அந்தக் கடைமீது சரமாரியாகக் கற்களைவீசி, அதனை மூடும்படி வற்புறுத்தியது. அந்தக் கூட்டத்திலே நானும் கலந்திருந்தேனாதலால் கடைமீது கல்லெறியும் 'கடமை'யைச் செய்தேன். அப்போது 'அஹிம்சை' பற்றி எனக்கு அதிகமாக எதுவும் தெரியாது. எனது செயலிலுள்ள வெறித்தனம் இளம்பருவம் காரணமாக எனக்கு அப்போது விளங்கவில்லை"[6] என்கிறார். இங்குக் 'கடமை' என்று எழுதியிருப்பது சற்று நகைச்சுவை பயப்பதாய் உள்ளது. மேலும் அஹிம்சை பற்றி எதுவும் தெரியாது என்று கூறியிருப்பது அவரது கள்ளங்கபடமற்ற உள்ளத்தையும் செய்த தவறுக்கு வருந்தும் மனநிலையையும் வெளிப்படுத்துகின்றது.

1930-இல் நடைபெற்ற உப்புச் சத்தியாகிரகப் போர் பற்றி எழுதும்போது அன்று தமிழகக் காங்கிரஸ் தலைவர்கள் செய்த தவறு பின்னாளில் ஆந்திரர்கள் தமிழகத்தின் தலைநகராம் சென்னைமீது உரிமை கொள்ளுமளவுக்கு இடம்கொடுத்து விட்டதைச் சுட்டிக்காட்டுகிறார். உப்புச் சத்தியாக்கிரகப் போரில் ம.பொ.சி. பங்கேற்ற போது அவர் பெற்ற பரிசு அத்துணை பெருமைப்படும்படியாக இல்லை என்பதை அவரே கூறுகிறார், "உப்புச் சத்தியாக்கிரகத்தில் சென்னை நகரில் உப்புக் காய்ச்சிய

தொண்டர்களைப் போலீசார் பிரம்பால் அடித்துக் கலைத்தனர். எனக்கும் சில அடிகள் கிடைத்தன. ஆனால், நான் பெருமைப்பட்டுக் கொள்ளக்கூடிய அளவில் இரத்தக்காயம் ஏற்படவில்லை; தழும்புகள்தான் ஏற்பட்டன"[7]

உப்புச் சத்தியாக்கிரகம் சட்ட மறுப்புப் போராக மாறிய பின்னர் நடந்த மறியல் போரில் கலந்துகொண்டார் ம.பொ.சி. அன்று மறியல் செய்த தொண்டர்களைப் போலீசார் என்றுமில்லாத அளவுக்கு அடித்து நொறுக்கிவிட்டனர். ம.பொ.சி.க்குத் தோள் பட்டையிலும், இடது தொடையிலும் காயம் ஏற்பட்டது. இதன் பின்னர் நடைபெற்ற கள்ளுக்கடை மறியல் போரிலும் ம.பொ.சி. கலந்து கொண்டார். கள்ளுக்கடை மறியல் ம.பொ.சி.க்கு ஒரு பயங்கர சோதனையாக அமைந்தது. இக்காலக் கட்டத்தில் ம.பொ.சி. வெறிபிடித்த காங்கிரஸ்காரராகவே விளங்கினார். இதனை, "நான் காங்கிரசில் புகுந்த ஆரம்ப ஆண்டுகளிலேயே தேசபக்த வெறி பிடித்தவன் ஆகிவிட்டேன். தொழிலாளியானதால், உண்மை உணர்ச்சியோடு காங்கிரஸ் பணிகளிலே இரண்டறக் கலந்து விட்டேன். காங்கிரசை விரோதிப்பவர்களை எனது சொந்த விரோதிகளாகக் கருதுமளவுக்கு எனக்குக் காங்கிரஸ் வெறி பிடித்திருந்தது. காந்தியடிகளை யாரேனும் குறை கூறிவிட்டால், அதைக் கேட்டு என் மனம் பதட்டமுறும்"[8] என்று விளக்குகிறார் ம.பொ.சி.

ம.பொ.சி. அவர்கள் வடசென்னை மறியல் கமிட்டியின் செயலாளராக இருந்து நேராக மறியலில் ஈடுபட வேண்டியிருந்தது. அவருடைய பெற்றோர் அவருடைய மறியல் போராட்டத்தைப் புனிதப் பணியாகவே கருதி அவரை உற்சாகப்படுத்தினர். ஆனால் அவரைச் சார்ந்த பிறர் அவரை வெறுத்தனர்.

காந்தியடிகள் கைதானதை ஒட்டி நடைபெற்ற கிளர்ச்சியின் காரணமாகப் போடப்பட்டிருந்த 144 தடை உத்தரவை மீறியதற்காக ம.பொ.சி. பலமுறை கைது செய்யப்பட்டு அவ்வப்போது விடுதலை செய்யப்பட்டார். 1932-இல் திருவல்லிக்கேணிக் கடற்கரையில் 'தமிழா! துள்ளியெழு!' என்னும் தலைப்புடைய சட்டவிரோதமான ராஜதுவேஷப் பிரசுரம் ஒன்றைக் கடற்கரையில் கூடியிருந்த மக்களிடையே வழங்கியதற்காக

ம.பொ.சி. கைது செய்யப்பட்டு ஆறு மாதம் கடுங்காவல் தண்டனை பெற்றார்.

1935-இல் நாடு முழுவதும் நடைபெற்ற டில்லி அசெம்பிளித் தேர்தலிலும், 1936-இல் நடைபெற்ற சென்னை மாநகராட்சித் தேர்தலிலும் காங்கிரஸ் வேட்பாளர்களின் வெற்றிக்காகப் பாடுபட்டார் ம.பொ.சி. 1937-இல் சென்னை மாவட்டக் காங்கிரஸ் கமிட்டியின் செயலாளராகப் பொறுப்பேற்றார். 15-5-1941-இல் ம.பொ.சி. தனிநபர் சத்தியாகிரகத்தில் ஈடுபட்டு கைதாகி ஆறு வாரகாலம் சிறைத் தண்டனை பெற்றார். 1942-இல் நாடெங்கிலும் நடைபெற்ற ஆகஸ்ட் கிளர்ச்சியை ஒட்டி ம.பொ.சி. கைது செய்யப்பட்டு ஆகஸ்டு 13-இல் வேலூர் சிறையில் அடைக்கப்பட்டார். அந்த மாதம் 30-ஆம் தேதியன்று ம.பொ.சி. வேலூர் சிறையிலிருந்து அமராவதிச் சிறைக்கு மாற்றப்பட்டார்.

இந்த அமராவதிச் சிறைச்சாலை ம.பொ.சி.க்குக் கல்லூரியாக மாறியது. பல இலக்கிய நூல்களை இச்சிறையிலிருந்த போதுதான் அவர் கற்றதாகக் குறிப்பிடுகின்றார். அமராவதிச் சிறையிலிருந்து உடல் நலக்குறைவினால் பரோலில் வெளியே வந்தார் ம.பொ.சி. பின்னர் சில நாள்கழிந்து பரோல் முடிந்ததும் வேலூர்ச் சிறையில் அடைக்கப்பட்டார். அங்கிருந்து தஞ்சைச் சிறைக்கு மாற்றப் பட்டார். பின் உடல்நலக் குறைவால் வெளியே விடப்பட்டார். இவ்வாறு சுதந்திரப் போராட்டக் காலத்தில் பலமுறை சிறைசென்று இன்னல் பல உற்றார் ம.பொ.சி.

ஏறத்தாழ இருபத்து நான்கு ஆண்டுகள் இடைவிடாது போராடியதன் பயனாகவே இந்திய விடுதலையைக் காணமுடிந்தது. இருபத்து நான்கு ஆண்டுகள் போராடிப் பெற்ற சுதந்திரம் என்பதால் அந்நாளைத் துக்க நாளாகக் கடைப்பிடிக்கும்படி கூறிய ஈ.வெ.ரா.வின் கருத்தை ம.பொ.சி. மிகவும் வெறுப்புடன் விமர்சித்தார். அதற்கு மாறாகத் தமிழ்மக்கள் அந்நாளைக் கொண்டாட வேண்டும் என்றும் அறிக்கைவிட்டார்.

விடுதலைப் போரில் கலந்து கொண்ட ம.பொ.சி. விடுதலை நாளில் இந்தியா விடுதலை அடைந்ததை எண்ணி மகிழ்ச்சியடைய இயலாத வகையில் அவருடைய தமிழுணர்வு அவரைத் துயருறச் செய்தது. இந்திய விடுதலையை முழுமையான விடுதலையாகக் கருத

முடியாது என்றும்; தனித்தமிழரசு அமையும் நாளையே உண்மையான தமிழினத்தின் விடுதலையாகக் கருதமுடியும் என்றும் தம் அறிக்கையில் குறிப்பிட்டு, தனித் தமிழரசினைப் புதிய தமிழகத்தைப் - போராடிப் பெறுவோம் என்று உறுதிகொள்ளுமாறு தமிழினத்துக்கு அறிக்கை விடுத்தார். 1956-இல் தான் அவர் விரும்பிய தனித்தமிழ் அரசு - மொழிவாரி மாநிலம் அமைந்தது.

## தமிழக விடுதலையும் எல்லைப் போரும்

இந்திய விடுதலைப் போரில் கலந்துகொண்டு பலமுறை சிறை சென்று இன்னலுற்ற ம.பொ.சி. இந்தியா விடுதலை பெற்ற பின்னரும் ஓய்வு பெறவில்லை. விடுதலை நாளான ஆகஸ்டு 15-ஆம் நாள் குறித்துப் பேசும்போது விடுதலைப் போர் முடிந்துவிட்டதாகக் கூற முடியாது என்கிறார். தனித்தமிழரசு அமையும் நாளே உண்மையான விடுதலை நாள் என்றும் அதுவரை விடுதலைப் போர் தொடர்கிறது என்றும் விளக்கம் தருகிறார். இதனை அவர் கூற்றில் காண்போம். "இந்தியப் பெருநாடு விடுதலை பெறுவதற்காகப் பாடுபட்ட சான்றோர்களிலே தொண்டர்களில் ஒருவனாக இருக்கும் பேற்றினைக் காலம் எனக்குத் தந்தது. ஆனால் பாரதம் சுதந்திரம் பெற்ற ஆகஸ்டு 15-ஆம் தேதியோடு விடுதலைப் போர் முடிந்துவிட்டதாக நினைப்பதற்கில்லை. அன்று போர்முனை மாறியது; போர் முறை மாறியது. ஆனால் போர் தொடர்கின்றது. இது என் சித்தாந்தம். சுதந்திர இந்தியாவிலே மொழிவாரி தேசிய இனங்களின் தாயகமான மாநிலங்கள் முழு அளவு சுயாட்சி பெற்று விளங்கும்போதுதான் சுதந்திரப்போர் முடிந்ததாகக் கருதமுடியும்" என்று கூறும் ம.பொ.சி. அடுத்தகட்டப் போர் தொடங்கி விட்டதாகக் கூறுகிறார். இந்தியா விடுதலை அடைவதற்கு இன்னும் ஒரு சில திங்கள்களே உள்ளன என்ற நிலையில் 1947-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 15-ஆம் நாள் வெளியான 'தமிழ்முரசு' இதழில் ம.பொ.சி. எழுதுவதைக் காண்போம்.

"தமிழினமே எழுக!

இந்தியாவின் சுதந்திரப்போர் முடிவுக்கு வந்துவிட்டது. ஆனால் தமிழ்நாட்டின் சுதந்திரப்போர் இப்போதுதான் ஆரம்பமாகின்றது!" என்று தமிழினத்தாருக்கு - தமிழ்நாட்டு மக்களுக்கு அழைப்புவிடுக்கிறார். "தமிழினத்தார் தனிப்போர்

தொடங்கினாலன்றிச் சிதைவுற்ற தமிழ்நாட்டை ஒன்று படுத்துவதும்; தமிழரசை நிறுவுவதும் ஒரு நாளும் இயலாத காரியம்" என்று தமிழ் மக்களை எச்சரிக்கிறார். "தமிழினம் ஒன்றுபட்டுப் போர் தொடங்கினாலன்றித் தமிழ்நாட்டுக்கு விடுதலை இந்த யுகத்தில் இல்லை என்பது திண்ணம்!'' என்று அச்சுறுத்தி அனைத்துத் தமிழரும் விடுதலைப் போரில் ஈடுபடத் தூண்டுகிறார். தேசியம் பேசும் தமிழர்களையும் தமது அணிக்கு வருமாறு அழைக்கிறார் ம.பொ.சி! "தேசியவாதிகளே உங்கள் நாட்டின் வடக்கெல்லை வேங்கடமலை என்பதைத் திண்ணமாக உணருங்கள். நேற்றைய நிலை எதுவாயினும் சரி, இனி நமது தேசபக்திக்கு எல்லை வடவேங்கடமாய் இருக்கட்டும். உரிமை பெற்ற தமிழகம் உறவுக்கு இமயத்தை எல்லையாகக் கொள்ளும். இதில் யாதோர் ஐயமும் வேண்டாம்" என்று தேசிய வாதிகளுக்கு உறுதியளிக்கிறார். தமிழகம் மொழிவாரி மாநிலமாகப் பிரிக்கப்பட்டாலும், இந்தியக் கூட்டாட்சியில் ஓர் அங்கமாகவே இருக்கும் என்று தேசியவாதிகளுக்காக - எங்கே தமிழ்நாடு தனியாகப் பிரிந்துவிடுமோ என்று அஞ்சும் தேசியவாதிகளுக்காக- உறுதியளித்தார். இவ்வாறு உறுதியளித்த பின்னும் இன உணர்வற்றுத் தேசியம் பேசும் தேசியவாதிகளைப் பார்த்து "அடிமைத் தமிழ்நாட்டில் இன உணர்ச்சியற்ற இந்தியத் தேசியம் என்பது தற்கொலைக்கு ஒப்பான காரியமாகும்"[9] என்கின்றார்.

இந்தியா விடுதலை பெறவிருக்கும் சூழலில், தொலை நோக்குடன் நாட்டு நடப்புகளைக் கூர்ந்து கவனித்து என்ன நடக்க இருக்கிறது, என்ன நடக்கக் கூடும் என்பதை நுட்பமாக அலசி ஆராய்ந்து தமது பத்திரிகையாகிய 'தமிழ்முரசு' இதழில் பின்வருமாறு எழுதுகிறார். "மொழிவாரி மாகாணங்கள் பிரிக்கும் வேலை அடுத்த டிசம்பரில் அரசியல் நிர்ணய சபை கூடியதும் ஆரம்பமாகப் போகிறது. இதை முன்னிட்டு ஒவ்வொரு மொழியினரும் தங்கள் தங்கள் நாட்டின் எல்லை இதுவென நிர்ணயிக்க முனைந்துவிட்டனர். முக்கியமாக ஆந்திர, கன்னட, கேரள, மகாராஷ்டிர மாகாணங்களின் அரசியல் தலைவர்கள் இத்துறையில் கட்சி வேற்றுமையின்றிக் கைகோத்து வேலை செய்கின்றனர். அங்கெல்லாம் எல்லை நிர்ணயக் கமிட்டிகளும் அமைக்கப்பட்டுவிட்டன. எனவே தமிழர்களாகிய நாமும் சிதறுண்ட பகுதிகளை ஒன்றாக்கி ஓர் புதிய தமிழகத்தைக் காண்போமாக!"[10]

என்ற பகுதியில் ஆந்திர, கன்னட, கேரள, மகாராஷ்டிர மாகாணங்களில் அரசியல் தலைவர்கள் இத்துறையில் கட்சி வேற்றுமையை மறந்து ஒன்றாகக் கைகோத்துக் கொண்டு ஒற்றுமையுடன் வேலை செய்கின்றனர் என்று கூறியதற்குக் காரணம் இக்காலக் கட்டத்தில் திராவிடக் கழகத்தினர் மொழிவாரி மாகாணக் கிளர்ச்சியில் பங்கெடுக்க வேண்டாம் என்றும் பிரச்சாரம் செய்ததுதான். திராவிடக் கழகத்தின் இதழான விடுதலையில் பின்வரும் செய்தி இருந்தது.

"தமிழ்நாட்டைத் தனியாகப் பிரிக்கவேண்டும் என்பது, தமிழரசு, தமிழராட்சி, தமிழ் மாகாணம் என்று பேசப்படுவன வெல்லாம் நம்முடைய சக்தியைக் குறைப்பதற்காகவும், குலைப்பதற்காகவும் செய்யப்படுகின்ற காரியங்கள் என்பதை நீங்கள் உணரவேண்டும்" - விடுதலை (11-4-1947) இது தமிழர்களுக்கு அறிவுறுத்தும் ஓர் எச்சரிக்கையாகவே விடுதலை இதழில் வெளியிடப்பட்டிருந்தது. இதனைப் போன்றே அடுத்த ஒரு விடுதலை இதழிலும் பின்வரும் வேண்டுதல் பிரசுரமாயிருந்தது.

"மொழிவாரி மாகாணங்கள் பிரிவதிலுள்ள கேட்டையும் விபரீதத்தையும் முன்னரே பல தடவை எடுத்துக்காட்டியுள்ளோம். மீண்டும் கூறுகிறோம்... மொழிவாரி மாகாணக் கிளர்ச்சியில் தமிழர் மட்டும் கலந்து கொள்ள வேண்டாம்" என்ற ஒரு வேண்டுதலையும் வெளியிட்டிருப்பதே மற்ற மாநிலங்களில் கட்சி வேறுபாடு இல்லாது ஒற்றுமையுடன் கைகோத்து வேலை செய்கிறார்கள் என்று சுட்டிக் காட்டியதற்குக் காரணமாகும். திராவிடக் கழகமும், ஜஸ்டிஸ் கட்சியும் இவ்வாறு மக்களைத் தூண்டிவிட்டு மொழிவாரி மாநிலப் பிரிவினைக்குத் தடையாக நின்று ம.பொ.சி.யின் தலைமையிலான போராட்டத்தைப் பலவீனப்படுத்த முயன்று கொண்டிருந்தது ஒரு பக்கம். இன்னொரு பக்கம் தேசியம் பேசிய பேசிக் கொண்டிருந்த - தமிழகக் காங்கிரஸ் கட்சிக் காரர்களும் மொழிவாரி மாநிலப் பிரிவினையைப் பிரிவினை வாதம் என்று கருதினர். மொழிப்பற்றை எவ்வாறு குறுகிய நோக்கம் என்று காங்கிரஸ்காரர்களில் பலர் எண்ணினார்களோ அதனைப் போன்றே தமிழகத்தின் எல்லை பறி போகாமல் இருக்க வேண்டும் என்ற உரிமைக் குரலைக்கூடக் குறுகிய மனப்பான்மை என்றே கருதினார்கள். "தமிழகத்தின் எல்லைக்கு என்ன சான்றிருக்கிறது?"

என்று கேட்டு ம.பொ.சியின் கருத்தை எள்ளி நகையாடினார்கள். இவ்வாறு தமிழ்நாட்டிற்குள்ளேயே பல எதிர்ப்புகளை ம.பொ.சி. சமாளிக்க வேண்டியிருந்தது. புறப்பகையைப் போரிட்டு வென்று விடலாம். அகப்பகையை என் செய்வது? ஆனால் தன் விடா முயற்சியால் அகப்பகையாளர்களைப் பொருட்படுத்தாது மக்களை ஓரணியில் திரட்டித் தம் போராட்டத்தை வலிமைப்படுத்தினார் ம.பொ.சி.

அகப்பகையாம் திராவிடக் கழகத்தின் எதிர்ப்பையும் அன்போடு அணுகிக் களையும் முயற்சி மேற்கொள்ளத் தயங்க வில்லை ம.பொ.சி. திராவிடக் கழகத் தலைவர் ஈ.வே.ரா. பெரியார் மாகாணங்களை மொழிவாரியாகத் திருத்தி அமைக்கும் கொள்கையினால் "சென்னை மாகாணத்தை நான்கு கூறுகளாக ஆக்க வேண்டும் என்பது கண்டிப்பாக அரசியல் வாழ்வையே தங்கள் ஜீவனமாக - வியாபாரமாக - பதவி பட்டம் பணம் சேர்த்தல் முதலிய காரியங்களுக்கு வழியாக நடத்தும் சிலர் தங்கள் நலனுக்காக இதை, இந்தப் பிரிவினையை வேண்டுவார்களானால், வலியுறுத்துவார்களானால், கிளர்ச்சி செய்வார்களானால் இதற்கு இடம்கொடுப்பது திராவிட கலாச்சாரத்திற்கும், திராவிட சமுதாயத்திற்கும், திராவிடத் தலைமொழியாகிய தமிழுக்கும் தேய்வு - அழிவு ஏற்படும்"[11] என்று கருதிய கருத்தைத் தன் விளக்கமொன்றால் மாற்ற முயன்றார் ம.பொ.சி. அவ்விளக்கம் பின்வருமாறு:

"மொழிவாரி மாகாணப் பிரிவினையால் திராவிடத் தலைமொழியாகிய தமிழுக்கு தேய்வு - அழிவு ஏற்படும் என்று பெரியார் நம்மை எச்சரிக்கிறார். உண்மையில் தமிழரைத் தவிர ஆந்திர, கேரள, கன்னட இனத்தவர்களில் எவரேனும் தமிழ்தான் தங்கள் மொழிகளின் தாய்மொழி - தலைமொழி என்பதை ஒப்புக் கொள்கிறார்களா? இல்லை என்பதைப் பெரியாரின் உள்ளமே அறியும். கட்டாய இந்தி எதிர்ப்புப் போரில் பேச்சளவில் கூடப் பிற இனத்தவர்களில் எவரும் ஆதரவு காட்டாததே இதற்குச் சரியான அத்தாட்சியாகும். இந்நிலையில், தமிழினத்தார் மட்டும் தனி மாகாணம் கோருவதை எதிர்த்து வாய்க்கு வந்தபடியெல்லாம் வசை புராணம் பாடுவது அழகல்ல. அதுவும் மொழிப் போரில்

தமிழர் ஒன்றுபட்டுப் பணியாற்ற வேண்டிய இந்நேரத்தில் இத்தகைய பிளவுப் பிரச்சாரத்தை நடத்துவது விரும்பத்தக்கதல்ல"[12] என்ற விளக்கம் ம.பொ.சி.யின் புலப்பாட்டு நெறிக்குத் தக்கதோர் சான்றாகிறது. ஈ.வே.ரா. பெரியாரின் மறுப்புக்குக் கூறப்பட்ட காரணம் 'திராவிடர்களின் தலைமொழி - தமிழுக்கு அழிவு வரும்' என்பதுதான். இக்கருத்தையே தம் விளக்கத்தின் முதல் பகுதியாக அமைத்துக் கொள்கிறார் ம.பொ.சி. தமிழரைத் தவிர வேறு பிற இனத்தார் தமிழ்மொழியைத் தங்கள் இனத்தின் தலைமொழி என்று ஒப்புக் கொள்வதில்லை என்று கூறி, இந்தி எதிர்ப்பில் யாரும் ஆதரவு தரவில்லை என்று கூறி அதனால் அவர்களால் தமிழ் வளராது என்பதை விளக்கிப் பின் ஈ.வெ.ரா.வின் பிரச்சாரம் நல்லதல்ல என்று விளக்கும் முறை பொறுப்பான ஒரு தலைவரின் பொறுமையான விளக்கமாக அமைகின்றது. போராட்டம் ஒரு புறம் நடந்துகொண்டிருக்க அவ்வப்போது தன் போராட்டத் திற்கான நியாயங்களை மக்கள் மத்தியில் தம் 'தமிழ்முரசு' வாயிலாக வெளியிட்டு மக்களின் ஆதரவைப் பெறுவதையும் தம் போராட்டத் திட்டங்களில் ஒன்றாகக் கொண்டிருந்தார் ம.பொ.சி.

இனஉணர்வு கொள்! ஒன்று சேர்! போராடு! என்பதே ம.பொ.சி.யின் தாரகமந்திரமாக இருந்தது. தமிழ் மக்களிடையே இனவுணர்வை ஊட்டி ஒன்று சேர்த்துப் போராட வைத்தார். தான் கோரும் தமிழரசுக்கு - மொழிவாரித் தமிழ் மாநிலத்துக்கு உலகின் பல்வேறு நாடுகளிலிருந்து எல்லாம் உதாரணம் காட்டித் தன் கோரிக்கை சரி என்று நிலைநாட்டுவார். "தமிழ்க் குடியரசு" என்று சொல்வதே ஐக்கிய இந்தியாவுக்கு முரணானது என்று காமராசர் கூறினார். "கிராமணியார் கேட்பது தனி ஸ்டேட்" என்றும் பிரதிநிதிகளுக்குப் பூச்சாண்டி காட்டினார். தனியரசுகளைக் கொண்டதுதான் ஒரு சமஷ்டி. அஃதன்றி ஆட்டிவைத்தபடி ஆடுகின்ற பல நிர்வாகப் பிரதேசங்களைக் கொண்ட ஒரு அரசாங்கம் சர்வாதிகார சாம்ராஜ்யமே ஒழிய சமஷ்டியல்ல... "யுனைடெட் ஸ்டேட்ஸ் ஆப் அமெரிக்கா" என்பதற்குப் பல அரசுகள் கொண்ட அமெரிக்கக் கூட்டரசு என்பதன்றோ பொருள். அமெரிக்காவில் பல்வேறு குடியரசுகள் ஒரு கூட்டரசில் கலக்க முடியுமானால், இங்கு மட்டும் 'தமிழ்க் குடியரசு' சமஷ்டியோடு கலக்கமுடியாத ஒரு தனியரசு என்று பயப்படுவானேன்?

இஷ்டப்பட்டால் பிரியும் உரிமையுடன் கூடிய தனித்தனி சோஷலிசக் குடியரசுகளின் சேர்க்கைதானே இன்றைய சோவியத் சமஷ்டி. அதேபோன்று இந்தியாவிலும் சுதந்திரக் குடியரசுகளின் கூட்டரசு - ஏன் அமையக் கூடாது? - ஏன் அமைக்க முடியாது? இந்த உண்மைகளை இனியேனும் சிந்திப்பார்களாக!" என்று அமெரிக்க நாடுகளின் அமைப்பையும், சோவியத் நாடுகளின் அமைப்பையும் சான்று காட்டித் தன் கோரிக்கைக்கு வலிவூட்டுகிறார்". மொழிவாரி மாநிலங்கள் பிரிக்கப்பட்டுத் "தமிழரசு" நிறுவப்படுமானால் அத்'தமிழரசு' எப்படி இருக்க வேண்டும் - எப்படி இருக்கும் - என்பது குறித்துத் திட்டங்களை முன்வைக்கிறார் ம.பொ.சி.

ம.பொ.சி. தனது புதிய தமிழகத்தைப் பற்றிக் கூறும் போதெல்லாம் 'அது ஒரு குடியரசு நாடாக, அதுவும் சோஷலிஸக் குடியரசாக அமைய வேண்டும்' என்றே குறிப்பிடுகிறார். ம.பொ.சி. அவர்களுக்கு சோஷலிஸக் கருத்துகள் மீது அளவற்ற ஈடுபாடு இருந்ததைக் காணலாம். இதனை அவருடைய கூற்றிலேயே காணலாம். "என்னைக் காந்தியவாதி என்று சொல்லிக் கொள்வதிலே பெருமையடைகிறேன். விஞ்ஞான வழிப்பட்ட சோஷலிசத்தில் - குறிப்பாக மார்க்சியத்தில், எனக்கு அழுத்தமான பற்றுண்டு. காந்தியத்திற்கும், மார்க்சியத்திற்கும் தத்துவரீதியில் நெருங்கிய தொடர்புண்டாதலால், காந்தியவாதியான நான் மார்க்சியத்தில் நம்பிக்கை கொண்டிருப்பதில் முரண்பாடு எதுவுமில்லை"[13] என்று கூறுகிறார். இந்த ஈடுபாடு காரணமாகவே 'காந்தியடிகளும் சோஷலிஸமும்" என்ற நூலை எழுதினார் ம.பொ.சி. மேலும் காந்தியடிகளின் போதனைகளை எல்லாம் ஏற்றுக் கொண்ட ம.பொ.சி. அவருடைய தருமக்கர்த்தாப் பொதுவுடைமையை ஏற்றுக்கொள்ள மறுக்கிறார். இதனை, "காந்தியடிகளைத் தெய்வத்துக்கு சமமாகக் கருதி இன்றளவும் என் இதயக் கோயிலில் அவரை வைத்து வழிபட்டு வருகிறேன். ஆயினும் அவர் போதித்த தருமக்கர்த்தாப் பொதுவுடைமைத் தத்துவத்தை நான் ஏற்றுக் கொண்டதே இல்லை. வாய்ப்பு நேர்ந்தபோது எல்லாம் குறைகூறி வந்திருக்கிறேன்"[14] என்கிறார்.

தருமக்கர்த்தாப் பொதுவுடைமைப் பற்றி எழுதும் ம.பொ.சி. "இந்தத் தத்துவம் தமிழ்நாட்டுக்குப் புதியதன்று. பழைய

இலக்கியங்களிலும் புராணங்களிலும் 'தானம்' என்ற பெயரால் வற்புறுத்தப்பட்டதுதான். அதே கொள்கை தருமக்கர்த்தாப் பொதுவுடைமை' என்ற புதிய பெயரில் புகுந்துள்ளது". இந்த அற உபதேசங்களின் பயனாக நாட்டில் இங்கும் அங்குமாகக் கோவில்களும், கல்விச் சாலைகளும், அன்ன சத்திரங்களும் ஏற்பட்டன. ஆனால் சுரண்டல் கொடுமையிலிருந்து பாட்டாளி மக்கள் சுகபோக வாழ்வு வாழ வழிதோன்றவில்லை" என்றும் பேசுகிறார்.

"பிறரது உழைப்பைத் திருடி லட்சக்கணக்கில் பணம் சேர்ப்பவனுக்குப் பெயர் பிரபு. பொருளோடு புகழையும் விரும்பி அற்பக் காசுகளைத் தானம் என்ற பெயரில் திருடு கொடுத்தவர்களுக்கே திருப்பிக் கொடுப்பானாயின் அவர் பெயர் வில்லன்" என்று கூறி இறுதியில், "தருமக்கர்த்தா பொதுவுடைமைத் தத்துவம்" எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முன்பே தோல்வி அடைந்துவிட்டது. மீண்டும் அதனை ஏற்றுக் கொள்வது தற்கொலைக்கு ஒப்பான செயல்"[15] என்று எழுதினார். தமிழ் நூல்களில் பல சோஷலிசக் கருத்தைக் கூறுவதாகக் கூறுகிறார் ம.பொ.சி. இதனாலேயே, "தமிழா உன் தாய்மொழியான தமிழ்மொழியே சோஷலிசத்திற்கு ஏற்றது"[16] என்பார். "எளிதில் சோஷலிச சமுதாயத்தைப் படைக்கவல்லது தமிழே"[17] என்பார். சிலம்பிலே 'காவலன்' என்ற சொல்லால் நாடாண்ட மன்னன் பாண்டியனையும் குறிப்பிடுகின்றார். அவனது அரண்மனையில் வாயில் காத்தவனையும் குறிப்பிடுகிறார் இளங்கோ. ஆம் நாடு காத்தவனையும் வீடு காத்தவனையும் ஒன்றாக மதிப்பிட்டது. இவை எல்லாம் தமிழ் காட்டும் சோஷலிசம்!"[18] என்கிறார்.

திருக்குறள் காட்டும் சமுதாயத்தைச் சோஷலிச சமுதாயம் என்று கூறாமல் வேறு எப்படித்தான் சொல்வது? என்று வினவுகிறார் ம.பொ.சி. கம்பர் ஒரு சோஷலிஸ்ட், ஔவையார் ஒரு சோஷலிஸ்ட் என்று தமிழ்நாட்டுப் புலவர்களை எல்லாம் சோஷலிஸ்ட் என்கிறார் ம.பொ.சி. அவருக்கு சோஷலிச நாட்டின்மீது அதிக ஈடுபாடு உள்ளமை இதனால் வெளிப்படுகின்றது. இதனாலேயே தமது 'புதிய தமிழகம்' சமத்துவம் போற்றும் சோஷலிச நாடாக இருக்கும் என்றார். புதிய தமிழகம்

எப்படி அமையவேண்டும் என்று ம.பொ.சி. எழுதியிருந்த பகுதி பின்வருமாறு:

"— தமிழ் வளர, தமிழர் வாழ, தமிழ்நாடு செழிக்கத் 'தமிழரசு' வேண்டும். அத்தகைய சுதந்திர அரசியலை நிர்ணயிக்கும் உரிமை தமிழருக்கு உண்டு.

மேற்சொன்ன சுயநிர்ணய உரிமை இந்தியாவிலுள்ள எல்லாத் தேசிய இனங்களுக்கும் உண்டு என்பதே நமது கொள்கை. இந்தக் கொள்கை சமரச முறையில் ஒப்புக் கொள்ளப்பட்டு அமுலுக்கு வருமானால், தமிழன் புதிய தமிழகம் காண்பான். பழைய தமிழரின் பண்பாடும், இன்றைய புதிய உலகத்தின் புத்துணர்ச்சியும் கொண்ட புதிய தமிழினத்தைச் சமைப்பான். அந்தப் புதிய தமிழகத்தின் அமைப்பும் தமிழினத்தின் வாழ்வும் பின்வருமாறு இருக்கும்....."

தமிழ்நாட்டைத் தாய்நாடாகவும், தமிழ்மொழியைத் தாய்மொழியாகவும் கொண்டு வாழும் தமிழ்நாட்டின் நிரந்தரக் குடிகளனைவரும் தமிழராகக் கொள்ளப்படுவர். தமிழர் எங்கெல்லாம் பெருவாரியாக வசிக்கிறார்களோ, அந்தத் தொடர்ச்சியான பிரதேசங்கள் தமிழ்நாடாகக் கொள்ளப்படும். வயது வந்தவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் கூடித் தமிழகத்தில் சுதந்திரத் தமிழரசை அமைப்பர்.

அந்தப் புதிய தமிழரசு, தனியரசுத் தத்துவத்தையே அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்படும் என்றாலும், கடந்த காலச் சுதந்திரப் போராட்டத்தில் இந்தியத் தேசிய இனங்கள் அடைந்துள்ள ஒற்றுமை உணர்ச்சி, விஞ்ஞான வளர்ச்சி, சர்வதேச நிலை ஆகியவை காரணமாக, தமிழரசு, தானே தன் விருப்பத்தின் மீது ஏனைய இன அரசுகளடங்கிய இந்திய சமஷ்டியில் இணைய வேண்டும்.

தமிழரசானது, தனது கலாச்சாரத்துடன் நெருங்கிய தொடர்புள்ள ஆந்திர, கேரள, கன்னட இன அரசுகளுடன் கூட்டுறவு கொண்டு ஒரு சிறு சமஷ்டியை நிறுவிக் கொள்ளும் உரிமையையும் உடையதாயிருத்தல் வேண்டும். புதிய தமிழகத்தில் சகல துறைகளிலும் தமிழ்மொழியே ஆட்சி செலுத்தும். ஆயினும் தமிழுக்குக் கேடு பயக்காத முறையில் வேறு எந்த மொழியையும் யாரும் இஷ்டப்பட்டுக் கற்க உரிமையுண்டு.

மத விஷயங்களில் அரசாங்கம் பூரண நடுநிலைமை வகிக்கும். ஒடுக்கப்பட்ட மக்களை உயர்த்துவதிலேயே அரசாங்கம் தனது சக்தியை முதன்மையாகச் செலவழிக்கும். மனிதனுக்கு மனிதன் உயர்வு தாழ்வு கற்பிக்கும் பழக்கவழக்கங்கள் சட்டப்படி தடுக்கப்படும். ஏற்றமும் இழிவுமில்லாத சமத்துவ குணத்தை ஊட்டும் கல்விமுறையையே சர்க்கார் பின்பற்றும்.

சமயச் சார்பற்ற கலைகளை வளர்க்கும் பொறுப்பை அரசாங்கம்தானே மேற்கொள்ளும்.

மேற்சொன்ன வகையில் ஒரு புதிய தமிழகத்தைப் படைக்கத் தமிழரசு ஒன்றினால்தான் முடியும். அத்தகைய அரசு வேண்டுமென்று முரசு கொட்டுவோம்" (தமிழ்முரசு - மே, 1946).

சிலம்புச் செல்வர் தாம் காணவிருக்கும் புதிய தமிழகத்தின் அமைப்புப் பற்றி இவ்வாறெல்லாம் திட்டமிட்டுக் கொண்டிருக்கும் நேரத்தில், அரசியல் நிர்ணய மன்றத்தின் தலைவரான டாக்டர் பாபு ராஜேந்திர பிரசாத் ஓய்வு பெற்ற உயர்நீதி மன்ற நீதிபதி என்.கே. தார் தலைமையில் ஒரு கமிஷனை அமைத்தார். இக்கமிஷன் மாநிலங்களை மொழிவாரியாகத் திருத்தியமைப்பது அவசியம்தானா? அவசியமானால், அதற்காக என்ன என்ன செய்யவேண்டும் என்பனவற்றை ஆராய்ந்து ஓர் அறிக்கை தருவதற்காகவே நியமிக்கப்பட்டது. உடனே தமிழ் மக்கள் அந்தக் கமிஷனைச் சந்திக்கத் தயார்படுத்த வேண்டியதன் அவசியத்தை ம.பொ.சி. உணர்ந்தார். அதனால் தன்னுடைய தமிழரசுக் கழகத்தார்க்குப் பின்வரும் வேண்டுகோளை விடுத்தார்.

"தோழர்களே! சோதனைக்காலம் நெருங்கிவிட்டது! நாம் நமது கடமையைச் செய்ய வேண்டும். பின்வரும் பகுதியை நாடெங்குமுள்ள கழகங்கள் தீர்மானமாக நிறைவேற்றி, தார் கமிஷனுக்கும், கவர்னர் ஜெனரல் இராஜாஜிக்கும் அனுப்ப வேண்டும். "மாகாணப் பிரிவினையைத் துரிதப்படுத்தத் தார் கமிஷன் அமைக்கப்பட்டது குறித்து மகிழ்ச்சி அடைகிறோம். என்றாலும், மக்களின் கருத்தறிய கமிஷன் எடுத்துள்ள கேள்விகளில் 'மாகாணப் பிரிவினை வேண்டுமா?' என்ற முதற்கேள்வியையும் மாகாணப் பிரிவினைக்கு முட்டுக்கட்டையாக அமையக் கூடியதாக உள்ள வேறு பல கேள்விகளையும் நாங்கள் பலமாக ஆட்சேபிக்கிறோம். குமரிமுனையைத் தெற்கெல்லையாகவும்,

திருப்பதியை வடக்கெல்லையாகவும் சென்னையைத் தலைநகராகவும் கொண்ட இந்திய யூனியனுக்குட்பட்ட சுயாட்சியுடைய தமிழ் மாகாணத்தை அமைக்க வேண்டுமென்று வலியுறுத்துகின்றோம்".

இந்தத் தீர்மானத்தைத் தனிப்பட்டவர்களும் கூடத் தங்கள் கருத்தாகக் கடிதம் மூலம் கமிஷனுக்கு அனுப்பலாம்"[19] என்ற அறிக்கை தமிழ் முரசிலும் அனைத்து நாளிதழ்களிலும் வெளியானது. இப்படி ஒவ்வொரு காலக்கட்டத்திலும் தமிழரசுக் கழகம் எல்லைக்காகவும், தனித்தமிழ் மாகாணத்துக்காவும் போராடியது. இப்போராட்டத்தை ம.பொ.சி. அவர்களே தலைமையேற்று நடத்தினார். இந்த அறிக்கையைத் தனித் தமிழ் மாநிலம் என்பதும் - தமிழக எல்லைகளைக் குமரி முதல் திருப்பதி வரை எனக் குறித்திருப்பதும் ம.பொ.சி.யின் தொலைநோக்குப் பார்வையை வெளிப்படுத்துகின்றன. இந்த எல்லைகளை இப்போது இல்லை என்றாலும் எதிர்காலத்தில் போராடியேனும் பெறுவோம் என்பது குறிப்பால் உணர்த்தப்பட்டுள்ளது.

ம.பொ.சி. என்ற மூன்றெழுத்துச் சொல் ஒரு காலத்தில் தமிழ்நாட்டு அரசியலில் பெரும்பரபரப்பை உண்டாக்கிக் கொண்டிருந்தது. இவர் பல போராட்டங்களில் ஈடுபட்டு இருந்தாலும் எல்லைப் போராட்டத்தில்தான் இவருடைய முழு ஆற்றலும் வெளிப்பட்டது. மொழிவாரி மாநிலம் அமையவிருக்கும் சூழலில் தமிழகத்தின் எல்லைகள் எவை என்பதில் மிகவும் கவனத்தோடு அக்கறை காட்டியவர் ம.பொ.சி. இவர் மட்டும் இல்லாதிருந்தால் இன்றைய தமழகத்தில் திருத்தணிகை மலையும், தென்குமரியும் இருந்திருக்காது. முன்னது ஆந்திரத்திலும், பின்னது கேரளாவிலும் இணைக்கப்பட்டிருக்கும் அவற்றைத் தமிழகத்துக்குப் பெற்றுத் தந்த பெருமை ம.பொ.சி. அவர்களையே சாரும். எல்லைப் போராட்டத்தில் ம.பொ.சி. ஆற்றிய பணிகளை விரிவாகக் காணலாம்.

தமிழகத்தின் எல்லை குறித்த கருத்தினைப் பண்டைய இலக்கியங்களிலிருந்தே தான் பெற்றதாகக் கூறுகின்றார் ம.பொ.சி. 'இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த பெரும்புலவர் பனம்பாரனார் தொல்காப்பியத்துக்கு எழுதிய பாயிரத்தில்,

'வடவேங்கடந் தென்குமரி ஆயிடைத்
தமிழ் கூறும் நல்லுலகம்'

என்று பாடியுள்ளார்" என்கிறார். "சமீப காலத்தில் வாழ்ந்த கவிஞரான பாரதியாரும் இதே கருத்தினைத் தன் பாடலில் வலியுறுத்திச் செல்கின்றார்.

"நீலத் திரைக்கட லோரத்திலே - நின்று
நித்தந் தவம்செய்யும் குமரிஎல்லை - வட
மாலவன் குன்றம் இவற்றிடையே - புகழ்
மண்டிக் கிடக்கும் தமிழ்நாடு"

இந்த இரு பாடல்களும் தமிழகத்தின் எல்லைகளை ம.பொ.சி.க்கு வலியுறுத்தின. இதனைக் குறித்துப் பேசும் ம.பொ.சி., "ஆனால் இந்த வேங்கடம் இன்று ஆந்திர மாகாணத்தைச் சேர்ந்ததாகக் கருதப்படுகிறது. சென்னை மாகாணத்தில் தற்போதுள்ள ஜில்லாக்களின் பிரிவினை அதில் வாழும் மக்களின் சம்மதத்தின் மீது செய்யப்பட்டதல்ல. ஆளப்படுவோரின் சம்மதமின்றி ஆள்வோரால் செய்யப்பட்டதேயாகும்" என்கிறார். மேலும் இதற்கான சான்றுகளைத் தேடி வெளிக்கொண்டு வருகிறார் ம.பொ.சி.

"1911-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31ஆம் தேதி வரையில் வட ஆற்காடு ஜில்லாவில்தான் திருப்பதி மலை இருந்தது. அந்த நாளில் வட ஆற்காடு ஜில்லா மிகப்பெரியதாய் இருந்த காரணத்தால் நிர்வாக நலன்களை முன்னிட்டு வட ஆற்காடு ஜில்லாவைச் சேர்ந்த திருத்தணி, திருக்காளத்தி, கங்குந்தி, சந்திரகிரி, புங்கனூர், பல்மனேரி, சித்தூர் தாலுக்காக்களையும், கடப்பை ஜில்லாவிலிருந்து மதனபல்லி, வாயல்பாடி என்ற இரண்டு தாலுக்காக்களையும் இணைத்து சித்தூர் ஜில்லா உருவாக்கப் பட்டது" என்ற வரலாற்றுச் சான்றைத் தேடிக்கண்டுபிடித்து வெளியிட்டார்.[20]

"மொழிவாரி மாநிலங்களைப் பிரிக்கையில் ஒரு பிரதேசம் எந்த இனத்திற்குரியது என்பதைத் தற்போது அதில் வாழும் மக்களின் விருப்பத்தையும் அதனுடைய நீண்டகால சரித்திரத்தையும், இலக்கியச் சான்றுகளையும் ஆதாரமாகக் கொண்டே முடிவு செய்யப்பட வேண்டும்"[21]. "தமிழ்நாட்டின் நீண்ட கால

இலக்கியங்களில் காணப்படும் வரலாறுகளின் படி தமிழ்நாட்டின் வடக்கெல்லை திருப்பதி என்பது திருத்தத்திற்கு இடமில்லாத ஓர் தீர்ப்பாகவே கொள்ள வேண்டும்"[22] என்று எழுதினார் ம.பொ.சி.

தமிழ்நாட்டின் வடக்கெல்லை பற்றிச் சான்றுகள் காட்டி நிறுவியது போலத் தெற்கு எல்லை பற்றியும், தென்மேற்கு எல்லை பற்றியும் பேசும்போது ம.பொ.சி. அவர்கள் மனோன்மணியம் சுந்தரனாரின் பாடல்களைச் சான்றாகக் கூறுவார். "ஆசிரியர் சுந்தரனார் தமது மனோன்மணியம் நாடகத்தின் வாயிலாகத் தெற்கெல்லைக் கிளர்ச்சிக்கு வித்தூன்றிப் போனார். திருவிதாங்கூர் இராஜ்ஜியத்தின் தென்கோடியில் உள்ள 'நாஞ்சில் நாடு' என வழங்கும் 'நன்செய் நாடு' தமிழகத்தின் ஒரு பகுதி என்பதையும் அது தமிழரால் மீட்கப்பட வேண்டிய நிலப்பரப்பு என்பதையும் நினைவூட்டினார்.

"வஞ்சி நாட்டினில்
நன்செய் நாடெனச்
செந்தமிழ் வழங்கும்
தேயமொன் றுளது"

என்று கூறும் பேராசிரியர் சுந்தரனார்,

"சின்னா ளாகச்
சேரன் ஆண்டிடினும்
இன்னாள் வரையும்
அந்நாட் டுரிமை
கொடுத்தது மில்லை
நாம்விடுத் ததுமில்லை!"

என்றும் பாடியுள்ள வரிகள் பிற்காலத்தில் நான் தெற்கு எல்லைக் கிளர்ச்சியைத் துவக்குவதற்கு எனக்கு ஆர்வமூட்டிய வரிகள்" என்கிறார். "அதனால் மனோன்மணியம் சுந்தரனாருக்கு என் மனத்தில் எப்போதுமே ஒரு தனியிடமுண்டு"[23] என்பார் ம.பொ.சி.

"தமிழ்நாட்டின் தென்மேற்கில் சில பகுதிகள் இன்று திருவாங்கூர் சமஸ்தானத்தில் அடங்கியிருக்கிறது. திருவாங்கூர் சமஸ்தானத்தில் மலையாளிகளே பெருவாரியாக வாழ்கின்றனர்.

இந்தக் காரணத்தால் ஐக்கிய கேரளத்தை விரும்பும் கேரளத் தலைவர்கள் முழு திருவாங்கூரும் ஐக்கிய கேரளத்தில் சேர வேண்டும் என்று முழக்கமிடுகின்றனர். 'வல்லார் வகுத்ததே வாய்க்கால்' என்ற வகையிலேயே அவர்கள் வாதமும் அமைந்துள்ளது. ஆனால் நல்லவேளையாகத் திருவாங்கூரில் வாழும் வீரத் தமிழர்கள் 'தமிழ்நாடு தமிழருக்கே' என்று எழுச்சி கொண்டு கிளர்ச்சி செய்கின்றனர். திருவாங்கூர் தமிழர் காங்கிரஸ் என்ற ஸ்தாபனமும் அமைந்துவிட்டது. அவர்களது கிளர்ச்சி வெற்றி பெறுவதாக."[24]

"தமிழ்நாட்டின் தென்மேற்கெல்லையைப் பற்றிய வாதப் பிரதிவாதங்கள் வலுத்துவிட்டதால் அவ்விஷயத்தைச் சிறிது விரிவாக ஆராய்வது பெற்றி பெற ஏதுவாகும்," என்று கூறித் திருவாங்கூரின் மக்கள் தொகைக் கணக்கினைப் பார்த்து பிரச்சினைக்குரிய பிரதேசங்கள் எவையென்று கருதப் படுகின்றனவோ அப்பிரதேசங்களின் மக்கள் தொகையைப் பற்றிய விவரங்களுடன் வாதாட முயல்கிறார் ம.பொ.சி.

"திருவாங்கூரின் மொத்த ஜனத்தொகை 1941 ஆம் ஆண்டின் மக்கள் தொகைக் கணக்கு எடுப்புப்படி அறுபது லட்சத்து ஏழாயிரம். இதில் தமிழர்கள் சுமார் பதினைந்து லட்சம், மலையாளிகள் நாற்பத்தைந்து லட்சம், பிறமொழி பேசுவோர் ஏழாயிரம் பேர். தமிழர்கள் பெருவாரியாக வசிக்கும் பகுதிகளும் அப்பகுதிகளில் மொத்த ஜனத்தொகையில் தமிழர்களின் விகிதாசாரமும் பின்வருமாறு:

| ஊர்ப்பெயர் | தமிழர்கள் சதவிகிதம் |
|---|---|
| தோவாளை | 99.7% |
| அகத்தீஸ்வரம் | 97.3% |
| கல்குளம் | 83% |
| விளவங்கோடு | 80% |
| நெய்யாற்றங்கரைத் தாலுகாவின் தென்பகுதி | 80% |
| நெடுமங்காடு தாலுகாவின் கீழ்ப்பகுதி | 60% |
| தேவிகுளம் | 54% |
| பீர்மேடு | 51% |
| செங்கோட்டை | 99% |

இவ்வாறு தமிழர்கள் பெருவாரியாக வசிக்கும் பகுதிகள் தமிழ்நாட்டோடு சேர்க்கப்பட வேண்டியனவே. இதற்கு வசதியாக மேற்படி ஊர்கள் தமிழ் ஜில்லாக்களை சேர்ந்தாற்போல் இருப்பதை அடுத்துள்ள படத்தில் காணலாம்”[25] என்று தமிழ்நாடு - கேரள வரைபடத்தையும் அதில் மேற்குறித்த ஊர்களையும் சுட்டிக் காட்டித் தெளிவுபடுத்துகிறார் ம.பொ.சி. இந்த அளவுக்குத் தன் கருத்துக்கு அரண்செய்யும் வகையில் புள்ளி விபரங்களைக் கொடுத்து விளக்கியிருப்பதே ம.பொ.சி.யின் தனிச்சிறப்பு. மேலும் இதுகுறித்து எழுதும்போது, “இன்றும் முரசு முழங்குகிறது காரணம் பிற இனத்தவரின் நிலத்தை, பொருளை அல்ல உரிமையை ஆக்கிரமிக்க அல்ல”[26]

‘‘தமிழ்நாடு முற்றுகை இடப்பட்டுள்ளது. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் தமிழரின் அரியாசனத்தைப் பிடித்து ஆட்சி செலுத்துகின்றது. பிற இனத்தவரின் மூலதனங்கள் வேறு தமிழ்நாட்டைப் படையெடுத்துப் பாழ்படுத்துகின்றன”[27]

“தமிழ் நிலம் - தமிழினத்தாரின் தாயகம் - பிற இனத்தவர்களால் முற்றுகையிடப்பட்டுள்ளது. தெற்கே திருவிதாங்கூரில்; வடக்கே திருப்பதியில், சென்னை நகர் மீதும் ஆதிக்க வாசிகளின் அரும்பெடுத்திருக்கிறது. ஆகவே தமிழ்நிலத்தின் மீது, தமிழ்நாட்டின் வளத்தின்மீது போடப்பட்டுள்ள முற்றுகையை முறியடிக்க வேண்டும் என்றே முரசு முழங்குகின்றது. இந்த முற்றுகை நிலையை முறியடித்துத் தமிழ்நாட்டில் தமிழரசு கண்டு, அதுவும் முடியரசின்றிக் குடியரசாக, அந்தக் குடியரசும் சோஷலிஸக் குடியரசாக இருக்க வேண்டும் என்பதற்காகவே மீண்டும் தமிழ்முரசு முழங்குகின்றது”[28]

‘‘ஆந்திரமும் கேரளமும் கன்னடமும் பிரிந்துவிட்டால் தமிழ்நாடு தானாகவே தனிநாடு ஆகிவிடும்” என்று சிலர் கூறினர். அவர்கள் விட்டுப்போகும் அந்தத் தமிழ்நாட்டில் திருவிதாங்கூர்த் தமிழ்நாடும், சித்தூர், சென்னை ஆகிய ஜில்லாக்களும் இரா என்பதை அந்த மேதாவிகள் உணருவதில்லை என்று அவர்களைச் சாடுகிறார். “தமிழ்நாடு தனியாவது மட்டும் போதாது. தமிழருக்குரிய நிலத்தில் ஓர் அங்குலங்கூடப் பிற இனத்தவர் பறித்துப் போக விடக்கூடாது”[29] என்று உறுதியாகக் கூறுகிறார். “தமிழரசு ஒரு சுதந்திர அங்கமாக இந்தியச் சமஷ்டியில் இணையவேண்டும் என்றே

விரும்புகிறோம். தமிழ்நாடு காங்கிரஸ் வாதிகள் தமிழரசுக் கிளர்ச்சி கண்டு அஞ்சவோ விலகி நிற்கவோ அவசியமில்லை"[30] என்று தமிழகத் தேசியவாதிகளுக்கு உறுதியளிக்கிறார்.

தமிழகத்தின் எல்லைப் போரில் ம.பொ.சி. பங்கு ஈடு இணையற்றது. நாடு விடுதலையடைந்த அடுத்த நாளே (16-8-1947) வடக்கெல்லையாம் திருப்பதி நோக்கித் தம் படையை நடத்தினார் ம.பொ.சி. இதனை அவருடைய சுயசரிதையில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்: "ஆகஸ்டு பதினைந்தாம் நாளன்று சென்னை மாநகரில் விடுதலைக் கொண்டாடி முடிந்ததும், மறுநாள் காலை 12 தொண்டர்களுடன் வடக்கெல்லையில் சுற்றுலாச் செய்யப் புறப்பட்டேன். இதுவே வடக்கெல்லை மீட்சிக்கான முதல் முயற்சியாக அமைந்தது"[31] இந்தப் பயணத்தின்போது பல இன்னல்களைச் சந்திக்க நேர்ந்தது. இருந்தும் எத்தகைய தடைகளையும் கடந்து வெற்றி பெறும் உறுதியான உள்ளத்துடன் வடக்கெல்லைப் போராட்டத்தில் கலந்துகொண்டார் ம.பொ.சி. திருப்பதி உள்ளிட்ட தமிழ்ப் பகுதிகளை மீட்பதற்காக அங்கு வாழும் மக்களிடையே தொடர்ந்து பிரச்சாரம் செய்தார் ம.பொ.சி. திருவாலங்காடு, கனகம்மாசத்திரம், திருத்தணி, புத்தூர் நகரி, ஏகாம்பரக் குப்பம், திருப்பதி ஆகிய பகுதிகளைச் சார்ந்த தமிழர்களுடைய ஆதரவைத் திரட்டினார்.

இக்காலக் கட்டத்தில் 'வேங்கடத்தை விடமாட்டோம்', 'தணிகைப்பதி தமிழருடையதே', 'திருக்காளத்தியைத் திரும்பப் பெறுவோம்' ஆகிய முழக்கங்கள் ம.பொ.சி.யின் பயணத்தில் இடம்பெற்றன. இவர் செய்த பிரச்சாரக் கூட்டங்களில் தெலுங்கு வெறியர்கள் இடையூறு விளைவித்தனர். அவை எல்லாவற்றையும் எதிர்த்து முறியடித்தார் ம.பொ.சி. இக்காலக்கட்டத்தில் மத்திய அரசால் அமைக்கப்பட்ட தார் கமிஷன் முன்பு ம.பொ.சி. அவர்கள் தம் கருத்தை எடுத்துக் கூறினார்கள். மொழிவாரி மாநிலப் பிரிப்பின் இன்றியமையாமையை எடுத்துக் கூறி அதிலும் தமிழ் மாநிலம் உடனடியாகப் பிரிக்கப்படுதல் வேண்டும் என்றும் வலியுறுத்தினார். அவ்வாறு பிரிக்கப்படும் தமிழ் மாநிலத்திற்கு வடவேங்கடமும் தென்குமரியும் வடக்கு, தெற்கு எல்லைகளாக அமைய வேண்டும் என்பதைப் பழந்தமிழ் இலக்கியச் சான்றுகளை எடுத்துக்காட்டி வலியுறுத்தினார்.

1953-ஆம் ஆண்டு ஜூலை மூன்றாம் நாள் வடக்கெல்லைப் போராட்டத்தில் 144 தடை உத்தரவை மீறியதற்காக, ம.பொ.சி. கைது செய்யப்பட்டு ஆறுவாரம் கடுங்காவல் சிறைத்தண்டனை பெற்றார். அப்போதைய பிரதம மந்திரி நேருஜி அவர்கள் எல்லைக் கமிஷன் அமைத்திட ஒப்புக் கொண்டதன் பேரில் போராட்டம் ஒத்தி வைக்கப்பட்டது. இந்தச் சூழலில் ம.பொ.சி. மேலவை உறுப்பினராக இருந்தார். அவருடைய பதவிக்குத் தேர்தல் வந்தபோது அந்தத் தேர்தலில் நிற்க வேண்டுமானால் எல்லைக் கிளர்ச்சியைக் கைவிட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. ஆனால் ம.பொ.சி. மேலவை உறுப்பினர் பதவியைத் துறந்தாலும் எல்லைக் கிளர்ச்சியைக் கைவிடேன் என்று உறுதியாக நின்றார். இதனைத் தொடர்ந்து எல்லைப் போருக்காகவும், தமிழர் உரிமைகளைத் தமிழரசுக் கழகத்தைக் காப்பதற்காகவும் காங்கிரசை விட்டு வெளியேறினார் ம.பொ.சி. 1956-ஆம் ஆண்டு செப்டம்பர், அக்டோபர் ஆகிய மாதங்களில் வடக்கெல்லைப் போர் மீண்டும் நடந்தது. அதனையொட்டி ம.பொ.சி. மறுபடியும் கைது செய்யப்பட்டு ஒருவார காலச் சிறைத்தண்டனை பெற்றார்.

இதனையடுத்து படாஸ்கர் கமிஷன் அமைக்கப்பட்டது. படாஸ்கரை ம.பொ.சி. சந்தித்துத் தமிழர் தம் கோரிக்கையில் உள்ள அறத்தை விளக்கினார். இறுதியில் பெரும் போராட்டத்துக்குப் பின் திருத்தணியை வடக்கெல்லையாகப் பெற்றது தமிழ் மாநிலம். இவ்வாறு பல முறை சிறைசென்றே ம.பொ.சி. அவர்கள் வடக்கெல்லையைத் திருத்தணி வரை பெற முடிந்தது. திருப்பதியை ஆந்திரர்கள் அபகரித்துவிட்டனர். திருத்தணியையாவது பெற்றோமே என்று மகிழ்ந்தது தமிழகம்.

1954-ஆம் ஆண்டு திருவிதாங்கூர் கொச்சி ராஜ்ஜியத்திலிருந்தும், தமிழகத்தோடு சேர்க்கப்பட வேண்டியதுமான தேவிகுளம், பீர்மேடு ஆகிய வட்டங்களில் திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரஸ் எல்லைக் கிளர்ச்சியைத் தொடங்கியது. இக்கிளர்ச்சியில் மூணாறில் திரு. நேசமணி உள்ளிட்ட பலர் கைது செய்யப்பெற்றார்கள். அந்தச்சூழலில் தங்களை வழிநடத்திச் செல்ல தலைவரின்றித் தவித்தனர் திருவிதாங்கூர்த் தமிழர்கள். அப்போது ம.பொ.சி, மூணாறு சென்றார். மூணாறில் கால் வைத்தால் கைது செய்யப் படுவீர்கள் என்று எச்சரித்தது திருவிதாங்கூர் அரசு. "என்னைக் கைது

செய்யாவிட்டாலும், எனக்குத் தடை விதிக்கப்படுமானால் நான் தடையை மீறி நானே சிறைப்படுவேன்" என்று அறைகூவல் விடுத்து மூணாறு சென்று அங்கே தங்கித் தமிழர்களின் நிலைமையை நன்கறிந்தார் ம.பொ.சி. பின்னர் நாகர்கோயிலில் தெற்கெல்லைப் போராட்டம் தொடர்ந்து நடந்தது. திரு. ஏ. காந்திராமன் தலைமையில் நடந்த நீதிமன்ற மறியல் சத்தியாக்கிரகப் போரை ம.பொ.சி. தொடங்கிவைத்தார். அப்போராட்டத்தில் அன்றைய கேரள முதல்வர் பட்டம் தாணுப்பிள்ளையின் ஆட்சி கொடுமையான முறையில் பதினொரு தமிழ்ப் போராளிகளைக் சுட்டுக் கொன்றது.

தாம் எந்த நேரத்திலும் கைது செய்யப்படுவோம் என்ற நிலையிலும் நாகர்கோயில் நகராட்சி மைதானத்தில் பொதுக் கூட்டம் நடத்தி ஆட்சியாளர்களின் வன்முறையைத் துப்பாக்கி பிரயோகத்தைக் கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றி, "பட்டம் தாணுப்பிள்ளையின் ஆட்சியின் கொட்டத்தை அடக்க வேண்டும்" என்று பிரதமர் நேருவுக்கு அங்கிருந்தே அவசரத் தந்தி அனுப்பிவைத்தார் ம.பொ.சி.

1955-ஆம் ஆண்டு அக்டோபரில் வெளியான இராஜ்ஜியப் புனரமைப்புக் கமிஷனர் அறிக்கை வெளியானது. அந்த அறிக்கையில் தேவிகுளம் பீர்மேடு, கொச்சின், பாலக்காடு நெய்யாற்றங்கரை ஆகிய வட்டங்களின் தமிழ்ப்பகுதிகள் அமையவிருக்கும் கேரள மாநிலத்துடன் சேர்க்கப்படும் என்று இருந்தது. இதனை எதிர்த்துச் குரல் கொடுத்த பெருமை ம.பொ.சி.யையே சாரும். மேலும் எஞ்சிய ராஜ்ஜியத்திற்குத் 'தமிழகம்' என்று பெயர் வைப்பதற்குப் பசல் அலி கமிஷன் தவறிவிட்டதையும் சுட்டிக்காட்டி அதற்கும் எதிர்ப்புக் குரல் எழுப்பினார் சிலம்புச் செல்வர். 1956 ஜனவரி 16 முதல் 19 வரை தமிழ்நாடு முழுவதும் ஆர்ப்பாட்டங்கள் நடத்தினார் ம.பொ.சி. நாடெங்கும் வெடித்த புரட்சியில் 700-க்கும் மேற்பட்ட தமிழரசுக் கழகத் தலைவர்களும் தொண்டர்களும் கைதாயினர். ஆனால் இப்போராட்டம் பலனளிக்காமல் போயிற்று. தேவிகுளம் பீர்மேடு பகுதிகள் கேரளப் பகுதியிலே பேசி இணைக்கப்பட்டன. ஆயினும் ம.பொ.சி.யின் போராட்டம் முழுமையும் பயனற்றுப் போய்விட்டது என்று கூற முடியாது. ம.பொ.சி. அவர்கள் நடத்திய தெற்கெல்லைப் போராட்டத்தின் விளைவாகவே தோவாளை, அகத்தீஸ்வரம்,

கல்குளம், விளவங்கோடு ஆகிய நான்கு வட்டங்களை உள்ளடக்கிய கன்னியாகுமரி மாவட்டம் தமிழ்நாட்டுடன் இணைக்கப்பட்டது. தமிழகத்தின் தென்கோடி எல்லையாகிய கன்னியாகுமரி மீட்கப்பட்டுத் தமிழ்நாட்டுடன் இணைக்கப்பட்டதன் வாயிலாகத் தமிழர் உரிமை நிலை நிறுத்தப் பட்டது. கன்னியாகுமரியை மீட்டதில் ம.பொ.சி.யின் பங்கு என்ன என்பதை ம.பொ.சி. அவர்களின் பொன்விழா மேடையில் கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் அவர்கள் பின்வருமாறு பேசினார்.

"இந்த விழாவானது நியாயமாக எங்களூரிலேயே நாகர்கோவிலிலே நடந்திருக்க வேண்டும்; தவறிவிட்டோம். நமது சிவஞானம் அவர்களாலே மீட்கப்பட்ட தமிழர்களில் நானும் ஒருவன் என்பதையும் பெருமிதத்துடன் சொல்லிக் கொள்கிறேன். அவரது உழைப்பால் சென்னை நமக்கென்று ஆகிப்போச்சு. இப்போ அவருக்குப் பொன்விழா நடக்குது! இனி வைர விழா எங்கே நடக்கும் தெரியுமா? திருப்பதியிலேயும்! திருத்தணியிலேயும் நடக்கும். இப்பேர்ப்பட்ட பெரியாரை ஈன்றெடுத்த நம்ம தமிழ்நாடு ரொம்பப் பாக்கியம் செய்தது" என்று கூறும்போது எல்லைப் போராட்டத்தில் ம.பொ.சி. ஆற்றிய பணிகள் ஈடு இணையற்றவை என்பது வெளிப்படுகிறதன்றோ!

இந்திய விடுதலைக்குச் சில திங்களுக்கு முன்னால் ம.பொ.சி. அவர்கள் தம்முடைய 'தமிழ்முரசு' இதழில் ஒரு தலையங்கம் எழுதியிருந்தார். அது அவருடைய நாட்டுப் பற்றுக்கும் இன உணர்ச்சிக்கும் சான்றாய் விளங்கியது. அதன் சுருங்கிய வடிவத்தைக் காணலாம்.

தலையைக் கொடுத்தும் தலைநகரைக் காப்போம்! சென்னைக்கு ஆபத்து;

தலைநகருக்கு ஆபத்து வந்துவிட்டது. ஏகாதிபத்தியத்தின் தலைநகரான டில்லிக்கு அல்ல; இந்திய முதலாளிகளின் தலைநகரான பம்பாய்க்கு அல்ல; தமிழ்நாட்டின் தலைநகரான சென்னைக்குத்தான் ஆபத்து. அரசியல் நிர்ணய சபையின் ஆலோசகர் சர் பி.என். ராவ் அனுப்பிய சுற்றறிக்கையில் உள்ளபடி சென்னை நகரமும் அதனைச் சுற்றியுள்ள பிரதேசங்களும் தமிழ்நாட்டிலிருந்து துண்டிக்கப்பட்டு ஆந்திரர், கேரளர், கன்னடர்

ஆகிய எல்லா இனத்தவருக்கும் பொதுமையாக்கப்படும் என்றுள்ளது. ஆந்திரர் கேட்டது சென்னை நகரை மட்டும்தான்! ஆனால் பி.என். ராவ் பிரிப்பது சென்னையை மட்டுமல்ல; அதைச் சுற்றியுள்ள தமிழ்ப் பிரதேசங்களையும் கூட.

கடைத் தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையாருக்கு உடைத்தவனைப் பற்றித் தமிழர்கள் அறிவார்கள். அதேபோல் தமிழருக்குரிய சென்னையையும், அதன் சுற்றுப் பகுதிகளையும், பிற இனத்தார்களுக்கெல்லாம் தாராளமாக வழங்குகின்றார் பி.என். ராவ். தமிழருக்குத் தாயகம் தமிழகத்தைத் தவிர வேறு இருக்க முடியாது. உறவுக்கு எல்லை இமயமாய் இருக்கலாம்; ஆனால் உரிமைக்கு எல்லை வேங்கடம்தான்.

தமிழினத்தின் ஆண்மையைச் சோதிக்கிறது பி.என். ராவின் சுற்றறிக்கை. தமிழர் நிலத்தை - தமிழினத்தின் தாயகத்தைத் துண்டாடுவதற்கு யார் நினைத்தாலும் சரி; அந்தச் செயலைத் தமிழர் தம் உயிரைக் கொடுத்தேனும் தடுத்தே தீரவேண்டும். தமிழ்நாடு தனி நாடு; அதை உபமாகாணம் என்று சொல்வது தமிழரை ஏய்க்கச் செய்யும் சதி! தமிழர்கள் இந்தியனாய் இருக்கத் தயார்; ஆனால் முதலில் தமிழன்; இரண்டாவதாகத்தான் இந்தியன். தமிழன் என்ற உணர்வோடுதான் பிற இந்திய இனங்களோடு அவன் உறவாட முடியும்.

இந்த உண்மைக்கு மாறாகப் பிற இனத்தவரின் ஆதிக்கத்தைத் தமிழ்நாட்டில் நிலைநிறுத்தும் எந்தத் திட்டத்தையும் தமிழர் ஏற்க முடியாது! தமிழ்நாட்டிலிருந்து சென்னையைத் துண்டாடும் நாள் சென்னையில் இரத்தஆறு ஓடும் நாளாகத்தான் இருக்க முடியும். தங்கள் தலைகளைக் கொடுத்தேனும் தமிழ்நாட்டின் தலைநகரைக் காக்கத் தமிழர் முன்வரவேண்டும்" என்று தமிழ் இனத்தாரை அழைக்கிறார் ம.பொ.சி.[32]

ம.பொ.சி.யால் தமிழகம் பெற்ற பெரும் பயன் ஏதேனும் ஒன்றனைக் குறிப்பிடுங்கள் என்று யாரைக்கேட்டாலும் சென்னை இன்றும் தமிழ்நாட்டின் தலைநகராய் இருக்கிறது என்றால் அது சிலம்புச்செல்வர் செய்த பெரும்போராட்டத்தின் பயனே என்று பகர்வர். ஆம் சென்னையைக் காத்துச் செந்தமிழ் நாட்டின் தலைநகராக நிலைபெறச் செய்த நிகரற்ற வீரர் ம.பொ.சி.யே ஆவார்.

இன்றைய இளைஞர்களுக்கு இந்த வரலாறு சற்றுப் புதிதாய் இருக்கலாம். ஆனால் அதுதான் உண்மை. பழைய சென்னை ராஜ்ஜியத்திலிருந்து ஆந்திரம் பிரிக்கப்பட்டபோது 'மதராஸ் மனதே' என்று ஆந்திரர்கள் சென்னை நகர்மீது உரிமை கொண்டாடினார்கள். அந்த வரலாறு சற்று விநோதமானது. அதனைக் காணலாம்.

தார் கமிஷன் 1948-ஆம் ஆண்டு சூன் 19-ஆம் தேதி தன் வேலையைத் தொடங்கியது. தார் கமிஷன் தமிழகத்திற்கு வருவதற்கு முன்பே அக்கமிஷனிடம் தம் கருத்தைக் கூற ம.பொ.சி தயாராகி விட்டார். 13-09-1948-ஆம் நாள் தார் கமிஷன் முன் ம.பொ.சி. எழுத்து மூலம் தன் கருத்தை உணர்த்தினார். கமிஷன் எழுப்பிய சில வினாக்களுக்கு வாய்மொழியாகவும் பதிலுரைத்தார். அப்போது தார் கமிஷனின் (உறுப்பினர்களின்) தலைவர் நீதிபதி தார் சென்னை நகர் மீது ஆந்திரர் உரிமை கொண்டாடுவது பற்றி ம.பொ.சி.யின் கருத்தைக் கேட்டார். அதற்கு ம.பொ.சி. பின்வருமாறு பதிலுரைத்தார்:

"சென்னை ஆந்திரத்திற்கும் தமிழகத்திற்குமான எல்லை பிரதேசத்தில் இருக்கவில்லை. தமிழகத்தின் உட்பிரதேசமாகவும், தமிழரே மிகப் பெரும்பாலோராக வாழ்வதாகவும் இருக்கின்றது ஆதலால், அதைப் பற்றி விசாரிக்கக் கமிஷன் முயல்வதை ஆட்சேபிக்கிறேன்"[33] என்று துணிச்சலோடும் உறுதியோடும் தம் கருத்தை எடுத்துரைத்தார் ம.பொ.சி. அக்கமிஷனிடம் எழுத்து மூலமாகக் கொடுத்த வாக்குமூலம் பின்வருமாறு:

"சென்னை மாகாணத்தை தமிழகம், கேரளம், ஆந்திரம், கன்னடம் என்று நான்கு மாகாணங்களாக உடனே ஏக காலத்தில் பிரித்தாக வேண்டும்— தமிழ்நாடு தனி நாடாகப் பிரிய வேண்டியது அவசியம் என்று உணர்கிறோம்— மேலும் சென்னை சட்டசபையில் முறையாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டும் மத்திய அரசாங்கத்தார் பிரிவினையைத் தாமதப்படுத்திவருவது ஈண்டு தமிழராகிய நாங்கள் வருந்துகிறோம். இனியும் தாமதித்துக் கொண்டு போனால், தென்னிந்திய தேசிய இனங்களின் சுதந்திர உணர்ச்சியானது இந்திய அரசாங்கத்தாருக்கு விரோதமாக மாறி விடும் என்று அஞ்சுகிறோம். பிரிக்கப்படும் தமிழ் மாகாணத்தின் எல்லைகள் தெற்கே குமரி முனையாகவும், வடக்கே திருப்பதி

மலையாகவும் இருக்க வேண்டும்........ சென்னை மாநகரம் தமிழ்நாட்டின் உட்பிரதேசம். அது வேறு எந்த ஒரு மாகாணத்தின் எல்லைப் பிரதேசமாகவும் இருக்கவில்லை. எனவே சென்னை நகரை எந்த மாகாணத்துடன் சேர்ப்பது என்ற பிரச்சனையே எழவில்லை. மேலும், அதனைத் தனி மாகாணமாகவோ, துணை மாகாணமாகவோ செய்வதும் நியாயமற்றதாகும். அப்படிச் செய்யப் படும் எந்த முயற்சியையும் தமிழர் தங்கள் சக்தி முழுவதையும் பயன்படுத்தி எதிர்ப்பார்கள். தமிழகத்தின் பிரதேச மொழியாக உள்ள தமிழைப் பேசுவோரே சென்னை நகரில் அதிகம் வாழ்கின்றனர். தமிழல்லாத பிற மொழிகளைப் பேசுவோர் அனைவரையும் ஒன்று சேர்த்துப் பார்த்தாலும் தமிழ் பேசுவோர் எண்ணிக்கையே சென்னை நகரில் அதிகம். சென்னையைப் பற்றி ஒரு பிரச்சினையை உருவாக்கி, அது பற்றி இந்த கமிஷனோ, எதிர்காலத்தில் நியமிக்கப்படும் எல்லைக் கமிஷனோ எதுவும் பரிசீலிப்பதைத் தமிழர் ஏற்பதற்கில்லை."[34] என்று கொடுக்கப்பட்ட வாக்குமூலத்தில் சென்னை பற்றிய கருத்து மிகத் தெளிவாகவும் உறுதியாகவும் வலியுறுத்தப்பட்டது. திராவிடக் கழகத்தார் தார் கமிஷனரிடம் எந்த வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. "தமிழ்நாடு தமிழருக்கே" என்று கோஷமிட்ட திராவிடக் கழகம் தார் கமிஷனைக் கண்டுகொள்ளவே இல்லை. அந்த நாளில் ம.பொ.சி.யே தமிழர் சார்பாகத் தார் கமிஷனிடம் குரல் எழுப்பினார். இறுதியில் தார் கமிஷன் மொழிவாரி மாநிலப் பிரிவினை இப்போதைக்குத் தேவையற்றது என்று தன் பரிந்துரையைக் கொடுத்தார். மொழிவாரி மாநிலப் பிரிவினை பற்றிய சிந்தனை ஒத்திப் போடப்பட்டது.

சென்னை நகரம் பற்றித் தார் கமிஷன் கூறிச் சென்ற கருத்து இன்னும் வேடிக்கையானது. "இந்த நகரங்களில் வாழ்வோரில் பெரும்பாலோர் ஒரே மொழி பேசுவோர் அல்லர். ஆகையால் பல மொழிபேசும் மக்களிடையே ஒருமைப்பாடு இருக்கிறது. மேலும் இந்த நகரங்களுக்கு அகில இந்திய முக்கியத்துவம் இருக்கிறது. எனவே, ஒரே மொழிக்குரிய மாகாணம் எதிலும் சென்னையையோ, பம்பாயையோ சேர்ப்பது நல்லதல்ல....."[35] என்று கூறிச்சென்றது. தார் கமிஷனின் அறிக்கையைக் குறித்து ம.பொ.சி. அவர்கள், "மகாத்மாவுக்குத் துரோகம்" என்ற தலைப்பில் தமிழ்முரசு பத்திரிகையில் ஒரு தலையங்கம் எழுதினார். இதனை அடுத்து

ஆந்திர மாகாணம் தனியாகப் பிரியும் தறுவாயில் ம.பொ.சி. அவர்கள் 'தமிழக எல்லைப் பாதுகாப்பு மாநாடு' ஒன்றனை நடத்தி அதில் பல அறிஞர்களை அழைத்துத் தமிழகத்தின் எல்லைகள் பற்றிப் பேச வைத்தார்கள். அம்மாநாட்டில் பின்வரும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

"தமிழகம் வடக்கே திருப்பதியையும், தெற்கே குமரி முனையையும் தனது புராதன எல்லைகளாகக் கொண்டு விளங்குகின்றது. இதைப்பற்றி எழுந்துள்ள தகராறுகளைத் தீர்த்து வைக்க மத்திய அரசு ஒரு எல்லைக்கமிஷனை நியமிக்க இந்த மாநாடு கோருகிறது"[36] என்பதே அத்தீர்மானம் ஆகும். இந்த மாநாடு "தமிழக எல்லைப் பாதுகாப்பு மாநாடு" என்ற பெயரில் கூட்டப் பட்டாலும் பேசியவர்கள் பலர் சென்னை நகர்மீது ஆந்திரர்கள் உரிமை கொண்டாடியதை எதிர்ப்பதிலேயே ஆர்வங்காட்டினர். இம்மாநாட்டு நிகழ்வுகளை அறிந்த ஆந்திரர்கள் இதற்குப் பலவகையிலும் எதிர்ப்பினைத் தெரிவித்தனர்.

ஆந்திரப் பிரிவினைக்கான வேலைகளைத் தொடங்கிய ஆந்திரர்களில் ஒருவரான திரு. டி. பிரகாசம் ஆந்திர மாநில அரசு எல்லா வகையிலும் பலம் பெறும் வரையிலும் சென்னை நகரமே அதற்குத் தற்காலிகத் தலைநகரமாக இருக்க வேண்டும் என்று எழுதினார். இந்தச் சூழலில் சென்னையைக் காக்க ம.பொ.சி. ஆற்றிய பணி என்றும் நினைவிற்கொள்ளத்தக்க பணியாகும். அப்போதைய தேசிய காங்கிரஸ் மகாசபையின் தலைவராக இருந்த டாக்டர் பட்டாபி சீதாராமய்யா ஆந்திர மகாசபையின் தலைவர் போலவே பேசியும் செயல்பட்டும் வந்தார். 'மதராஸ் மனதே' என்ற கோஷத்தை உரத்துச் சொல்லவும் தயங்கவில்லை. இக்கால காட்டத்தில் ஆந்திரமாநிலப் பிரிவினையைத் துரிதப்படுத்தும் நிகழ்ச்சி ஒன்று நடந்தது. பொட்டி சீதாராமுலு என்ற ஆந்திரக் காங்கிரஸ் ஊழியர் ஒருவர் சென்னையில், ஆந்திர மாநிலப் பிரிவினையை உடனடியாக அமுல் நடத்தக்கோரி சாகும்வரை, உண்ணாவிரதம் இருக்கத் தொடங்கினார். உண்ணாவிரதம் இருந்த பொட்டி சீதாராமுலுவைப் போய்ப் பார்த்தார் ம.பொ.சி. அப்போது அவருடனிருந்த ஆந்திரத் தலைவர் பிரகாசம் பொட்டி சீதா ராமுலுவின் உயிரைக் காப்பாற்ற ம.பொ.சி. உதவவேண்டுமென்று கேட்டுக் கொண்டார். அப்போது ம.பொ.சி. "சென்னை நகர் மீது

உரிமை கொண்டாடுவதைவிட்டு ஆந்திரமாநிலம் கோரினால்"[37] தாமும் தமது தமிழரசுக் கழகமும் அதற்கு ஒத்துழைக்கும் என்று கூறினார். ஆனால் அவர்கள் அதற்கு ஒப்ப மறுத்துவிட்டனர். "ஆந்திர அரசு தற்காலிகமாகச் சென்னையிலிருக்க அனுமதித்தால் போதும்"[38] என்றனர். அதற்கு ம.பொ.சி. ஒப்புக் கொள்ளவில்லை, "ஆந்திர அரசுக்குத் தற்காலிகமாகச் சென்னையில் இடமளிக்க மற்றவர்கள் இசைந்தாலும், நான் இசைய மாட்டேன்"[39] என்று உறுதியாக மறுத்துவிட்டார் ம.பொ.சி. இறுதியில் பொட்டி சீதாராமுலு ஆந்திரவெறியர்களால் உண்ணாவிரதத்தில் பலியானார். இதனால் ஆந்திராவில் பெருங்கலவரம் நடந்தது. இதனால் ஆந்திர மாநிலம் 2-10-1953-இல் பிரிக்கப்படும் என்று நேரு 19-12-1952இல் நாடாளுமன்றத்தில் அவசர அவசரமாக அறிக்கை வெளியிட்டார். நேருவின் அறிக்கையில் "தகராறுக்கு இடமில்லாத தெலுங்கு மாவட்டங்களைக் கொண்ட ஆந்திர மாநிலம் அமைக்கப்படும்" என்றும் குறிக்கப்பட்டிருந்தது. இதன் பிறகு ஆந்திரர்களுடைய குரல் வேறுமாதிரி ஒலிக்கத் தொடங்கியது. திரு பிரகாசம் ஓர் அறிக்கையில்,

"சென்னை நகரம் முழுவதையும் ஆந்திரத்தோடு சேர்க்காவிடில் கூவத்தை நடுவே வைத்து, தென் சென்னையைத் தமிழ்நாட்டுக்கும், வடசென்னையை ஆந்திரருக்குமாகப் பங்கு போட வேண்டும். அதுவும் இயலாதென்றால், சென்னை நகரை ஆந்திரம் தமிழ்நாடு ஆகிய இரண்டு மாநிலங்களுக்கும் பொது நகராகச் செய்ய வேண்டும். அதுவும் இயலாதென்றால், சென்னை நகரைப் பிரதம கமிஷனர் மாகாணமாக்க வேண்டும்"[40]

இந்தச் சூழலில் இராஜஸ்தான் மாநில நீதிபதி திரு. வாஞ்சு என்பாரைக் கொண்ட ஒரு நபர் கமிஷனை நியமித்தது மத்திய அரசு. "ஆந்திர தலைநகர் குறித்து ஆய்ந்து பரிந்துரை தருவதே வாஞ்சு கமிஷனின் பணியாகும். திரு. வாஞ்சு சென்னை வரும்போது சென்னை நகர் மீது தங்களுக்குள்ள உரிமையை வெளிப்படுத்தும் வகையில் பெரிய ஆர்ப்பாட்டம் நடத்த சென்னை 'ஆந்திர பரிஷத்' என்ற அமைப்பு ஆந்திரர்களால் உருவாக்கப்பட்டது. தி.க. தலைவர் பெரியார் ஈ.வெ.ரா. "சென்னை ஆந்திரத்தில் இருந்தால் என்ன? தமிழகத்தில் இருந்தாலென்ன? எங்கிருந்தாலும் திராவிடத்தில் தானே இருக்கப்போகிறது" என்று அறிவித்துவிட்டார். இந்தச்

சூழலில் தலைநகரைக் காக்கும் பொறுப்பு தமிழரசுக் கழகத்தின் மீதும் அதன் தலைவராயிருந்த ம.பொ.சி.யின் மீதும் சுமத்தப் பட்டது. சென்னை நகரமெங்கும் பொதுக் கூட்டங்கள் நடத்தத் தமிழ் மக்களுக்கு விழிப்புணர்வினை ஏற்படுத்திய பெருமை ம.பொ.சி. அவர்களையே சாரும்.

நீதிபதி வாஞ்சு சென்னைக்கு வந்தபோது ம.பொ.சி. அவர்கள் தலைமையில் ஒரு குழு அவரைச் சந்தித்து, "சென்னை நகரம் தமிழகத்தின் தலைநகராகத்தான் இருக்கவேண்டும்; ஆந்திர அரசு ஒரு இடைக்காலத்திற்குக் கூட சென்னையில் இருக்கக்கூடாது"[41] என்று வலியுறுத்தியது. நீதிபதி வாஞ்சுவை சந்தித்துவிட்டு வந்த ம.பொ.சிக்கு நம்பிக்கை இல்லாதுபோயிற்று. இதனை ம.பொ.சி.யின் கூற்றிலேயே காணலாம்.

திரு. வாஞ்சுவைச் சந்தித்தபின்னர், சென்னையைத் தமிழகத்திற்கு மட்டுமே உரிய தலைநகராக்குவது என்பது அவ்வளவு சுலபமானதாக இருக்காது என்பதனை நான் உணர்ந்து கொண்டேன். ஆந்திரநாட்டிலும் சரி, சென்னையிலும் சரி ஆந்திரர்கள் காட்டிய ஆவேசமும், இனவழிக் கட்டுப்பாடும் தமிழரிடத்தில் வெளிப்படவில்லை. ஆந்திரத்திலே கடைசி ஒரு ஆந்திரர்கூட சென்னை நகரைப் பறிக்கும் முயற்சிக்கு ஆவேசத்துடன் ஆதரவு காட்டினர். தமிழகத்திலே பொது ஜன உணர்ச்சி உறங்கிக் கொண்டிருந்தது[42] என்று ம.பொ.சி. மனம் நொந்து எழுதுகிறார். இன்றும் நாம் அதே நிலையைத்தான் காண்கிறோம் என்பது நீங்கள் யாவரும் ஒப்புக் கொள்ளக்கூடிய உண்மையாகத் தானிருக்கிறது.

ம.பொ.சி. மடிமையின்றிச் செயல்படத் தொடங்கினார். சென்னை மாநிலச் சட்டமன்ற ஆந்திரரல்லாத உறுப்பினர்கள் ஒவ்வொருவரிடமும் தனித்தனியே சென்று சென்னை நகரைக் காக்கும் புனிதப் பணிக்கு ஆதரவான கூட்டறிக்கையில் கையெழுத்து வாங்கினார். சுமார் 200 பேரிடம் கையெழுத்து வாங்கப்பட்டது. அந்தக் கூட்டறிக்கையைப் பிரதம மந்திரிக்கு அனுப்பிவைத்தார். இந்தப் பணியில் ம.பொ.சி.க்கு அந்நாளைய சென்னை மேயரும் துணைபுரிந்தார். அப்போது முதலமைச்சராக இருந்த இராஜாஜியின் உதவியை நாடினார் ம.பொ.சி. இராஜாஜியும் இவருடன் ஒத்துழைத்தார், உற்சாகமூட்டினார். இதனை "அவசியம்

நேரிட்ட போதெல்லாம் என்னை அழைத்துச் சென்னையைக் காக்கும் கிளர்ச்சியைத் தீவிரப்படுத்தும்படியும் தூண்டி வந்தார்" என்று ம.பொ.சி. தன்னுடைய சுயசரிதையில் குறிப்பிட்டுள்ளார்.[43]

சென்னையைக் காப்பதற்காகவே, 1953-ஆம் ஆண்டு ஜனவரி 23, 25ஆம் தேதிகளில் தமிழரசுக் கழகம் தனது 2-ஆவது மாநில மாநாட்டைக் கூட்டியது. இம்மாநாட்டின் முதல்நாள் இலக்கிய மாநாட்டில் பேசிய டாக்டர் ரா.பி. சேதுப்பிள்ளை; "தமிழரசுக் கழகத்தைத்தான் தமிழ்நாடு நம்பியிருக்கிறது. சென்னையைக் காக்க ம.பொ.சி. காலாலிடும் கட்டளையைத் தலையால் நிறைவேற்ற நான் தயார்"[44] என்று பேசினார். மத்திய அரசின் முன்னாள் நிதியமைச்சர் டாக்டர் ஆர். கே. சண்முகம் அவர்கள் பேசும்போது, "சென்னை, தமிழகத்தின் உட்பகுதி, தமிழருக்குச் சொந்தமானது. சிவஞானம் சென்னையைக் காப்பார்; தமிழக எல்லைகளையும் மீட்பார் நம்புங்கள்"[45] என்று குறிப்பிட்டார். இரண்டாம் நாள் மாநாட்டின்போது பேசிய தமிழ்த்தென்றல் திரு.வி.க. அவர்கள், "தமிழ்நாடே நண்பர் சிவஞானத்தை நம்பியிருக்கிறது"[46] என்று பேசினார். இந்த மாநாட்டில் அனைவரும் 'சென்னை தமிழருடையதே' என்னும் தொடர் பொறிக்கப்பட்ட சின்னத்தை அணிந்திருந்தனர். இந்த மாநாட்டைக் குறித்து நாளிதழ்களும் வார இதழ்களும் பாராட்டி எழுதின. இதில் ஜனசக்தி இதழ் எழுதியதைக் காணலாம்.

"தலைகொடுத்தேனும் தலைநகர் காப்போம்! கடைசித் தமிழன் உயிருள்ளவரை எமது உரிமைகளை விடோம்! வீரப்பரம்பரையை மறவோம்! வீறு கொண்டு எழுவோம்! தமிழ்த்தாயைப் பாதுகாப்போம்" என்ற வீரமிக்க கோஷங்கள் தமிழரசுக்கழக மாநாட்டில் விண்ணைப் பிளந்தன. தமிழ் ஆர்வமும் ஆவேசமும் கரைபுரண்டோடின. உரிமைக்காகத் தலைநிமிர்ந்து, மார்பு காட்டி நிற்கும் தமிழனைக் கண்டு பூரிப்படையாதவர் யாரிருக்க முடியும்"[47] இப்படிப் பாராட்டிய பத்திரிகைகள் பல. இந்தக் காலக்கட்டத்தில் நீதிபதி வாஞ்சு தனது பரிந்துரையை மத்திய அரசிடம் தந்துவிட்டார். அந்தக் கமிஷன் பரிந்துரையில் பின்வரும் பரிந்துரைகள் இடம் பெற்றிருந்தன.

1. ஆந்திராவின் தலைநகர் இடைக்கால ஏற்பாடாக சென்னையில் இருக்கவேண்டும்.

2. தமிழ் - ஆந்திர மாநிலங்களுக்கு ஒரே கவர்னர் இருக்க வேண்டும்.

3. இரண்டு மாநிலங்களுக்கும் ஒரே நீதிமன்றம் இருக்க வேண்டும்.

வாஞ்சுக் கமிஷனின் செய்திகளை - பரிந்துரைகளைக் கண்டதும் ம.பொ.சி மட்டுமல்ல தமிழகத்தின் தனி நலனில் அக்கறையுள்ள அனைவருமே அதிர்ச்சியடைந்தனர். இந்தப் பரிந்துரையை அறிந்ததும் ம.பொ.சி.யின் மனநிலை எப்படி இருந்தது என்பதை அவர் கூற்றிலே காணலாம்.

"அன்றிரவு உண்ணவோ, உறங்கவோ இயலாதவனானேன். இழக்கக்கூடாத ஒன்றை இழந்துவிடும் நேரம் வந்துவிட்டது போன்ற ஒரு துக்க உணர்ச்சி என் மனத்துள் ஏற்பட்டது" என்கிறார்.[48] மறுநாள் காலை அடுத்துச் செய்ய வேண்டியவைபற்றி ஆலோசனை பெறுவதற்காக இராஜாஜி இல்லத்திற்குச் சென்றார் ம.பொ.சி. இராஜாஜியிடம் 'அடுத்து என்ன செய்யவேண்டும்' என்று கேட்டார் ம.பொ.சி. "இதுவரை செய்தவை போதா; இன்னும் கொஞ்சம் கடுமையாக உழையுங்கள். இதைத் தவிர வேறு எதையும் சொல்லக்கூடிய நிலையில் இப்போதைக்கு நான் இல்லை"[49] என்றார் இராஜாஜி. இவ்விடத்தில் தலைநகரைக் காப்பாற்றுவதில் இராஜாஜியின் பங்கினைக் குறிப்பிட்டுத்தான் ஆகவேண்டும்.

இராஜாஜி டெல்லி சென்று பிரதமர் நேருவைச் சந்தித்துப் பேசினார். இந்தச் சந்திப்பை இராஜாஜி தானாகவே வலுவில் உருவாக்கிக் கொண்டார். அப்போது சென்னை விஷயத்தில் நேருஜி வெளியிட்ட கருத்தும், அவர் நடந்துகொண்ட முறையும் இராஜாஜிக்கு நம்பிக்கையின்மையை விளைவித்தது. அதனால் அந்தச் சந்திப்புக்குப் பின்னர் டெல்லியில் செய்தியாளர்களிடம், "சென்னை நகரத்தில் ஆந்திரருக்கு இடம் தருவதென்று மத்திய அரசு முடிவெடுப்பதனால், அதனை அமுல் நடத்துவதற்கு ஒத்துழைப்பு தரும் சக்தி எனக்கு இல்லை. அந்த நிலையில் வேறு முதலமைச்சரைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள் என்று நான் பிரதமரிடம் கூறிவிட்டேன்."[50] என்று குறிப்பிட்டார். சென்னைக்கு வந்தவுடன் ஒரு மணி நேரம் கூடத் தாமதம் செய்யாமல் ம.பொ.சியை அழைத்துப் பேசினார் இராஜாஜி. தன்னிடம் என்ன கூறினார் என்பதனை ம.பொ.சி.யின் கூற்றாகவே காணலாம்.

"நேருஜியும் மத்திய அரசும் சென்னை நகரில் ஆந்திர அரசுக்கு இடம் தர முடிவெடுத்துவிட்டார்கள் என்றே தெரிகிறது. இதுபற்றி என்னிடம் விவாதிக்கவும் விரும்பவில்லை என்பதை நேரு வெளிப்படுத்தினார். எனது நிலையைத் தெளிவுபடுத்திவிட்டுத் திரும்பி வந்துவிட்டேன். நான் அங்குச் சொன்னதைப் பத்திரிகைகளில் படித்திருப்பீர்கள். **சென்னையைக் காப்பது இனி உங்கள் கையில்தான் இருக்கிறது**. என்ன செய்வீர்களோ? செய்ய வேண்டியவற்றை எல்லாம் செய்யுங்கள்"[51] என்று சோகம் நிறைந்த குரலில் கூறினார். வேறு யாராயிருந்தாலும் இப்படி ஒரு முதலமைச்சரே சொன்ன பிறகு மனம் வெறுத்துப் போய் விரக்தியுடன் வாளாவிருந்திருப்பார். ஆனால் ம.பொ.சி அப்படிச் சோர்ந்துபோய்ச் சும்மா இருந்துவிடவில்லை. ம.பொ.சி எப்படித் தன் நண்பரும் முதலமைச்சருமான இராஜாஜியின் கூற்றை எடுத்துக் கொண்டார் என்பதனை அவருடைய கூற்றிலேயே காணலாம்.

"சென்னையைக் காப்பாற்ற இராஜாஜி காட்டிய உறுதியும்; அதற்காகப் பதவியைத் துறக்கவும் அவர் தயாராக இருந்ததும் எனக்கு எல்லையற்ற ஆற்றலைத் தந்தது. அவர் கையை வலுப்படுத்துவதற்காகச் செய்ய வேண்டியதெல்லாம் செய்தே தீருவது என்ற முடிவுடன் அவரது இல்லத்திலிருந்து திரும்பினேன்"[52] என்கிறார் ம.பொ.சி. தமிழரசுக் கழகங்கள், நகர் மன்றங்கள், வணிக நிறுவனங்கள், காங்கிரஸ் கமிட்டிகள், இலக்கிய மன்றங்கள், ஆகியவற்றின் சார்பில் தந்திகள் அனுப்பப்பட்டன. நாடறிந்த பிரமுகர்கள் பலரும் தத்தம் பெயரால் தந்திகள் அனுப்பினர். இதற்குச் செட்டி நாட்டரசர் ராஜா சர் எம்.ஏ. முத்தையா செட்டியார் அவர்களின் துணையைப் பெற்றுக் கொண்டார் ம.பொ.சி. தந்திகளில் "சென்னையில் ஆந்திர அரசுக்கு இடம் கொடுத்தால் உள்நாட்டுக் கலகம் தோன்றும். இரத்த ஆறு ஓடும்" என்று கடுமையான வாசகங்கள் பயன்படுத்தப்பட்டன. இவ்வாறு தந்திகள் வந்ததால், 'நான் மறுபரிசீலனை செய்து வருகிறேன்' என்று லால்பகதூர் சாஸ்திரி கூறியதாகக் காமராசர் ஒருநாள் குறிப்பிட்டதாக ம.பொ.சி கூறுகிறார்.

இதனை அடுத்துச் சென்னை மாநகராட்சி உறுப்பினர்கள் பதினைந்து பேரிடம் கையெழுத்து பெற்று மாநகராட்சியின் சிறப்புக் கூட்டத்தைக் கூட்டுமாறு செய்து மாநகராட்சிக்

கூட்டத்தில் "சென்னை நகரை இரண்டாகப் பிரிப்பதோ, ஆந்திர தமிழக அரசுகளின் பொது நகர் ஆக்குவதோ கமிஷன் பிரதேசமாகச் செய்வதோ, ஆந்திர அரசு இடைக்காலத்திற்குச் சென்னையில் இருக்கச் செய்வதோ கூடாது' - என்று இந்தச் சென்னை மாநகராட்சி, சென்னை மாநில அரசுக்கும், இந்திய நடுவண் அரசுக்கும் தெரிவித்துக் கொள்கிறது"[53] என்ற தீர்மானத்தை நிறைவேற்றினார் ம.பொ.சி. மாநகராட்சியில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் நகல்கள் நீண்ட தந்திவடிவில் குடியரசுத்தலைவர், பிரதமர், உள்துறையமைச்சர், சென்னை மாநில முதல்வர் ஆகியோருக்கு மேயரால் அனுப்பப்பட்டன.

இதற்குப் பிறகு சென்னை நகரம் பற்றிய மயக்கம் வடக்கிலிருந்தவர்களுக்குச் சிறிது சிறிதாகத் தீர்ந்தது. சென்னை தமிழருடையதே என்பதனை உணர்ந்தனர். அன்று மாநகராட்சிக்கு வெளியே நின்ற மக்கள் உணர்வோடு "தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்!" என்று கோஷமிட்டனர். பின்னர் ஒருவாரம் கழித்துப் பார்த்த டிடி கிருஷ்ணமாச்சாரி அவர்கள், மாநகராட்சித் தீர்மானத்திற்குப் பிறகே நேரு மனம் மாறினார்" என்று கூறினார். நேரு கூறியதாகச் சொன்ன செய்தியை ம.பொ.சி. பின்வருமாறு எழுதினார்.

''சென்னை நகரமக்கள் அனைவருக்கும் பிரதிநிதித்துவ ஸ்தாபனமாக சென்னை மாநகராட்சி பெரும்பாலான உறுப்பினர் ஆதரவோடு நிறைவேற்றியுள்ள தீர்மானத்தைப் புறக்கணிக்க என்னால் இயலாது" என்று கூறினாராம் நேரு. இறுதியில் 25-3-1953 அன்று டில்லி நாடாளுமன்றத்தில் பிரதமர் நேரு மத்திய அமைச்சரவையின் சார்பில் நாடாளுமன்றத்தில் அதிகாரப் பூர்வமான பிரகடனம் ஒன்றினை வெளியிட்டார் அது பின்வருமாறு:

"1953 அக்டோபர் முதல் தேதியில் ஆந்திர மாநிலம் தனி மாநிலமாக அமையும்"

''ஆந்திர அரசின் தலைநகரம் ஆந்திர நாட்டின் எல்லைக்குள்ளேயே இருக்கும்"

"ஆந்திர அரசு அமைந்த பின்னர் எல்லைக்கமிஷன் அல்லது கமிஷன்கள் நியமிக்கப்படும். ஆந்திர அரசின் எல்லையில்

செய்யப்பட வேண்டிய மாறுதல்களை அவை பரிந்துரை செய்யும்"[54] என்பன போன்ற செய்திகள் இடம்பெற்றிருந்தன. இதன் பின்னர் தான் கர்நூலைத் தலைகராகக்கொண்டு ஆந்திரமாநிலம் உருவானது. ம.பொ.சி. தலைநகர் சென்னையைக் காக்கப் போராடிய காலக்கட்டத்தில் 1953-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் சென்னை மாநகராட்சியில் ஆற்றிய உரை வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த ஒன்றாகும். அதன் கண் காணப்படும் சில இன்றியமையாத பகுதிகள் பின்வருமாறு.

"சென்னை சந்தேகத்துக்கிடமில்லாமல் தமிழ்நாட்டின் உட் பகுதியாக இருக்கிறது. சென்னை நகரின் வடக்கேயும் தமிழ்நிலம்; மேற்கேயும் தமிழ்நிலம், தெற்கேயும் முழுத் தமிழ்நாடு, கிழக்கே வங்காள குடாக்கடல், இந்த நாற்பாங்கு எல்லைக்கு நடுவே இருக்கிறது. சென்னை நகரம். அப்படியிருக்கச் சென்னையை ஆந்திரத்தில் சேர்க்க வேண்டுமென்று கேட்பது, அரசியலுக்கும் அனுபவத்துக்கும் ஒவ்வாத ஆதிக்கக் கூச்சலாகும்"[55]

"வாதத்திற்காகச் சென்னையை ஆந்திரநாட்டோடு சேர்ப்பதாகவே வைத்துக்கொள்வோம். அப்புறம் சென்னைக்கும் ஆந்திர நாட்டிற்கும் இடையேயுள்ள தமிழ் நிலத்தையும் ஆந்திரருக்குக் கொடுக்க வேண்டி வரும்— இதை இந்தக் கவுன்சில் மறந்து விடக்கூடாது."[56]

"சென்னை நகரின் ஜனத்தொகையைப் பார்த்தாலும் ஆந்திரர் சென்னையைக் கேட்க நியாயமில்லை. சென்னை வாழ் மக்களில் தமிழரின் எண்ணிக்கை 68 சதவிகிதம். தெலுங்கு பேசுவோரின் எண்ணிக்கை 16 சதவிகிதமே! இந்தப் புள்ளிவிபரம் பொய்யானது என்றார் ஒரு ஆந்திரத்தலைவர். புள்ளிவிபரத்தை நம்பாவிட்டாலும் ஆந்திரத் தலைவர்கள் தங்கள் காதுகளையும் கண்களையும் நம்புவார்களல்லவா! தயவுசெய்து அவர்கள் சென்னை நகரை ஒருமுறை சுற்றிப்பார்க்கட்டும். எங்குச் சென்றாலும் தமிழ் மயமாகவே இருப்பதைப் பார்ப்பார்கள். எவரைப் பார்த்தாலும் தமிழர் என்பதைக் காண்பார்கள். சிற்றுண்டிச் சாலைக்குச் சென்றால், அங்குக் கூடியிருக்கும் மக்கள் பேசுவது தமிழ்; சினிமாத் தியேட்டருக்குச் சென்றால் அங்கு முழங்குவதும் தமிழ்; கடற்கரைக்குக் காற்று வாங்கச் சென்றால் அங்கு நம் காதில் ஒலிப்பது தமிழ் ஆம்; சென்னையில் எங்குச் சுற்றினாலும், எதைக்

கேட்டாலும் நம் காதுகளுக்கு ஒலிப்பதெல்லாம் கன்னித் தமிழ் ஒலியேயன்றி வேறில்லை. ஆனால் அவை தமிழ் ஒலியை விஞ்சுவதில்லை"[57] என்கிறார். ஒரு வழக்கறிஞர் நீதிமன்றத்தில் வாதாடுவது போலத் தமக்குச் சாதகமான சான்றுகளையும், பாதகமான சான்றுகளையும் கூறித் தமக்குச் சாதகமான கருத்தே வலிமை பெற்றிருப்பதை விளக்குகிறார் ம.பொ.சி. மேலும், "சென்னையின் கலாச்சாரத்தைக் கவனித்தாலும், அது தமிழ்நாட்டைச் சேர்ந்ததே. பட்டினத்தார் சமாதி கொண்ட இடம் வட சென்னையில் உள்ள திருவொற்றியூர்; வள்ளுவர் கோயில் கொண்ட இடம் தென்சென்னையிலுள்ள திருமயிலை; வள்ளலார் வாழ்ந்ததும் ஜார்ஜ் டவுனிலேதான். இந்த ஞானியரெல்லாம் தமிழரே அல்லவா!"[58] என்று விளக்குகிறார். பின்னர் இலக்கியச் சான்றுகளை அள்ளித் தெளிக்கிறார்.

"திருஞான சம்பந்தரால் பாடப்பெற்றது திருமயிலைக் கோயில், வள்ளலாரால் போற்றிப் புகழப்பட்டது கந்தர் கோட்டம். பட்டினத்தாரால் பாடப்பெற்றது திருவொற்றியூர்த் திருத்தலம் ஆழ்வாராதியர்களால் போற்றப்பெற்றது திருவல்லிக்கேணியிலுள்ள திருத்தலம். ஆந்திர ஞானிகள், புலவர்களில் எவரேனும் சென்னையில் பிறந்ததுண்டா? தங்கள் இறுதிக்காலத்திலேனும் இங்குவந்து இறந்ததுண்டா? கிடையாதே!.... சென்னை நகரிலுள்ள விண்ணளாவி நிற்கும் கோபுரங்களில் காணப்படும் வேலைப் பாடுகள் யாருடையது? கன்னித் தமிழ்நாட்டான் கைவேலை அன்றோ! அக்கோபுரங்களில் உள்ள பதுமைகள் வாய் திறந்து பேசினால் "சென்னை தமிழருடையதே! பூகோள அமைப்புப் பார்த்தாலும் சென்னை தமிழ்நாட்டின் உட்பகுதியே. இன்று வாழும் மக்களின் மனவழிப் பார்த்தாலும் சென்னை தமிழ்நாட்டைச் சேர்ந்ததே"[59] என்று ஆணித்தரமாகத் தன் வாதத்தை முன்வைக்கிறார் ம.பொ.சி.

"என் தீர்மானம் ஆந்திரர்களைத் தாக்குவதல்ல; அவர்களின் தாக்குதலிலிருந்து சென்னை நகருக்குத் தற்காப்புத் தருவதாகும். 'உரிமை', 'உண்மை' இரண்டும் கலந்த தீர்மானம்.[60] என்று வாதிடும்போது தான் வாதியல்ல என்றும், பிரதிவாதியே என்றும் நயமாக எடுத்துரைக்கிறார். எதிர்த்தரப்பினரின் உணர்ச்சியைத் தூண்டிவிட்டு அதனால் விளையும் விளைவால் தான் பயன் பெறுவது ஒரு சிறந்த தர்க்கவாதியின் செயலாகும். இதனை,

ம.பொ.சி "நான் ஆந்திரனாக இருந்தாலும் சென்னை நகரில் தற்காலிக இடம் கேட்பதை முழுமூச்சுடன் எதிர்த்திருப்பேன். ஏனென்றால், அது ஆந்திர மக்களின் சுயமரியாதையையே அவமானப்படுத்துவதாகும்"[61] என்ற வாதத்தினால் அறியலாம்.

மிகவும் நயமாக பயமாகவும் பேசுவது விவாதத்தில் ஒரு உத்தியாகும். அதனை, ம.பொ.சி.யின் "இறுதியாக எனது வேண்டுகோள் இதுதான்; ஆந்திரர்களே! நீங்கள் பிரிந்து போக விரும்புகிறீர்கள்; ஆகவே பிரிந்துவிடுங்கள். எங்களையும் பிரிய விடுங்கள்! நீங்கள் தனித்து வாழவே விரும்புகிறீர்கள். தாராளமாக வாழுங்கள்; எங்களையும் வாழவிடுங்கள்!"[62] என மிக நயமாகப் பேசிய பேச்சு வெளிப்படுத்துகின்றது. இறுதியில் தம் கருத்தை அழுத்தம் திருத்தமாகக் கூறித் தன் உரையை முடிக்கிறார் ம.பொ.சி. அப்பகுதி பின்வருமாறு "ஆந்திரத் தலைவர்களுக்கு நான் கூறுவது இதுதான். கடைசி ஒரு தமிழன் உயிருடன் இருக்கும்வரை நீங்கள் சென்னையை அடைய முடியாது. தலை கொடுத்தேனும் தலைநகரைக் காப்பார்கள். இது உறுதி"[63] என்று தன் உரையை உறுதியோடு முடிக்கிறார். ம.பொ.சி.யின் உரைகளில் உள்ள புலப்பாட்டு நெறி தனியாக ஆய்வதற்குரிய ஒரு கூறாகும்.

தலைநகர் சென்னைப் பிரச்சினையை முன்வைத்து ஆந்திரர்கள் போராடிக்கொண்டிருக்கும் போதே, 1952-ஆம் ஆண்டு ஜனவரியில் இந்திய நாடாளுமன்றத்திற்கும் மாநில சட்ட மன்றங்களுக்கும் தேர்தல் அறிவிக்கப்பட்டது. நாடு விடுதலை பெற்றபின் இந்தியா தனக்காகத் தானே தயாரித்துக் கொண்ட புதிய அரசியல் அமைப்புச் சட்டப்படி நடந்த முதல் தேர்தல் அது. அந்தத் தேர்தலில் தமிழரசுக் கழகம் காங்கிரஸ் வேட்பாளர்களை ஆதரிப்பது என்றும், அவர்களின் வெற்றிக்காக உழைப்பது என்றும் முடிவெடுக்கச் செய்தார் ம.பொ.சி. திருச்சி நகரில் நடந்த மாநாட்டில் தமிழரசுக் கழகம் மேற்கொள்ள வேண்டிய நிலைபற்றி ஆலோசிக்கக்கூடிய பொதுக்குழுவில் "தமிழரசுக் கழகத்தின் மொழி, அரசியல், பொருளாதார, சமூகக் கொள்கைகளை நிறைவேற்றிக் கொள்ள முடியுமென்று கருதுவதால், 1952 பொதுத் தேர்தலில் காங்கிரஸின் வெற்றிக்காக உழைப்பது என்று இக்குழு தீர்மானிக்கிறது என்று ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதன்பின்னர் ஊர் ஊராகச் சென்று தன் பிரச்சாரப் பணியைத் தொடர்ந்தார் ம.பொ.சி. சென்னை நகரில் ஒரு வாரகாலம்

இடைவிடாது ஒவ்வொரு தொகுதியாகச் சென்று வாயே பறையாக நாவே கோலாகக் கொண்டு பிரச்சாரப் பேரிகை கொட்டினார் ம.பொ.சி.

அப்போது சென்னைத் துறைமுகத் தொகுதியில் அதிக அளவில் கருத்துச் செலுத்தினார் ம.பொ.சி. அந்தத் துறைமுகம் தொகுதியில்தான் 'மதராஸ் மனதே" என்ற ஆதிக்க வெறிக் கோஷத்தின் தந்தையான திருடி. பிரகாசம் பிரஜா சோஷலிஸ்ட் கட்சியின் சார்பில் போட்டியிட்டார். அவரை எதிர்த்துக் காங்கிரஸ் வேட்பாளர் டாக்டர். கிருஷ்ணராவ் போட்டியிட்டார். அந்தத் தொகுதி தமிழகத்தின் தலைநகர்ப் பாதுகாப்பு கொள்கைக்கு ஒரு சவாலாக அமைந்ததாக ம.பொ.சி கருதினார். துறைமுகத் தொகுதி, தமிழரல்லாதார் கணிசமாக வாழும் செளகார்பேட்டை, மண்ணடி ஆகிய பேட்டைகளைத் தன்னகத்தே கொண்டதாகையாலும், திரு பிரகாசம் அகில இந்தியப் புகழ்பெற்ற பெருந்தலைவர் என்பதாலும், அவர் வெற்றி பெற்றுவிடக் கூடும் என்று பொதுவாக நம்பப்பட்டது. அவரை எதிர்த்துப் போட்டியிட்ட காங்கிரஸ் வேட்பாளர் டாக்டர் யூ. கிருஷ்ணராவுக்கும் அந்த அச்சம் இருந்தது.

இந்தச் சூழலில் காங்கிரஸ் வேட்பாளர் டாக்டர் யூ. கிருஷ்ண ராவை ஆதரித்துப் பேசிய கூட்டத்தில், "சென்னையை ஆந்திரர் கேட்பது அநீதி; அது தமிழகத்தையே சாரும்" என்று கூறிய முதலமைச்சர் குமாரசாமி ராசாவைத் தான் தோற்கடித்து விட்டதாகப் பெருமை பேசுகிறார் பிரஜாகட்சித் தலைவர் பிரகாசம். அதற்குத் துறைமுகத் தொகுதியில் பிரகாசத்தைத் தோற்கடித்து நான் பதில் கொடுக்கிறேன். ஆந்திரகேசரி காங்கிரசின் அடியைத் தட்டினார். நான் பிரஜா கட்சியின் முடியைத் தட்டிக் காட்டுகிறேன்"[64] என்று ம.பொ.சி. தேர்தல் பொதுக்கூட்டத்தையும் தலைநகர்ப் பிரச்சினையைப் பேசுவதற்குரிய இடமாகக் கொண்டார். அப்போது தமிழ் மக்களிடையே இனவுணர்வினைத் தட்டியெழுப்பிப் பேசிய ம.பொ.சி.யின் பேச்சு பின்வருமாறு:

"தமிழ் மக்களே! பிரகாசத்தைத் தோற்கடியுங்கள். சாதாரணமாகத் தோற்கடித்தால் போதாது; அவருடைய ஜாமீன் தொலைந்தால்தான் "சென்னை தமிழருடையதே" என்ற கட்சி உறுதிப்படும். ஆம், ஜாமீன் தொலையும் படி தோற்கடியுங்கள்!

ஜாமீன் தொலையும்படி தோற்கடியுங்கள்!! ஜாமீன் தொலையும்படி தோற்கடியுங்கள்!!!"[65] என்று உணர்வு பொங்கப் பேசினார்.

திரு பிரகாசம் போட்டியிட்ட துறைமுகத் தொகுதியில் பொதுக் கூட்டத்தில் பேசியதோடு நில்லாமல், தெருத் தெருவாக அலைந்தும், வீடுவீடாக ஏறியும் காங்கிரஸ் வேட்பாளரையும் தனித்தனியாகப் பார்த்து, 'மதராஸ் மனதே' என்று கோஷமிடுபவரை வெற்றிபெற விடுவது தமிழினத்தின் தன்மானத்திற்கு இழுக்கு என்று வலியுறுத்தினார். இதற்குப் பதிலுரைப்பதாகப் பேசிய டி. பிரகாசம், "ம.பொ.சி.யின் அறைகூவலை ஏற்றுக் கொள்கிறேன். நான் வெற்றி அடைந்தால் அந்த வெற்றி சென்னை நகரின்மீது ஆந்திரர்களுக்கு உரிய உரிமையை உலகறியச் செய்யும்" என்றும் பேசினார். இறுதியில் டி. பிரகாசம் அத்தேர்தலில் தோல்வியடைந்தார். இதிலிருந்து ம.பொ.சி. ஒரு கருத்தைப் பரப்ப நினைத்தால் அதற்கு எல்லாவிதமான உத்திகளையும் பயன்படுத்துவார் என்பது தெளிவாகிறது. அந்தத் தேர்தல் முடிவே சென்னை மீது ஆந்திரருக்கு உரிமை இல்லை என்பதனை முதலில் உலகறியச் செய்தது. இந்த வெற்றி ம.பொ.சி.யின் வெற்றி என்றே இதழ்கள் யாவும் பாராட்டின.

ம.பொ.சி. அவர்கள் தமிழ்நாட்டுக்கு ஆற்றிய பணிகளில் குறிப்பிடத்தகுந்த பணி ஒன்று உண்டால் அது தமிழகத்திற்கு 'தமிழ்நாடு" என்ற பெயர் வைக்கப் போராடியதுதான். வேறு எந்த நாட்டிலும் இந்தக் கொடுமை நடைபெறாது. ஆம் தமிழ் பேசும் தமிழர்கள் வாழும் பகுதிக்குத் 'தமிழ்நாடு' என்று பெயர் வைப்பதற்குப் போராட வேண்டியிருந்தது" என்னே தமிழ் மக்களின் இனவுணர்ச்சி! 1956-ஆம் ஆண்டு நவம்பர் முதல் நாளில் தமிழ் மாநிலம் தமிழ் மாநிலமாக - மொழிவாரி மாநிலமாகப் பிரித்து அமைக்கப்பட்டது. முன்னாளிலிருந்த பரந்த சென்னை மாகாணத்திலிருந்த ஆந்திரம், கன்னடம், கேரளம் ஆகியவை தனித் தனியே பிரிக்கப்பட்ட பின்னரும், எஞ்சியிருந்த தமிழ் பேசும் தமிழ் மக்கள் வாழும் பகுதி சென்னை ராஜ்ஜியம் என்றே அழைக்கப்பட்டு வந்தது.

ம.பொ.சி. அவர்கள் வடக்கெல்லை, தெற்கெல்லைப் பகுதிகளை முறையே ஆந்திரர்களிடமிருந்தும், கேரளர்களிடம் இருந்தும் மீட்டு அளித்தார். அதுபோலவே ஆந்திரர்களால் உரிமை கொண்டாடிய சென்னை மாநகரைக் காத்துத் தமிழகத்துடனேயே

நிலைத்திருக்கச் செய்தார். தமிழ்நாட்டிற்காக இவ்வளவு போராடிய ம.பொ.சி. அன்றைய தமிழக முதல்வராயிருந்த பெருந்தலைவர் காமராசரிடம் 'தமிழ்நாடு' என்று பெயர் வைக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்தார். அனைத்துக் கட்சிகளும் இக்கோரிக்கையை ஆதரித்தன. ஆனால் அன்றைய முதலமைச்சராயிருந்த காமராசர் இந்தக் கோரிக்கையை ஏற்க மறுத்தார். தமிழகத்தில் உள்ள காங்கிரஸ் கட்சிக்கிளைக்கு தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி என்று பெயரிருந்தாலும் நாட்டின் பெயரைத் 'தமிழ்நாடு' என்று மாற்ற ஏனோ மறுத்தார்.

சென்னை மாநகராட்சியின் கல்விக்குழுவின் தலைவராக இருந்தபோதே கல்விக்குழுவின் மொழி விஷயத்தில் பல மாறுதல்களைக் கொண்டு வந்த ம.பொ.சி. இதனை விடுவதாக இல்லை. பெயர் மாற்றக் கோரிக்கையை ஆதரித்துத் தமிழரசுக் கழக வழக்கறிஞர் திரு. பட்சி ராஜகோபாலன் சென்னை மாநகராட்சிக் கவுன்சில் கூட்டத்தில் முன்மொழிந்த தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது. அனைத்துக் கட்சிகளும் பெயர் மாற்றக் கோரிக்கைக்கு ஆதரவு தெரிவித்தன. ஆனால் இவை எல்லாம் தமிழக அரசின் மனதை மாற்றவில்லை. இதைக் குறித்து ம.பொ.சி. பின்வருமாறு எழுதுகிறார். புதிய தமிழகம் படைக்கும் குறிக்கோளுடன் நான் நடத்திய போராட்டங்களிலே தலையாயது 'தமிழ்நாடு' பெயர் மாற்றக் கோரிக்கைப் போராட்டமேயாகும். தமிழ் வழங்கும் மாநிலத்திற்கு 'தமிழ்நாடு' என்று பெயரிடக்கோரி ஒரு போராட்டம் நடத்தவேண்டி நேர்ந்தது - அதையும் சுத்தத் தமிழரான திரு. காமராசர் ஆட்சிக்கு எதிராக நடத்தவேண்டிய நிலைமை ஏற்பட்டது. இது எனக்கோ தமிழினத்துக்கோ பெருமை தரக் கூடியதென்று நான் கருதவில்லை. உண்மையில் ஒரு போராட்டமின்றியே அந்தக் கோரிக்கை வெற்றி பெறுவதையே நான் விரும்பினேன். அந்த நம்பிக்கையுடன் ஐந்தாண்டுக் காலம் பொறுமையைக் கடைப்பிடித்து வந்தேன். ஆனால் காங்கிரஸ் ஆட்சி காட்டிய தமிழுணர்ச்சியற்ற போக்கு எனக்கு வியப்பையும் வேதனையையும் அளித்தது. அதன் பின்னரே, போராட்டத்தைத் தொடங்குவது என்ற முடிவுக்கு வந்தேன்"[66] என்கிறார் ம.பொ.சி.

தமிழ்நாடு பெயர் மாற்றக் கோரிக்கைப் போராட்டத்திற்குரிய நாளைக் குறிப்பதற்காகச் சென்னைக் கோகலே மன்றத்தில்

25-12-1960-இல் நடைபெற்றது. அன்று நடந்த மாநாட்டு மன்றத்தில் கூடியிருந்த மக்கள் கூட்டத்தைப் பற்றி ம.பொ.சி. பின்வருமாறு கூறுகிறார்.

"அந்த மன்றத்திலே அன்று நான் கண்ட மக்கள் கூட்டத்தையும், போராட்ட உணர்ச்சியையும், அதற்கு முன்னும் பின்னும் கண்டதே இல்லை...... தமிழர் கூட்டம் - இளந்தமிழர் படை வெள்ளம் போலத் திரண்டிருந்தது"[67] என்கிறார்.

அந்த மாநாட்டில் காந்தியடிகள் மறைந்த, சர்வோதய தினமான 30-01-1961-இல் 'தமிழ்நாடு' பெயர் மாற்றக் கோரிக்கைப் போராட்டத்தைத் தொடங்குவது என்று ஒரு தீர்மானம் ஒருமனதுடன் நிறைவேற்றப்பட்டது. அந்தக் காலக்கட்டத்தில் தமிழ்நாட்டில் உள்ள தமிழ் மன்றங்கள், சமூகப் பணிநிறுவனங்கள், உள்ளாட்சி அமைப்புக்கள் யாவும் 'தமிழ்நாடு' பெயர் மாற்றக் கோரிக்கையை ஆதரித்துத் தீர்மானங்கள் நிறைவேற்றின. அந்தச் சூழலில் எந்தக் கட்சியையும் சாராத முதுபெரும் நாடகக் கலைஞரான பம்மல் சம்பந்த முதலியார் தமிழரசுக் கழகம் நடத்த விருக்கும் தமிழ்நாடு பெயர் மாற்றக் கோரிக்கைக்கு ஆதரவாக அறிக்கைவிட்டது குறிப்பிடத்தக்கதாகும். இந்தச் சூழலில் ம.பொ.சி. வேதனையோடு எழுதியுள்ள பகுதி பின்வருமாறு: 'சென்னை என்ற பெயர் உலகப் பிரசித்தி பெற்றிருப்பதால் அதே பெயர் நாட்டிற்கும் அமைய வேண்டும் என்கிறார் அமைச்சர் பக்தவத்சலம். லண்டன் என்ற பெயர் சர்வதேசப் புகழ்பெற்றது என்பதனால் இங்கிலீஷ் மொழி பேசும் நிலத்தை லண்டன் என்று சொல்லவில்லை. மொழியின் பெயரால் இங்கிலாந்து என்று தான் சொல்கிறார்கள்.

பெர்லின் என்ற நகரம் உலகப் பிரசித்தி பெற்றது. அதற்காக அந்தப் பெயரால் நாட்டை அழைக்காமல் 'ஜெர்மன் என்று மொழியின் பெயராலேயே அழைக்கிறார்கள். ஒவ்வொரு நாட்டின் பெயரும் இதுபோலத்தான். ஆனால் மந்திரி பக்தவத்சலத்தின் மதிக்கு இவையெல்லாம் எட்டவில்லையே என்செய்வது!"[68] என்று விளக்கிச் சொல்கிறார். உலகம் முழுவதும் உள்ள நாடுகளின் பெயர்கள் எல்லாம் எவ்வாறு மொழியால் அமைந்திருக்கின்றது என்பதைப் பல சான்றுகள் காட்டித் தன் கருத்தை நிலைநாட்ட முயற்சிக்கிறார். இறுதியில் "காங்கிரஸ் கட்சியைக் கெஞ்சுகிறேன்! இப்படிக் கேட்பதில் எனக்கு வெட்கமில்லை. எனது நலத்துக்காக

அல்லாமல் இன்பத் தமிழகத்தின் நலனுக்காகப் பிச்சை கேட்கவும் நான் தயங்கமாட்டேன். காங்கிரஸ் கட்சியிடம் இரக்கின்றேன். என் இரு கரங்களையும் ஏந்தி இரக்கின்றேன். ஐயன்மீர் மக்கள் கோரிக்கைக்கு இணங்குங்கள் என்று இரக்கின்றேன். இணங்காவிடில் அதிகாரப்பதவியிலிருந்து இறக்கப்படுவீர்கள்! என்று எச்சரிப்பதைத்தவிர வேறு என்ன இருக்கிறது?"[69] என்று தனக்கேயுரிய நயமாகவும் பயமாகவும் பேசும் பாணியில் முதலில் இறைஞ்சுகிறார்: இறுதியில் எச்சரிக்கிறார்.

"தேவிகுளம் பீர்மேடு பகுதிகளைக் கைவிட்டாலும், 'தமிழ்நாடு' என்று பெயர் வைத்தலை ஒப்புக் கொள்வார்கள் என்று எதிர்பார்த்தேன். அந்தக் குறைந்தபட்சக் கோரிக்கையைக் கூட ஏற்க மறுத்துவிட்டன காங்கிரஸ் கட்சியும் காமராஜர் ஆட்சியும்".

"இந்தியாவின் ஒவ்வொரு மாநிலத்தின் தலைநகருக்கும் ஒரே பெயர்தான் இருக்கிறது. ஆனால் துரதிர்ஷ்டம் பிடித்த தமிழகத்தின் தலைநகருக்கு ஆங்கிலத்தில் 'மெட்ராஸ்' என்றும் தமிழில் 'சென்னை' என்றும் இருபெயர்கள் இருக்கின்றன. சென்னை என்பது 'மெட்ராஸ்' என்பதன் மொழிபெயர்ப்பல்ல. சென்னப்ப நாயக்கன் என்ற ஆந்திரமன்னன் நம்மை அடிமைப்படுத்தி ஆண்டதால் வந்த பெயர். மதராஸ் என்பது நம்மை அடிமை கொண்டு கொடுமைப்படுத்திய அந்நியர் வைத்த பெயர். இந்த இரண்டு பெயர்களுமே நாம் சுமந்து வரும் அடிமைச் சின்னங்கள் - அவமானச் சின்னங்கள்! தமிழகம் தனியரசு பெற்ற பின்னுமா இந்தச் சின்னங்களை நாம் சுமக்க வேண்டும்?"[70] என்று உண்மையை விளக்கிக் காட்டுகிறார் ம.பொ.சி.

சென்னை என்பது பழைய பெயராயிற்றே. அதைவிட்டு விடலாமோ என்று சிலர் கேட்கிறார்கள். யார்விடச் சொன்னது? மாநிலத்திற்குத் 'தமிழ்நாடு' என்று பெயர் வைத்த பின்னும், அதன் தலைநகரத்தின் பெயர் சென்னை என்றுதானே இருக்கும் மந்திரிகளின் மதிக்கு இது கூடவா எட்டவில்லை?

'மெட்ராஸ் என்ற பெயரை நாம் ஏற்றுக் கொண்டால் அப்புறம் தமிழ்நாடு என்ற பெயர் மறைந்தே போகும். அப்படி மறைந்து போனால் பிறகு நாம் தமிழர் அல்லர்; மதராசிகள்.

ஏனெனில் நாம் வாழும் நாடு மதராஸ் தானே!"[71] என்று எள்ளி நகையாடுகிறார் ம.பொ.சி.

ஏற்கெனவே திட்டமிட்டப்படி 30-01-1960 இல் தமிழ்நாடு பெயர் மாற்றக் கோரிக்கை போராட்டம் நடைபெற்றது. சட்டமன்றம் நடைபெறும் கோட்டைக்கு முன்னால் தொண்டர்கள் சத்தியாக்கிரகப் போர் நடத்தினர். இதனால் சட்டமன்றம் ஒத்தி வைக்கப்பட்டது. தமிழ்நாடு முழுவதும் 1700 தொண்டர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுக் கைதானார்கள். தொடர்ந்து 18 நாட்கள் போராட்டம் நடந்தபிறகு அரசு மனமாற்றம் அடைந்தது. அந்நாளைய நிதியமைச்சர் ம.பொ.சி. அவர்களைக் கடிதம் மூலம் அழைத்துப் பேசி, 'தமிழ்நாடு' என்று பெயர் வைக்கப்படும் என்று உறுதி கூறினார். ம.பொ.சி.க்கு அளித்த உறுதியின்படி 24-02-1961இல் நடந்த சட்டப் பேரவைக் கூட்டத்தில் 'தமிழ்நாடு' என்னும் பெயர் தமிழளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதனை அந்நாளைய நிதி அமைச்சர் சி. சுப்பிரமணியம் அவர்கள் கூற்றாகவே காணலாம்.

"தமிழ்நாடு" என்று பெயர் வைப்பதில் எங்களுக்கு வெட்கமோ, அவமானமோ இல்லை. 'தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி' என்று முன்பே பெயர் வைத்தோம். அதை மாற்றவேயில்லை. தமிழின் வளர்ச்சி, தமிழ்நாட்டுப்பற்று ஆகிய விஷயங்களில் காங்கிரஸ் காரர்களுக்கு அக்கறை குறைவு எதுவுமில்லை...... 'மெட்ராஸ் ஸ்டேட்' என்பதற்கு சென்னை ராஜ்யம் என்று தமிழில் எழுதப்படுகிறது. இனித் தமிழில் எழுதும்போது சென்னை ராஜ்ஜியம் என்று எழுதுவதற்குப் பதிலாக 'தமிழ்நாடு' என்று எழுதவேண்டும் என்று அரசாங்கம் முடிவுசெய்துள்ளது. 'அரசாங்க நிர்வாகக் கடிதப் போக்குவரத்தில் இனித் தமிழ்நாடு என்றுதான் எழுதப்படும்...... ராஜ்யத்திற்கு வெளியேயுள்ளவர்களுக்கு எழுதும் போது மட்டுமே 'மெட்ராஸ்' என்ற பெயர் பயன்படுத்தப்படும்."[72] என்று அறிவித்தார் நிதியமைச்சர். அரசு அலுவலகப் பெயர்ப் பலகைகளில் மெட்ராஸ் என்பது அகற்றப்பட்டு, 'தமிழ்நாடு' என்று பொறிக்கப்பட்டது. உதகையிலுள்ள அரசுமாளிகைக்கு 'தமிழகம்' என்று பெயரிடப்பட்டது.

இந்தப் போராட்டத்தில் அரசு விரைந்து செயல்பட்டிருந்தால் ஓர் உயிரைக் காப்பாற்றியிருக்கலாம். தமிழ்நாடு முழுவதும்

தமிழ்நாடு பெயர்மாற்றக் கோரிக்கையை முன்வைத்துப் போராட்டம் நடத்திக் கொண்டிருந்தபோது. விருதுநகரில் திரு. சங்கரலிங்க நாடார் என்பவர் 20-க்கு மேற்பட்ட கோரிக்கைகளை முன்வைத்து, அதனை ஏற்க வேண்டும் என்று உண்ணாவிரதம் இருந்தார். அவருடைய கோரிக்கைகளில் ஒன்று 'தமிழ்நாடு' என்று பெயர் மாற்றம் செய்ய வேண்டும் என்பதாகும். அவர் தமிழ்நாடு பெயர் மாற்றம் அடைவதற்கு முன்னரே ஆறு நாட்கள் உண்ணாவிரதம் இருந்து உயிரைத் துறந்தார். தமிழ்நாடு அரசு சற்று முன்னரே பெயர் மாற்றத்துக்கு ஒத்துக் கொண்டிருந்தால் திரு. சங்கரலிங்க நாடார் உயிரைக் காப்பாற்றி இருக்கலாம். ஆனால் இறந்த பின்னரே பெயர் மாற்றம் தமிழக அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்டது குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாடு பெயர் மாற்றப் போராட்டத்தின் பின் தமிழக அரசு 1961-ஆம் ஆண்டு தமிழில் மட்டும் பெயர் குறிப்பிடும்போது 'தமிழ் நாடு' என்றும், ஆங்கிலத்தில் குறிப்பிடும் இடத்தில் 'மெட்ராஸ் ஸ்டேட்' என்றும் குறிப்பிடப்படும் என்று ஒப்புக்கொண்டது. தமிழரசுக் கழகமும் அப்போதைக்கு அதனை ஏற்றுக் கொண்டது.

1967-இல் தமிழ்நாட்டில் ஒரு மாபெரும் அரசியல் மாற்றம் ஏற்பட்ட போது - அதுவரை ஆளும் கட்சியாக இருந்த காங்கிரஸ் தோல்வியடைந்தது - தி.மு.கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது பல மாற்றங்கள் நிகழ்ந்தன. 1968-இல் ஆங்கிலத்தில் இருந்த 'மெட்ராஸ் ஸ்டேட்' என்பதும் 'தமிழ்நாடு' என்று பெயர் மாற்றம் பெற்றது. இப்போது சிலம்புச் செல்வர் தமிழ்நாடு சட்டசபையில் உறுப்பினராக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. அண்ணாவின் இரண்டாண்டுக் கால ஆட்சியில் புரிந்த சாதனைகளில் ஒன்றாக இதனைக் குறிப்பிடுகிறார் ம.பொ.சி. இதனை அவர் கூற்றாகவே காணலாம்.

"அண்ணாவின் இரண்டாண்டுக் கால ஆட்சி புரிந்த சாதனைகளிலே 'மெட்ராஸ் ஸ்டேட்' அதாவது, சென்னை ராஜ்யம் என்னும் அவமானப் பெயரை 'தமிழ்நாடு' என்னும் தன்மானப் பெயராக மாற்றியதும் ஒன்றாகும்" என்று கூறிவிட்டு அப்போது என்ன நடந்தது என்பதை விரிவாக விளக்குகிறார். "மூதறிஞர் இராஜாஜி ஆங்கிலத்தில் 'டமில் நாட்' (Tamil Nad) என்பதாக அமைய வேண்டும் என்று அரசுக்கு ஆலோசனைக் கூறி

வெளிப்படையாக அறிக்கை விட்டார். அரசின் சார்பில் அந்த ஆலோசனையை ஏற்றுக் கொண்டுவிட்டதாக அண்ணாவும் இராஜாஜிக்கு அமைச்சர் மாதவன் மூலம் அறிவித்துவிட்டார்.

சட்டப் பேரவையில் அண்ணா அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்திலே, ஆங்கில வாசகம் 'டமில் நாட்' என்று தான் அமைந்திருந்தது. அதற்கு நான் 'தமிழ் நாடு' (Tamizh Nadu) என்று திருத்தம் கொடுத்தேன். அண்ணா அவர்கள் என்னை அழைத்துப் பேசி, எனது திருத்தத்தைத் திரும்பப்பெறுமாறு கேட்டுக் கொண்டார். வடக்கேயுள்ளவர்களுக்கு 'ழ' கரத்தைப் பிழையின்றி ஒலிக்க முடியாதாகையால். அரசின் தீர்மானத்தில் உள்ள டமில் (Tamil) என்ற வாசகத்தை ஏற்குமாறு என்னைக் கேட்டுக் கொண்டார். நாடு (Nadu) என்பதனை இராஜாஜி ஏற்காததனை எடுத்துக்காட்டி, பெரியவர் அறிவுரைக்கு மதிப்பு தருவதாக இதிலும் விட்டுக் கொடுக்குமாறு அண்ணா என்னை வற்புறுத்தினார். நான் 'ழ'கர விஷயத்தில் அண்ணாவின் கருத்தை ஏற்றுக் கொண்டேன். ஆனால் 'உ'கர - அதாவது 'Nad' என்றில்லாமல் 'Nadu' என்றிருக்க வேண்டும் என்பதில் பிடிவாதம் காட்டினேன். அண்ணா அவர்கள் ராஜாஜிக்குத் தந்த உறுதிமொழியைக் கைவிட்டு எனது திருத்தத்திற்கு ஒப்புக் கொண்டார். தமிழ்மொழியின் ஒலிகூடக் காப்பாற்றப்பட வேண்டும் என்பதில் என்னைப் போன்றே அவரும் அக்கறை காட்டினார்."......... "தீர்மானம் எதிர்ப்பின்றி நிறைவேறியதாகப் பேரவைத் தலைவர் அறிவித்தபோது முதல்வர் அண்ணா அவர்கள் 'தமிழ்நாடு' என்று கூற, பேரவை உறுப்பினர்கள் அனைவரும் 'வாழ்க' என்று உரத்த குரலில் ஒலித்தனர். இந்தப் பெயர் மாற்றத்தை யொட்டிய அரசியல் திருத்த மசோதா ஒன்று நாடாளுமன்றத்திலும் நிறைவேற்றப்பட்டது."[73] என்று நினைவு கூர்கிறார் ம.பொ.சி.

1967-இல் நடந்த சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்டுச் சட்ட மன்ற உறுப்பினர் ஆகிய ம.பொ.சி. செய்த முதல் பணி சென்னை மாநிலத்திற்குத் 'தமிழ்நாடு' என்று பெயர் சூட்ட வேண்டும் என்று தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றியதுதான். ஏறத்தாழ எட்டு ஆண்டு 'தமிழ்நாடு' பெயர் மாற்றத்திற்காகப் போராடிய ம.பொ.சி. காலமறிந்து செயல்பட்டுத் 'தமிழ்நாடு' என்ற பெயர் மாற்றத்தைத் தமிழிலும், ஆங்கிலத்திலும் கொண்டு வந்து தனது இலட்சியத்தை நிறைவேற்றிவிட்டார்.

## மாநில சுயாட்சிப் போர்

இந்திய தேசம் விடுதலை பெறுவதற்கு முன்னரே மாநில சுயாட்சிக் கோரிக்கையைத் தமிழக மக்களின் முன்வைத்தார் ம.பொ.சி. அப்போது ம.பொ.சி. சென்னை மாவட்ட காங்கிரஸ் கமிட்டியின் செயலாளராக இருந்தார். 1945-ஆம் ஆண்டு ஜூன் 26-ஆம் நாள் திருச்சி மலைக்கோட்டையில் காந்தியக் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை அவர்கள் தலைமையில் நடந்த ஓர் இலக்கியக் கூட்டத்தில் ம.பொ.சி பேசியபோதே மாநில சுயாட்சி என்ற கருத்தை முன்வைத்தார். அதன் சாரம் பின்வருமாறு:

"விடுதலை பெற்ற இந்தியாவில் ஒவ்வொரு மாகாணமும் மொழிவாரி திருத்தியமைக்கப்படல் வேண்டும். ஒவ்வொரு மாகாணமும் இந்திய சமஷ்டியில் பூரண சுயாட்சி பெற்ற அங்கங்களாக இருக்க வேண்டும். மத்திய அரசிடம் பாதுகாப்பு, போக்குவரத்து, அயல்நாட்டுறவு ஆகிய மூன்று அதிகாரங்கள் மட்டுமே விடப்பட்டு, 'எஞ்சிய அதிகாரங்கள்' உள்பட இதர எல்லா அதிகாரங்களும் மாநில அரசுகளுக்கு உரியனவாகும்."[75] இக்கருத்து அந்நாளைய காங்கிரஸாருக்கு உடன்பாடானதாகத் தோன்ற வில்லை. 1946-ஆம் ஆண்டு திசம்பர் 14-ஆம் நாளிலே சென்னையில் நடைபெற்ற தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் திரு. பெரியசாமித் தூரன் அவர்கள் தலைமையில் நாமக்கல் கவிஞர் அவர்கள் ம.பொ.சியின் மாநில சுயாட்சிக்கு ஆதரவு காட்டிப் பேசினார். அவர் பேசும்போது, "தமிழ்நாடு ஒரு தனி மாகாணம் ஆகவேண்டும். அதில் தமிழ்மொழிக்கும் தமிழர்களுக்குமே ஆதிக்கம் இருக்க வேண்டும்..... ஆனால், தமிழ் மாகாணத்தில் தமிழன் தனியரசு கொண்டபின் இந்திய நாட்டை மறந்துவிடக் கூடாது. நாம் இந்தியாவின் பொது நலத்தையும் போற்ற வேண்டும்...."[76] என்று தேசியத்தையும், தமிழ் இன உணர்ச்சியையும் மனத்திற்கொண்டு பேசினார்.

ம.பொ.சி. அவர்கள் 1946-ஆம் ஆண்டு நவம்பர் மாத தமிழ் முரசு இதழில், "பேசும் மொழியும் வாழும் நாட்டின் இயற்கையும் இந்திய சமுதாயத்தைப் பல்வேறு இனங்களாகப் பிரித்து வைத்திருக்கின்றன. அவர்களது பழக்கவழக்கங்களும் கூட வெவ்வேறு விதமாகவே இருந்து வருகின்றன. ஒவ்வொரு இனத்தவரும் தாம் வாழும் பிரதேசத்தையே தம் தாயகமாக

எண்ணுகின்றனர். உதாரணமாக, தமிழர் தமிழகத்தையே தாயகமாகக் கருதுகின்றனர். பஞ்சாபியர் பாஞ்சாலத்தையே தாயகமாக எண்ணுகின்றனர். இந்த அடிப்படையிலேயே ஒவ்வொரு தேசிய இனத்தவரும் தங்கள் தாயகத்தின் விடுதலையைக் கோரியே சுதந்திரப் போரில் ஈடுபட்டனர். ஆகவே, சுதந்திர இந்தியாவில் ஒவ்வொரு தேசிய இனமும் தன் தன் தாயகத்தில் சுதந்திரக் குடியரசை நிறுவிக் கொள்ள உரிமை இருக்க வேண்டும்"[77] என்று எழுதினார்.

இந்தியா விடுதலை அடைந்தது. ஆனால் 'தமிழரசு' கனவாகவே இருந்தது. அதனைக் குறித்துக் காங்கிரசார் யாரும் கவலைப்பட வில்லை. இது குறித்து ம.பொ.சி பல வகையாலும் பிரச்சாரம் செய்தாலும் 1956-இல் தான் மொழிவாரித் தமிழ் மாநிலம் உருவானது. அப்போது ம.பொ.சி. கூறியபடி அம்மாநிலம் அமைய வில்லை. மாநில அரசுகளுக்கு நிறைய அதிகாரங்கள் வேண்டுமென்ற கோரிக்கைகள் இன்றுவரை கனவாகவே ஆகிவிட்டன என்றால் அது மிகையில்லை. தமிழகத்திலும் சரி மத்தியிலும் ஆட்சிகள் பல மாறின. ஆயினும் ம.பொ.சி. பரிந்துரைத்த மாநில சுயாட்சி நிறைவேறவே இல்லை. வருகிற மத்திய அரசுகள் எல்லாமே தம்முடைய அதிகாரத்தைக் குறைத்துக் கொள்ள விரும்பவில்லை.

"பிறப்பால், பேசும் மொழியால், வாழ்க்கை நெறியினால் நான் ஒரு தமிழன், தமிழகமே என் தாயகம். ஆகவே பிரிட்டிஷ் திட்டத்தைப் பார்க்குந்தோறும், அதன் ஒவ்வொரு அம்சத்தையும் படிக்குந்தோறும் தமிழன் என்ற எண்ணத்தோடேயே பார்க்கிறேன். படிக்கிறேன். இத்திட்டம் "இந்தியாவின் விடுதலைக்கான காரணம்" என்கின்றனர் அதன் காரணக் கர்த்தாக்கள். அப்படியானால் அதில் தமிழகத்தின் பூரண விடுதலைக்கும் தடை இல்லாத உரிமை தரப்பட்டிருக்கிறதா என்றே பார்க்கிறேன்"[78] என்று பிரிட்டிஷ் திட்டத்தைக் குறித்து விமரிசிக்கிறார் ம.பொ.சி.

"இந்திய மக்களின் சுயநிர்ணய உரிமையைத் தங்கள் திட்டம் ஒப்புக் கொண்டு விட்டது என்கின்றனர் பிரிட்டிஷ் தூதுக் கோஷ்டியினர். அது உண்மையானால் அத்திட்டத்தில் தமிழருக்கும் சுயநிர்ணயம் உண்டா என்று தடவிப் பார்க்கிறேன்" என்று தமிழரசுக்குரிய செய்தியுள்ளதா என்று பார்க்கிறார். இவ்வாறு தமிழின உணர்ச்சியுடன் பிரிட்டிஷ் திட்டத்தையும், அதன்மீது

பிரிட்டிஷ் மந்திரிகள் தந்த விரிவுரைகளையும் பலமுறை படித்துப் பார்த்துவிட்டுத் தன் கருத்தைப் பின்வருமாறு எழுதுகிறார்.

"இந்தியாவில் உள்ள நாடுகள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு இனத்தார் வாழ்கின்றனர். அந்த இனங்கள் ஒவ்வொன்றுக்கும் தனித் தனி மொழி, நாகரிகம், சரித்திரம் ஆகியவை இருந்து வருகின்றன. இங்ஙனம் பலநாட்டுப் பண்புகள் அமைந்திருப்பதனாலேயே இந்தியாவை ஒரு உபகண்டம் என்று சொல்ல வேண்டி இருக்கிறது"[79]

ஆகவே இந்தியாவின் வருங்கால அரசியல் திட்டத்தை வகுக்கும்போது மேற்குறித்த நாடுகளின் அமைப்பையும், அதில் வாழும் இனங்களின் பண்பாட்டையும் பாழாக்காது பார்த்துக் கொள்ள வேண்டும் என்றும், இல்லையேல் சுதந்திர இந்தியா அமைதியாக வாழ முடியாது என்கிறார் ம.பொ.சி[80] பிரிட்டிஷ் திட்டத்தில் மொழிவாரித் தேசிய இனங்கொண்ட ஒரு கூட்டுக் குடும்பமாக இந்திய சமுதாயம் ஏற்கப்படவில்லை என்பதனை ஒரு குறையாக ம.பொ.சி. கருதினார். மொழிவாரி அரசியல் நிர்ணய சபைகள் அமைய வேண்டும். அந்தச் சபைகள் அந்தந்த மாகாணங்களில் பூரண சுதந்திரமுள்ள அரசாங்கங்களை அமைக்க உரிமை பெற்றமையாயிருக்க வேண்டும் என்று கருதினார் ம.பொ.சி. ஆனால் இந்தியா விடுதலை அடையும்போது அவர் கருத்தை யாரும் ஏற்றுக் கொள்ளவில்லை.

காங்கிரஸ் மேலிடம் மொழிவாரி மாகாணங்களின் சுதந்திரத்தை விட மத்திய சர்க்காரின் பலத்தையே பெரிதாக மதித்தனர். அதனாலேயே அப்போது காங்கிரஸ் தலைவராயிருந்த மௌலானா ஆசாத் பிரிட்டிஷ் மந்திரி சபைத் தூது கோஷ்டிக்கு எழுதிய கடிதத்தில், "ராணுவம், போக்குவரத்து, அயல்நாட்டு ராஜ்ஜிய உறவு ஆகிய மூன்று பொறுப்புகள் மத்திய யூனியன் சர்க்காருக்கென்றும் மற்றவை மாகாணங்களுக்கென்றும் பிரிட்டிஷ் தூதினர் சொல்வதைக் காங்கிரஸ் ஏற்கமுடியாது. வர்த்தகம், கைத்தொழில், நிதி, சுங்கம் ஆகிய பொறுப்புகளும் மத்திய சர்க்காருக்கு இருக்க வேண்டும் என்பது காங்கிரஸின் திட்டமான கோரிக்கை"[81] என்று குறிப்பிட்டிருந்தார்.

இப்படிப் பார்த்தால் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தால் இப்போது ஏற்பட்டுள்ள தற்போதைய மத்திய சர்க்காருக்குள்ள அதிகாரங்கள் ஏகாதிபத்தியம் வெளியேறிய பிறகும் நீடிக்க வேண்டும் என்பதே காங்கிரஸ் தலைமையினர் கொள்கை என்று ஏற்படுகின்றது. இதைச் சுதந்திர ஆர்வமுள்ள எந்தத் தமிழனேனும் ஏற்க முடிமா? இந்தியாவில் உள்ள இதர இனங்களுடன் உறவு கொள்ளத் தமிழர் விரும்புகின்றனர். ஆனால் "உறவு" என்பது உரிமையைப் பறி கொடுப்பதாய் இருக்க முடியாது!'' என்றும், 'எந்த ஒரு அரசாங்கத்துக்கும் உயிர்நாடியாக இருக்கக் கூடிய வர்த்தகம், கைத் தொழில், நிதி ஆகியவற்றில் மாகாணங்களுக்குச் சுதந்திரம் இல்லையென்றால் அப்புறம் மாகாண சுதந்திரம் என்பது வெறும் ஏமாற்று வார்த்தையாகத்தான் முடியும்''[82] என்று கருதுகிறார் ம.பொ.சி.

அன்று தொடங்கி ம.பொ.சி. தன் வாழ்நாள் முழுதும் மாநில சுயாட்சி பற்றிப் பிரசாரம் மேற்கொண்டு வந்திருக்கிறார். 1945ஆம் ஆண்டு திருச்சி மலைக்கோட்டையில் ம.பொ.சி. பேசிய கூட்டத்திலேதான் முதன்முதலில் மாநில சுயாட்சி பற்றிப் பேசினார். அதன்பிறகு பலர் அக்கொள்கையை ஆதரித்துப் பேசினாலும் அன்றைய அரசு அதுபற்றிக் கண்டு கொள்ளவே இல்லை. அதன்பின்னர் 1946 ஏப்ரல் மாதம் காங்கிரஸ் காரியக் கமிட்டியின் தீர்மானமாகக் கொண்டு வந்து ஏற்கும்படி செய்தார்.

இந்தியா விடுதலை பெற்ற பிறகும் மாநிலங்கள் மொழி வாரியாகப் பிரிக்கப்படவில்லை. 1956இல்தான் மாநிலங்கள் மொழி வாரியாகப் பிரிந்தன. எனினும், மாநில சுயாட்சி வழங்கவில்லை. 1948 ஜனவரியில் தமிழ் மாகாண காங்கிரஸ் அரசியல் மாநாட்டில் 'மத்தியில் சமஷ்டி, மாநிலத்தில் சுயாட்சி' என்பதைப் பிரச்சாரப் பொருளாக்கித் தலைவர் தேர்தலில் போட்டியிட்டுத் தோல்வி அடைந்தார் ம.பொ.சி.

இதன் பின் 1957ஆம் ஆண்டு திசம்பர் 8ஆம் நாள் காஞ்சி மாநகரில் நடைபெற்ற தமிழரசுக் கழகப் பொதுக்குழுவில் ஆண்டு தோறும் சனவரி 26இல் மாநில சுயாட்சி கோரிக்கை நாள் கொண்டாடுவது என்று தீர்மானிக்கப்பட்டு, அதன்படி ஒவ்வொரு ஆண்டும் மாநில சுயாட்சி கோரிக்கை நாள் பொதுக்கூட்டங்கள் நடத்தப்பட்டன.

1959ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் திருச்சிராப்பள்ளி, உறையூரில் மாநில சுயாட்சிக்கென முதல் மாநாட்டினை தமிழரசுக் கழகம் நடத்தியது. இரண்டாவது 1962ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 19ஆம் நாள் வேலூரிலும், மூன்றாவது மாநாடு 1968இல் சென்னையிலும் நடைபெற்றன. தொடக்ககாலத்தில் மாநில சுயாட்சியைக் குறித்து எள்ளி நகையாடியவர்களும்-" நாங்கள் கேட்பது ஓரணா, அதில் கிராமணியார் கேட்கும் காலணாவும் இருக்கிறது'' என்று பேசியவர்களும் மாநில சுயாட்சிக் கோரிக்கையை ஏற்றுக் கொண்டனர். மாநில சுயாட்சி குறித்துப் பின்னர் ஆளுங்கட்சியாக இருந்த தி.மு.க. 1974இல் மேலவையில் மாநில சுயாட்சி குறித்த டாக்டர் இராசமன்னார் குழுவின் பரிந்துரையையும், தமிழக அரசின் வெள்ளை அறிக்கையையும் முன்வைத்தபோது, ம.பொ.சி. அவர்கள் அத்தீர்மானத்தின் மீது பேசிய பேச்சு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகும். அப்பேச்சில் ஒரு பகுதி பின்வருமாறு:

'என்னுடைய சொந்த அபிப்பிராயம் ஒன்றை நான் சொல்கிறேன். ஏன், நான் சார்ந்திருக்கிற தமிழரசுக் கழகத்தின் சார்பாகவும் சொல்கிறேன். மத்திய அரசு போக்குவரத்து, அயல்நாட்டு உறவு, பாதுகாப்பு ஆகிய மூன்று அதிகாரங்களை மட்டும் வைத்துக் கொண்டு மற்றவைகளையெல்லாம் மாநிலங்களுக்குக் கொடுத்து விட வேண்டும் என்பது என் கொள்கை"[83] என்கிறார் ம.பொ.சி. மாநில சுயாட்சி குறித்து ம.பொ.சி. அவர்கள், 'சுயாட்சித் தமிழகம்', 'தமிழரும் பிரிட்டிஷ் திட்டமும்', 'சுயாட்சியா? பிரிவினையா?', 'மொழிச் சிக்கலும் மாநில சுயாட்சியும்', 'மாநில சுயாட்சிக் கிளர்ச்சி வரலாறு', 'தமிழரசா? திராவிடஸ்தானா', என்று பல நூல்கள் எழுதியுள்ளார். இன்றும் மாநில சுயாட்சி என்பது ம.பொ.சி. அவர்களின் கனவாகவே நிலைபெற்றுவிட்டது.

## குறிப்புகள்

1. ம.பொ.சி. படைத்த புதிய தமிழகம், ப. 9.
2. மேலது.
3. எனது போராட்டம், ப.38.
4. மேலது.
5. தமிழர் தலைவர் ம.பொ.சி, ப.31.
6. எனது போராட்டம், ப.48.

7. மேலது, ப.50.
8. மேலது, ப.55.
9. ம.பொ.சி படைத்த புதிய தமிழகம், ப.107-111.
10. மேலது, ப.60.
11. புதிய தமிழகம் படைத்த வரலாறு, ப.243.
12. மேலது, ப.243-44.
13. எனது போராட்டம், ப.485.
14. மேலது, ப.496.
15. மேலது, பக்.497-99.
16. திருக்குறளில் கலை பற்றிக் கூறாதது ஏன்? ப.137.
17. மேலது.
18. மேலது, ப.138.
19. புதிய தமிழகம் படைத்த வரலாறு, ப.240-241.
20. ம.பொ.சி. படைத்த புதிய தமிழகம், பக்.175-176.
21. மேலது, ப.60.
22. மேலது, ப.61.
23. தமிழும் கலப்படமும், பக்.27-28.
24. ம.பொ.சி. படைத்த புதிய தமிழகம், ப.61.
25. மேலது., ப.62.
26. மேலது, ப.90.
27. மேலது
28. மேலது, ப.91.
29. மேலது, ப.98.
30. மேலது, ப.99.
31. எனது போராட்டம், ப.429.
32. புதிய தமிழகம் படைத்த வரலாறு, பக்.119-124.
33. மேலது, பக்.244-45.
34. புதிய தமிழம் படைத்த வரலாறு, ப.245-247.
35. மேலது, ப.253.
36. மேலது, ப.284.
37. எனது போராட்டம், ப.602.
38. மேலது, ப.630.
39. மேலது.
40. மேலது, ப.607.
41. மேலது. ப.610.
42. மேலது, ப.610.

43. மேலது, ப.611.
44. மேலது, ப.614.
45. மேலது, ப.614.
46. மேலது, ப.615.
47. ஜனசக்தி 1-2-53.
48. எனது போராட்டம், ப.619.
49. மேலது.
50. மேலது.
51. மேலது, ப.620.
52. மேலது.
53. மேலது, ப.621.
54. மேலது, ப.625.
55. புதிய தமிழகம் படைத்த வரலாறு, ப.354.
56. மேலது.
57. மேலது, ப.356.
58. மேலது, ப.356-357.
59. மேலது, ப.357.
60. மேலது, ப.359.
61. மேலது, ப.360.
62. மேலது, ப.362.
63. மேலது.
64. மேலது, பக்.561-562.
65. மேலது, ப.562.
66. மேலது, ப.851.
67. மேலது, ப.852.
68. சாதனைச் சரித்திர நாயகர் சிலம்புச் செல்வர் ம.பொ.சி., ப.58.
69. மேலது, ப.58-59.
70. மேலது, ப.59.
71. மேலது, பக்.59-60.
72. விடுதலைக்குப்பின் தமிழ் வளர்ந்த வரலாறு, பக்.184-185.
73. எனது போராட்டம், பக்.992-993.
74. சாதனைச் சரித்திர நாயகர் சிலம்புச் செல்வர் ம.பொ.,சி. ப.119.
75. புதிய தமிழகம் படைத்த வரலாறு, ப.10.
76. மேலது. ப.37.
77. மேலது, ப.60.
78. ம.பொ.சி. படைத்த புதிய தமிழகம், ப.34.

79. புதிய தமிழகம் படைத்த வரலாறு.
80. மேலது.
81. ம.பொ.சி. படைத்த புதிய தமிழகம், ப.84.
82. மேலது, ப.84.
83. சட்டமன்றத்தில் சுயாட்சிக் குரல், ப.62.

## முடிவாகச் சில.......

ம.பொ.சி. தான் வாழ்ந்த காலம் முழுவதும் தமிழ் நலன் கருதியும் தமிழினத்தின் வளர்ச்சி கருதியும், தமிழ்நாட்டின் முன்னேற்றத்திற்காகவுமே வாழ்ந்தார். ம.பொ.சி.யின் தமிழ்மொழிப் பற்றுக்கு, அவருக்கு ஏன் இராஜாஜி என்ற தலைவரைப் பிடித்தது என்பதனை அவர் தம் சுயசரிதையில் விளக்கும் பகுதியே சான்றாகி நிற்கின்றது. இராஜாஜி குறித்து எழுதும்போது 'டில்லி என்பதனை அவர் எப்போதும் தில்லி என்று தான் எழுதுவார். மொழி முதலில் 'ட' கரம் வரக்கூடாது என்பது தமிழிலக்கணம். அவர் எப்போதும் இராசகோபாலாச்சாரி' என்றுதான் தம் பெயரை எழுதுவார். ஒரு நாளும் இராஜகோபாலாச்சாரி என்று எழுதியதில்லை." என்று கூறிவிட்டு, "பொதுக் கூட்டங்களில் தமிழில் பேசுவதையே கொள்கையாகக் கொண்டிருந்தார். ஆங்கிலத்தில் எவரேனும் பேசினால் கண்டிப்பார்" என்று கூறி 'இராஜாஜியிடத்தில் நான் மிகுந்த பற்றும் பக்தியும் கொள்ள முதற்காரணமாயிருந்தது தமிழ் வளர்ச்சியில் அப்போது அவர் காட்டி வந்த ஆர்வம் தான்!" என்று கூறுகிறார். இராஜாஜி மீது கொண்டிருந்த பக்திக்கும் பற்றுக்குமே தமிழ்ப் பற்றுதான் காரணம் என்கிறார். ஒரு தலைவர்மீது தான் பற்றுக் கொண்டதற்கு அவரிடமிருந்த தமிழார்வம்தான் காரணம் என்று சொல்லுமளவுக்கு ம.பொ.சி. தமிழார்வம் கொண்டிருந்தது தெளிவாகிறது.

ம.பொ.சி.யின் புதல்வன் திருநாவுக்கரசு அகால மரணம் அடைந்ததனை ஒட்டி நடந்த அஞ்சலிக் கூட்டத்தில் நன்றியுரை கூறும்போது", ரசிகமணி டி.கே.சி. அவர்கள், தீத்தாரப்பன் என்ற பெயருடைய தன்னுடைய ஒரே மகன் - சிறந்த எழுத்தாளர் - பெரும்புகழை நோக்கித் தனது எழுதுகோல் நடைபோட்டுக் கொண்டிருந்த நேரத்தில் அகால மரணம் அடைந்துவிட்டார். அதற்குப் பின்னும் ரசிகமணி நீண்டகாலம் வாழ்ந்தார். அப்படி அவரை வாழவைத்தது தமிழின் மீது அவருக்கிருந்த பற்றுதான்.

உண்மையில் என் மகன் பிரிவால் எனக்கு ஏற்பட்டுள்ள துக்கம் ஆற்றொணாததுதான் என்றாலும், தமிழின் மீது எனக்குள்ள பற்றும், பிறமொழியின் ஆதிக்கங்களிலிருந்து தமிழுக்கு விடுதலை தேடப்போராட வேண்டுமென்பதில் இந்த எண்பதாவது வயதிலும் எனக்குள்ள உறுதியும் என்னை இன்னும் நீண்ட காலம் வாழ வைக்கும்—" என்கிறார். ஒரே மகனின் அகால மரணத்தின்போதும் தமிழையும், தமிழ்மீது பிறமொழிகள் ஆதிக்கம் செலுத்துவதையும் பற்றியே சிந்தித்துக் கொண்டிக்கிறார் என்றால் அவருடைய தமிழ்ப் பற்றுக்கு வேறு ஒரு சான்றும் வேண்டுமோ? ம.பொ.சி. தமிழுக்காகவே தன் வாழ்க்கையை அர்ப்பணித்தவர்.

வயிற்றுவலியில் அதிகமாகத் தொல்லைப்பட்டபோது வயிற்றுவலி தாங்காமல் தற்கொலை செய்து கொள்ளலாம் என்ற எண்ணம் தோன்றியபோதும் அவரைத் தடுத்துக் காப்பாற்றியது அவர் தமிழ் மேல் கொண்டிருந்த பற்றும், புதிய தமிழகம் படைப்பதில் உள்ள ஆர்வமுமேயாகும் என்று தன் சுயசரிதையில் குறிப்பிடுகிறார். தன் மகள் கண்ணகி மீது தனக்குள்ள பற்றினைக் குறிப்பிடும்போது கூடத் தமிழ்மொழிக்கு அடுத்தபடியாக நான் மிகுந்த பற்றுவைத்திருப்பது என்னுடைய செல்வி கண்ணகியிடம் தான்" என்கிறார்.

"தமிழர் தம் வாழ்வில் ஆங்கிலமொழி அநியாயமாய்ப் பெற்றுவிட்ட ஆதிக்கத்தினை நான் வெறுக்கிறேன். இந்த ஆதிக்கத்தை அகற்றித், தமிழர் வாழ்வில் எங்கும் தமிழ் எதிலும் தமிழுக்கே முதலிடம் பெறவும் போராடி வருகிறேன்" என்று கூறுகிறார் ம.பொ.சி. ஆயினும் ஆங்கில மொழியின் தேவையை நான் அலட்சியப்படுத்தியதில்லை; அம்மொழிக்கு அளவுக்கு மீறி முக்கியத்துவம் கொடுப்பதையே நான் எதிர்க்கிறேன். தமிழ் மொழி மூலமாகவே ஒருவன் உலகியல் ஞானம் எல்லாம் பெற முடியும் என்பது என் நம்பிக்கை" என்கிறார்.

எழுத்துச் சீர்திருத்தம் பற்றி இவரிடம் இருவேறு கருத்துகள் நிலைபெற்றுள்ளன. 1951-இல் லினோ டைப்பிற்காகச் செய்யப்பட்ட எழுத்துச் சீர்திருத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று எழுதுகிறார். இக்காலக் கட்டத்தில், தெ.பொ.மீ. அவர்களின் 'தமிழ் எழுத்துகளைச் சீர்திருத்த வேண்டும்' என்ற கருத்தை ஏற்றுக் கொள்கிறார். பிற்காலத்தில் பேராசிரியர்

வா.செ. குழந்தைசாமி போன்றோர் பரிந்துரைக்கும் எழுத்துச் சீர்திருத்தம் குறித்து எழுதும் போது, "எழுத்துச் சீர்திருத்தம் என்னும் பெயரில் 'தமிழ் ஒரு திருந்தா மொழி', 'எழுத்தளவில் கூடச் செம்மையடையாத மொழி' என்ற விந்தையான பிரச்சாரம் தலையெடுத்து, அது விளம்பரமும் பெற்றிருக்கின்றது. அதிலிருந்தும் தமிழைக் காக்க எதிர்ப்பிரச்சாரம் தேவைப்படுகிறது' என்கிறார்.

தமிழ்மொழிக்கு உள்ள கேடுகளில் ஒன்று என்று ஆங்கில வழிப் பயிற்றுப் பள்ளிகளைக் குறிப்பிடுகின்றார். "தமிழ்மொழிக்குக் கேடு செய்யும் ஆங்கிலக் கான்வெண்டுப் பள்ளிகள் சென்னை நகரங்களில் வட்டந்தோறும், சில வட்டங்களில் வீதிதோறும் பெருகி வருகின்றன" என்கிறார். இது அன்று பதினாறு ஆண்டுகளுக்கு முன்னர்க் கூறிய கருத்து. இன்று ம.பொ.சி. இருந்தால் இதற்காகவே கூட ஒரு போராட்டம் நடத்தியிருப்பார்.

தமிழ்மொழியின் பெயரைச் சொல்லி வாழ்ந்துகொண்டு இருப்பவர்களைப் பற்றியும் ம.பொ.சி. சிந்திக்கிறார். அவர்களைப் பற்றிக் கூறும்போது, "தமிழ்மொழியைப் பிறமொழி ஆதிக்கத்தில் இருந்து இவர் காப்பாற்றினார், அவர் காப்பாற்றினார் என்று கூறுவதில் சிறிதளவே உண்மையிருக்கலாம். ஆனால் தமிழ்மொழி தன்னைத்தானே காத்துக்கொண்டு வருகிறது என்று சொல்வதுதான் முழு உண்மை. புதுவையில் நடந்த கம்பன் விழா ஒன்றிலே பேசும் பொழுது,

"என்னை விரும்புவோராயினும்
வெறுப்போராயினும் சரி
அவர்கள் தமிழுக்குத் தொண்டு செய்பவர்களானால்
அவர்களை வாழ்த்தவும் வணங்கவும்
நான் தவறமாட்டேன்" என்கிறார் ம.பொ.சி.

இதுவும் தமிழ்மீதும் தமிழ்த் தொண்டின் மீதும் இவர் கொண்ட ஈடுபாட்டைக் காட்டுகின்றது. தமிழ்மொழி குறித்து ம.பொ.சி.க்குச் சில ஆசைகள் இருந்தன. அவை இன்றும் நிறைவேறாத ஆசைகளாகவே உள்ளன. அவை பின்வருமாறு:

1. தமிழ்நாட்டில் உள்ள பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் தமிழே எல்லாப் பாடங்களிலும் பயிற்று மொழியாக இருக்க வேண்டும் என்று விரும்பினார். அது இன்னும் நிறைவேற வில்லை.

2. தமிழ்நாட்டு நீதிமன்றங்களில் எல்லாம் தமிழே நிருவாக மொழியாக இடம்பெற வேண்டும் என்று விரும்பினார். அதுவும் இன்னும் நிறைவேறவில்லை.

3. ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., ஐ.எஃப்.எஸ். ஆகிய ஆட்சிப் பணித் தேர்வுகள் தமிழிலேயே எழுதும் வாய்ப்புத் தருதல் வேண்டும் என்று விரும்பினார். அதுவும் இன்னும் முழுமையாக நிறைவேறவில்லை.

4. வழிபாட்டுத் தலங்களில் தமிழே கடவுளை வணங்கும் மொழியாக இருக்க வேண்டும் என்றார். இன்றும் அது சர்ச்சையாகவே உள்ளதை அண்மையில் கூடப் பார்த்தோம். அரசியல்வாதிகளில் சிலர் ஒருபுறமும், சமயவாதிகள் ஒருபுறமும் நின்றுகொண்டு தங்களுடைய வலிமையைச் சோதித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அவருடைய இந்த விருப்பமும் நிறைவேறவில்லை.

தமிழ்மொழி குறித்த ம.பொ.சி. அவர்களின் இந்த விருப்பங்கள் நிறைவேற நாம் பாடுபடுவதே அவருக்குச் செய்யும் அஞ்சலியாகும். அவர் போற்றிய தமிழுக்குச் செய்யும் தொண்டாகும்.

ம.பொ.சி ஒரு நாளும் தாம்வேறு, தமிழ் மக்கள் வேறு என்று கருதியதே இல்லை. அதனால் தான் "வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு' என்ற தமது நூலுக்குச் சாகித்திய அகாதெமியின் பரிசு கிடைத்தபோது, "நான்காவது பதிப்பு வெளிவரும் தருணத்தில் பாரத அரசினரின் நிறுவனமான சாகித்திய அகாதெமியாரின் பெருமைக்குரிய பரிசினையும் எனது நூல் பெறுவது குறித்து நான் மட்டுமேயன்றி, தமிழ் மக்கள் எல்லோருமே பூரிப்படைகின்றனர் என்பதனை நானறிவேன்" என்றெழுதுகிறார். தமிழர்களின் துயர் கண்டபோது எல்லாம் அதனைத் துடைக்கத் தான் பாடுபட்டது போல் தன்னுடைய மகிழ்ச்சியில் தமிழர்கள் பங்கு பெறுவதாகவே கருதுகின்றார்.

"எதையும் சாதி சமயக் கண் கொண்டு ஆராய்கின்ற தொழிலை நமது தமிழ் அறிஞர்கள் இன்னமும் விட்டபாடில்லை" என்று வருந்துகிறார்.

"தமிழினத்தார் தங்கள் குழந்தைகளுக்குப் பெயர் வைப்பதிலே இனப்பற்றை வெளிப்படுத்துவதில்லை. தமிழ்நாட்டில் தோன்றிய சரித்திர நாயக-நாயகியருடைய பெயரைத் தங்கள் குழந்தைச் செல்வங்களுக்கு வைப்பதிலே தமிழ் மக்கள் ஆர்வம் காட்டாதது கண்டு என் மனம் அடிக்கடி வருந்துவதுண்டு. தூய தமிழிலே பெயர் வைப்பதனை நான் விரும்பி வரவேற்கிறேன். அதைவிடத் தமிழினத்தின் வரலாற்று வழிப்பட்ட பெயர்களையே நான் அதிகம் விரும்புகிறேன்" என்று கூறும் ம.பொ.சி. சொல்லும் செயலும் ஒன்றாக வாழ்ந்த காந்தியடிகளின் சீடரல்லவா! தம் குழந்தைகளுக்குத் திருநாவுக்கரசு, கண்ணகி, மாதவி என்று பெயர்களைச் சூட்டினார்.

தேசிய அரசியலில் காமராஜருக்கும் இராஜாஜிக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டு இரண்டு கோஷ்டிகளாகக் காங்கிரஸ் செயல்பட்டுக் கொண்டிருந்தபோது, ம.பொ.சி. இராஜாஜியின் அணியில் சேர்ந்ததற்குக்கூட ம.பொ.சி. அவர்களின் இன உணர்வே காரணமாகும். 'இராஜாஜியை நான் ஆதரித்தது கோஷ்டி மனப்பான்மையாலல்ல; தமிழ் இன உணர்ச்சியால் என்பதனை மீண்டுமொரு முறை வலியுறுத்திக் கூறுகிறேன்" என்பது இதனை உணர்த்துகின்றது. ஆந்திர - கேரள காங்கிரஸ் தலைவர்களின் தமிழ் இன விரோதப்போக்கு வலுப்பெற்றுவிடும் என்னும் நியாயமான அச்சமுமே ம.பொ.சி. இராஜாஜியை ஆதரித்ததற்குக் காரணமாகும்.

தேசியவாதியான ம.பொ.சி. அவர்கள் இன்றைய இந்தியாவின் தேசிய கீதம் பற்றிக் கூறியுள்ள கருத்து அவருடைய இனப் பற்றுக்குச் சான்றாகத் திகழ்கின்றது. "இந்தியாவின் தேசிய கீதம் ஆக்கப்பட்டுள்ள ஜனகனமணப் பாடலை **எல்லா இனங்களையும்** சமநோக்குடன் குறிப்பிடும் வகையில் திருத்தி அமைக்க வேண்டும். இல்லை என்றால் வேறொரு புதிய பாடலை இயற்றும்படி செய்ய வேண்டும். இது முடியாத காரியம் அல்ல. தமிழகத்தைப் பொறுத்தமட்டில் எந்தப் பாடல் தேசிய கீதமானாலும், அதைத் தமிழில் மொழிபெயர்த்துப் பாடச் செய்ய வேண்டும். அப்போதுதான் பாட்டின் கருத்தை மக்கள் புரிந்து கொள்ள முடியும். புரிந்து கொள்ளாத ஒரு மொழியில் தேசியகீதத்தை உருப்போட்டு ஒப்பிக்கச் செய்வதால் யாருக்கும் தேசபக்தி வந்துவிடாது" என்னும் கூற்றில் **எல்லா இனங்களையும்**

சம நோக்குடன் குறிப்பிடும் வகையில் என்ற தொடர் உற்று நோக்கத்தக்கது. தேசிய கீதத்தில் தமிழினம் தனியே குறிப்பிடப்பட வில்லை என்ற சிந்தனையே ம.பொ.சி.யின் இன உணர்ச்சியை வெளிப்படுத்துகின்றதன்றோ!

"தமிழர் தனி இனத்தவர்; தமிழ் தனி மொழி - அதுமட்டுமல்ல தமிழரின் பண்பும் தனிப்பண்பு. தமிழர் வரலாறு தனிவரலாறு. தமிழினத்தின் வரலாற்றைப் பற்றிச் சரியாக எழுதித் தமிழ் மக்களுக்குப் போதிக்க வேண்டும்." என்கிறார் ம.பொ.சி. தமிழினத்தின் வரலாறு - தமிழினத்தின் சிறப்புமிக்க வரலாறு - சரியாக எழுதப்பட வேண்டும் என்கிறார்.

"நாம் முதலில் தமிழர், இரண்டாவதாக இந்தியர், இதனைத் தவிர வேறு எந்தச் சமயப்பேர்களையும் ஏற்பது தமிழினத்தைப் பிளவுபடுத்துவது போலாகும். சமயமும், அதன் வழிபட்ட சடங்குகளும் தனிமனிதரின் விருப்பத்துக்கு விட்டுவிட வேண்டும். இதன் காரணமாகத் தமிழினத்தில் எந்தப் பிளவும் ஏற்படக் கூடாது" என்பது ம.பொ.சி.யின் கருத்து.

"தமிழர் என்ற சொல்தான் தாரக மந்திரம், தமிழ்நாட்டில் காலூன்றும் போதுதான் அன்னையின் மடியில் இருப்பது போன்ற ஆனந்தம் பொங்குகின்றது. தமிழர் என்ற இந்தத் தாரக மந்திரம் தமிழ் நாட்டாரின் மனத்தில் உறையாதா?" என்கிறார். மொழியா? இனமா? என்று கேட்டால், எதற்கு முதலிடம் தரவேண்டுமென்றால் இனத்திற்கு முதலிடம் தரவேண்டும் என்பார் ம.பொ.சி. 'தனித்தமிழ்க் கட்சி பேசினால் மொழி காரணமாக ஒரு புனிதப் போர் தோன்றித் தமிழ் இனத்தின் ஒற்றுமையைக் குலைத்து விடும்" என்பார். "தனித்தமிழ் என்று ஒன்று இல்லை; தமிழ் தான் இருக்கிறது என்பார்.

"நான் தமிழினத்தை ஒன்றுபடுத்தப் பாடுபடுகிறேன்— தமிழன் என்ற இன உணர்ச்சியை வளர்ப்பதற்காகத்தான் நான் சாதி உணர்ச்சியற்றவனாக வாழ்ந்து வருகிறேன். சாதி வெறி இன உணர்ச்சியைக் கொல்லும் நஞ்சாகி விட்டது" என்று கூறுவார்.

கணியன் பூங்குன்றனின் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற புறநானூற்றுப் பாடல் வரியை எடுத்துக் கொண்டு விளக்கும்போது

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்னும் போதனையை ஏற்று நாட்டுப்பற்றையும், மொழிப்பற்றையும் துறப்பது எந்த நாட்டினராலும் மொழியினராலும் சாத்தியமாகாது. தமிழர் நிலைமையும் அதுதான். தமிழ் இனத்தாருக்கு என ஒரு தாயகம் உண்டு; அது தமிழ்நாடு, தமிழ்நாட்டினர்க்கென ஒரு தாய்மொழி உண்டு அது தமிழ்மொழி, இந்த உரைகல்லில் தேய்த்துப் பார்த்துப் பூங்குன்றனாரின் போதனைக்குப் பொருள்காண வேண்டும். நாட்டுப்பற்றையும், மொழிப்பற்றையும் துறந்தவனுக்குப் பூங்குன்றனாரின் போதனை பொருந்தும் என்கிறார்.

'தமிழ் இன ஒருமைப்பாட்டு வழியில் இந்தியத் தேசிய ஒருமைப்பாட்டுக்கு உதவும் வகையில் படைக்கப்பட்டது சிலம்பு' என்கிறார். 'தமிழ் வளர்வது வேறு; தமிழர் வளர்வது வேறு; தமிழ் வளரப் புதுப்புது இலக்கியங்கள் தேவைப்படுகின்றன. தமிழர் வளரப் பிறமொழியிலுள்ள அறிவு நூல்கள் தமிழ்மொழியில் பெயர்க்கப்பட்டு வெளிவரவேண்டும் என்கிறார்.

தம் இறுதி மூச்சு வரை 'தமிழினமே ஒன்றுபடு' இன ஒற்றுமைக்காகவும் தமிழினத்தின் வளர்ச்சிக்காகவும் பாடுபட்டார் ம.பொ.சி. தூங்கிக்கிடந்த தமிழ்நாட்டைத் தட்டி எழுப்பியவர் ம.பொ.சி. இந்திய விடுதலைப் போராட்டத்தின் வரலாறு எழுதப்படுமானால் அவ்வரலாற்றில் தமிழர்களின் போராட்டத்தை மறக்காமலும், மறைக்காமலும் எழுதுவார்களானால் ம.பொ.சி.க்கு என ஒரு அத்தியாயத்தையாவது அவ்வரலாற்றில் ஒதுக்கத்தான் வேண்டும். விடுதலைப் போரில் ஆறு முறை சிறைத் தண்டனை பெற்றவர் ம.பொ.சி.

விடுதலைப் போராட்டத்தில் கலந்துகொண்ட ம.பொ.சி. எந்த இலக்கியத்தையும் 'அடிமையைத் தகர்க்கும் ஆண்மைமிக்க போராட்டத்துக்கு உணர்ச்சி ஊட்டுகின்றதா என்றுதான் பார்க்கிறார். "நான் சிலப்பதிகாரத்தை அரசியல் கண்கொண்டே நோக்குகிறேன். அடிமையைத் தகர்க்கும் ஆண்மைமிக்க போராட்டத்திற்கு அது உணர்ச்சி ஊட்டுகிறதா என்று பார்க்கிறேன். சிலப்பதிகாரத்தை மட்டுமல்ல. வேறு எந்த தமிழ்க் காவியமாயினும் அவை அனைத்தையும் இந்தக் கண் கொண்டே பார்க்கிறேன்" என்கிறார்.

இதனால்தான் விடுதலை பெற்றபிறகு தமிழ் இலக்கியங்ளைப் படிக்குந்தோறும் அவற்றில் காணப்படும் சோஷலிசக் கருத்துகளே இவர் கருத்தைக் கவர்ந்தன. "திருவள்ளுவர் கூறும் சமுதாயத்தைச் சோஷலிச சமுதாயம் என்று சொல்லாமல் வேறெப்படிச் சொல்ல முடியும்?" என்கிறார். சிலம்பில் 'காவலன்' என்ற சொல் நாடு காக்கும் மன்னனையும்; வாசலில் நிற்கும் வாயிற் காப்பவனையும் குறிப்பதால் அதுவும் சோஷலிசம் என்கிறார். கம்பர் ஒரு சமதர்ம சமுதாயத்தைப் படைத்த சோஷலிசவாதி என்கிறார். ஒளவை யாரையும் சோஷலிசவாதி என்கிறார். வள்ளுவர் மாநில சுயாட்சியைக் கூறினார் என்கிறார். கம்பனிலே சுயாட்சி என்கிறார். இதற்கெல்லாம் காரணம் இவருக்குச் சோஷலிசத்தின் மீதிருந்த ஈடுபாடேயாகும். 'சுதந்திரம் சோஷலிசம் இரண்டும் ஒரே நாணயத்தின் இரண்டு பக்கங்கள் போன்றவை. சுதந்திரமின்றிச் சோஷலிசம் இல்லை. அதுபோலவே சோஷலிசமில்லாத சமுதாயத்தில் சுதந்திரம் நிலைக்காது" என்கிறார்.

ம.பொ.சி. ஆற்றிய எல்லைப் போராட்டப் பணிகள் குறித்து ஒருவர் எழுதும்போது, "ம.பொ.சி. என்றொரு மாமனிதன் தோன்றி இராவிட்டால் 'சென்னை நகரம்' தமிழகம் - ஆந்திரம் இரண்டுக்கும் தலைநகராகி - சண்டிகார் போல் - தலைவலியாகியிருந்திருக்கும். இதேபோல் வடக்கெல்லை தணிகை மலையாகவும் தெற்கு எல்லை குமரி முனையாகவும் இருப்பதற்கும் ம.பொ.சி.யே காரணம்" என்கிறார்.

சென்னை மாகாணம் தமிழ்நாடாகப் பெயர் மாற்றம் பெறக் குரல் கொடுத்தவர் ம.பொ.சி. தான். இந்தக் குரலுக்கு எழுச்சி உருவம் கொடுக்க உண்ணாவிரதம் இருந்து உயிர் துறந்த விருதுநகர் சங்கரலிங்க நாடாரையும் இத்தருணத்தில் நாம் நினைவு கூர்தல் வேண்டும்.

இவ்வளவையும் கூறி ம.பொ.சி. என்ற தனிமனிதர் ஆளுமையைப் பற்றி எதுவும் குறிப்பிடாமல் சென்றால் அது மாபெரும் குறையாகிவிடும். அவர் ஆளுமை குறித்துச் சிலவற்றைக் காணலாம். ம.பொ.சி., மாவீரன், போராட்ட வீரர் என்று தான் எல்லோருக்கும் தெரியும். ஆனால் அவர் உள்ளத்தில் என்றும் எப்போதும் ஒரு மெல்லிய நகைச்சுவையுணர்வு இழையோடிக் கொண்டிருப்பதைக் காணலாம். அவருடைய நூல்களில் பல

இடங்களில் இதனைக் காணலாம். ஒருநாள் தன் இளவயதில் தற்கொலை செய்து கொள்ள முடிவு செய்து கடலில் விழுந்து உயிர் துறக்க முடிவு செய்கிறார். அதனை 'அன்று என்னவோ என் மனம் அதிர்ச்சி அடைந்துவிட்டது. பட்டினியால் அடைந்த சலிப்பும் அதனோடு கலந்து கொண்டுவிட்டது. அதனால், 'கடலுள் மாய்ந்த 'இளம் பெரு வழுதி'யின் வாரிசாகிவிட முடிவெடுத்தேன்' என்கிறார். இந்த நகைச்சுவையுணர்வுதான் பின்னாளில் இவர் சந்தித்த போராட்டங்களில் எதையும் தாங்கும் உணர்வைக் கொடுத்துப் பெருந்தலைவராக்கியது.

எதைச் செய்தாலும் திட்டமிட்டுத் தன் மனத்திற்குள் ஒரு வரையறையை உருவாக்கிக் கொண்டு செயல்படுபவர் என்பதை இவருடைய மொழிப் பயன்பாட்டில் காண முடிகிறது. "காங்கிரஸ்" என்ற சொல்லில் உள்ள இறுதி எழுத்துத்தமிழ் வரிவடிவத்தில் இல்லை என்பது தெரியும். ஆகையால் இதைப் பயன்படுத்துவதற்கு ஒரு வரையறையைத் திட்டமிட்டுக் கொள்கிறார். இது இவர் தனக்குத்தானே வகுத்துக் கொண்ட திட்டம். 'காங்கிரஸ்' என்று தனியாக வந்தால் 'காங்கிரஸ்' என்றே எழுதுவது. அப்படியின்றி ஏதேனும் வேற்றுமையுருபுடன் இணைந்து வந்தால் 'ச' என்ற எழுத்தையே பயன்படுத்துவது என்று வரையறுத்துக் கொள்கிறார். அதனை இவர் நூல்கள் எல்லாவற்றிலும் கடைப்பிடிக்கிறார்.

இதனைப் போலவே இவர் எழுதும்போது ஆங்கிலச் சொல்லை எழுத நேர்ந்தால் முதலில் அதனைத் தமிழ்ப்படுத்தியும் அது - அந்த மொழிபெயர்ப்பு புரிவதற்காக அடைப்புக்குள் ஆங்கிலச் சொல்லைத் தமிழ் வரிவடிவிலும் சிறிய அச்சு இயந்திரம் (ட்ரெடில்) வெட்டு இயந்திரம் (கட்டிங் மெஷின்) என்று எழுதுவதைக் காணமுடிகிறது. இவை எல்லாம் எதிர்காலத்தை மனத்தில் திட்டமிட்டுச் செயல்பட்டுத் தலைவராக உதவியவையாகும்.

தான் ஒரு முறை ஒரு கருத்தைக் கூறிவிட்டால் அதனை நிலைநிறுத்தும் நோக்கிலேயே எப்போதும் வாக்கியங்களை அமைக்கின்றார். பரிதிமாற் கலைஞர் என்பது வி.கோ. சூரிய நாராயண சாஸ்திரியாரின் புனை பெயர் என்று தமிழும் கலப்படமும் என்ற நூலில் குறிப்பிட்டு விட்டார். அதன் பிறகு அவரைப் பற்றி எழுதும்போதெல்லாம் பரிதிமாற்கலைஞர் என்ற

புனைபெயர் பெற்ற வி.கோ. சூரியநாராயண சாஸ்திரியார் என்றே குறிப்பிடுகிறார். இது இவரது நினைவாற்றலுக்கு ஒரு சான்றாகின்றது. தான் கூறிய கருத்தினை வலியுறுத்தும் மனப்பாங்கும் இது போன்ற நிகழ்ச்சியால் உருவானதே. இவ்வாறு இவருடைய ஆளுமை பற்றித் தனியாக ஆய்வு செய்யலாம். இவரிடம் பல இருமைப் பண்புகளின் இணைவுகளைக் காணலாம். சான்றாக:

| | |
|---|---|
| தமிழ்ப்பற்று (பிராந்திய உணர்வு | - தேசிய உணர்வு |
| தமிழ்ப்பற்று | - பிறமொழி வெறுப்பின்மை |
| தமிழினப்பற்று | - பிற இன வெறுப்பின்மை |

இவையே இவரை ஈடு இணையற்ற தலைவராக்கியது எனலாம். இதனாலேயே இவர் நடத்திய போராட்டங்கள் எவற்றிலும் ஒழிக, வீழ்க போன்ற எதிர்மறைக் கோஷங்களை பயன்படுத்தவில்லை. இதுவே இவருக்கு வெற்றியை வாரி வழங்கியது எனலாம்.

எதிர்காலத்தில் தமிழ்த் திறனாய்வு வரலாற்றை யார் எழுதினாலும் ம.பொ.சி. என்ற மனிதரைக் குறிப்பிடாமல் எழுத முடியாது. அதுபோன்றே தமிழினத்தின் வரலாற்றை எழுதுபவரும் ம.பொ.சி. என்ற மாமனிதரைக் குறிப்பிடாமல் எழுதமுடியாது. தமிழ்நாட்டின் வரலாற்றை எழுதுபவரும் ம.பொ.சி.யின் பணிகளைக் குறிக்காமல் எழுதமுடியாது.

வாழ்கின்ற மக்கள் எல்லோரும் வரலாறு படைப்பதில்லை. ஒரு சிலரே வரலாற்றை உருவாக்குகிறார்கள். ஒரு சிலர் வரலாறாகவே நிலைபெற்று விடுகின்றனர். அந்த வகையில் ஒருவர் தான் ம.பொ.சி! சிலப்பதிகாரத்தைப் பற்றி ம.பொ.சி. குறிப்பிட்ட தொடரையே அவரைப் பற்றிப் பேசுவதற்குப் பயன்படுத்தலாம். ம.பொ.சி. தன்னைப் பெற்றுள்ள தமிழுக்கும், தமிழினத்துக்கும், தமிழ்நாட்டுக்கும் சிறப்பினை ஈந்தவர் எனலாம்.

## துணை நூல்கள்


1. அமிர்தலிங்கம், த., 1981, **தலைவர் ம.பொ.சி. ஆற்றுப்படை**, செவ்வேள் பதிப்பகம், சென்னை

2. அன்பு, ப., 1983, **ம.பொ.சியின் இலக்கிய நுல்கள் ஒரு மதிப்பீடு**, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

3. இளங்கோவன், மரா., 1980, **சிலம்புச் செல்வரின் தலையங்க இலக்கியம்**, சேகர் பதிப்பகம், சென்னை.

4. ......... (தொ.ஆ.) ..........., **வைகுந்தம் திறந்தது**, பல்லவி, சென்னை.

5. கணபதி, வே.இ., (தொ.ஆ.), 1987, **ம.பொ.சி. திருநாவுக்கரசு, – புகழஞ்சலி**, பூங்கொடி பதிப்பகம், சென்னை.

6. சிவஞானம், ம.பொ., 1946, **தமிழரும் பிரிட்டிஷ் திட்டமும்**, தென்றல் காரியாலயம், சென்னை.

7. சிவஞானம், ம.பொ., 1947, **சிலப்பதிகாரமும் தமிழரும்**, கதம்பம் வெளியீடு, சென்னை.

8. சிவஞானம், ம.பொ., 1949, **சுயாட்சித் தமிழகம்**, தமிழரசுக் கழகம், வடிவீசுவரம்.

9. சிவஞானம், ம.பொ., 1951, **வீரபாண்டிய கட்டபொம்மன் (மூன்றாம் பதிப்பு)**, இன்பநிலையம், சென்னை.

10. சிவஞானம், ம.பொ., 1955, **தமிழரசா? திராவிடஸ்தானா? (இரண்டாம் பதிப்பு)** இன்பநிலையம், சென்னை.

11. சிவஞானம், ம.பொ., 1959, **கப்பலோட்டிய தமிழன் (பத்தாம் பதிப்பு)**, இன்பநிலையம், சென்னை.

12. சிவஞானம், ம.பொ., 1960, **சுயாட்சியா? பிரிவினையா? (இரண்டாம் பதிப்பு)**, இன்பநிலையம், சென்னை.

13. சிவஞானம், ம.பொ., 1960, **தமிழும் கலப்படமும்**, இன்பநிலையம், சென்னை.

14. சிவஞானம், ம.பொ., 1961, **பாரதியும் ஆங்கிலமும்**, இன்பநிலையம், சென்னை.

15. சிவஞானம், ம.பொ., 1961, **தமிழா? ஆங்கிலமா?**, இன்பநிலையம், சென்னை.

16. சிவஞானம், ம.பொ., 1963, **இன்பத் தமிழா? இந்தி–ஆங்கிலமா?**, மாதவி பதிப்பகம், சென்னை.

17. சிவஞானம், ம.பொ., 1964, **காந்தியடிகளும் ஆங்கிலமும் (இரண்டாம் பதிப்பு)**, இன்பநிலையம், சென்னை.

18. சிவஞானம், ம.பொ., 1964, ஆங்கில ஆதிக்க எதிர்ப்பு வரலாறு, இன்பநிலையம், சென்னை.

19. சிவஞானம், ம.பொ., 1968, மொழிச் சிக்கலும் மாநில சுயாட்சியும், ம.பொ.சி. பதிப்பகம், சென்னை.

20. சிவஞானம், ம.பொ., 1968, ஔவை யார்?, இன்பநிலையம், சென்னை.

21. சிவஞானம், ம.பொ., 1970, வள்ளலார் கண்ட ஆன்மநேய ஒருமைப்பாடு, தமிழ்நாடு காந்தி நினைவு நிதி, மதுரை-13.

22. சிவஞானம், ம.பொ., 1971, கோவலன் குற்றவாளியா? இன்பநிலையம், சென்னை.

23. சிவஞானம், ம.பொ., 1971, வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு (ஐந்தாம் பதிப்பு), இன்பநிலையம், சென்னை.

24. சிவஞானம், ம.பொ., 1972, கப்பலோட்டிய சிதம்பரனார், இன்பநிலையம், சென்னை.

25. சிவஞானம், ம.பொ., 1973, மாநில சுயாட்சிக் கிளர்ச்சியின் வரலாறு, இன்பநிலையம், சென்னை.

26. சிவஞானம், ம.பொ., 1974, திருக்குறளில் கலைபற்றிக் கூறாதது ஏன்? பூங்கொடி பதிப்பகம், சென்னை.

27. சிவஞானம், ம.பொ., 1974, எனது போராட்டம், இன்பநிலையம், சென்னை.

28. சிவஞானம், ம.பொ., 1974, வள்ளலாரும் காந்தியடிகளும், இன்பநிலையம், சென்னை.

29. சிவஞானம், ம.பொ., 1974, கம்பர் கவியின்பம் (மூன்றாம் பதிப்பு), இன்பநிலையம், சென்னை.

30. சிவஞானம், ம.பொ., 1974, சட்டமன்றத்தில் சுயாட்சிக்குரல், பூங்கொடிப் பதிப்பகம், சென்னை.

31. சிவஞானம், ம.பொ., 1975, கலிங்கத்துப் பரணி திறனாய்வு, பூங்கொடி பதிப்பகம், சென்னை.

32. சிவஞானம், ம.பொ., 1976, தமிழகத்தில் பிறமொழியினர், பூங்கொடி பதிப்பகம், சென்னை.

33. சிவஞானம், ம.பொ., 1979, **கம்பரிடம் யான் கற்ற அரசியல்**, பூங்கொடி பதிப்பகம், சென்னை.

34. சிவஞானம், ம.பொ., 1979, **தொல்காப்பியரிலிருந்து பாரதியார் வரை**, இன்ப நிலையம், சென்னை.

35. சிவஞானம், ம.பொ., 1980, **விடுதலைக்குப்பின் தமிழ் வளர்ந்த வரலாறு (இரண்டாம் பதிப்பு)**, பூங்கொடி பதிப்பகம், சென்னை.

36. சிவஞானம், ம.பொ., 1982, **விடுதலைப் போரில் தமிழகம் (இரண்டு தொகுதிகள்)**, பூங்கொடி பதிப்பகம், சென்னை.

37. சிவஞானம், ம.பொ., 1985, **இலக்கியங்களிலே இன சமயக் கலப்புகள்**, பூங்கொடி பதிப்பகம், சென்னை.

38. சிவஞானம், ம.பொ., 1986, **புதிய தமிழகம் படைத்த வரலாறு**, பூங்கொடி பதிப்பகம், சென்னை.

39. சிவஞானம், ம.பொ., 1993, **பயங்கரவாதமும் காந்தி சகாப்தமும்**, பூங்கொடி பதிப்பகம், சென்னை.

40. சிவஞானம், ம.பொ., 1997, **விடுதலைப் போரில் தமிழ் வளர்ந்த வரலாறு (இரண்டாம் பதிப்பு)**, பூங்கொடி பதிப்பகம், சென்னை.

41. சுந்தரம், வெள்ளையாம்பட்டு, (தொ.ஆ.), 1981, **ம.பொ.சி. படைத்த புதிய தமிழகம்**, சேகர் பதிப்பகம், சென்னை.

42. சுப்பிரமணியன், ச.வே. & கடிகாசலம், ந., 1980, **உலகத் தமிழர் யார்? எவர்?** உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

43. சுவாமிநாதன், சோ. (தொ.ஆ.), 1960, **ம.பொ.சி. கூறுகிறார் (இரண்டாம் பதிப்பு)**, இன்பநிலையம், சென்னை.

44. ஞானச் செல்வன், கவிக்கோ, 2000, **சாதனைச் சரித்திர நாயகர் சிலம்புச் செல்வர் ம.பொ.சி.**, மதி நிலையம், சென்னை.

45. நடராஜன், எஸ்., 1973, **சிலம்புச் செல்வரின் வாழ்க்கையிலே**, வானதி பதிப்பகம், சென்னை.

46. நாக சண்முகம், 1980, **தமிழர் தலைவர் ம.பொ.சி.**, இன்பநிலையம், சென்னை.

47. நாராயண வேலுப்பிள்ளை, எம், 1988, **தமிழ் வளர்த்த சான்றோர்கள் (இரண்டாம் பாகம்)**, ஸ்ரீ நிலையம், சென்னை.

48. பொற்கோ, 1974, **செந்தமிழ்**, தமிழ் நூலகம், சென்னை.

49. மணி. பெ.சு., 1985, **தடைகளை வென்று தலைமை பெற்ற ம.பொ.சி.**, பூங்கொடி பதிப்பகம், சென்னை.

50. முகம்மாமணி, 1994, **100 சாதனையாளர்கள் (மறு பதிப்பு)**, மணிவாசகர் பதிப்பகம், சென்னை.

51. முடிகோபதி, ந., 1996, **தமிழ்நாடு சட்ட மன்ற மேல்வை**, மணிவாசகர் பதிப்பகம், சென்னை.

52. மெய்கண்டார், தி.வ., 1980, **சிலம்புச் செல்வருக்கு 'டாக்டர்' பட்டம்**, பூங்கொடி பதிப்பகம், சென்னை.

53. ஸ்ரீபால், ஜீவபந்து, டிஎஸ்., 1957, **இளங்கோவடிகள் சமயம் எது? (இரண்டாம் பதிப்பு)** பாரி நிலையம், சென்னை.

*****

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை – 600 113
## அண்மை வெளியீடுகள்

| | |
|---|---|
| AN INTRODUCTION TO RELIGION AND PHILOSOPHY - TEVARAM AND TIVVIYAPPIRAPANTAM | 200.00 |
| பெ.நா. அப்புசுவாமியின் அறிவியல் கட்டுரைகள் தொகுதி-2 | 80.00 |
| குறுந்தொகை - ஒரு நுண்ணாய்வு | 80.00 |
| தமிழ் நாடகம் – நேற்றும் இன்றும் | 30.00 |
| நாடகமும் நாடகக் கம்பெனி அனுபவங்களும் | 60.00 |
| இராமாயணம் - தோற்பாவை நிழற்கூத்து | 125.00 |
| அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத் தமிழ்ச் சுவடிகள் விளக்க அட்டவணை தொகுதி-4 | 110.00 |
| நாட்டுப்புறக் கதைகளும் நாடக ஆக்கமும் | 30.00 |
| A BUNCH OF ESSAYS ON TAMIL LITERATURE | 30.00 |
| திருக்குறள் பூரணலிங்கம்பிள்ளை ஆங்கில மொழிபெயர்ப்பு | 100.00 |
| தொல்காப்பியப் பாவியல் கோட்பாடுகள் | 40.00 |
| ON TRANSLATING TIRUKKURAL | 50.00 |
| ஐங்குறுநூறு மூலமும் உரையும் | 85.00 |
| தனிநாயகம் அடிகளாரின் சொற்பொழிவுகள் | 40.00 |
| சொற்பிறப்பு - ஒப்பியல் தமிழ் அகராதி | 200.00 |
| THIRUVACHAGAM | 175.00 |
| இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் நாடகங்கள் | 75.00 |
| நானும் என் எழுத்தும் | 50.00 |
| தமிழர் கட்டிடக்கலை | 30.00 |
| THE NARRINAI FOUR HUNDRED | 175.00 |
| சர்வக்ஞர் உரைப்பா | 40.00 |
| தமிழில் ஆவணங்கள் | 75.00 |
| தமிழ் மேடை நாடக வரலாறு | 55.00 |
| பரதநாட்டிய சாஸ்திரம் | 150.00 |
| இந்திய விடுதலைக்குப் பின் தமிழிலக்கியச் செல்நெறிகள் | 55.00 |
| மேலை நோக்கில் தமிழ்க்கவிதை | 100.00 |
| SOUND CORRESPONDENCES BETWEEN TAMIL & JAPANESE | 35.00 |
| அயலகத் தமிழ்க்கலை, இலக்கியம், சமகாலச் செல்நெறிகள் | 125.00 |
| TAMIL LITERATURE AND INDIAN PHILOSOPHY | 200.00 |
| சதகத்திரட்டு தொகுதி-1 | 80.00 |
| தொல்காப்பிய இலக்கண மொழியியல் கோட்பாடுகள் | 70.00 |
| எழுத்திலக்கணக் கோட்பாடு | 70.00 |
| சதகத்திரட்டு தொகுதி-2 | 55.00 |
| தமிழ்ப் பண்பாடு | 25.00 |
| உலகத் தமிழாராய்ச்சி நிறுவனச் சுவடி விளக்க அட்டவணை-4 | 70.00 |
| சுவடிச்சுடர் | 120.00 |
| தமிழிலக்கியத்தில் ஊனமுற்றோர் | 45.00 |
| தமிழக மகளிரியல் | 80.00 |
| தமிழ் மொழி-இன-இலக்கிய மேம்பாடு மறைமலையடிகளாரின் பங்களிப்பு | 20.00 |
| அறிவியல் தொழில் நுட்பக் கல்வி இன்றைய சந்தைச் சவால்கள் | 25.00 |

Pub.No.433 **ம.பொ.சி யின் தமிழ் உணர்வு** **40.00**